# இந்திய வரலாறு (கி.பி. 1526 முதல் 1857 வரை)
## அலகு – 1
## மொகலாய வரலாற்று சான்றுகள்

இடைக்கால இந்தியா வரலாற்றைக் குறித்து அறிய பலவகையான ஆதாரங்கள் கிடைக்கின்றன. காலக் கணிப்புகள், பயணக் குறிப்புகள். நவீன கால நூல்கள் ஆகியன ஏராளமான செய்திகளை வழங்குகின்றன. பெரும்பாலான நூல்கள் பாரசீக மொழியிலும், சில அரேபிய மொழியிலும் அமைந்துள்ளன.

**காலக்கணிப்புகள்**

- **சச் நாமா**

இவை ஆதியில் அராபிய மொழியில் எழுதப்பெற்றன. அரேபியரின் சிந்து வெற்றி பற்றிக் கூறுவன இவை. முகம்மது அலி பின் அபுபக்கா் கூபி என்பவரால் நாசிருத்தீன் காலத்தில் இவை பாரசீக மொழியில் எழுதப்பட்டன. குபாச்சாவிற்கு இவை சமா்ப்பிக்கப்பட்டன. அரேபிய சிந்து வெற்றி பற்றி அறிய இது முதன்மை ஆதாரம் ஆகும்.

- **தாரீக் மாவுமி அல்லது தாரீக்கி சிந்து**

பக்கராவின் மீா் முகம்மது மாதும் என்பவா் கி.பி. 1600 வாக்கில் இதனை எழுதினாா். சிந்து பற்றிய விளக்கமளிக்கின்ற நூல் இது. அக்பா் காலம் வரையிலான முழு வரலாற்றை அளிக்கிறது. இதில் நான்கு இயல்கள் உள்ளன. இது அக்காலத்தின் படைப்பு அன்று எனினும் இது சச் நாமாவை அடிப்படையாகக் கொண்டு ஓரளவு முழுமையான வரலாற்றை அளிக்கிறது.

- **கிதாப் உல்யாமினி**

**அபுநாசா் பின் முகம்மது** என்பவா் ஜப்பரூல் உட்பியல் இதனை எழுதினாா். முகம்மது கஜினியின் வரலாற்றை கி.பி. 1020 வரை அளிக்கும். இது பெரிதும் இலக்கிமேயாகும். ஆதலால் காலங்களை அளிக்கவில்லை எனினும் முகம்மது கஜினியின் தொடக்க வரலாற்றை இது அளிப்பதால் குறிப்பிடத்தக்கது.

- **தாரீக் உல் ஹிண்டு**

**குவரிசிமின் அல்பெருணி** மாமூது கஜினியிடம் பணியாற்றிய மாபெரும் அரேபிய, பாரசீக, மொழி அறிஞா் இதை எழுதினாா். அவா் கணிதத்தில் மருத்துவத்தில், களவியலில், மெய்ப்பொருளில், சமயத்தில் ஆா்வலா். இந்தியாவில் தங்கி வடமொழி, இந்துச் சமயம், மெய்ப்பொருளில் கற்றவா்.அ அவா் எழுதிய பல நூல்களில் தாரீக் உல் ஹிண்டு சமயம், அறிவியல் ஆகியன கி.பி. பதினொன்றாம் நூற்றாண்டில் பெற்ற வரலாற்றை அரேபிய மொழியில் கூறுகின்றது.

- **கமில் உல் தவாரீக்**

இபு உல் ஆசீா் என அழைக்கப் பெற்ற **ஷேக் அப்துல் ஹாசன்** இந்நூலை எழுதியவா். மெசபமோமியாவைச் சோ்ந்த இவருடைய நூல் மத்திய ஆசிய வரலாறறையே முதன்மையாகக் கூறினும் முகம்மது கோரின் படையெடுப்புப் பற்றியும் கூறுகிறது.

- **தாஜ் உல் மாசீர்**

இதன் ஆசிரியர் **ஹசன் நிஜாம்.** கி.பி 1192 முதல் 1228 வரையிலான நிகழ்வுகளை எடுத்துச் சொல்லும் இந்நூல் குத்புத்தீன் ஐபெக்கின் வரலாற்றிற்கும் இல்துத்மிஷ்ஷின் வரலாற்றிற்கும் சரியான ஆதாரமாகவும், அக்காலத்திய படைப்பாகவும் விளங்குகிறது.

- **தபஹத் இநாசீரி**

கி.பி 1260-ல் **மின்ஹாஜ் உஸ் சிராஜ்** இதனை எழுதினார். அக்காலப் படைப்பான இந்நூல் அக்கால இஸ்லாமிய உலக வரலாற்றை வழங்குகிறது. இந்தியாவில் துருக்கிய ஆட்சியை இது 1260 வரை விளக்குகிறது. டெல்லியில் நாசிருத்தீன் முகம்மதின் கீழ் காஜிகளில் தலைமையானவராக இவர் விளங்கினார். இவருடைய நூல் ஒரு சார்புடைய நூல். பால்பனை நாசிருத்தீன் முகம்மதின் கீழ் காஜிகளில் தலைமையானவராக இவர் விளங்கினார். இவருடைய நூல் ஒரு சார்புடைய நூல். பால்பனை மிகவும் நேசித்த இவருடைய நூலில் கி.பி. 1260 முதல் 1265 வரை இடைசெளி உள்ளது. தொடர்ச்சி இதில் இல்லை.

- **காஜ் இன் உல்புட்டு**

கி.பி. 1290 முதல் 1325 வரை அரசவைக் கவிஞரான **அமீர் குஸ்ரு** இதனை எழுதினார். டெல்லியில் எல்லாச் சுல்தான்களில் காலத்தில் ஜலாலுத்தீன் கில்ஜியின் காலம் முதல் முகம்மது பின் துக்ளக் காலம் வரை வாழ்ந்தவர். வாழ்வின் இறுதியில் நிஜாருத்தீன் அவுலியாவின் சீடரானார். துக்ளக் நாமாவும் இவர் இயற்றினார். இதற்கு கியாசுத்தீன் துக்ளக் கட்டளையிட்டார்.

- **ரியாஸ் உஸ்சாலடின்**

சமகால வரலாறறைக் கூறும் இந்நூலை எழுதியவர் **குலாம் ஹசன்** சலீம் ஆவார்.

- **ஜியாவுத்தீன் பராணி**

துக்ளக் மரபினைப் பொருத்த வரையில் இவர் குறிப்பிடத் தகுந்தவர். **தாரீக்கிபிரோஸ் ஷாஹி** எனும் இவருடைய நூல் கில்ஜின் மரபினைப் பற்றிய நூல். முகம்மது பின் துக்ளக்கின் வரலாறும், பிரோஸ் துக்ளக்கின் சில ஆண்டுக் கால வரலாறும் கூறுகிறது. ஜியாவுத்தீன் பராணியின் மற்றொரு நூல் பட்வா இஜஹந்தரி மிகவும் குறிப்பிடத்தக்கது. ஏனெனில் அக்கால அரசியல் வரலாற்றைக் கூறுவது. பிரோஸ் துக்ளக் எழுதிய புட்ருஹட்- இ - பிரோஸ் ஷாஹி என்பது சிறிய தன் வரலாறு ஆகும்.

- **ஐந்நூல் முல் முல்தானி**

அலாவுதீன் கில்ஜி, முகம்மது பின் துக்ளக் ஆகியோரிடத்து அலுவலராகப் பணியாற்றியவரான இவர் ஐநூல' முஸ்க் முன் ஷதி மஹ்ரு ஆகிய அரசியல், சமுதாய அக்கால வரலாறு கூறும் நூல்களைப் படைத்தார். முகம்மது பின் துக்ளக் பற்றி அறிய முன் ஷதிமஹ்ரு பெரிதும் உதவுகிறது.

- **முகம்மது பின் முபாரக் கிர்மானி**

இவர் **சியால் உல் அவுல்யா** எனும் நிசாமுத்தீன் வரலாறு கூறும் நூலை எழுதினார். முகம்மது பின் துக்ளக் சமய ஞானிகளுடன் அவருடைய தொடர்பு ஆகிய செய்திகள் இந்நூலில் உள்ளன.

- **குவாஜா அபு மாலிக் ஈசாமி**

**புட்டு உல் சாலட்டின்** எனும் நூலினை இவர் எழுதினார். அலாவுத்தீன் ஹாசன் எனும் பாமினி அரசர் இவரை ஆதரித்தார். இந்நூல' 1200 வரிகள் கொண்டது. இதனை நிஜாருத்தீன் அகம்மது, பெரிஷ்டா, பதாஷினி ஆகியோர் பயன்படுத்தினர்.

- **தாரீக் - இ - முபாரக் ஷாஹி**

**யாக்யாபின் அகமதுவின்** இந்நூல் சைய்யது மரபு பற்றி ஏராளமான செய்திகளை வழங்குகிறது.

## பயணக் குறிப்புகள்

- **இபின் பதூதா**

மூரிஸ் நாட்டுப் பயணியான இவர் கி.பி. 1333 முதல் 1342 வரை இந்தியாவில் இருந்தபோது முகம்மது பின் துக்ளக்கினால் டெல்லியின் காஜியாக நியமிக்கப் பெற்றார். திரும்பு கையில் இதாப் உல் இகியாவை எழுதினார். முகம்மது பின் துக்ளக்கின் நிர்வாகம் இந்தியாவின் சமூக நிலை பற்றி இதில் கூறுகிறார்.

- **அப்துல் இரசாக்**

விஜயநகர அவைக்கு வந்த பாரசீக தூதுவரான இவர் கி.பி. 1442 முதல் 1443 வரை இந்தியாவில் தங்கினார். விஜய நகரக் கால அரசியல், பொருளாதார, பண்பாட்டு நிலைமைகள் பற்றிய விளக்கமான குறிப்பினை அளிக்கிறார்.

- **நிக்கோலா கோன்டி**

கி.பி. 1520 – ல் இந்தியா வந்த இத்தாலியக் பயணியான இவர் இந்தியாவின் சமுதாய நிலை பற்றிய குறிப்பான தகவல்களை விளக்கமாக அளிக்கிறார்.

- **டாமிங்கோ பேயஸ்**

இந்தியா வருகை புரிந்த போர்த்துக்கீசியப் பயணியாக இவருடைய குறிப்புகள் விஜயநகரைப் பற்றி அறியப் பெரிதும் உதவுவன. இவருடைய படைப்புகள் முழுமையாக மதிப்பு மிக்க தகவல்களை உடையன.

- **பார்போசா**

கி.பி. 1516 – ல் இந்தியா வந்த இவருடைய தென் இந்தியா பற்றிய குறிப்புகள் பெரிதும் முக்கியமானவை. குறிப்பாக விஜயநகர் பற்றிய விளக்கம் பெரிதும் மதிப்புடையவை.

மேலே குறிப்பிட்ட நூல்கள் தவிர இலக்கியங்களும் பெரும் உதவி புரிகின்றன. சாந்தபர்தாயின் பிருத்வி இராஜ் இரசோ, சூர்ஜன் சந்து சேகரின் சூர்ஜன் சரித்திரா, மாலிக் முகம்மது ஜெய்தசி எனும் இந்திக் கவிஞரின் பத்மாவதி ஆகியன பயனள்ளவை.

## பிற ஆதாரங்கள்

தொல்லியல் ஆதாரங்களான நினைவுச் சின்னங்கள், கட்டிடங்கள், காசுகள், பட்டயச் சான்றுகள் ஆகியனவும் டில்லிச் சுல்தானிய வரலாற்றை அறியக் கிடைக்கின்றன. இந்தியாவின் கர்நாடகத்தின் பட்டயச் சான்று நூல்களில் இப்பட்டயங்கள் உள்ளன.

**மொகலாயர் கால வரலாறு அறிய உதவுவன**

ஏராளமான வரலாற்று நூல்கள் மொகலாயர் வரலாறு அறிய உதவுகின்றன.

- **பாபர் நாமா**

துசுக் இ பாபர் அல்லது பாபரின் நினைவுக் குறிப்புகள் எனவும் அறியப் பெற்ற இந்நூல் பாபரின் தன் வரலாறு ஆகும். தூய துருக்கிய மொழியில் எழுதப் பெற்ற இந்நூல் பின் பாரசீகத்திலும் பின்னர் ஆங்கிலத்திலும் கி.பி. 1826 – ல் லெய்டன், எர்ஸ்கின் ஆகியோரால் மொழி பெயர்க்கப் பெற்றது. எல்லைகள்ஈ மக்கள்தொகை, வளங்கள், பேரரசின் வருவாய் பற்றிய முழுமையாக தகவல்களை இது அளிக்கின்றது. ஒரு சார்பின்றி இந்நூலை அவர் எழுதினார். தவிர இந்தியாவின் அரசியல், பொருளாதார, சமூக நிலைகளைக் கூறுவதுடன் சில ஆசிய நாடுகளின் வரலாற்றையும் விளக்கமளிக்கிறது.

- **மிர்சா ஹைதரின் தாரீக்கி இரஷீதி**

பாபர் நாமாவின் செய்திகளை ஒட்டிச் செல்லும் இந்நூலை எழுதிய **மிர்சா ஹைதர்**,பாபரின் உறவினர்

- **இரவா உத்மீர**

ஹபீப் உஸ்சியார் இதனை எழுதினார். பாபர் விட்டுச் சென்ற இடைவெளிகளை நிரப்பித் தகவல்களை இந்நூல் வழங்குகிறது.

- **உமாயூன் நாமா**

இதனை எழுதியவர் **இயாசுத்தீன் முகம்மது** குவாண்ட்மிர். உமாயூன் காலத்தவர் என்பதோடு அவரோடு சில படையெடுப்புகளில் பங்கேற்றார். இவருடைய நினைவுக் குறிப்புகளின் தொகுப்பு. இது சமூகப் பழக்க வழக்கங்கள். நிகழ்வுளுடன் தொடர்புடையது. இது ஒரு சார்பானது என்பதால் பெரிதும் நம்பிக்கைகுரியதன்று. இதனை **காமினி - இ - உமாயூன்** எனவும் அழைப்பர்.

- **குல்பதான் பேகம் எழுதிய உமாயூன் நாமா**

இந்நூல் முழுமையற்ற நூல் என்னும் மதிப்புடையது. **குல்பதான் பேகம்** உமாயூனின்ன உடன்பிறகப்பு. உமாயூன் சகோதரர் ஹிண்டால் மேல் பற்றுடையவர். ஊடன்பிறப்புகளுக்கான உமாயூன் மேற்கொண்ட தியாகங்கள் பிறகு குடும்ப நிகழ்வுகள் ஆகியன அழகுடையன.

- **தஜ்திராத் உத் வக்லாட்**

உமாயூனின் பணியாளர் **ஜௌகர்** எழுதிய நூல். இந்தியாவை விட்டு ஹுமாயூன் சென்ற போது அவருடன் சென்றவர். இவர் கொடுத்துள்ள செய்திகள் உண்மையானவை. ஆனால் குல்பதான் பேகத்தின் உமாயூன் நாமாவைவிட நம்புதற்குரியது. இந்த நூல் அக்பரின் ஆட்சியின் சில குறிப்புகளைத் தருகிறது.

- **தாரிகி ஷெர்ஷாஹி**

இதனை எழுதியவர் ஷெர்ஷாவின் தாய்மாமன் **அப்பாஸ்கான்** எழுதியதால் ஷெர்ஷா பற்றிய வரலாற்றைப் பொறுத்த மட்டில் பெரிதும் நம்பிக்கைகுரியது.

- **ஜநி அக்பரி, அக்பர் நாமா**

இவ்விரண்டு நூல்களையும் எழுதியவர் **அபுல்.ஃ.பாசல்**. இவை விளக்கமானவை. அவை அக்பரின் பண்புகள், நிர்வாகம் பற்றி விளக்குகின்றன.

- **தாரிகி பதாஉனி**

பாரசீக மொழியில் இதனை எழுதிய **அல்பதா** உனி அக்பரின் ராஜபுத்திரக் கொள்கை, யூதர்கள், பாரசீகர்கள் மீதான நடவடிக்கை, அவருடைய சமயக் கொள்கை ஆகியவற்றிற்காக குறை கூறுகிறார். தம்முடைய எழுத்துக்களை ரகசியமாக வைத்திருந்து, ஜஹாங்கீர் காலத்தில் வெளியிட்டார்.

நிசாமுதீன் அஹமதின் தாரிகி நிசாமி, மௌலானா அஹமதின் தாரிகி அ.ஃ.பி, பைச்ஸ் சர்ந்தியின் அக்பர் நாமா,அகமது யாத்காரின், தாரிகி சல்தானி அ.ஃ.ப்கானா ஆகியன குறிப்பிடத்தக்கன.

- **துசுகி ஜஹாங்கீரி**

ஜஹாங்கீரால் பாரசீக மொழியில் எழுதப்பட்ட இந்த நூல் அக்பரின் சமயம், பண்புகள் பற்றிக் கூறுகிறது. இதனை வக்கியாத்தீ, ஜஹாங்கீர், தாரிகி சலீம், ஷாஹி, ஜஹாங்கீர் நாமா, இக்பால நாமா எனவும் அழைப்பர். மதிப்புடைய இந்த ஆதாரத்தை ஆயிரத்து அறுநூற்று இருபத்தி இரண்டுக்குப் பின் முகமதுகான் நிறைவு செய்தார்.

- **பாதுஷா நாமா**

**கஜினி** என்பவர் எழுதிய பாதுஷா நாமா கி.பி. 1638 வரை அல்லது ஷாஜஹான் காலம் வரை தகவல் அளிக்கிறது. ஷாஜஹான் அவருடைய நிர்வாகம் பற்றி அறிய மிகச் சிறந்த நூல். **அப்துல் அமீதுலாஹூரி** எழுதிய பாதுஷா நாமா கி.பி. 1659 வரை வரலாற்றைக் கூறுகிறது. பிற்கால எழுத்தாளர்கள் இதனைப் பின்பற்றினர்.

- **ஷாஜஹான் நாமா**

கி.பி. 1655 – க்கு முற்பட்ட எல்லா முகலாய முன்னோடிகளைப் பற்றி இனாயக்கான் எழுதிய நூல். இது அரசரின் பணயாளராக விளங்கியதால் எல்லாத் தகவல்களுடன் தொடர்புடையவர் ஆவார்.

- **ஆலம்கீர் நாமா**

ஔரங்கசீப்பின் ஆணையின் பேரில் **மிர்சா முகமது சாகிப்** இதனை எழுதினார். நிறைவடைய இந்நூல் பத்தாண்டு காலமானது. ஆகில்கான் ராஸ்லி என்பவர் ஜாபர நாமா ஔரங்கசீப் என்பதனை எழுதினார். கி.பி. 1650 – 1663 – ம் ஆண்டுக்கால வரலாற்றைக் கூறுகிறது.

- **முண்டகாப் உல்லுபாப்**

முகமது காஸிம் கா.ஃ.பிகான் எழுதிய ஔரங்கசீப் கால மாபெரும் நூல். பாபர் முதல் முகமது ஷா வரை உள்ள வரலாற்றைக் கூறுகிறது.

- **புடுவா இ ஆலம்கிரி**

இதனை எழுதியயவர் ஈஸ்வாதாஸ்,ராஜபுத்திரர்களுக்கு எதிரான ஔரங்கசீப்பின் போர்களை விளக்குகிறது. மாசீர் உல் உம்ரா என்னும் நூல் ஔரங்கசீப்பின் ஆட்சியில் இருந்த மொகலாய பிரபுக்களைப் பற்றிக் கூறுகிறது.

- **தாரிகி ராதர்கான்**

இதனை எழுதியவர் **மீர் முபாரக் உல்லா இராதத்கான்.** மோகலாய பேரரசு ஔரங்கசீப்பின் முடிவு முதல் ஃபருக்ஷியர் வரையிலான வரலாற்றைக் கூறும் நூலாகும். குலாம் உசைன் கான் என்பவர் கி.பி. 1400 முதல் 1786 வரை மொகலாயர் வரலாற்றை சையாத் உல் முட்டாக்கிரின் என்னும் நூலை எழுதினார். இவ்வாறாகப் போதிய வரலாற்று ஆதாரங்கள் இடைக்கால இந்திய வரலாற்றை அறிய உதவுகின்றன.

## பாபர் படையெடுப்பின் போது இந்தியாவின் நிலை

பாபர் இந்தியாவின் மீது படையெடுக்கும் பொழுது இந்தியா பல நாடுகளைக் கொண்டிருந்தது. அவற்றைப் பல்வேறு மன்னர்கள் ஆட்சி செய்து கொண்டிருந்தனர். அவை சிற்றரசர்களாலும், மாநில ஆளுநர்களாலும் ஆட்சி செய்யப்பட்டன. வட இந்தியாவும், தென் இந்தியாவும் அது போல பல பிரிவுகளைக் கொண்டிருந்தன.

### அரசியல் நிலைமை

- **வட இந்திய நாடுகள்**
- **டில்லி**

வெளிநாட்டவரின் படையெடுப்பாலும், உள்நாட்டு குழப்பங்களாலும் டெல்கி தன் பொலிவை இழந்து காணப்பட்டது. அப்பொழுது திறமையும், ஆற்றலும் இல்லாத **இப்ராஹிம் லோடி** டெல்லியை ஆட்சி புரிந்து வந்தார். இவர் லோடி வம்சத்தின் கடைசி அரசராவார். இவரது ஆட்சிக் காலத்தில் மக்களுக்கு எந்தவித நன்மையும் கிடைக்கவில்லை. இதனால் மக்கள் இவரது ஆட்சியை வெறுத்தார்கள்.

- **மேவார்**

மேவார் வலிமை மிக்க நாடாக விளங்கியது. ராணாசங்கா மேவாரை ஆட்சி செய்து வந்தார். இவரிடம் 48 ஆயிரம் குதிரைகள் கொண்ட படை இருந்தது. நூற்றுக்கும் மேற்பட்ட போர்களில் கலந்து கொண்டடதால் 80 –க்கும் அதிகமான விழுப்புண்கள் அவரது உடம்பில் இருந்தன. இதனால் ராணாசங்காவை “நூறு கழகங்கள் கண்ட வீரன்” என்ற பட்டப்பெயருடன் அழைத்தனர். போரில் ஒரு கண், ஒரு காலை இழந்த போதிலும் நாட்டை வலிமை மிக்க நாடாக்க வேண்டும் என்று எண்ணினார்.

இப்ரதாஹிம் லோடியை தோற்கடிக்க பாபருக்கு தூதுவிட்டார். பாபர் டெல்லியை கைப்பற்றிய பின் தன்நாட்டுக்கு திரும்பிவிடுவார். பின் நாம் டெல்லியை எளிதில் கைப்பற்றி விடலாம் என ஆரம்பத்திலே தவறுதலாக எண்ணினார். அவரது கணக்கும் தவறானது.

- **மாளவம்**

மத்திய இந்தியாயவில் இருந்த மாளவம் இரண்டாம் முகமதால் ஆளப்பட்டது. இருப்பினும் மேதினிராய் என்பவரே அதிகாரம் அனைத்தும் பெற்றிருந்தார். மேதினிராய் தனக்கு வேண்டியவர்ளுக்கு மட்டும் உயர்ந்த பதவிகளை வழங்கியதால், இதற்கு எதிராக முஸ்லீம்கள் உள்நாட்டு பூசல்களை வளர்த்துக் கொண்டிருந்தனர்.

- **குஜராத்**

செல்வாக்கும், செழிப்பும் கொண்ட குஜராத் பகுதியை சுல்தான் இரண்டாம் முகமது முசாபிர் ஆட்சி புரிந்தார். இவர் மேவார் மீது படையெடுத்ததால், ராணசா ங்கவால் தோற்கடிக்கப்பட்டார். முசாபிர் இறந்ததும் அவரது மகன் பகதூர்ஷா ஆட்சிக்கு வந்தார்.

- **வங்காளம்**

ஹுசைனி வம்சத்தால் வங்காளம் ஆளப்பட்டு வந்தது. மிகவும் திறமையாக ஆட்சி செய்த ஹுசைன்ஷா 1519 – ல் காலமானதுமட் அவரது மகன் நஸ்ரத்ஷா ஆட்சிக்கு வந்தார்.

- **பஞ்சாப்**

இப்ராஹிம் லோடியின் உறவினரான தௌலத்கான் லோடி பஞ்சாபில் கவர்னராக இருந்து ஆட்சி செய்தார். கவர்கராக இருந்தாலும் ஒரு மன்னன் போல் ஆட்சிபுரிந்தார். இவருக்கும் டெல்கி மன்னன் இப்ராகிம் லோடிக்கும் அடிக்கடி தகராறு வந்துக் கொண்டேயிருந்தது. இதனால் இப்ராகிம் லோடியை ஒழிக்க தக்க தருணத்தை தௌலத்கான் லோடி எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். இவர் பாபருக்கு தூதுவிட்டு இந்தியா மீது படையெடுக்க வழிகோலினார்.

- **ஜான்பூர்**

ஜான்பூரை **ஜலால்கான் லோடி** என்பவர் ஆட்சி செய்து வந்தார். இவர் இப்ராஹிம் லோடியின் சகோதரர். ஜலால்கானின் நடத்தையில் சந்தேகம் கொண்டு இப்ராஹிம் லோடி அவரை கொன்று விட்டார். இதனால் உயர்குடிகள் ஆத்திரமுற்று இப்ராஹிம் லோடிக்கு எதிராக புரட்சி செய்தனர். பின்னர் **நசீர்கான் லோஹானி** என்பவர் ஜான்பூரின் சுல்தானானார்.

- **சிந்து – காஷ்மீர்**

சிந்து – காஷமீர் ஆகிய நாடுகள் பாபர் படையெடுப்பின் போதும் கலந்து கொள்ளவில்லை. இதுபோல் கங்ராஇ நேபாளம்ஈ பூடான் ஆகிய இந்து அரசு நாடுகளும் சுதந்திர நாடுகளாக இருந்தன.

## II. தென்னிந்திய அரசுகள்

### விஜயநகரம்

கிருஷ்ண தேவராயர் ஆட்சி புரிந்து வந்ததால் விஜயநகரம் தென்னிந்தியாவில் மிக சிறந்த நாடாக விளங்கியது. தமது சமயங்களுக்கிடையேயும் நிலவிய சமய பூசல்கள் மறைய தொடங்கியது. ராமனும் ரஹீமும் ஒருவரே, மதம் வேறாயினும் முக்தி நெறி ஒன்றே என்று போதிக்கப்பட்டது. இந்துக்களின் கோட்பாடுகளை முஸ்லீம்களும் முஸ்லீம்களின் கோட்பாடுகளை

இந்துக்களும் பின்பற்றத் தொடங்கினர். பக்தி மார்க்கத்தின் மூலமாக சமய சகிப்புத் தன்மை ஏற்பட்டதோடு இந்து சமயமும் வளர்ந்தது. இலக்கியங்களும் தோன்றின.

**பொருளாதார நிலை**

வெளிநாட்டு படையெழுப்பாளர்களும்ஈ கொள்ளைக்காரர்களும் நமது நாட்டின் செல்வத்தைச் சுரண்டி கொண்டு போய்விட்ட போதிலும் 16 – ம் நூற்றாண்டின் துவக்கத்தில் நமது நாடு செல்வமிக்கதாகலே இருந்தது. விவசாயம் சிறப்பாக இருந்தது. விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கப்பட்ட பொழுதெல்லாம் நாடு பசுமை நிலங்களால் நிறைந்திருந்தது. ஆனால் அரசியல் புரட்சி ஏற்பட்ட பொழுதும், வறுமை உண்டான பொழுதும் நமது நிலங்களைப் பார்த்தால் வெறும் தரிசு நிலங்களாகவே காட்சியளித்தது. எனினும் சாதாரணக் காலங்களில் நம்குடியானவர்கள் நமது நாட்டின் தேவைகளைப் பூர்த்தி செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் அளவுக்குத் தானியங்களை உற்பத்தி செய்தனர். உள்நாட்டு வாணிகம் சுறுசுறுப்பாக நடந்து கொண்டிருந்தது.

மலேயாவுடனும்(ஆயடயலய) சைனாவுடனும் (உாயைெ) பசிபிக் சமுத்திரத்திலுள்ள மற்ற நாடுகளுடனும் ஏலாளமான கடல் கடந்து செல்லும் வாணிகத்தை நாம் நடத்தி வந்தோம். மேலும் மத்திய ஆசியா, ஆப்கானிஸ்தான்,ஈரான், திபெத், பூடான் ஆகிய நாடுகளுடன் லாபகரமான வர்த்தகத்தை நமது நாடு நடத்தி வந்தது. பலவிதமான தொழிற்சாலைகளும், குறிப்பாக நெசவு தொழில், பஞ்சு, கம்பளி, பட்டுத்துணி, சர்க்கரை தொழில்கள், உலோக, காகித தொழில்கள் போன்றவை நாட்டின் பல பகுதிகளும் காணப்பட்டன.

இதனால் உயர்தரமக்களும் நடுத்தர வகுப்பைச் சார்ந்தவர்களும் செல்வ செழிப்புடன் வாழ்க்கை நடத்தி வந்தனர். இன்ப வாழ்வையும் விரும்பினர். ஆதற்கு மாறாக பாமரமக்கள் ஏழைகளாகலே இருந்தனர். இருந்தாலும் அவர்கள் பட்டினியால் வாடவில்லை. சுருங்கச் சொன்னால் இந்நாட்டில் உஷ்ணம் அதிகமாக இருந்தபோதிலும், கோடையில் பயங்கர காற்று அடித்த போதிலும் பாபரின் கவனத்தைக் கவரும் அளவுக்கு நமது நாடு செல்வத்தையும், வளத்தையும் பெற்றிருந்தது. "நாணயங்களாகவும், நாணயமில்லாததாகவும் கிடைத்த ஏராளமான தங்கம் இந்துஸ்தானத்தின் முக்கிய சிறப்பாகும்" என்று பாபர் தமது குறிப்புப் புத்தகத்தில் குறிப்பிடுகிறார்.

## பாபர்

**பாபர் இந்தியா மீது படையெடுக்கக் காரணங்கள்**

பாபர் தந்தை வழியில் தைமூர் வம்சத்திலும் தாய் வழியில் செங்கிஸ்கான் வம்சத்திலும் தோன்றியவர். அவருடைய தந்தை தைமூர் விட்டுச் சென்ற பேரரசின் ஒரு சிறு பகுதியான பர்கானாவை ஆண்டு வந்தார். பாபர் தமது பதினோராவது வயதில் பட்டத்திற்கு வந்தார். அவர் மன உறுதி கொண்டு சமர்கண்டை கைப்பற்றி ஆள நினைத்தார். ஆனால் முடியவில்லை. அவர் உஸ்பக் வம்சத்தால் விரட்டியடிக்கப்பட்டார். இவ்வாறு நிலையில்லாமல் அங்கும் இங்கும் திரிந்து வந்த பாபர் இறுதியில் காபூலில் வந்து தங்கினார். 1504 – ல் அங்கு ஒரு அரசை அமைத்துக் கொண்டார். அதன்பிறகு கிட்டத்தட்ட 20 ஆண்டுக்காலம் அங்கு ஆண்ட பிறகு தான் இந்தியா மீது படையெடுக்கும் வாய்ப்பு அவருக்கு கிடைத்தது.

1524 – ல் தௌலத்கான் லோடி பஞ்சாபில் கவர்னராக இருந்தார். அப்போது டெல்கியை ஆண்ட இப்ராகிம் லோடிக்கும், தௌலத்கான் லோடிக்கும் பல பிரச்சனைகள் இருந்தது. இதனால் தௌலத்கான் லோடி இப்ராகிம் லோடியை வெல்வதற்கு சரியானவர் பாபர்த்தான் என்று எண்ணி பாபரை இந்தியாவிற்கு அழைத்தனர். அதே நேரத்தில் இப்ராகிம் லோடியின் மாமன் ஆலமகானும் ஓர் அழைப்பு விடுத்தார்.

**முதலாம் பானிபட் போர் 1526**

புாபர் டெல்லி மீது படையெடுக்க தயாரானார். பெரும்படையுடன் டெல்லி நோக்கி புறப்பட்டார். இதை அறிந்த இப்ராகிம் லோடி தனது படையை மேற்கு நோக்கி அனுப்பினார். இரண்டு படைகளும் பானிபட் என்ற இடத்தில் மோதியது. புாபர் பானிபட் போரில் இப்ராகிம் லோடியை கொன்று இந்துஸ்தானத்தை வென்று டெல்லியில் மொகலாய பேரரசை நிறுவினார். இப்போரில் பாபர் 730 பீரங்கிகளை பயன்படுத்தினார். இப்பீரங்கி படைக்கு உதவியாக அப்துல் அஜீஸ் என்பவர் தலைமையின் கீழ் ஒன்றும் செயல்பட்டது.

**இப்ராஹிம் படையின் நிலைமை**

ஒரு லட்சத்திற்கும் அதிகமான படைவீரர்கள் இப்ராஹிம் லோடியின் படையில் இருந்த போதிலும் அவர்கள் கூலிக்காகவே போரிட வந்தனர். விருப்பமின்றி செயல்பட்டனர். படைகளும் முறைப்படி நிறுத்தி வைக்கப்படவில்லை. இந்தியாவில் முதன்முதலில் பீரங்கி படையை அறிமுகப்படுத்தியவர் பாபர்தான். இப்பீரங்கி படையின் தாக்குதலை தாங்க முடியாமல் இப்ராஹிம் படையினர் திணறினர். இறுதியில் தோல்வியுற்றனர்.

பானிபட் போரைத் தொடர்ந்து பாபர் டெல்லியையும், ஆக்ராவையும் கைப்பற்றிக் கொண்டார். அந்நகரங்களில் அவர் பெற்ற செல்வங்களை தமது படைகளுக்கு பகிர்ந்தளித்தார். பாதுஷா என்னும் பட்டத்தையும் சூட்டிக்கொண்டார்.

**பாபரின் மறைவு – 1530**

இப்ராஹிம் லோடியின் தாய் பாபரின் சமையல்காரனுக்கு கையூட்டுக் கொடுத்து பாபரின் உணவில் விஷம் கலக்கச் செய்தாள் என்றும் ஆனால் பாபர் சிறிதளவே உட்கொண்டார் என்றும் இதன் காரணமாக உடல் நலமின்றி பாபர் இருந்தார் என்றும் சொல்லப்படுகிறது. இந்நேரத்தில் பாபரின் மூத்த மகன் ஹுமாயூன் நோயால் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார். “தன்னுடைய உயிரை எடுத்துக் கொண்டு மகனை காப்பாற்று” என்று இறைவனை வேண்டி 1530 – ல் உயிர் நீத்தார் என்றும் ஒரு சில வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள்.

## ஹுமாயூன் (HUMAYUN)

**ஹுமாயூனின் ஆரம்ப கால வாழ்க்கை**

1506 – ம் ஆண்டு மார்ச் மாதம் ஹுமாயூன் பிறந்தார். இவரது தந்தை பாபருக்கு ஹுமாயூன், கம்ரான், ஹின்டால், அஸ்காரி என்ற நான்கு புதல்வர்களும் குல்ரங், குல்சிரா, குல்பதன் என்ற மூன்று புதல்வியர்களும் உண்டு. அரபி, துருக்கி, பாரசீகம் ஆகியவற்றை ஹுமாயூன் விரும்பி படித்தார்.

## ஹுமாயூனின் படையெடுப்புகள்

- **கலிஞ்சர் படையெடுப்பு (1531)**

1531 – ல் கலிஞ்சத் கோட்டையை ஹுமாயூன் தாக்கி முற்றுகையிட்டார். அந்நாட்டு மன்னன் (சுல்தான்) ஆப்பானியர்களுக்கு உதவி செய்ய வாக்களித்தார் என்ற காரணத்தால் கலிஞசர் முற்றுகையை ஹுமாயூன் மேற்கொண்டார். ஆனால் கலிஞசர் முற்றுகை தொடர்ந்து கொண்டேயிருந்ததால் சமாதான உடன்பாடு செய்து கொண்டார். இது ஒரு பெரும் அவமானம் என்பதை ஹுமாயூன் நினைக்கவில்லை.

- **தௌரா போர் (1532)**

இப்ராகிம் லோடியின் சகோதரர் முகமது லோடியின் கீழ் ஆப்கானியர்கள் ஒன்று சேர்ந்து ஹுமாயூனை எதிர்த்தனர். அவர்களை 1532 – ல் தௌரா என்ற இடத்தில் ஹுமாயூன் தோற்கடித்தார். இதனால் ஆப்கானியர் எதிர்ப்பு மறைந்தது.

- **சுனார் முற்றுகை** (1537)

பீஹார் பகுதியில் அதிபராக இருந்த ஷெர்கான் என்ற ஷெர்ஷா சுனார் கோட்டையை 1537 –ல் தாக்கி கைப்பற்றிக் கொண்டார். இதையறிந்த ஹுமாயூன் ஒரு பெரும் படையை அனுப்பி சுனார் கோட்டைழய முற்றுகையிட செய்தார். இந்த முற்றுகை சுமார் 6 மாதங்கள் தொடர்ந்தது. இறுதியில் ஷெர்கான் அடிபணிந்து ஹுமாயூனிடம் சமாதான ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டார். ஆனால் இம்முற்றுகை தொடர்ந்து இருந்தால் ஷெர்கானின் ஆதிக்கத்தை முற்றுப் பெற செய்திருக்கலாம். இது ஹுமாயூன் செய்த மாபெரும் தவறாகும். தான் பெரும் வெற்றி பெற்றதாக எண்ணி மது மயக்கத்தில் இரண்டு ஆண்டுகளை ஹுமாயூன் வீணாக்கினார்.

- **சேளசா போர் (1539)**

பீஹாரில் ஹுமாயூன் போரில் ஈடுபட்ட பொழுது ஷெர்ஷா வங்காள சுல்தான் என்பவரை தோற்கடித்து காவூரை கைப்பற்றி அங்கிருந்த செல்வங்களை பீஹாருக்கு கொண்டு சென்றார். ஹுமாயூன் வங்காளத்தை அடைந்த போது ஷெர்கான் பீஹாரில் தமது நிலைமையை வலுப்படுத்திக் கொண்டார். ஆகையால் வங்காளத்திலிருந்து டெல்லிக்கு திரும்புவதற்கே ஆபத்து நேரிடுமோ என்று அஞ்சிய ஹுமாயூன் உடனே திரும்பினார். வரக்கூடிய பாதையிலுள்ள பக்ஸாருக்கு அருகிலுள்ள சௌசா என்ற இடத்தில் ஷெர்கான் ஹுமாயூனை 1539 – ல் தோற்கடித்தார். 'தலைதப்பியது தம்பிரான் புண்ணியம்' என்று ஹுமாயூன் டெல்கிக்கு தப்பி ஓடிவந்து விட்டார் இந்த நிலையிலும் ஹுமாயூனுடைய சகோதரர்கள் அவனுக்கு உதவவில்லை. இதற்கிடையில் ஷெர்கான் வங்க்ாளத்தை கைப்பற்றி அம்மாகாணத்தில் அரசை கைப்பற்றி ஷெர்ஷா என்ற பட்டப்பெயருடன் ஆட்சி செய்தார்.

- **கன்னோஜ் போர் (1540)**

1540 – ல் பேரரசர் ஹுமாயூனுக்கும் ஷெர்ஷாவிற்கும் இறுதிப்போர் கன்கோஜில் வைத்து நடைபெற்றது. இதில் ஹுமாயூன் தோற்றார். ஷெர்ஷா டெல்லியையும் ஆக்ராவையும் கைப்பற்றிக் கொண்டார். தோற்று ஓடிய ஹுமாயூனை ஷெர்ஷா துரத்தினார். இறுதியாக ஹுமாயூன் சிந்துவிலுள்ள அமர் கோட்டை பகுதியை ஆண்ட அரசரால் ஆதரிக்கப் பெற்றார். அங்குதான் ஹுமாயூன் ஹமிதா பேகத்தை 1541 ல் மணந்தார். 1542 –ல் அவருக்கு ஒரு மகன் பிறந்தான். அவன் தான் அக்பர். இந்த

நேரத்தில் ஹுமாயூனுக்னு உதவியாக வந்தவர் பைரம்கான். பின் ஹுமாயூன் பாரசீக மன்னனிடம் சரண்புகுந்தார்.

1555 – ல் ஹுமாயூன் இந்தியா மீது படையெடுத்தார். பஞ்சாபில் சிர்ஹிந்து என்னும் இடத்தில் சிக்கந்தர் ஷா சூர் என்பவரை தோற்கடித்து டெல்லியையும் ஆக்ராவையும் கைப்பற்றிக் கொண்டார்.

1556 – ம் ஆண்டு ஹுமாயூன் தனது அரண்மனை மாடியிலிருந்த நூல் நிலையத்திலிருந்து இறங்கி வரும்பொழுது கால் தவறி கீழே விழுந்து இறந்தார். வாழ்க்கையில் தடுமாறுவதை இயல்பாக கொண்டிருந்த ஹுமாயூன் மாடிப்படியில் தடுமாறி விழுந்து இறந்தார்.

## ஹுமாயூன் வாழ்க்கையில் தோல்வியுற காரணங்கள்

- **இளகிய மனம் படைத்தவர்**

ஹுமாயூனின் இரக்கச் செயல்களே அவரது வீழ்ச்சிக்குக் காரணமாயின. ஊறவினர்களையும் சகோதர்களையும் பரிவுடன் பாதுகாத்தார். ஆனால் அவர்களோ அவரை எதிர்த்தனர். இளகிய மனம் படைத்தவர். அதனால் அவரை எளிதில் ஏமாற்றினர்.

- **இன்பகளியாட்டல்களில் ஈடுபட்டது**

ஹஹுமாயூன் அலைபாயும் மனம் கொண்டவர். எந்த முடிவும் உடனே எடுக்க மாட்டார். ஒரு சிறிய போரில் வெற்றி கண்டாலும், பெரிதும் மனம் மகிழ்ந்து மாதக் கணக்கில் கேளிக்கைகளிலும், களியாட்டங்களிலும் மூழ்கி விடுவார். ஏதிரிகள் தன் வாசலில் வந்து போர் முரசு கொட்டிய போதும், அவர் தொடர்ந்து மதுவிலும், மாதுவிலும் மயங்கிக் கிடந்தார் என்று சொல்வதும் உண்டு. தன் சகோதரர்கள் நாகத்தை விட கொடியவர்கள் என்றும் அறிந்தும் அவர்களுக்கு முழு உதவி புரிந்தார்.

- **வருமானத்தை இழத்தல்**

ஆரம்ப காலத்தில் தன் தந்தை சொல்வதைக் கேட்டு தன் சகோதரர்களுக்கு நாட்டைப் பிரித்துக் கொடுத்தார். இதனால் தன் படைபலத்தை இழந்ததோடு, பண வருவாயும் இழந்தார். வெற்றி பெற்ற பகுதிகளிலிருந்து கிடைத்த பணத்தையும் கேளிக்கைகளில் வீணாக செலவு செய்தார்.

- **நேர்மையான படைத் தளபதிகள் இல்லாமை**

பாபர் காலத்தில் அமைக்கப்பட்ட படைபலத்தை உயர்த்தவுமில்லை, வலுப்படுத்தவுமில்லை. படைத் தளபதிகளும், ஒற்றர்களும் ஹுமாயூனை புறக்கணித்ததோடு எதிரிகளிடம் கையூட்டும் (லஞ்சம்) பெற்றுக் கொண்டு காட்டிக் கொடுத்தனர். தனது மன்னன் வெற்றி பெறவேண்டும் என்ற எண்ணம் போர் தளபதிகளுக்கு இல்லாமல் இருந்ததால் ஹுமாயூன் இறுதியாக நடந்த போர்களில் தோல்வியைத் தழுவினார்.

- **ஆடம்பரம்**

முகலாய மன்னன் ஹுமாயூன் ஆடம்பரத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தார். வீண் செலவு செய்தார்.ஹீமாயூன் ஆக்ரா, பதேபாத் ஆகிய இடங்களில் அழகிய

வேலைப்பாடுகள் நிறைந்த மசூதிகளை கட்டினார். ஹுமாயூன், மிர்செயத் அலி,ஹீவாஜா அப்துல் சமாத் என்ற இரு ஓவியர்களை பாரசீகத்திலிருந்து இந்தியாவிற்கு அழைத்து வந்தார். ஹுமாயூன் ஏராளமாக பணச் செலவு செய்து இசைக் கலைஞர்களை வரவழைத் திங்கள், புதன் ஆகிய இருநாட்களிலும் தன் நேரத்தை இசைக் கலைஞர்களோடு பகிர்ந்து கொண்டனார். இவை எல்லாம் அவரது ஆடம்பரத்திற்கு அடையாளமாக இருந்தது எனலாம்.

## ஷெர்ஷா

உலக வரலாற்றில் சிவாஜியைப் போல் ஷெர்ஷாவைப் போல் யாரும் ஆண்டதில்லை என்று பல வரலாற்று ஆசிரியர்கள் கூறுவதைப் பார்க்கும் போது ஷெர்ஷா ஒரு சிறந்த நிர்வாகியாக செயல்பட்டார் என்பது புலனாகிறது.

ஷெர்ஷாவின் இயற்பெயர் பரீத்கான். அவர் 1472 – ல் பஜ்ராவில் பிறந்தார். இளம் வயதிலே திறமையும், உழைப்பும், அறிவுக் கூர்மையும் உடையவராக காணப்பட்டார். இவர் ஆரம்பத்தில் இப்ராகிம் லோடியிடம் பணிபுரிந்தார். 1526 –ல் பான்ப்பட் போரில் இப்ராகிம் லோடி இறந்ததும் பாகர்கனிடம் பணிபுரிந்து நன்மதிப்பை பெற்றார். ஒரு சமயம் பாகர்கனுடன் வேட்டையாட காட்டிற்கு சென்ற பொழுது பாகர்கனைக் கொல்வந்த புலியை பரீத்கான் கொன்றார். அதனால் அவர் ஷெர்கான் என்று சிறப்புப் பட்டம் பெற்றார்.

### ஷெர்ஷாவின் வெற்றி சிறப்புகள்

சுனார் கோட்டையை தாஜ்கான் என்பவரிடம் இப்ராகிம் லோடி ஒப்படைத்தார். தாஜ்கானின் மனைவியின் பெயர் லாத் - மாலிசா. ஏதிர்பாராதவிதமாக தாஜ்கானை அவரது மகன் கொன்று விட்டார். விதவையான லாத் - மாலிகாவிற்கும் ஷெர்ஷாவிற்கும் நெருங்கிய உறவு ஏற்பட்டதால், ஷெர்ஷாவே லாத் - மாலிகாவை திருமணம் செய்து கொண்டார். இதனால் ஷெர்ஷா சுனார் கோட்டைக்கும் செல்வத்திற்கும் உரியவரானார்.

### சுராஜ்கார் படையெடுப்பு – 1534

ஷெர்ஷாவின் கட்டுப்பாட்டில் இருக்க விரும்பாத ஜலால்கான் வங்காள மன்னரான முகமதுஷாவின் உதவியை நாடினார். இருவரின் படைகளையும் ஷெர்ஷா சுராஜ்கார் என்ற இடத்தில் தோற்கடித்து தனது செல்வாக்கை பீஹாரில் நிலை நிறுத்தினார்.

### கன்னோஜ் போர்

பக்சாருக்கு அருகிலுள்ள சௌசா என்ற இடத்தில் நடந்த போரில் ஷெர்ஷா ஹுமாயூனை தோற்கடித்தார். தோற்கடிக்கப்பட்ட ஹுமாயூனுக்கும், ஷெர்ஷாவிற்கும் இடையே மீண்டும் கன்னோஜில் வைத்து போர் நடந்தது. இப்போரில் ஹுமாயூன் தோற்கடிக்கப்பட்டு ஓடினார். ஷெர்ஷா ஹுமாயூனை துரத்தி டெல்லி மற்றும் ஆக்ராவிலிருந்து விரட்டினார். இதனால் டெல்லி மற்றும் ஆக்ரா ஷெர்ஷா வசம் வந்தது.

### பஞ்சாப்

ஹுமாயூனை துரத்தி செல்லும் வழியில் கம்ரானையும் தோற்கடித்து பஞ்சாபை கைப்பற்றினார்.

**கக்கார் இனத்தவர்களுடன் போர்**

ராவல்பிண்டி, ஜீலம் மாநிலங்களில் வாழ்ந்த கக்கார் இனத்தவர்களை அடக்கினார். அங்கு 50,000 படைவீரர்கள் தங்கும் ரோட்டஸ் என்ற கோட்டையை கட்டினார்.

**மாவளம் (1542)**

1542 – ல் மாளவத்தை ஆண்ட காதிர்கான் என்பவர் ஷெர்ஷாவின் படையெடுப்புக்குப் பணிந்தார். அதனால் அவரையே அதன் ஆளுநராக நியமித்து அதனை ஷெர்ஷா தமது நாட்டுடன் இணைத்துக் கொண்டார்.

**மார்வார் மீது படையெடுப்பு**

மார்வார் பகுதியை ஆண்டு வந்த மால்தேவ் ஹுமாயூனுக்கு அடைக்கலம் கொடுத்தால் மார்வார் மீது படையெடுத்து அதனையும் ஷெர்ஷா கைப்பற்றினார்.

**ரெய்சின் படையெடுப்பு**

ரெய்சின் மன்னன் பூரண்மால் ஒரு இராஜபுத்திரன். இவர் முகமதியர்களை மிகவும் கொடுமைப்படுத்தினான். அதனால் ஷெர்ஷா ரெய்சினை நீண்டகாலம் முற்றுகையிட்டார். பூரணமாலை தோற்கடிக்க முடியாத ஷெர்ஷா ஒரு தந்திரத்தை கையாண்டார். அதன்படி ஷெர்ஷா பூரண்மாலையும் அவரது கூட்டத்தினரையும் எதுவும் செய்ய மாட்டோம் என்று குரானின் மீது அடித்து சத்தியம் செய்து அவர்களை சரணடைய செய்தார். ஆனால் பூர்ணமால் சரணடைந்ததும் ஷெர்ஷா பூர்ணமாலின் படையினரை ஈவிரக்கமின்றி கொன்று குவித்தார். இறுதியில் இராஜபுத்திரர்கள் தங்களை தாங்களே கொன்று மடிந்தனர். ரெய்சினையும் ஷெர்ஷா இணைத்துக் கொண்டார்.

**கலிஞ்சர் படையெடுப்பு (1549)**

கலிஞ்சரை ஆண்டு வந்த கீரத்சிங்குடன் படையெடுப்பை ஷெர்ஷா மேற்கொண்டார். வெற்றி பெறும் நேரத்தில் வெடிகுண்டுக்கு பலியாகி 1545 மே 22-ல் காலமானார்.

## ஷெர்ஷாவின் ஆட்சிமுறை

ஷெர்ஷா ஒரு வல்லாட்சியாளர். மண்ணில் உள்ள யாருடனும் அவர் தன் இறைமைத் தன்மையைப் பங்கிட்டுக் கொண்டதில்லை. ஆப்கானியரின் அரசுரிமைக் கோட்பாட்டில் அவர் நம்பிக்கை கொண்டதில்லை. ஏனென்றால் ஆப்கானியக் கோட்பாட்டில் அரசர் சுல்தானுடன் கொண்ட உறவில் சமமானவர்களில் முதன்மையானவர் ஆவார். தன்னுடைய கட்டளைக்கு அனைவரும் பணிய வேண்டும் என்று எதிர்பார்த்தார். அவருடைய விருப்பத்திற்கு விரோதமாக நடப்பவர்களுக்கு எதிராக உடனடியானத் தீவிரமான நடவடிக்கை எடுக்கத் தயங்கியதில்லை. சூஜாத்கான், ஹைபத்கான், குவாஸ்கான், முகம்மது கான் ஆகிய உயர்குடியினர் ஷெர்ஷாவைக் கண்டு அஞ்சியதோடு அவருடைய கட்டளைகளுக்கு எதிராகச் செல்லத் துணியவில்லை. ஷெர்ஷா நம்பிக்கைக்குரிய ஒற்றர்களை ஒவ்வொரு படைப் பிரிவிலும் நியமித்திருந்தார். உயர்குடியினரிடமிருந்து மட்டுமல்லாது, பிற முஸ்லீம் உலகினரிடமிருந்து விடுதலை பெற்று விளங்கினார். கலீபா அல்லது இமாம் என்றும் பட்டம் பெற்றார். அவருடைய காசுகளிலிருந்து கலீபத் உஸ் ஜமான் என்னும் பட்டம் பூண்டிருந்தார் என அறிகிறோம்.

இவையெல்லாம் ஷெர்ஷா தன்னிச்சையாக ஆண்டார் என்று பொருள் தருவன அல்ல. தான் இறைவனுக்கே கட்டுப்பட்டவன் என்றும், இறைவனின் கட்டளைப் படியே

மக்களை ஆளவிரும்புவதாகவும் கூறினார். ஷெர்ஷாவின் வாழ்க்கை வரலாற்று ஆசிரியர் அப்பாஸ்கான் நீதி செலுத்துவதில் மிகுந்த கவனம் செலுத்தினார் எனவும், சமயச் சடங்குகளில் நீதியே மிகவும் சிறப்புடையது. இதனை முஸ்லீம்களும், முஸ்லீம் அல்லாதவர்களும் ஏற்றுக் கொள்கின்றனர்.என்று ஷெர்ஷா குறிப்பிட்டார் என்று கூறுகிறார்.

**ஆட்சித்துறைச் சீர்திருத்தங்கள்**

ஷெர்ஷாவின் ஆட்சிமுறை ஆப்கானிய லோடிகளின் ஆட்சிமுறையினின்று மாறுபட்டிருந்தது. இதுவரையில் இருந்து வந்த ஆப்கானிய அரசர்களுக்கும் ஷெர்ஷாவிற்கும் வேறுபாடு இருந்தது. அவர்கள் அரசர்களாயிருந்தாலும் மற்றவர்களும் அரசர்களைப் போலச் சமமான வலிமை உள்ளவர்கள் என்று கருதிச் சமமாக நடத்தினார்கள்.

சூர்மரபு ஆட்சியின் போது மன்னரே நாட்டின் ஒப்பற்ற தலைவராக விளங்கினார். மன்னர் சமமானவர்களில் முதல்வராகச் கருதப்படவில்லை. மன்னரின் அதிகாரத்திற்குச் சடங்கு பூர்வமான மதிப்பு மட்டுமல்லாம்ல உண்மையிலேயே பெருமதிப்பு இருந்தது. இஸ்லாமிய சமய ஞானிகள் அரசரின் அதிகாரத்திற்குத் தடையாய் இருந்தனர். ஷெர்ஷா அந்த ஒரே தடையை உதறித் தள்ளினார். முற்றிலும் சமயத் துறையினைச் சார்ந்த பணியாயினும் இஸ்லாமியக் கொள்கைகளுக்கு முற்றிலும் முரணாக அமைந்த நிகழ்ச்சிகளில் கூட அவை உலோகமாக்களின் அதிகார வரம்பிற்குள் நியாயமாக வரவேண்டியிருந்தாலும் அரசர் அவற்றில் தலையிட்டுத் தன் அதிகாரத்தை நிலைநாட்டினார்.

சூர் மரபு ஆட்சியில் மையத்திலே அதிகாரச் செறிவு ஏற்பட்டது. லோடிகள் காலத்தில் வழக்காற்றில் இருந்த ஆப்கானிய அரசு முறையே மட்டுமன்றி ஆப்கானிய அரசுரிமைக் குறிக்கோளையே மாற்றி அமைக்க முயனறனர். நிலமானியத்தவரிடையே அதிகாரம் பங்கிடப்படுகின்ற கொள்கையின் அடிப்படையில் அரசு நிறுவனம் அமைக்கப்படவில்லை.

சூர்மரபு அரசு நிலமானிய முறையில் அமைந்திருக்கவில்லை. பெரும் நில உடைமையாளர்கள் தனித்தனிப் படைகளை வைத்துக் கொண்டு குறுகிய குலப்பற்றின் பிடியில் சிக்கி ஒருவரோடு ஒருவர் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். ஆனால் ஷெர்ஷாவின் காலத்தில் மையத்தில் அதிகாரச் செறிவு ஏற்படவே அரசருடைய அதிகாரத்திற்கு அனைவரும் கண்டிப்பாக் கீழ்படிய வேண்டுமென்பது வற்புறுத்தப்பட்டது. அரசரின் கைகளில் அரசருடைய அதிகாரங்கள் யாவும் குவிந்திருந்தன. இப்படிச் செய்ததன் வாயிலாக இந்தியாவில் வழக்காற்றில் இருந்து வந்த அரசு மரபுகளையும் அரசுரிமைக் கொள்கைகளையும் பெரிதும் பயன்படுத்தினர். அனைத்து நிலம் செல்வம் பதவி ஆகிய அரசரிடமிருந்து பெறத்தக்கன என்றும் இந்திய மரபை ஒட்டியே ஷெர்ஷா நடந்து கொண்டார்.

கட்டுப்பாடற்ற கூட்டமாக விளங்கிய ஆப்கானியர்களை ஒன்று திரட்டிய பெருமை ஷெர்ஷாழவயே சாரும். அவர்களை ஒன்று திரட்டி மொகலாயரை எதிர்க்கச் செய்தார். வலிமையான, பெரிய பேரரசை ஷெர்ஷா தோற்றுவித்தார்.

ஷெர்ஷா அரசில் அதிகார வர்க்கத்தின் செல்வாக்கு ஓங்கி இருந்தது. இலஞ்ச ஊழல்கள் ஒழிக்கப் பெற்றுத் திறமை வலியுறுத்தப் பெற்றது. மைய அரசில் இறைமையானது நன்கு போற்றி வளர்க்கப்படுவதற்கு ஏற்றதொரு சூழல் உருவாகியது. அவ்வாறு உருவாக்கிட வேண்டும் என்றும் நோக்கத்திலேயே ஆப்கானியப் பழக்க வழக்கங்க்ளைக் கைவிட்டனர். அரசரே எல்லா வல்லமைக்கும் பெருமைக்கும்

சிறப்புரிமைக்கும் நீதிக்கும் இருப்பிடமானவர் என்று கூறி அரசுரிமையைப் பெரிதும் மேம்படுத்திய இந்திய அரசு மரபுகளை பின்பற்றினார்.

ஷெர்ஷாவிற்கு முன்னர் ஆண்ட எந்த அரசருக்கும் அரசியல் சட்டம் அல்லது சமயம் ஆகிய துறைகளில் தமது ஆணையே இறுதியானது என்று அறிவிக்கப் போதிய அளவு துணிவும் அதற்கேற்ற பக்கபலமும் இல்லை.

ஜாகீர் முறையை ரத்துச் செய்வது, குடிமக்கள் அனைவரையும் வேற்றுமையின்றி நடத்துவது, அரசின் அதிகாரங்களைத் தம் கையில் குவித்துக் கொண்டிருந்தார். தமது புதிய குறிக்கோளாக வரம் பெற்ற முடியாட்சியினை ஏற்படுத்தவும், ஆப்கானிய அரசியல் அமைப்பு ஒழுங்கு முறையின் குறைகளைக் களையவும், அரசாட்சி நீடித்து நடைபெறவும் மேற்கூறிய மூன்று கொள்கைகளைத் துணைக் கொண்டார்.

ஷெர்ஷா நாட்டில் ஆட்சித்துறை பற்றிய ஒவ்வொரு செயலையும் தாமே கவனித்து வந்தார். வருமானத்தைப் பற்றிய விவகாரம் சிறியதாய் இருப்பினும், பெரியதாய் இருப்பினும் தம் சொந்தப் பொறுப்பில் கவனித்தார்.

ஷெர்ஷாவின் அமைச்சர்கள் இன்றைய நாள் அமைச்சர்களைப் போல்அதிகாரம் பெற்றவர்கள் அல்லர். வெறும் செயலாளர்கள் என்னும் அளவிலேயே ஷெர்ஷா அமைச்சர்கள் நிலையினை வைத்திருந்தார். அவர்களுக்குச் சொந்தம்மாகக் கொள்கைக்ளை வகுக்கவோ, புதிய சீர்திருத்த முறைகளைப் புகுத்தவோ சுதந்திரம் அளிக்கப்படவில்லை. ஷெர்ஷாவின் ஆட்சி ஓர் ஒற்றை மனித ஆட்சி முறை என்று கருதப் பெறுகின்றது. ஷெர்ஷாவின் அமைச்சரவையானது சிறப்புத் தன்மையில் குறைந்தது. ஷெர்ஷா ஆட்சி துறை பற்றிய ஏற்பாடுகளில் சொந்தமாகச் செய்தது யாது என்பது குறித்து அறிஞர்களிடையே விவாதம் தோன்றியுள்ளது.

**மைய அரசின் அமைப்பு**

பேரரசர் தனி ஒருவராக இருந்து பேரரசின் நலநன அமைச்சர்களின் உதவியின்றிக் கவனிப்பது இயலாததாகும். ஆகையினால்,ஷெர்ஷா சுல்தானியர்களின் காலத்தையொட்டி நான்கு துறைகளை அமைத்தார்.

ஐமய அரசில் நான்கு துறைகள் இருந்தன. அவை திவானி விசாரத்,திவானி ஆரிஸ், திவானி சைதலத், திவானி இன்ஷா ஆகும். இவைகளைத் தவிர காஜி, திவானி பரீத் ஆகிய துறைகளும் இருந்தன. இந்த அமைப்பு டெல்லிச் சுல்தானியர்களின் காலம் முதல் துக்ளக்குகளின் காலம் முடியும் வரை ஆண்ட முந்தைய டெல்லிச் சுல்தானியர்களின் அமைப்பைப் போன்றிருந்தது.

**திவானி விசாரத்**

திவானி விசாரத் துறையின் தலைவர் வசீர் என அழைக்கப்பட்டார். அவர் வருவாய், நிதி ஆகியவற்றினைக் கவனித்த அமைச்சராவார். இவர் பிற அமைச்சர்கள் மீது தமது பொதுக் கண்காணிப்பைச் செலுத்தினார். இத்துறையில் ஷெர்ஷா மிகுந்த கவனம் செலுத்தினார். தினமும் தமது அரசின் வரவு செலவு பற்றிய விவகாரங்களைத் தினமும் கேட்டறிந்து பர்கானாக்களிலிருந்து வரவேண்டிய நிலுவைகள் குறித்தும் விசாரித்தார்.

**திவானி ஆரிஸ்**

திவானி ஆரிஸ் என்னும் துறைக்கும் தலைமை வகித்தவர் ஆரிஸி மாமலிக் என்னும் அலுவலர் ஆவார். இவரைப் படைத்துறை அமைச்சர் எனலாம். முதன்மைத்

தளபதி அரசரே ஒழிய இந்த அமைச்சா் அல்லா் என்பது குறிப்பிடத்தக்க்து. ஆள்களைத் தோ்ந்தெடுத்தல், படையமைப்பு, ஒழுங்கு ஆகியவற்றின் பொறுப்பு இவரிடத்தில் தான் இருந்தது. படைவீரா்கள், அலுவலா்கள் அனைவருக்கும் ஊதியம் வழங்குவதையும் போா்க்களத்தில் படையின் நிலையைக் கவனிப்பதையும் இவா் மேற்கொண்டிருந்தாா். படைத்துறை மிக இன்றியமையாத ஒன்றாகையால் இத்துறையில் திவானி ஆரிசியின் செயல்முறையில் ஷொ்ஷா அடிக்கடி தலையிட்டாா். படைவீரா்களை அரசா் தாமே நேரடியாகத் தோ்ந்தெடுத்தாா். படைவீரா்களின் ஊதியத்தையும் அவரே முடிவு செய்தாா்..

**திவானி ரசாலத்**

திவானி ரசலாத் **அ**ல்லது திவானி முஹதசிப் மூன்றாவது துறையாகுனம். இத்துறையின் அமைச்சரை வெளிநாட்டு அமைச்சா் என்று கூறலாம். இவருடைய பணிகள் வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட துாதா்களுடன் நெருங்கிய தொடா்பு கொண்டிருத்தல் ஆகும். சில சமயம் அறநிலையப் பொறுப்புப் பணிகளையும் இந்த அமைச்சா் மேற்கொண்டாா்.

**திவானி இன்ஷா**

திவானி இன்ஷா என்பது நான்காவது துறையாகும். அரசருடைய அறிவிப்புகளையும், கடிதங்களை வரைவு செய்தாரையும் இத்துறை அமைச்சா் செய்தாா். அரசு ஆவணங்களும், பதிவுகளும் இவருடைய பொறுப்பில் இருந்தன.

**திவானி காஜி**

திவானி காஜி என்பவா் நீதி வழங்குதலை மேற்பாா்வையிடுவதும், வழக்குகளை விசாரித்துத் தீா்ப்புப் வழங்குவதும் இவா் மேற்கொண்ட பணிகள். இவா் ஒற்றா் துறைத் தலைவரானாா். நாட்டில் நிகழும் நிகழ்ச்சிகளை அரசருக்கு அறிவிப்பது இவருடைய கடமையாகும். செய்தி எழுதுபவா்கள் பலரும், ஒற்றா்களும் இவரின் கீழ்ப் பணிபுரிந்தனா். ஒற்றா்கள் நகரங்களிலும், அங்காடிகளிலும், முக்கியப் பேட்டைகளிலும் பணியிலிருந்தனா். அரசரின் இல்லம், அதனை ஒட்டியிருந்த பலவகை அமைப்புகள் ஆகியவற்றின் பொறுப்புகளை நிருவகித்தவா் அரண்மனைச் சிறப்பு அலுவலா். அரசரின் இல்லத் துறையினை நிருவகித்து அதனை ஒட்டிப் பணிபுரிந்த ஏவலா்களைக் கண்காணிப்பதும் இவருடைய பணியாகும்.

**நிா்வாகப் பிரிவுகள்**

பேரரசின் நிா்வாகப் பிரிவுகளைப் பற்றி இருவகையான கருத்துகள் உள்ளன. டாக்டா் கானுங்கோ என்பவா் சா்க்காரே உயா்நிலையான பிரிவு எனவும், மாநிலங்களும் மாநில ஆளுநா்களும் அக்பரால் உருவாக்கப்பட்டவை என்றும் கருதுகிறாா். ஆனால் இக்கருத்தினை டாக்டா் சரண் ஏற்கவில்லை. அக்பருக்கு முன்னாலேயே மாநிலங்கள் இருந்தன எனவும் சா்க்காரே உயா் பிரிவு என்பது சரியன்று என்றும் கூறினாா்.

ஆனால் இவ்விரும் கருத்துகளுமே சரியானவை அன்று என்று தோன்றுகிறது. மாநிலங்களுக்குச் சமமான ஆட்சிப் பிரிவுகள் இருந்தன என்பதினை மறுக்க இயலாது. அவற்றின் வருவாய், அளவு ஒரே சீராக இல்லை. அவை இக்தா்கள் என அறியப் பெற்றன.

வங்காளத்தில் ஷொ்ஷா புதிய வகை மாநில ஆட்சி முறையினை அமைத்தாா். வங்காளத்தைச் சா்க்காா்களாகப் பிரித்தாா். மாநிலம் முழுமையும் படை சாராத ஒருவரின் ஆளுகையில் இருந்தது. சா்க்காரின் பல்வேறு அலுவலா்களை அவா் மேற்பாா்வையிட்டாா். மாநில ஆட்சி பற்றிய விளக்கம் தெளிவாக இல்லை. அதன்

அலுவலர்கள் எவ்வாறு நியமிக்கப் பெற்றனர். அவர்கள் பெயர்கள் என்னவென்று தெரியவில்லை.

**சர்க்கார்**

மாநிலங்கள் சர்க்கார்களாகப் பிரிக்கப் பெற்றன. சர்க்காரில் இரண்டு முதன்மையான அலுவலர்கள் முன்சீப்-இ-முன்சீபான் அல்லது தலைமை முனிசீபு, ஷுக்தாரி ஷுக்தாரான் அல்லது தலைமை ஷீக்தார் ஆவர். முன்சீப்-இ-முன்சீபான் நீதிபதியாக உரிமையியல் வழக்குகளை விசாரித்தார். அமீன்களின் பணிகளையும் மேற்பார்வையிட்டார். ஷீக்தாரி ஷீக்தாரான் சட்ட ஒழுங்கினை சர்க்காரில் நிர்வகித்தார். கிளர்ச்சி செய்தவர்களை ஒடுக்கிய இவர் பர்கானாவில் பணியாற்றிய ஷீக்தார்களை மேற்பார்வையிட்டனர்.

**பர்கானாக்கள்**

ஒரு மாநிலத்தில் பல சர்க்கார்கள் இருந்தன எனில் ஒரு சர்க்காரில் பல பர்கானாக்கள் இருந்தன. பர்கானாவில் இருந்த முதன்மை அலுவலர்கள் **ஷீக்தார்,அமீன்,** கருவூல பொறுப்பாளர், ஒரு முனிசீபு, இந்தி எழுத்தர் பாரசீக எழுத்தர் இவர்களைத் தவிர பட்வாரி, சௌதாரி, முக்காடம் ஆகியவர்கள் மக்களுக்கும் அரசுக்கும் இடையில் பணிபுரிந்தனர். வரிவசூல் செய்வதை ஷிக்தார் கவனித்துக் கொண்டார். சட்டத்தை மீறுபவர்க்ளைத் தண்டித்தார். வரிபெறுகின்ற போது ஏற்படுகின்ற வழக்குகளைத் தீர்த்து வைத்தார். அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டினார். முனிசீப் என்னும் அதிகாரி எல்லைப் புறங்களிலுள்ள படைக் குதிரைகளின் அடையாளச் சூடுகளைப் பரிசோதனை செய்வதற்காக நியமிக்கப் பெற்றார். அவருடைய முன்னிலையில் தான் குதிரைகளுக்குச் சூடு போடுதல் நடைபெற்றது.

அரசருக்குச் சேரவேண்டிய வரித் தொகைகளைப் பெற்ற பின் அமீர் அதைப் பொருளாளர் அல்லது போட்தாரிடம் ஒப்படைத்தார். இரண்டு கார்கூன்கள் பொருளாளருக்கு உதவி செய்தனர். முனிசீபு வரி வசூல் தொடர்பான கணக்குகளையும்ஈ படையில் சூடு போடப்பெற்ற குதிரைகளின் எண்ணிக்கையையும், ஒவ்வொரு போர்வீரன் கொடுத்த கணக்கையும் குறித்து வைத்துக் காத்தார். ஷெர்ஷாவின் காலத்தில் கானுங்கோ என்னும் அதிகாரியின் முக்கியத்துவம் குறைந்தது. நிலவரிளைத் திட்டம் செய்ய நிலங்களை அளக்க வேண்டுமென ஷெர்ஷா முடிவு செய்தபோது அத்தகையோரின் முக்கியத்துவம் குறைந்தது. ஷெர்ஷாவின் பேரரசில் இருந்த பர்கானாக்களின் எண்ணிக்கையைப் பற்றிக் கூறும் போது அப்பாஸ்கான் முதல் இக்கால வரலாற்று ஆசிரியர்கள் வலை பலரும் குழப்பத்தை விளைவிக்கின்ற முறையிலேயே எழுதி வைத்துள்ளனர்.

**கிராமங்கள்**

பர்கானாக்களுக்குக் கீழே கிராமங்கள் இருந்தன. ஒவ்வொரு கிராமத்திற்கும் **முக்கம், பட்வா**ரி எனப்பட்ட இரு சாதாரண அலுவலர்கள் இருந்தனர். சௌகிதார் என்னும் கிராம அதிகாரிகளின் மூலம் அவற்றுடன் அரசர் தொடர்பு கொண்டிருந்தார். ஒவ்வொரு முதன்மை கிராமமும் ஒரு பொது நல ஆட்சியாக அமைந்தது. கிராமத்தைச் சார்ந்த முதியோர்களை உட்கொண்டிருந்த பஞ்சாயத்து ஒன்று காவல், தொடக்கக் கல்வி, மக்கள், நலம், பாசனம் முதலானவற்றிற்கு உரிய ஏற்பாடுகளைச் செய்தது. வழக்குகளையும் அப்பஞ்சாயத்துத் தீர்த்து வைத்தது.

ஷெர்ஷா உழவர்களோடு நேரடியாகத் தொடர்பு கொண்டு அவர்களிடம் நேரில் விவகாரங்களைத் தீர்த்துக் கொள்ள விரும்பினாலும் இதை இடையில் தரகர்கள் இல்லாமல் அவரால் நிறைவேற்ற இயலவில்லை. வரிபெற முக்கதங்களின் துணையை

நாட வேண்டியிருந்தது. ஒவ்வோர் அறுவடையின் போதும் நிலத்தை அளக்க வேண்டுமென்றும், அந்த அளவுக்கு ஏற்பவும், விளைச்சலுக்கு ஏற்பவுமே வரிகளைப் பெற வேண்டும். அவர் ஆளுநர்க்குக் கட்டளை பிறப்பித்திருந்த போதிலும் முக்கத்துக்கு அதில் பாதிப் பங்கைக் கொடுத்து விட வேண்டுமெனவும் அவர் ஆணையிட்டார். கிராமங்களில் நடைபெறும் திருட்டு, கொலை, கொள்ளை ஆகியவற்றிற்கு அந்தக் கிராமங்களைச் சேர்ந்தவர்களே பொறுப்பானவர்கள் என்று வலியுறுத்தப்பட்டதோடு, திருட்டோ கொலையோ ஓரிடத்தில் நடந்து விட்டதால், அந்த இடத்தைச் சுற்றியுள்ள கிராமங்களிலுள்ள முக்கதங்களைப் பிடித்துச் சிறை செய்து திருட்டு போன பொருள்களுக்கு ஈடு செய்ய வேண்டுமென அமீர்களுக்கும், ஆளுநர்களுக்கும் ஷெர்ஷா கண்டிப்பான கட்டளை பிறப்பித்தார்.

## இராணுவ ஆட்சிப் பகுதிகள்

ஷெர்ஷாவின் காலத்தில் லாகூர்,பஞ்சாப், மாளவம், அஜ்மீர் முதலிய மாநில ஆட்சிப் பகுதிகள் இருந்தன. இவை இராணுவ ஆட்சிப் பகுதிகளாகும்.

## புடைத்துறை ஆட்சி

ஷெர்ஷாவின் படைகள் நாட்டில் பல பகுதிகளிலும் வைக்கப் பெற்றிருந்தன. ஷெர்ஷாவின் ஆட்சிமுறை இராணுவ இயல்புடன் விளங்கியது. நாடெங்கும் படைகள் ஆங்காங்கே நிறுத்தி வைக்கப் பெற்றிருந்தன. 1,00,000 குதிரைப் படைவீரர்களும், 25,000 காலாட்படை வீரர்களும் எப்போதும் ஆயுதங்களை ஏந்தியபடி இருந்து வந்தனர் எனத் தரீக்-இ-ரஷீர் ஷாஜி என்னும் நூல் குறிப்பிடுகின்றது. நாட்டில் ஏதாவதொரு பகுதியில் கலகம் ஏற்படுவதற்கான அறிகுறி ஏற்பட்டால் உடனே ஒரு படையை ஏவி, அங்கே போய்க் கலகக்காரர்களை ஒடுக்கும்படி மன்னர் ஆணையிட்டார்.

ஆப்கானிஸ்தானத்திலிருந்தும் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் படைவீரர்களை வரவழைத்து அவர்களுடைய தகுதி, திறமைகளுக்கேற்ப பதவி அளித்தார். அதனால் படையில் பெரும்பாலும் இந்துக்கள் உட்பட வேறு பிரிவினரும் இருந்தனர். நிலமானியப் படைட திறமைக் குறைவாக இருக்கக் கூடுமாதலால் நிலையான படையொன்றும் உருவாக்கப் பெற்றிருந்தது. படையினருக்கு ஊதியம் சிலருக்குப் பணமாகவும், சிலருக்கு ஜாகீர்களாகவும் வழங்கப் பெற்றது.

படைத்துறையில் ஷெர்ஷா அக்கறை காட்டினார் என்று கண்டோம். படைவீரர்களைத் தாமே கவனித்துத் தேர்வு செய்யும் பணியினை மன்னர் தலைநகரத்தில் மட்டும் மேற்கொண்டிருக்கலாம். மாநிலத் தலைநகரங்களில் அலுவலர்கள் அப்பணியினைச் செய்திருக்கக் கூடும். குதிரைகளுக்குச் சூடுபோடும் முறையினை இவரும் கையாண்டு ஊழலைத் தடுத்தார். ஒவ்வொரு படைவீரருக்கும் தனிப்பட்ட பற்றுதலாக இல்லாது அதிகார பூர்வமான இணைப்பாக மாறியது. படைவீரர்களுக்குத் திறமையின் அடிப்படையிலேயே பதவி உயர்வு அளித்தார்.

பேரதிகாரிகளுக்கும், சிறிய அதிகாரிகளுக்கும் ஜாகீர்கள் வழங்கினார். சிகாகான் என்பவரைச் சம்பல் பகுதி ஆளுநராக நியமித்தபோது அவருடைய குடும்பத்துக்காகவும், பழைய குதிரை வீரர்களுக்காகவும், கேண்ட் கோலா, தில்ஹர் ஆகிய பர்கானாக்களை மாநிலமாக வழங்கினார். அரசுப் பணி என்பது படைப்பணியே. ஒருவர் அரண்மனையில் பணிபுரிந்தாலும், வெவ்வேறு இராணுவப் பதவிகளை வகித்தனர். ரொக்கமாக ஊதியம் பெற்று வந்த அனைவருக்கும் இவர் நிலங்களையும், பர்கானாக்களையும் வழங்கினார் என வஹியத் என்னும் நூலின் ஆசிரியர் கூறுகிறார்.

படைகளில் ஒழுங்கு, கட்டுப்பாடு, திறமை ஓங்கிட முனிசீபுகள் உதவினர். போக்குவரத்து ஏற்பாடுகளும் படைவீரர்களுக்கான உணவு ஏற்பாடுகளும்

வீரர்களிடமும்,தளபதிகளிடமும் ஒப்படைக்கப் பெற்றது. படைகள் சென்ற போது உடன் சென்று வியாபாரம் செய்தவர்கள் **பஞ்சரா** என அழைக்கப் பெற்றனர்.

**நீதித்துறை சீர்திருத்தங்கள்**

சமயச் சட்டங்கள் அனைத்திலும் மிகச் சிறந்ததாகக் கருதப்படுவது நீதி வழங்கலே என்று ஷெர்ஷா கூறினார் எனப்படுகிறது. இடைக்கால இந்தியாவில் இருந்த அனைத்து முஸ்லீம் அரசர்களுமே நீதியின் உயர்வு பற்றி உயர்ந்த கருத்துக் கொண்டிருந்தனர். நீதிமுறை ஆட்சியில் மன்னரின் தீர்ப்பே இறுதி முடிவாகும். மீர் ஆபில்கள், காஜிகள் உரிமை இயல் வழக்குகளை விசாரிக்க நியமிக்கப் பெற்றனர்.

பண்டைக் காலந்தொட்டு இருந்துவரும் வழக்கத்தின் படி முதன்முறையாக விசாரிக்கப்படும் வழக்குகளையும், மேல்முறையீட்டில் வரும் வழக்குகளையும் அவரே விசாரித்தார். அரசருக்கு அடுத்த நீதித்துறைத் தலைவர் **காஜி**. காஜியின் நீதிமன்றம் முறையீட்டு நீதிமன்றமாக இருந்த போதிலும் முதன்முதலாக விசாரிக்கப்படும் வழக்குகளில் தீர்ப்பளிக்கப்பெற்றது. எல்லா மாவட்டங்களிலும் எல்லா முதன்மை நகரங்களிலும் ஒரு காஜி இருந்தார். நீதி வழங்கும் பணியை முதன் முனிசீப்பு ஏற்றார். பர்கானாவில் **அமீன்கள்** அத்தகைய பணியினைச் செய்தனர். காஜிகள் குற்றவியல் வழக்குகளையும் அமீன்கள் உரிமை இயல் வழக்குகளையும் விசாரித்து இருக்கக் கூடும். மிக நெருங்கிய உறவினர்களுக்கும் ஷெர்ஷா நீதி வழங்குவதில் சலுகை, வேறுபாடு ஏதும் காட்டியதில்லை. நீதி வழங்குவதில் நியாயமானவர் என்று புகழ் பெற்றார். ஷெர்ஷாவின் ஆட்சிக் காலத்தில் ஒரு வியாாபாரி அவருடைய பொருள் கொள்ளையடிக்கப்பட்டு விடுமோ என்னும் அச்சமின்றிப் பாலைவனத்திலும், ஆட்கள் இல்லாப் பகுதியிலும் துணிவுடன் செல்ல முடிந்தது.

**நிலவருவாய்ச் சீர்திருத்தங்கள்**

சீர்திருத்தவாதி என்ற அளவில் ஷெர்ஷாவின் புகழ் பெரிதும் பரவியிருப்பது நில வருவாய்ச் சீர்திருத்தங்களிலே தான் எனலாம். முஸ்லீம் அரசர்களில் இவர் தான் முதலில் சீரான நில வருவாய் முறையை கொண்டு வந்தார். ஒவ்வொருவருடைய திறமைக்கு ஏற்ப வரிவிதிப்பிலே நீதி பெறப்படுகிறது என்றும் உணர்ந்தவர் என்பவர்.

இளவயதில் தந்தையின் சாசரம் பகுதியின் ஜாகிர்தாரராக இருந்தபோது நீதியின் அடிப்படையில் அப்போதைய நிலவருவாய் முறை அமையவில்லை என உணர்ந்தார். ஏழை எளிய உழவர் அவருடைய வருவாய்க்கும் அதிமாகக் கன்னாபின்னாவென்று வரிவிதிக்கப் பெற்றார் என்பதைக் கண்டறிந்தார். நாட்டிற்குச் செலுத்த வேண்டியதற்கும் பயிரிடுபவரின் செலவுக்கும் இடையில் இடைவெளி இருக்கவேண்டும் எனவும் பயிரிடுபவர்களை முஸ்லீம் படைவீரர்களின் கட்டுப்பாடிலிருந்தும் இந்து முக்காடம்களின் வரி கொடுமையில் இருந்தும் காப்பாற்ற வேண்டுமென உணர்ந்தார்.

**அளவை**

ஷெர்ஷா நிலங்களை அளவை செய்ய அகமது கானை நியமித்தார். கயிறு கொண்டு அளக்கப் பெற்றது. முப்பத்திரண்டு பிரிவுகள் கொணர்து சிக்கந்தபுரி அபி ஆகும். 10ஒ60 சிக்கந்தரி கெஜம் ஒரு பிகா ஆகும். இந்த அளவையின் அடிப்படையில் பதிவோடு ஒன்று உருவாக்கப் பெற்று எல்லா நிலப்பகுதிகளில் அளவும் அவற்றின் விளைதிறனும் குறிக்கப் பெற்றன.

**அரசின் பங்கு**

மாளவம் இராசபுதனம், மேற்கு இராசபுதனம் ஆகியன அளக்கப் பெறவில்லை. இப்பகுதிகளில் பழைய படாய் அல்லது ஜாகிர்தாரி முறை தொடர்ந்தது. அரசின்

பங்கினைப்பு ஷெர்ஷா முடிவு செய்தார். நான்கில் ஒரு பங்கு என கானுங்கோவும், சரண், திரிபாதி மூன்றில் ஒரு பங்கு என்றும் கூறுகின்றனர். பணமாகவோ, பண்டமாகவோ வழங்க இசைவு அளித்தார்.

**விலைப்பட்டியல்**

ஒவ்வொரு பொருளின் விலையினையும் முடிவு செய்ய திரிபாதியின் கருத்துப்படி ஒவ்வொரு: பகுதியிலும் ஒவ்வொரு பயிருக்கும் வேறுப்பட்ட விலை விகிதத்தை, வேறுப்பட்ட பகுதிகளுக்கேற்றவாறு முடிவு செய்திருந்தார்.

**பட்டா அல்லது காபூலயத்**

அரசின் பங்கு முடிவு செய்யப் பெற்றதும் அரசு வருவாய் அலுவலர் பட்டா அல்லது உரிமைப் பத்திரம் ஒவ்வொரு பயிரிடுவோருக்கும் அளித்தனர். அதில் அரசுக்குச் செலுத்த வேண்டிய அவருடைய பங்கு குறிக்கப் பெற்றது. அரசுக்குச் செலுத்த உடன்படுவதை இன்னொரு பத்திரத்தில் அவர் கையொப்பமிட வேண்டும்.

**ஜாரிபணா, மஹசலானா, தே அஸ்தாரி செஸ் அல்லது வரி**

அரசின் பங்குடன் ஒவ்வொரு உழவரும் மூன்று வகையான வரிகளைச் செலுத்த வேண்டியிருந்தது. நிலங்களை அளந்தமைக்கு அலுவலர்களுக்கு 21.∴2மு முதல் 5மு வரை செலுத்துவது ஜாரி பணா ஆகும். வருவாய்த் தண்டுவதற்குச் செலவு வரியாக தே- அஸ்தாரி அஸ்தார் தானியம் ஒவ்வொரு பிகாவுக்கும் செலுத்த வேண்டும். ஒரு அஸ்தார் 20 பஹ்லோலிக்கும், ஒரு பஹ்லோலி ஒரு தோலோ 8 மாஷாக்களுக்கும், 7 இரட்டிகளுக்கும் சமமாகும். இவ்வாறு பெறப்பட்ட தானியம் அரசினால் பாதுகாத்து வைக்கப் பெற்று பஞ்சகாலங்களில் உழவர்களுக்கு உதவிட அளிக்கப் பெற்றது. அக்பருடைய தேளசிரி என்ற முறைக்கு இது முன்னோடி முறையாகும். அரசு விதித்த அளவுக்கு மேல ஒரு சிறு தொகை கூடப பெறக் கூடாது. ஏன்று விதிக்கப் பெற்றிருந்தது.

**அரசின் தனிக்கட்டளைகள்**

நிலவருவாயைச் சீரமைத்ததுடன் ஷெர்ஷா உழவர்கள் நலனில் பெரும் அக்கறை செலுத்தினார். நில வருவாய் பெறும்போது தாராளமாக் நடந்து கொள்ளும்படி அறிவுத்தினார். படைவீரர்கள் படைகளைக் கொண்டு செல்கையில் விளைநிலங்கள் வழியே செல்லக் கூடாது எனவும் அவ்வாறு சென்றதால் அவருடைய காதுகள் அறுக்கப் பெற்ற கழுத்தில் தானியத்தைச் சுற்றி முகாமைச் கொண்டு வரப்படுவார் என எச்சரித்தார். குறுகிய வழியில் செல்லத் தானிய வயலுக்குச் சேதம் ஏற்படுத்தினால் தகுந்த இழப்பீடு அளிக்க வேண்டும். எதிரியின் நாட்டைக் கைக்கொண்ட போது கூட விளைநிலங்களுக்கோ, விளைச்சலுக்கோ சேதம் விளைவிக்கவில்லை.

**தக்காவி**

நிலத்தை விருத்தி செய்யக் கருவிகள் வாங்க, பயிர்ச் செலவிற்கு எனத் தக்காவிக் கடன்களை வழங்கினார்.

ஷெர்ஷா இவ்வாறாகப் புகழ் பெற்ற இரயத்துவாரி முறை என்ற முறைக்கு அடிக்கல் நாட்டினார். நிலவருவாய் தவிர காம்சு, ஜெசியா வாயிலாகவும் அரசுக்கு வருவாய் கிடைத்தது. (காம்சு என்பது போரின் போது கொள்ளையிடப்பட்டதில் ஐந்தில் ஒரு பங்கு) உயர் குடியினர் அன்பளிப்புகள், சுங்கவரி ஆகியனவும் முக்கிய வருவாய்கள் அரசரின் அரண்மனை படையினர் அலலாதார் துறைச் செலவுக்ள முதன்மைச் செலவுகளாயின.

**பொதுச் சீர்திருத்தங்கள் - சாலைகள்,சராய்கள்**

பொதுச் சீர்திருத்தங்களுக்காகவும்,ஷெர்ஷா குறிப்பிடத்தக்கவர். சுாலைகள் அமைத்தவர். 3400 மைல் சாலைகள் அமைத்தார் என்று மதிப்பிடப் பெறுகிறது. இது

ஒரு மாபெரும் பணி. காடுகளை அழித்துப் பாதைகளில் பாலங்களை அமைத்தது ஒரு மாபெரும் சாதனையே.

**ஷெர்ஷாவின் நான்கு சாலைகள் குறிப்பிடத்தக்கன**

- சுரக்-இ-ஆஜம் என்பது இன்றைய தேசிய நெடுஞ்சாலை எனக் கண்டறியப் பெற்றுள்ளது. கிழக்க வங்காளத்தில் சோனார் கானிலிருந்து மேற்கு பஞ்சாபில் ரோட்டாஸ் வரை சென்றது. ஆக்ரா, டெல்லி, லாகூர் வழி சென்றது.
- ஆக்ராவிலிருந்து பர்ஹான்பீர் வரையிலான சாலை.
- ஆக்ராவிலிருந்து ஜோத்பூர், சித்தூர் வரையிலான சாலை.
- லூாகூரிலிருந்து முல்தான் வரையிலான சாலை.

சாலையின் இரு புறங்களிலும் கனியும், நிழலும் தரும் மரங்களை நட்டார். படைகளின் நடமாட்டத்திற்காக இவற்றை அமைத்தாரா அல்லது வாணிகர்கள் பயணிகளின் வசதிக்காக அமைத்தாரா என்று கூற இயலாது. ஆனால் ஒன்று மட்டும் உறுதியாகக் கூறலாம். இவ்வாறு சாலைகள் அமைத்ததன் தலையாய நோக்கம் தொலைவில் இருந்த அவருடைய பரந்த நிலப்பரப்பைக் கண்காணிப்பதே அடிப்படை நோக்கமாகும். அதே நேரத்தில் மக்களுக்குச் சாலைகளால் பொதுவாகக் கிடைக்கும் பயனையும் கருதிப் பார்த்திருக்க வேண்டும்.

**சராய்கள் அல்லது சத்திரங்கள்**

ஒவ்வொரு சாலையிலும் ஷெர்ஷா சராய்களைக் கட்டினார். ஆப்பாஸ்கான், சுமார் 1700 சராய்களை அமைத்ததாகக் கூறுகிறாட. ஓவ்வொரு சராயிலும் இந்துக்கள், முஸ்லீம்கள் தங்கிச் செல்லத் தனித்தனித் தங்குமிடங்கள், ஒவ்வொரு சராய் வாயிலிலும் தண்ணீர்ப் பானைகள் வைத்தார் என்றும் அப்பாஸ்கான் கூறுகிறார். இந்துக்களுக்குக் குளிர், சுடுநீர், படுக்கைகள், குதிரைகளுக்குத் தண்ணீர், உணவு, தானியங்கள் வழங்க தனியாக ஆட்களை நியமித்தார். ஒவ்வொரு சராயிலும் ஒரு கிணறு, ஒரு மஸ்ஜித், இமாம் காவலர்கள் நியமிக்கப் பெற்று அரசுச் செலவில் நிர்வகித்தனர்.

**அஞ்சல்துறை**

ஒவ்வொரு சராயிலும் அஞ்சல், ஒற்றர் துறையினர் வசதிக்காக இரண்டு குதிரைகள் நிறுத்தப் பெற்றன. மொத்தத்தில் 3400 குதிரைகள் அங்கு இருந்தன. இவை வாயிலாக ஒரு சராயிலிருந்து அடுத்த சராயிக்கு அஞ்சல்கள் அனுப்பினர். அஞ்சலகங்களாகவும் சராய்கள் விளங்கின. தினமும் வங்காளத்தின் எல்லைப் பகுதியிலிருந்தும் அரசர் செய்தி அறியும் வண்ணம் அஞ்சல் துறை சிறப்புடன் நடைபெற்றது என தகபகத் இ அக்பரி ஆசிரியர் கூறுகிறார்.

பேரரசின் குருதி நரம்புகளைப் போல் சராய்கள் விளங்கின என்று கூறுகிறார். இதுவரையில் இல்லாத அளவிற்குப் புதிய உயிரோட்டத்தை அவை அளித்தன. அலுவலர்கள் அடிக்கடி மாற்றப் பெற்றனர். படைசார்ந்த, படைசாராப பணியாளர்கள் தங்கிச செல்லும் ஓய்விடங்களாகவும் இச்சராய்கள் விளங்கின. இந்தச் சராய்கள் அங்காடிகளுடைய நகரங்களாகவும் மாறின. இதனால் குடிமக்கள் அரசு அலுவர்களைக் கவனித்துக் கொள்ளும் தொல்லையிலிருந்தும் விடுபட்டனர். இதனால் அரசனின் அரும் கொடை உணர்வு கிராமப்புறங்களில் வாழ்ந்த மக்களும் அறிந்த ஒன்றாயிற்று. மக்களை இணைக்கும் பாலமாகவும் இவை விளங்கின. பிராமண, முஸ்லீம் சமையல்காரர்களை நியமித்தன் மூலம் இந்து முஸ்லீம்கள் ஒன்றுபட வழி

செய்தார். வாணிபம் வர்த்தகம் வளர்ச்சிக்கும் துணை புரிந்தன. ஷெர்ஷாவின் ஆட்சிமுறை வெற்றிக்கு இவை துணைபுரிந்தன.

பல்வேறு அறநிலையங்களையும் ஷெர்ஷா அமைத்தார். லங்கார் - இ - பக்ரா எனப்படும் ஏழை, எளிய மக்களுக்கு உதவிடும் படைவீரர், உழவர் அல்லது யாத்ரிகர் யார் வேண்டுமானாலும் உணவு பெறலாம். இந்தச் சமையற்கூடங்களில் ஆயிரக்கணக்கானவர்கள் தினமும் உண்டனர். இமாம்கள், உலேமாக்களும் கொடையளித்தார். தரும இல்லங்கள், தோட்டங்கள், மருத்துவமனைகள், கல்வி நிலையங்கள் ஏற்படுத்தினார்.

**காவல்துறைச் சீர்திருத்தங்கள்**

காவல் துறையினைப் பொருத்தமட்டில் தலப் பொறுப்பு நிலை வகித்தார். ஒவ்வொரு கிராமத்திலும் தலைபாரி அல்லது முக்காடமே சட்டம் ஒழுங்கினை நிர்வகித்தார். ஒவ்வொரு கிராமத்திலும் நடைபெறும் திருட்டு, கொலை, கொள்ளையினைக் கண்டறிவது அவருடைள பொறுப்பு. அவ்வாறு கண்டறியவில்லையெனில் முககாடமிற்குத் தண்டனை அளிக்கப் பெற்றது. அமீர்கள் முக்காடம்களைக் கைது செய்தனர் என அப்பாஸ்கான் குறிப்பிடுகிறார். குற்றவாளியைக் கண்டுபிடித்து ஒப்படைத்தால் தான் முக்காடம்கள் விடுவிக்கப் பெற்றனர். கொலையாளிகளைள் கண்டுபிடிக்கவில்லெனில் முக்காடம்களுக்கு மரண தண்மனை விதிக்கப் பெற்றது.

காவலர் பணிக்குப் பழைய கொள்ளையர்கள் , திருடர்களையே ஷெர்ஷா நியமித்தார். அக்காலத்திற்கு இரு பொருத்தமானதாய் அமைந்தது. முக்காடம்கள் ஷெர்ஷாவின் தண்டனைக்கு அஞ்சி மிகவும் கவனமாகச் செயல்பட்டனர். இதனால் ஒரு வயதான பெண்மணி தலையில் கூடைநிறைய விலை மதிப்புள்ள நகைகளைக் கொண்டுச் சென்றாலும் திருடர்,கொள்ளையர் பயமின்றிச் சென்று வர முடிந்தது என்று அப்பாஸ்கான் கூறுகிறார். அதுபோலவே கொடுமை செய்யும் உயர்குடியினரான பிரபுக்களையும் கண்காணித்து வந்தார். ஒவ்வொரு உயர்குடியினரைப் பற்றியும் ஒற்றர்கள் வாயிலாகச் செய்தி அறிந்தார்.

**நாணயச் சீர்திருத்தம் - சுங்கவரி**

வாணிப வளர்ச்சிக்கும் ஷெர்ஷா பெரும் உதவி அளித்தார். அலுவலர்களுக்கு வாணிகர்களிடம் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்று கட்டளையிட்டார். ஒரு வணிகர் தங்கள் பகுதியில் இறந்தால் அவர் சொத்தில் அலுவலர்கள் கை வைக்கக் கூடாது என்று கட்டளை பிறப்பித்தார்.

சுங்கவரி முறையை முழுமையாக மாற்றியமைத்தார். இரண்டே வரிகள் பெறப்பட்டன. பொருள்கள் தம் அரசின் எல்லையில் நுழைந்தபோது ஒரு வரி விதிக்கப் பெற்றது. இதனால் ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ்வொரு வரி செலுத்தும் தொல்லை ஒழிந்தது.

சிறிய அளவிலான காசுகளை வெளியிட்டார். டாம் அல்லது தாம் என்பது மிகவும் சிறிய காசு ஆகும். 322 கிராம் தனிச் செம்பில் அச்சிடப் பெற்றது. அரைதாம், கால் தாம் ஆகியனவும் வெளியிட்டார். 180 ககிராம் எடையுள்ள ரூபாய் எனப்படும் வெள்ளிக்காசுகளை வெளியிட்டார். அதில் 175 கிராம் தூய வெள்ளி இருந்தது. மொகலாயர் காலத்திலும் கிழக்கிந்திய வணிகக்குழு காலத்திலும் இந்த வெள்ளி நாணயங்கள் புழக்கத்தில் இருந்தன. அஷ்ரபி என்ற தங்க நாணயம் 167 குன்றி மணி தூய தங்கமுடையது. ஷெர்ஷாவின் காசுகள் வட்டமாகவும், சதுரமாகவும் இருந்தன. அராபி, பாரசீகம், தேவநாகரி மொழிகள் எழுத்துக்கள் காணப்பெற்றன. தேவநாகரியில் ஸ்ரீ ஷெர்ஷா என்று குறிப்பிடப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இந்துக்

குடிமக்களையும் நிறைவடையச் செய்வது அவர் நோக்கமாயிருந்திருக்கலாம் என்ற எண்ணத் தோன்றுகிறது.

**ஷெர்ஷாவின் கட்டடங்கள்**

சிறந்த கட்டடங்களை எழுப்புவதிலும் ஷெர்ஷாவின் பணி உள்ளது. சாசரத்தில் கட்டியுள்ள மசூதி குறிப்பிடத்தக்கது. வெளிப்புறத்தில் இஸ்லாமியக் கூறுகளும், உட்புறம் இந்துக் கூறுகளும் உள்ளன. பெரிய ஏரியின் மையத்தில் அமைந்துள்ள அழகிய மாளிகைகளில் உள்ள ஒன்று. எவ்வகையிலும் இது தாஜ்மஹாலுக்குக் குறைந்ததென்று எனக் கன்னிங்ஹாம் கூறுகிறார். ஹேவல் என்பவர் வெளியில் பார்த்தால் இஸ்லாமியக் கட்டடம் உள்ளே இந்து கட்டடம் என்கிறார்.

முற்றொரு குறிப்பிடத்தகு கட்டடம் புராணகிலா எனப்படும் யமுனை நதிக்கரையில் டெல்லியில் அமைந்த பழைய கோட்டையாகும். ஆக்ராவில் அழகிய அரண்மனை அமைத்தார். எண்ணிறந்த நகரங்களைப் புதுப்பித்தார். கன்னோசியின் பழைய நகரில் புதிய நகரை அமைத்தார். பாடலிபுத்திரத்திலும் பழைய நகரத்தை இடித்துப் புதிய நகரத்தை உருவாக்கினார். மேற்கு பஞ்சாப்பில் ரோட்டஸ்கார் கோட்டையை அமைத்தார். எனக்கு மட்டும் அயுள் இருக்குமானால் ஒவ்வொரு சர்க்காரிலும் ஒரு கோட்டையின் அமைப்பேன் என்று ஷெர்ஷா குறிப்பிட்டது கட்டடம் கட்டுவதில் அவருடைய ஆர்வத்தை வெளிப்படுத்துவதாகும்.

**ஷெர்ஷாவின் சமயக் கொள்கை**

டெல்லி சுல்தான்கள் நேரடியாகவோ, மறைமுகளமாகவே கலீபாவிற்கு வணக்கம் செலுத்தினர். அவர்களை விடக் கலீபாவே உயர்ந்தவராயினார். இதனால் வரம்பெற்ற இறைமையதிகாரம் உடையவர்களாகக் கருதிக் கொள்ள இயலவில்லை. ஷெர்ஷா தங்கள் இறைமை எவருக்கும் கட்டுப்படாதது என அறிவித்தார். ஷெர்ஷா தம்மைக் கலீபாவெனத் தாம் வெளியிட்ட வெள்ளி, செப்புக் காசுகளில் குறிப்பிட்டார்.

அரசரோ இறைமை அதிகாரம் வாய்ந்தவராகவும் நாட்டிலுள்ள மக்கள் அனைவருக்கும் தலைவராகவும் விளங்கினார். கோனாட்சி என்பது சூர்களின் காலத்தில் ஓர்அமைப்பு என்னும் முறையில் என்றும் இல்லாதவாறு சிறப்பில் உயர்ந்தது. இடைக்கார இந்தியாவில் வளர்ச்சி பெற்ற இந்த இறைமைக் கொள்கை இந்திய இஸ்லாமிய அரசியலமைப்பு ஒழுங்கு முறையில் வளர்ச்சிச்குப் பெருங்காணிக்கை என்று கூறுகிறார்.

இந்தியாவில் இந்துக் குடிமக்களிடத்துத் தாராளக் கொள்கையினைக் கடைபிடித்த இந்தியாவின் முதல் இஸ்லாமிய அரசர் என்று ஷெர்ஷா கருதப் பெறுகிறார். டாக்டர் கானுங்கோ இந்துச் சமயத்தின் பால் அவருடைய கொள்கை, குற்ற உணர்வுடன் கூடிய துன்பநிலையன்று. மரியாதையுடன் கூடிய வேறுபாட்டு நிலையே என்று கூறுகிறார். ஆனால் அக்பரைப் போலச் சகிப்புத் தன்மை கொண்டவரல்லர்.

ஜெசியா வரியை நீக்கவில்லை. பசுவதைக்கு எதிராக அரசாணை பிறப்பிக்கவில்லை. பூரன்மால், மால்தேவ் ஆகியோருக்கு எதிராகப் போரிட்டபோது இந்து ஆலங்களைச் சிதைத்தார்.

ஏராளமான இந்துக்களை கொலைச் செய்தார். இருப்பினும் கூட இந்துக் குடிமக்கள் பால் பொதுவான அவருடைய கொள்கை அவருடைய முன்னோடிகளினுடையதைவிட இணக்கமானதாகவே இருந்தது.

**சூர்ஆட்சியும் மக்களும்**

சூர் ஆட்சி வரம்பற்ற இறைமையின் அளவுக்கு அதிகமாகவே தங்கள் சிறப்பை ஓங்குவித்த போதிலும், கோனாட்சி அமைப்பு அடிப்படையில் பார்க்கின்ற போது சரியான போதிய அடித்தளம் இன்றி இருந்தது. அதிகாரச் செறிவை வெறுத்த அவர்கள் அரசரின் வரம்பற்ற இறைமையையும் வெறுத்தனர்.

ஓர் அரசர் பெருங்குற்றம் செய்தவராயிருந்த போதிலும் வெறுக்கத்தக்க கொடூர இயல்பினராயினும் உயர்குடியினர் அவருடைய குற்றங்களைப் பெருங்குற்றமாகக் கருதாமல் அவரை ஆதரித்தனர். அரசரே இறைமை வாய்ந்தவராக நாட்டிலுள்ள மக்கள் அனைவருக்கும் தலைவராக விளங்கினார். தன்னுடைய அதிகாரத்தை, வல்லமையைக் காட்டிட யாருடைய துணையையும் அரசர் நாடாமல் தாமே நேரடியாக அனைத்துப் பொறுப்புகளிலும் அதிகாரங்களின் இருப்பிடமாக விளங்கினார்.

**மதிப்பீடு**

ஷெர்ஷா மிக உயர்ந்த ஆட்சியானர். நூட்டில் பலவழிகளிலும் பொருளாதார துறையே மேம்படுத்தினார். அவரது முயற்சியால் சாலைகள் செப்பனிடப்பட்டது. இதனால் வாணிபம் வளர்ந்தது. நீதித்துறை மிக சிறப்பாக செயல்பட்டதால் நாட்டில் குற்றங்கள் குறைந்திருந்தது. வயது முதிர்ந்த ஒரு பெண் ஓர கூடை நிறையத் தங்க நகைகளை எடுத்துக் கொண்டு அச்சமின்றி காட்டில் இரவு தங்கி செல்லலாம் என கொளங்கோ (ஞரயயெபெழ) என்ற வரலாற்று அறிஞர் கூறுவார்.

சமயச் சார்பற்ற உணர்வு நிலையினைத் தம் அரசில் உருவாக்கினார். ஷெர்ஷாவின் இந்துக் குடிமக்கள் பாலான கொள்கை பொதுவாகச் சமய நடுநிலைக் கொள்கை அல்லது பொதுமைக்கொள்கை எனப்படுகிறது. போர்க்காலங்கள் தவிர்த்த மற்றையக் காலங்களில் இந்து அரசர்கள் பால் இஸ்லாமியக் கோட்பாட்டைத் திணிக்கும் செயலைச் செய்யவில்லை. பெரிய பதவிகளை இந்துக்களுக்கு வழங்கினார். ஷெர்ஷாவின் கீழ் தோடர்மால், விக்ரமஜித் கௌர் ஆகியோர் பொறுப்பு வாய்ந்த பதவிகளை வகித்தனர். சமையலறைகளில் இந்துச் சமையல்காரர்களை நியமித்தார். பாரசீக மொழியில் மட்டுமல்லாது இந்தி மொழியிலும் வருவாய்த் துறைப் பதிவுகளை எழுதச் செய்தார்.

அக்பரின் கொள்கையினை விட ஷெர்ஷாவின் கொள்கை பெருமளவு உறுதியானது என்பபடுகிறது. தும் சமயக் கொள்கையால் இந்துக் குடிமக்களின் நல்லெண்ணத்தைப் பெற்றார். ஆனால் இந்துக்களை வெல்லும் போரார்வத்தின் விளைவால் தம் முஸ்லீம் குடிமக்களின் மன உணர்வுகளுக்கேற்ப நடந்து தினமும் ஐந்து முறை தொழுகை நிகழ்த்தினார். ஒவ்வொரு சராயிலும் மசூதி ஒன்றைக் கட்டி முஸ்லீம் சமய ஞானிகளுக்குத் தாராளமாகக் கொடையளித்தார்.

மெக்காவிலும் ஒரு சராயினைக் கட்டினார்.பூரன்மாலுக்கு எதிராகப் புனிதப் போரை நிகழ்த்தினார். முஸ்லீம் பெண்டிரின் பெருமையைக் காக்கவும், தீவிர இஸ்லாமியச் சமயச் பற்றாளரின் பாராட்டுதலைப் பெறவும் தான் இதனைச் செய்தார். இதனால் அவருடைய இஸ்லாமிய குடிமக்கள் அவருடைய தாராளமான நெகிழ்ச்சியான இந்துக் குடிமக்கள் பாலான கொள்கையினைத் தவறாகக் கருதவில்லை.

இங்கே தான் அக்பருக்கும் ஷெர்ஷாவிற்கும் வேறுபாட்டைக் காண்கிறோம். அக்பர் இந்துக்கள் பால் கொண்ட தாராளக் கொள்கையினை நடைமுறைப்படுத்துகையில் தம் சமய மக்களின் உணர்வுகளைப் பொருட்படுத்தவில்லை. இந்துக்களின் அன்பையும், ஆதரவையும் பெற்ற அவ்வேளையில் தம் இனச் சமய மக்களின் அன்பையும் ஆதரவையும் இழந்தார். அவர்கள் ஒரே குடிமக்களாகக் கருதும் கொள்கைக்குத் தடையாயினர்.

இஸ்லாமிய சமயத்திற்குத் தன் ஆட்சியில் ஓர் உயர்வான இடம் அளிக்கப் பெறும் அதே சமயத்தில் இந்துச் சமயத்தைத் தாழ்வுபடுத்திவிடக் கூடாது என்பதே ஷெர்ஷாவின் கொள்கையாயிற்று. இது செயல்முறைக்கு ஒத்த, அவர் வாழ்ந்த காலத்திற்குப் பயனுள்ள அக்பரின் கொள்கையிலிருந்து மாறுபட்டதாயிருந்தது. ஷெர்ஷாவின் கொள்கையைத்தான் அக்பரின் பின் தோன்றல்கள் பின்பற்றியிருந்தார்கள் என்றால் இந்தியாவின் வகுப்புவாத பிரச்சினை தோன்றியிருக்காது என்பர்.

## மாமன்னர் அக்பர்

### பிறப்பு

1542 – ம் ஆண்டு அக்டோபர் 15 – ம் தேதி ஹுமாயூனுக்கும் ஹமிதா பானுவிற்கும் சிந்து நதி காட்டிலுள்ள அமரக் கோட்டையில் பிறந்தார்.

### இரண்டாம் பானிபட் போர் - 1556

ஹுமாயூன் காலமான செய்தியை அறிந்ததும் முகமது அடில்ஷாவின் பிரதம மந்திரி ஹெமு டெல்லியை கைப்பற்றினார். இதை அறிந்த அக்பரின் படை டெல்லியை கைப்பற்ற தானேஸ்வரம் வழியாக டெல்லிக்கு வந்தது. ஹெமுவின் படைகளும், அக்பரின் படைகளும், பானிபட் என்ற இடத்தில் 1556 – ம் ஆண்டு மோதியது. எதிர்பாராத அம்பு ஒன்று ஹெமுவின் கண்ணைக் குத்தியதால், ஹெமு இறந்து விட்டார் என்று எண்ணி ஹெமுவின் படைகள் சிதறி ஓடின. அக்பர் டெல்லியை கைப்பற்றினார். இதனால் மொகலாய பேரரசு மீண்டும் நிலைநாட்டப்பட்டது.

அக்பர் தனது 13-வது வயதில் பட்டத்திற்கு வந்தார். அவர் இளைஞராக இருந்ததால் அவரது மாமன் பைராம்கான் பகர ஆட்சியராக இருந்து ஆட்சி செய்தார். பைராம்கானின் செல்வாக்கு இரண்டாம் பானிபட் போருக்குபின் உயர்ந்தது. இதை அக்பரின் அம்மா ஹமீதா பானுபேகம், வளர்ப்பு தாய் மகம் அங்கா, மகம் அங்காவின் மகன் ஆடம்கான் ஆகியோர் வெறுத்தனர். அவர்கள் பைராம்கானிடமிருந்து விடுதலையடைய வேண்டினர். அக்பரும் விரும்பினார். பைராம்கான் மெக்காவுக்கு அனுப்பப்பட்டார். அவரது புனித பயணத்திற்கான ஏற்பாடுகளை அவரது பகைவன் பீர் முகமதிடம் ஒப்படைக்கப்பட்டது. இதை எதிர்த்து புரட்சி செய்து தோல்வி கண்டார். மன்னிப்பு அளிக்கப்பட்டு மெக்கா பயணமானார். வழியில் ஆப்கன் ஒருவனால் 1561 – ல் கொல்லப்பட்டார். இதன்பின் வளர்ப்புதாய் மகம் அங்கா அக்பர் மீது செல்வாக்கு செலுத்தினார். இதை வின்செண்ட் சுமித் **பெட்டி கோட்** அரசு அல்லது பெண்கள் செல்வாக்கு பெற்ற அரசு என்றார். மகம் அங்காவின் நோக்கம் தன் மகன் ஆடம்கானை உயர்த்துவது. எனவே 1562 – ல் அக்பரின் முதலமைச்சர் சம்சுதீன் கொல்லப்பட்டார். இதன் விளைவு அக்பர் உத்தரவின் பேரில் ஆடம்கான் கொல்லப்பட்டார். இந்த அதிர்ச்சியில் 1562 – ல் மகம் அங்கா இறந்தார்.

### மாளவத்துடன் போர் - 1561

மாளவத்தை **பாஸ்பகதூர்** என்பவர் ஆட்சி செய்து வந்தார். இவரது ஆட்சி நல்லாட்சியில்லை என்று அறிந்து அக்பர் மாளவத்துடன் போர்புரிந்தார். போரில் அக்ப்ர் வெற்றி பெற்று மாளவத்தை தன் நாட்டுடன் இணைத்துக் கொண்டார்.

### கோண்டுவானா படையெடுப்பு

மாளவத்தின் கீழ் இருந்த கோண்டுவானா பகுதியை ராணி துர்காவதி ஆட்சி செய்து வந்தார். அமைதியான ஆட்சி செய்த போதிலும் தாராவின் ஆளுநரான ஆப்கானுக்கு அக்பர் ஆணையிட்டு கோண்டுவானாவை கைப்பற்றும்படி ஆணையிட்டார்.

போரில் வீரமாக போரிட்டு தோல்வி கண்ட துர்காவதி தீக்குளித்து உயிர் நீத்தார். ஆயிரம் யானைகளும் விலை உயர்ந்த பொருட்களும் அக்பரால் கைப்பற்றப்பட்டன.

**சித்தூர் படையெடுப்பு – 1567**

அக்பரின் இராஜபுத்திரத் திருமண உறவுகள் பற்றி மேவார் நாட்டை ஆண்ட உதயசிங் கேவலமாக பேசினார். இவர் ரணா சங்காவின் மகனாவார். ஊதயசிங்கை ஒழிப்பது மூலம் இராஜபுத்திரர்களை வீழ்த்தி விடலாம் என்று எண்ணி அக்பர் சித்தூர் கோட்டையை 1567 – ல் முற்றுகையிட்டார். சித்தூர் கோட்டையின் சில பகுதிகள் தகர்க்கப்பட்டது. இப்போரில் மாளிகையினையும் அக்பர் படையினர் இடித்து தள்ளினார். இப்போரின் விளைவாக ரான்தம்பூர், கலஞசார் ஆகிய பகுதிகள் அக்பரால் கைப்பற்றப்பட்டன.

**வங்க படையெடுப்பு**

வங்காளம், ஒரிஸ்ஸா, பீஹார் ஆகிய பகுதிகளை தாவூத் ஆட்சி செய்து வந்தார். அவர் அக்பரின் ஆதிக்கத்தை ஏற்க மறுத்ததால் அக்பர் தாவூத் மீது படையெடுத்தார். முதலில் அக்பர் பாட்னாவை கைப்பற்றினார். தாவூத்தின் படையை ராஜ்மஹால் என்ற இடத்தில் அக்பர் தோற்கடித்து வங்காளம், ஒரிசா, பீஹார் போன்ற பகுதிகளை கைப்பற்றினார்.

**காஷ்மீர் படையெடுப்பு – 1586**

காஷ்மீரத்தை யூசுப்கான் ஆட்சி செய்து வந்தார். அவர் அக்பரின் மேலாண்மையை ஏற்க மறுத்தார். அதனால் 1586 – ல் ராஜா பகவன்தாஸ் தலைமையில் அக்பர் ஒரு படையை அனுப்பினார். அக்பருக்கு யூசுப் பணிந்து விட்டால் மீண்டும் மன்னர் பதவியை வாங்கித் தருவதாக கூறி யூசுப்கானை அக்பரின் அரசவைக்கு அழைத்து வந்தார். ஆனால் யூசுப்பை அக்பர் சிறை செய்தார். காஷ்மீரையும், காபூலையும் தன் நாட்டோடு அக்பர் இணைத்துக்கொண்டார்.

**தக்காண படையெடுப்பு**

வட இந்தியா, மத்திய இந்தியா ஆகிய பகுதிகளை தன் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்த அக்பர் தன் மேலாண்மையை ஏற்கும்படி தக்காண அரசுகளுக்கு ஆணையிட்டார். அவைகள் மறுத்ததால் போர் தொடுக்க வேண்டிய சூழ்நிலை உருவாகியது.

1.**அகமது நகருடன் போர் - 1600**

சுாந்த்பீவி என்பவர் அகமது நகரை ஆட்சி செய்து வந்தார். அக்பரின் மேலாண்மையை சாந்த்பீவி ஏற்க மறுத்தார். இதனால் அக்பரின் மகன் மூரத்தும், பைராம்கானின் மகன் அப்துல்ரகீமும் அகமது நகரை முற்றுகையிட்டனர். தனது கோட்டையை பாதுகாக்க சாந்பீவி ஆண் உடைதரித்து போர் செய்தார். இறுதியில் சாந்பீவி போரில் கொல்லப்பட்டாள். அகமது நகர் 1600 – ல் அக்பர் பேரரசுடன் இணைக்கப்பட்டது.

2.**காந்தேஷ் படையெடுப்பு – 1601**

காந்தேஷ் மிரான் பகதூர் ஆட்சி செய்து வந்தார். அக்பரின் மேலாண்மையை ஏற்ப மறுத்ததால் 60 வயதான அக்பரே தனது படையை நடத்திச் சென்றார்,முற்றுகை நீடித்தது. மீரான் பகதூர் சரணடைந்தால் மரியாதையாக

நடத்தப்படுவார் என்று அக்பர் கூறினார். மீரான் பகதூர் உடனே சரணடைந்தார். ஆனால் அவர் கைது செய்யப்பட்டார். காந்தேஷ் அக்பர் பேரரசுடன் இணைக்கப்பட்டது. இதுதான் அக்பரின் இறுதி படையெடுப்பாகும்.

## அக்பரின் ஆட்சிமுறை

அக்பரது ஆட்சியில் மத்திய அரசு பலசுபாக்களாகவும் (மாநிலம்) சுபாக்கள் ஒவ்வொன்றும் பல சர்கார்களாகவும் (மாவட்டம்) ஒவ்வொரு சர்க்காவும் பல பர்கானா (வட்டம்)க்களாகவும் ஒவ்வொரு பர்கானாவும் பல கிராமங்களாகவும் பிரிக்கப்பட்டு இருந்தது.

**1.மத்திய அரசு**

மத்திய அரசின் தலைவர் அரசர். ஏல்லா அதிகாரங்களும் மன்னரிடமே இருந்தது. மொகலாய மன்னர்கள் தங்களை பாதுஷா என்று அழைத்து கொண்டனர். படைகளின் தலைவரும் அவரே, நீதித்துறையின் காவலரும் அவரே, நீதித்துறையின் பொறுப்பாளரும் அவரே, சமயத்தின் தலைவரும் அவரே, மன்னருக்கு உதவியாக அமைச்சர்கள் இருந்தனர். அமைச்சர்களை மன்னனே நியமித்து வந்தனர். மன்னனுக்கு அடுத்த நிலையில் இருந்தவர் பிரதம அமைச்சராவர். (வக்கீல்) மற்ற அமைச்சர்கள் அவரது கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டனர்.

அமைச்சர்களுக்கு இலாகாக்கள் பிரித்து கொடுக்கப்பட்டிருந்தது. திவான் என்று அழைக்கப்படுபவர் **நிதியமைச்சராகவும், மீர்பக்ஷி** என அழைக்கப்படுபவர் **இராணுவ அமைச்சராகவும், சதர் உஸ்சதர்** என அழைக்கப்படுவர் **அறக்கட்டளை அமைச்சராகவும்,** கானிசாமன் என அழைக்கப்படுபவர் **அரண்மனை நிர்வாக அமைச்சராகவும்** காஸி-உல்-கஸாத் என அழைக்கப்படுபவர் **தலைமை நீதியமைச்சராகவும், முக்தாஸிப்** என அழைக்கப்படுபவர் **தலைமை தணிக்கையாளராகவும்** செயல்பட்டனர்.

**2.மாநில அரசு**

முாநில ஆட்சியின் தலைவர் **சுபேதார்** என அழைக்கப்பட்டார். இவரே மாநிலத்தின் **ஆளுநர்**, இவரே அரசபிரதிநிதியுமாவார். இவர் மன்னரால் நியமிக்கப்படுகிறவர். முாநிலத்தில் அமைதியை ஏற்படுத்துவது இவரது முக்கிய கடமை. ஆதனால் மாநிலத்தில் நீதிவழங்கும் பொறுப்புகள், சமய பூசல்கள், சமய கிளர்ச்சிகள் ஏற்படாதவாறு பாதுகாத்துக் கொள்வதும், மாநிலத்தின் படைகளை நிர்வாகம் செய்வதும் ஆகிய பொறுப்புகள் கொடுக்கப்பட்டது. இவருக்கு உதவியாக கவான், சாதர், காஸி, வாக்கியா நவிஸ், கொத்தவால், பக்ஷி போன்ற அலுவலர்களும் இருந்தன்ர். அக்பரது ஆட்சி காலத்தில் நாடு **15 சுபாக்களாக** பிரிக்கப்பட்டிருந்தது.

**3.சர்க்கார் (மாவட்டம்)**
**பௌஜ்தார்**

**சர்க்காரின் தலைவராக பௌஜ்தார் என்பவர் நியமிக்கப்பட்டார்.** இவர் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டுபவர். மாவட்ட படைகளை இவரே நிர்வாகித்தார்.

**அமுல்குஷார்**

இவா் மாவட்ட **நிலவரி அதிகாரியாக** இருந்தாா். நில வரிகளை வசூலித்து பா்கானா கருவூலத்திற்கு கொண்டு சேர்ப்பவா் இவரே துணையால் நிலங்கள் முறையாக அளக்கப்பட்டன. நிலங்களைப் பற்றிய வழக்குகளையும் இவா் விசாரித்து வந்தாா்.

**பிரிட்டிக்ஷி**

இவா் நிலவா் அதிகாரிக்கு (அமுல்குஷாா்) உதவியாக இருந்தாா். நிலங்களை பதிவுச் செய்தல், நிலங்களின் விளைச்சல் மதிப்பை கணக்கிடுதல் இவரது பணியாகும்.

**கஸான்தாா்**

இவரும் நிலவரி அதிகாரிக்கு உதவி புரிந்தாா். இவா் கருவூல காப்பாளராக இருந்து வரிகளுக்கு ரசீது கொடுத்துப் பணம் பெற்றாா். அப்பணத்தை மாவட்ட கருவூலத்திற்கு அனுப்பினாா்.

**4.பா்கானா**

பா்கானாக்களை ஷிக்தாா், அமீல், பொட்டேதாா், கானுங்கோ போன்ற முக்கிய அதிகாரிகளின் ஆட்சி செய்தனா்.

**ஷிக்தாா்**

இவா் வட்டார ஆட்சித் தலைவராக இருந்த போதிலும் சட்டத்தையும், ஒழுங்கையும் காத்து, குற்ற வழக்குகளையும் விசாரித்தாா்.

**அமீல்**

இவா் நிலங்களின் மதிப்பைக் கணக்கிட்டு வரிவசூலித்தாா். விவசாயிகளின் வழக்குகளை விசாரித்து முடிவு செய்தாா். அச்சமயத்தில் கிராம தலைவா்களை கலந்து ஆலோசிக்காமலேயே நேரடியாக விவசாயிகளை விசாரிக்கும் உரிமை இவருக்கு இருந்தது.

**போட்டேதாா்**

இவா் பா்கானாவில் கருவூலப் பணிகளை கவனித்து வந்தாா்.

**கானுங்கோ**

இவா் விளைகின்ற பயிா்களின் தன்மை, நிலங்களின் தன்மை, வரிபாக்கி வசூலித்தல் போன்றவைப் பற்றிய விபரங்களைத் தனியே குறிப்பெழுதி வைத்திருந்தாா். இவரை உழவா்களின் புகலிடம் என அபுல்ஸால் புகழ்கின்றாா்.

**5.கிராமஆட்சிமுறை**

பொதுவாக அந்தந்த கிராமங்களுக்கு பூரண சுதந்திரம் கொடுத்து சுதந்திரக் கிராமப் பஞ்சாயத்துகளாக அவற்றை விளங்கச் செய்தாா். ஆங்காங்கே சபைகள் நியமிக்கப்பட்டு கிராமங்கள் சுதந்திரமாக செயல்படுகிறதா என கவனிக்கப்பட்டது. முக்காடம் என்பவா் கிராமத் தலைவராகவும், பட்வாாி என்பவா் கிராம கணக்காராகவும் பணியாற்றினா்.

**6.நிதித்துறை**

மத்திய அரசும், மாநில அரசும் பெற்ற வருவாயை நாட்டின் பொது வளர்ச்சிக்கும், திட்டத்திற்கும் பயன்படுத்தப்பட்டது. நன்கொடைகள், கப்பத் தொகைகள், வாணிபம், உப்பு, சுரங்கம் போன்றவற்றின் மூலம் மத்திய அரசிற்கு வருவாய் கிடைத்தது.

**7.போக்குவரத்து**

பொதுவாக மொகலாயர்கள் காலத்தில் போக்குவரத்து துறைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. புதிய சாலைகள் அமைக்கப்பட்டன. சாலைகள் பெரிதாகவும், பல பகுதிகளை சந்திக்க கூடியதாகவும் இருந்தது. சாலை ஓரங்களில் நிழல் தரும் மரங்கள் நடப்பட்டது.

**8.இராணுவம்**

மொகலாயர்களில் பெரும்பான்மையோர் மான்சப்தாரி படையை நம்பியே இருந்தனர். ஒரு மான்சாப்தாரிக்கு குறைந்தது 10 குதிரைகள் வீதம் 10000 குதிரைகள்வரை இருந்தது. அரசருக்கு போர் காலங்களில் மான்சாப்தாரிகள் தங்கள் குதிரை படைவீர்களை கொடுப்பர். அக்பர் காலத்தில் மட்டும் 33 மான்சப்தாரிகள் இருந்தனர். மேலும் மன்னர்கள் சொந்தமாகவும் படைகளை வைத்திருந்தனர். அக்பர் சொந்தமாக வைத்திருந்த காலாட் படையினருக்கு அரசே சம்பளம் கொடுத்தது.

## அக்பரின் இராணுவமுறை
## அல்லது
## மான்சப்தாரி முறை

1571 – ம் ஆண்டு அக்பர் மான்சப்தாரி முறையை தோற்றுவித்தர். இதற்கு முன்னால் பேரரசின் நிலங்கள் ஜாகீர்களாக பிரிக்கப்பட்டிருந்தது. ஜாகீர்தார்களும் மன்னனுக்கும் இடையே நேரடி தொடர்பு இல்லாததால் புரட்சிகளும், பிரிவினை மனப்பான்மையும் தோன்ற ஆரம்பித்தன. இதன் தீங்கை உணர்ந்த பேரரசர் அக்பர் மான்சப்தாரி முறையைக் கொண்டு வந்தார்.

- **பெயர்வரக் காரணம்**

**மான்சப்** என்றால் **இடம்** அல்லது **பதவி** என்று பொருள்பட்டது. நஸாப்கர்தான் என்ற பாரசீக சொல்லின் அடிப்படையில் இது பிறந்தது. **‘உரித்தான மனிதனுக்கு’** என்பதே இதன் பொருளாகும். மோகலாயர்களின் மான்சப்தார்கள் தங்களுடைய ஊதியத்தை தங்களுக்கே உரித்தான படைவீர்கள், குதிரைகள், யானைகள் ஆகியவற்றை நிருணயித்தலையும் இது குறிக்கிறது.

**2.மான்சப்தாரி முறையின் தோற்றம்**

மான்சப்தாரி முறையை அக்பர் கொண்டு வருவதற்கு இரு நோக்கங்கள் இருந்தன.

- ஒவ்வொரு இராணுவ அதிகாரியும் தன்னுடைய பதவிக்கேற்ப குறிப்பிட்ட குதிரைகள், யானைகள், ஒட்டகங்கள், வண்டிகள் ஆகியவற்றை துணைப்படையாக கட்டாயம் வைத்திருக்க செய்தல்.
- இராணுவ அதிகாரிகளிடையே காணப்பட்ட ஒழுங்கீனங்களை ஒழித்துக் கட்டுதல்.
  அபுல்பாசல் மான்சப்தாரிகளை மூன்று பிரிவுகளாக பிரித்துள்ளார்.
- முதல் வகுப்பு 10 –லிருந்து 150 வீர்கள் அடங்கிய தளபதிகள்.

- இரண்டாவது வகுப்பு 20 – லிருந்து 400 வரை வீரர்கள் அடங்கிய தளபதிகள்.
- மூன்றாவது வகுப்பு 500 – லிருந்து 2000 வரை வீரர்கள் அடங்கிய தளபதிகள்.

500 – லிருந்து 2000 வரை வைத்திருந்த மான்சப்தார்கள் அமீர் என்ற பட்டப் பெயர் பெற்றனர். 3000 – க்கு மேல் வைத்திருந்த மான்சப்தார் உம்தா என்ற பட்டப் பெயர் பெற்றனர்.

**3.மான்சப்தார்களின் எண்ணிக்கை**

1595 – ம் ஆண்டு சுமார் 1805 மான்சப்தார்கள் பணியாற்றினர் என்று அபுஸ்பாஸல் குறிப்பிடுகிறார். 2491 மான்சப்தார்கள் பணியாற்றினர் என்று ஸ்ரீவத்சவா குறிப்பிடுகிறார்.

முான்சப்தார்கள் மன்னரால் நியமிக்கப்பட்டனர். படைவீரர்கள் மான்சப்தார்களின் ஆணைக்கு கட்டுப்பட்டு நடந்தனர். மான்சப்தார்களுக்கு கொடுக்கப்பட்ட சம்பளம்மிக அதிகமாக இருந்தது. உதாரணமாக 5000 உள்ள மான்சப்தார் ரூ. 3000 வரை ஒரு மாத ஊதியமாக பெற்றனர். அக்பரது ஆட்சிக் காலத்தில் 33 மான்சப்தார்கள் இருந்தனர்.

**4.மதிப்பீடு**

**குறைபாடுகள்**

மான்சப்தாரி முறையில் பல குறைபாடுகள் காணப்பட்டன. நாட்டுப்பற்று ஏதுமின்றிப் படைவீரர்கள் மான்சப்தாரிகளின் கட்டுப்பாட்டில் இருந்தனர். மான்சப்தாரி படையை நம்பி மன்னர்கள் இருந்ததால் அவர்களின் தேசீய படைகள் மிக வலிமை குன்றி இருந்தது. மான்சப்தார்கள் அரசாங்கத்திடமிருந்து அதிக ஊதியத்தைப் பெற்றுக் கொண்டு வீரர்களுக்கு குறைவான சம்பளம் கொடுத்து வந்தனர். மேலும் குதிரைகளின் எண்ணிக்கையை தெரிவிக்கும் போது ஊழல் நிறைந்திருந்தது. பெரும்படையை உடைய மான்சப்தார்களாக அரச குடும்பத்தினரே இருந்தனர்.அவர்கள் தங்கள் செல்வாக்கை வளர்த்துக் கொண்டு மன்னருக்கு எதிராக கிளர்ச்சி செய்ய வழி வகுக்கப்பட்டது.

**5.நன்மைகள்**

இவ்வளவு குறைபாடுகள் இருந்தாலும் பல நன்மைகளும் இதனால் அரசுக்கு கிடைத்தது.

மான்சப்தார் படையில் பணிபுரிய இளைஞர்களுக்கு முக்கியத்துவம் தரப்பட்டதால் அவர்கள் வீரத்துடன் செயல்பட்டனர். மான்சப்தார்களுக்கிடையே போட்டி ஏற்பட்டதால், ஒவ்வொரு மான்சப்தாரியும் சிறப்பாக செயல்பட்டனர். அக்பர் தம்முடைய மேலாண்மையை ஏற்றுக் கொண்ட மன்னர்களையும் மான்சப்தார்களாக்கி தம் கீழ் பணியவைத்தார். இதனால் மன்னரின் புகழ் பரவியது.

## அக்பரின் தீன் - இ - லாகி

**தீன் - இ - லாகி**

தீன் - இ - லாகி என்பது அக்பரால் ஏற்படுத்தப்பட்ட புதிய சமயமாகும். சிலர் இது மக்களை நல்வழிப்படுத்தி ஒற்றுமை ஏற்படுத்த அமைக்கப்பட்ட ஓர் கலாச்சார இணைப்பு என்றும் கூறுவர். தீன்- இ-லாகி என்றால் இறையுரிமை கோட்பாடு என்று பெயர். 1582 –ல் சமய மேதைகளின் மாநாட்டை அக்பர் கூட்டினார். இந்து, இஸ்லாம், கிறிஸ்துவம், சௌராஷ்டிரம், சமணம் ஆகிய சமயங்களின் கொள்கைகளை ஒன்று திரட்டி தீன் -இ -லாகி என்ற சமயத்தை அம்மாநாட்டில் வெளியிட்டார். வின்செண்ட் சுமித் என்ற வரலாற்றறிஞர் தீன் - இ - லாகி என்ற தெய்வ மதம்

அக்பரது முட்டாள் தனமேயன்றி அறிவின் விளைவல்ல என்றார். (The Divine faith was a monument of Akbar's foily not of wisdom)

**தீன் - இ - லாகியின் முக்கிய கொள்கைகள்**

கடவுள் ஒருவரே, கடவுளின் பிரதிநிதியாக பேரரசரை ஏற்க வேண்டும். பேரரசரை காண வரும்போது தன் தலைப்பாகையை எடுத்து விட்டு வணக்கம் செலுத்த வேண்டும். சுயநலத்தையும், தற்பெருமையும் நீக்க வேண்டும். பிறந்த நாளில் தானம் செய்தல்,புலால் உணவை ஒழித்தல், துன்பம் செய்தவருக்கும் இன்பம் கொடுத்தல் போன்றவை இதன் உயர் கொள்கைகளாகும்.

**தீன் - இ -லாகியின் வீழ்ச்சி**

அக்பர் தீன் - இ - லாகி சமயத்தில் உறுப்பினர்களாக சேர்ப்பதற்கு யாரையும் கட்டாயப்படுத்தவில்லை. அவரது உயிர் நண்பரான இராஜாதோடர்மால், இராஜா மான்சிங் போன்றவர்களும் இதில் சேரவில்லை. முக்கிய மதத்தை சீர்குலைக்கவே அக்பர் இம்மதத்தை ஏற்படுத்தினார் என்று முகமதியர்கள் எதிர்த்தனர். முகமதிய சமயத்தின் மறு பதிப்பே தீன் - இ -லாகி என்று இந்துக்களும் வெறுத்தனர்.

வைதீக முஸ்லீம்கள், உல்மாக்கள், காஸிகள் ஆகியோர்களும் எதிர்த்தனர். ரம்சான் போன்ற பண்டிகைகள் நிறுத்தப்பட்டன. புனிதயாத்திரை மேற்கொள்வோருக்கு அளிக்கப்பட்ட சலுகைகள் குறைக்கப்பட்டன. அரேபிய மொழியை கற்கவும், பயன்படுத்தவும் அனுமதிக்கவில்லை. பசுக்களையும் மற்ற பிராணிகளையும் கொலை செய்தோருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது. இந்துக்களின் விதவை திருமணத்தை அக்பர் ஊக்குவித்தார்.

தீன் - இ - லாகி மத்தில் சேர்ந்த முதல் உறுப்பினர் அபுல்பாசல், ஆனால் அவரே தீன் - இ - லாகியை ஏற்கவில்லை. 18 உறுப்பினர்களே இம்மதத்தில் சேர்ந்தனர். அக்பர் மறைந்ததோடு இம்மதமும் மறைந்தது.

## அக்பரின் ராஜபுத்திர கொள்கை

பொதுவாக இந்துக்களிடமும் குறிப்பாக ராஜபுத்திரர்களிடமும் நேசமும் நட்பும் கொண்டிருக்க வேண்டுமென்ற கொள்கைய்க் கைக்கொண்டு ஒழுகிய பெருமை அக்பரையே சாரும். இக்கொள்கையினைப் பின்பற்றுவதற்கு வேறு பல புறம்பான காரணங்களும் இருந்தன என்ற உண்மையை மறுப்பதில்லை. ஆனால் இந்துக்களுக்கும், முகமதியர்களுக்குமிடையே அமைதியையும் நல்லெண்ணத்தையும் நிலைநாட்ட வேண்டுமென்ற கொள்கையினை அக்பர் ஏற்கனவே செயல்படுத்த தொடங்கிவிட்டார். இந்து மதச் சான்றோருடனும் தமது இந்துமனைவியருடனும் இவருக்குத் தொடர்பு ஏற்படு முன்னரே சகிப்புத் தன்மையைத் தம் மனத்தில் வளர்த்துக் கொண்டார். இத்தகையக் கொள்கையைப் பின்பற்றுமாறு இவரை வற்புறுத்தும் வகையில் அரசியல் காரணங்களும் இருந்தன என்பது உண்மையே. ஆனால் அவை எவ்வகையிலும் அக்பரின் சிறப்பைக் சிறுமைப்படுத்தவில்லை. உலேமாக்களை (அரசர்களின் வழிகாட்டிகளாகப் பணிபுரிந்த முகமதிய மதகுருக்கள்) தமது மதக் கொள்கையில் தலையிட இவர் என்றுமே அனுமதிக்கவில்லை. குரான்

விதிகளினின்றும் விலகி ஒதுவதைச் சிறிதும் பொறுக்காத உலேமாக்கல் வெறியுற்ற முகமதியர்களாயிருந்தனர். இந்துக்கள் பால் அக்பர் கொண்டிருந்த கொள்கை இவர்தம் மதக் கருத்துக்களோடு விடுவிக்க முடியாதபடி பின்னிக் கிடந்தது.

அக்பர் வருமுன் உணரும் அரசியல் வல்லுநராக இருந்தார். எந்த ஒரு வேற்று நாட்டிலும் அந்நாட்டு மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்துகொள்ளாத வரையில் முகலாய அரசை அங்கு நிலைப்படுத்தும் விருப்பம் கைகூடாது என்பதை இவர் நன்கு அறிந்திருந்தார். இன்னல்களின் நடுவில் வாழக் கற்றுக் கொண்டிருந்த இவர் தம் உறவினரின் கருத்து வேறுபாடுகள், இணக்க முறிவு, பொறாமை இவற்றை எளிதில் புரிந்துகொள்ள முடிந்தது. அவர்கள் துணிகரமாகக் செயலில் ஈடுபடுபவர்களாயும் சந்தர்ப்பவதிகளாயும் இருந்தனர். ஒரே குறிக்கோளுடன் ஒன்றுபட்டுச் செயல்படும் மனப்பான்மை அவர்களிடம் இல்லை. அரசரிடம் விசுவாசம் காட்டி கீழ்ப்படிந்து நடக்க வேண்டுமென்ற பழக்கமும் அறியாதவாகளாகவே அவர்கள் இருந்தனர். அவர்கள் தமக்குள்ளே போட்டியிடுபவர்களாகவும் சிறிய சம்பவத்தைச் சாக்குப் போக்காகக் கொண்டு வெளிப்படையாகக் கிளர்ச்சிகளில் ஈடுபடுபவர்களாகவும் இருந்தனர். அவர்களுள் சிலர்,இந்துஸ்தான் சிம்மாசனத்தில் அமரவேண்டும் என்றும் கனவு கண்டு கொண்டிருந்தனர். மனநிறைவின்மையால் கொதிப்படைந்து கொண்டிருந்த அக்கூட்டத்தினர் காட்டிய அரச விசுவாசத்தின் சபலப் போக்கு நாடறிந்த உண்மையாக இருந்ததால் நம்பிக்கைக்குப் பாத்திரமாகும் தகுதி அவர்களிடம் இல்லை. தம்முடைய உறவினராலேயே தோற்றுபிக்கப்பட்ட எண்ணற்ற கிளர்ச்சிகளை அக்பர் எதிர்த்துச் சமாளிக்க வேண்டியிருந்தது. தம் உறவினர்களின் மனப்போக்கை உணர்ந்துகொண்ட அக்பர் முகலாய ஆட்சியை இந்தியாவில் நிறுவ வேண்டுமாயின் ராஜபுத்திரர்களின் நேசத்திற்குத் தாம் ஆளாகி அவர்களைத் தம்முடன் சேர்த்துக் கொள்வது ஒன்றே அதற்கு வழி என்ற முடிவுக்கு வந்தார். ராஜபுத்திரர்கள் நம்பிக்கை, துணிவு, வீரம் ஆகிய பண்புகளின் எடுத்துக்காட்டாக விளங்கியவர்கள். மேலும் அவர்கள் அரசரிடம் விசுவாசங்காட்டிக் கீழ்படிந்து நடக்க வேண்டும் என்ற சிறந்த ஐதீகங்களில் ஊறியவர்கள். அவர்கள் முகமதியப் பிரபுக்களைப் போன்று இடம் விட்டு இடம் மாறிக்கொண்டிருக்கின்ற பறவை இயல்பு கொண்டவர்களல்லர். பாபருடைய காலந்தொட்டு முகலாயப் பேரரசை ஆணித்தரமாக எதிர்த்து நின்றவர்கள் அவர்கள். கான்வா, சாந்தேரி ஆகிய போர்களில் அவர்கள் தோற்கடிக்கப்பட்டது உண்மையே. ஆனால் போர்களில் வெறுமையாக்கப்பட்டு விட்டனர் எனக்கூறும் நிலைக்குத் தாழ்வுற்று விடவில்லை. இந்துஸ்தான் அரசியலில் இன்னமும் கருத்திற் கொள்ளப்படவேண்டிய ஒரு கூறாகவே இருந்துவந்தனர். அரசியல் வல்லுநர்க்கான தூய்மையான குணங்கள் அமையப்பெற்று திறமைமிக்க அரசராக விளங்கிய அக்பர் தாம் பேரரசை எழுப்புகின்ற பணியில் ராஜபுத்திரருடன் நேசம் கொண்டு இணைந்திருப்பது மிகவும் இன்றியமையாத காரியம் என்பதை உணர்ந்திருந்தார். சாதிக்கத்தக்க காரியங்களிலேயே கருத்தூன்றும் போக்குடையயவராக இருந்த அக்பர் தம் கோட்பாடுகளை ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு ராஜபுத்திரரைப் பொறுத்தவரை தமது கொள்கை எதுவாயினும் அதன்கண் பகுத்தறிவே இன்றியமையாத உள் நோக்கமாக இருக்கவேண்டுமென்று கருதினார். பிறருடைய நியாயமான கோரிக்கைகளையும் நலன்களையும் புறக்கணித்து விடாத நிலையில் இவருடைய குறிக்கோள்கள் தெளிவானவையாக நடைமுறைக்கேற்றனவாக, ஆழ்ந்து சிந்திக்கப் பெற்றனவாக, துணிந்து முயற்சி செய்யப்படத்தக்கனவாக அமைந்திருந்தன. இவருடைய தந்தையும் தாத்தாவும் அத்தகைய கொள்யைின் முக்கியத்துவத்தை என்றுமே உணர்ந்து கொள்ளவில்லை. எனவே அவர்கள் ராஜபுத்திரருடன் கொண்டிருந்த தொடாபினை பொறுத்து பெருந்தவறு இழைத்துவிட்டனர் என்றே கூறவேண்டும். அவர்களின் கால் வழித்தடத்தைப் பின்பற்றி அக்பர் செல்லவில்லை. ராஜபுத்திரர் பிடிமுரண்டாக இருந்தால் ஆயுதம் தாங்குவது, அவர்கள் பணிந்துவட்டால்

உருவிய வாளை உறையில் போட்டுவிடுவது என்ற கொள்கையை அக்பர் கடைப்பிடித்து வந்தார்.

1562-ல் அக்பர் அரசர் பிஹாரி மால் தாமே முன் வந்து அக்ப்ருக்குக் கீழ்ப்பணிந்தார். அவருடன் ஏற்பட்ட திருமணம் உறவை அக்பர் வரவேற்றதுடன் அதன் மூலம் நட்பை மேலும் நெருக்கமுடையதாக்கிக் கொண்டார். அக்பரின் மகன் சலீம், ஜோத்பாயை அக்பர் மணந்து கொண்டார். அக்பரின் மகன் சலீம், ஜோத்பாண் பெற்றெடுத்த மகவு ஆகும். அக்பர் பின்னால் செய்யவிருந்த தொடர்ச்சியான பல திருமண உறவுகளுக்கு முன்னோடியாக இருந்தது இத்திருமணம் மண உறவுகள் மூலம் அக்பர் ராஜபுத்திரர்களின் மனத்தை வென்று இந்துக்களுக்கும் முகம்மதியர்களுக்கும் இடையேயிருந்த வேறுபாடுகளைக் களைந்து பிணைப்பை ஏற்படுத்தினார். ஆக்பரின் முயற்சி இவ்விரு வகுப்பினரையும் பிடித்துக் கொண்டிருந்த வகுப்பு வெறி என்னும் நோய்க்கு வரவேற்கத்தக்க மருந்தாய் அமைந்தது. பல காலமாக இருவரிடையே இருந்துவந்த வெறுப்பையும் பகைமையையும் தணிக்கவும் அம்முயற்சி பயன்பட்டது இதுபோன்ற மண உறவு ஒப்பந்தங்கள் அக்பர் காலத்திற்கு முன்பும் ஏற்பட்டுள்ளன என்பதை நாம் இவ்விடத்தில் நினைவு கொள்ளாதிருக்கமுடியாது. ஆனால் அத்தகைய உறவுகள் சகிப்புத்தன்மையின்மையையும் வெறியையுமே கட்டவிழ்த்துவிட்டன. இந்துக்களுக்கும் முகமதியர்களுக்குமிடையே இருந்த பிளவு வலுத்தது. ஆனால் தம்முடன் மண உறவு கொள்ள விளைந்த இராஜபுத்திரர்களை அக்பர் தமது உற்றோராகவும் உறவினராகவுமே மதித்துப் பழகினார். தமது மனைவியர் மீது அளவற்ற அன்பும் பாசமும் காட்டிய அக்பர் அவர்களுக்கு தத்தம் கடவுளை வணங்கும் உரிமையையும் வழங்கினார். பிஹாரி மால்,அவர் தம் மகன் பகவன் தாஸ், பேரன் மான்சிங் ஆகியோர் பேரரசின் ஊழியத்தில் சேர்ந்து பெரிய பதவிகளை வகித்தனர். பழஞ் சரக்குகளைக் குவிக்கக் ˙கிடங்குகள் அமைக்கப் பெற்றிருப்பதைப்போல் முகலாய ஆட்சித்துறையை முகம்மதிய உயர்குடி மக்கள் கூடி மகிழ்கின்ற இடமாக ஆக்கிவிடாமல் அக்பர் திறமையை அடிப்படையாக் கொண்டு எல்லா வகுப்பினர்களையும் தேர்ந்தெடுத்தார். பேரரசு ஊதியத்தில் தோடர்மால், ராஜா பிர்பால் இருவரும் உயர்ந்த பதவிகள் வகித்தனர். அக்பர் தமது இதமான கொள்கையால் பகைவரையும் நண்பராக மாற்றி முகலாயப் பேரரசைப் பேணிக்காத்து நிலைப்படுத்திட அவர்களது அளவிறந்த ஒத்துழைப்பைப் பெறமுடிந்தது. பேரரசை உருவாக்கும் பெரும்பணியில் ராஜபுத்திரர் அக்பருடன் நன்மையிலும் தீமையிலும் தோளோடு தோள் நின்ற சிறப்பும் திறமையும் மிக்கவராகப் பணியாற்றினர். அனைவரையும் அனைத்துப் போகும் தமது கொள்கையால் அக்பர் ராஜபுத்திரர்களது ஒத்துழைப்பை மட்டுமே பெறமுடிந்தது என்பதல்லாமல் பல்லாயிரக்கணக்கான இந்துக்கள் இவருடைய ஆட்சியை மனப்பூர்வமாக விரும்பியேற்று ஆதரவுதர முன்வருவதற்கும் ஏதுவாயிற்று.

தமது இந்து மனைவியர்பால் அக்பர் கொண்டிருந்த பிணைப்பின் காரணமாக இந்துக்கள் மீதான இவருடைய கொள்கையில் புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்பட்டன. ஆம்பரைச் சார்ந்த ஜோத்பாயை இவர் மணந்து கொண்டதும் புண்ணியப் பயணம் செல்வோர் மீது விதிக்கப்பட்டு வந்த வரியை (ிடைபசஜைஅ வயஒ) 1563 —ல் இவர் நீக்கினார். முகமதியர் அல்லாதோர் மீது விதிக்கப்பட்டிருந்த ஜிஸியா (துணைலய) என்ற தலைவரியை 1564 —ல் நீக்கினார். முகமதியரில் வைதீகப் போக்குடையோராய் இருந்தவர்களின் சீற்றமிக்க எதிர்ப்புகளுக்கிடையே இவ்விரு சீர்திருத்தங்களையும் அக்பர் செய்ய வேண்டியிருந்தது. புண்ணியப் பயணம் செல்வோர் மீது விதிக்கப்பட்டிருந்த வரியும் ஜெஸியா வரியும் நீக்கப்பட்டது. மத நம்பிக்கையைச சார்ந்த காரியங்களைப் பொறுத்தவரை இந்துக்களின் மரக சாசனம் என்றே கருதப்படவேண்டும். இந்துக்களைத் தாழ்ந்த தரமுடைய வகுப்பினராக கருதுகின்ற நிலை மாறிவிட்டதால் தன்னுரிமையோடு பழகுகின்ற பான்மை அவருள்ளத்துப்

பெருகியது. தெய்வப்பழிப்பும் சிலையுடைப்பும் இவர் சிந்தனையில் இடம் பெறவில்லை. மதமாற்றத்தை விரும்புபவர்களைத் தமது மதத்திற்கு மாற்றத் தலைப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு அதைச் செய்யவும் உரிமையிருந்தது. பிறரை முகமதிய மதத்திற்குக் கட்டாயமாக மாற்றுகின்ற முறை சுல்தான்கள் ஆட்சியில் சாதாரணமாக நடைபெற்று வந்தது. இம்முறையை இவர் 1562 –ல் நிறுத்தினார். இந்துக்களின் மத உணர்ச்சிகளை மதித்து நடந்தார். பேரரசின் கட்டளையொன்று மாட்டிறைச்சி உண்ணுவதற்குத் தடை விதித்தது. இந்துக்களின் நட்பை மென்மேலும் வளர்க்கும் நோக்கத்துடன் இந்து விழாக்களிலும் கொண்டாட்டங்களிலும் இவர் பங்கு கொண்டார். இவர் உடன்கட்டை ஏறுவதைத் தடுத்தார். எப்பெண்ணும் அவளது விருப்பத்திற்கெதிராக எரிக்கப்பட கூடாதென தமது அதிகாரிகளுக்குக் கடுமையாக உத்தரவிட்டிருந்தார். இவர் சமஸ்கிருதக் கல்விக்கு ஊக்கம் அளித்ததுடன் பல இந்து கவிஞர்களுக்கும் தத்துவப் பெரியோர்களுக்கும் ஆதரவு தந்தார். நட்பை வளர்ப்பதற்காக அக்பர் இவ்வாறு கைக் கொண்ட நடவடிக்கைகள் அனைத்தும் இந்துக்களுக்கு ஆறுதல் தரும் பயன் விளைவித்தன. அவர்கள் தம் சிறுசிறு வேறுபாடுகளையும் உதறி எறிந்துவிட்டுப் பொதுவான வாழ்வு நலத்தைப் பெருக்குவதற்குத் தமது ஒத்துழைப்பைத் தந்தனர். இந்துக்கள்பால் ஷெர்ஷா கொண்டிருந்த கொள்கை “வெறுத்துக்கொண்டே சகித்துக்கொண்டதுமன்றி மரியாதையுடன் நடக்கின்ற மனப்போக்கினையும் கொண்டிருந்தார்” அக்பரது கொள்கை வணக்கமான ஈடுபாடும் நியாயமான மரியாதையுடன் நடக்கின்ற மனப்போக்கினையும் கொண்டிருந்தது.

## ஜஹாங்கீர்

### ஆரம்ப கால வாழ்க்கை

1569 –ல் ஜஹாங்கீர் பிறந்தார். பாரசீகம், துருக்கி, ஹிந்தி ஆகிய மொழிகளை விரும்பிக் கற்றார். 1585 – ல் ஆரம்பரை சார்ந்த ராஜா பகவான் தாசின் மகளான **மான்பாய்** என்பவரை திருமணம் செய்து கொண்டார். அவர்களுக்கு பிறந்தவரே **குஸ்ரு**. 17 – வது வயதில் ஹஜாங்கீருக்கு மது அருந்தும் பழக்கம் ஏற்பட்டது. அது முதல் பேரரசின் வளர்ச்சியைப்பற்றி கவலையின்றி இருந்தார். 1605 – ல் அக்பர் காலமானதும் அக்டோபர் 24 –ம் நான் ஜஹாங்கீர் **பாதுஷா காஸி** என்றப் பட்டப் பெயருடன் ஆக்ராவில் அரியணை ஏறினார்.

### நீதிசங்கிலி

ஜஹாங்கீர் ஏற்படுத்திய நீதி சங்கிலி 60 தொடர் மணிகளை கொண்டிருந்தது. ஒருமுனை ஆக்ரா கோட்டையினுள்ளும் மற்றொரு முனை யமுனை நதிக்கரையிலும் கட்டப்பட்டிருந்தது. மக்கள் நேரடியாக நீதி பெய இந்த ஏற்பாடு செய்யப்பட்டது.

### பன்னி ஆணைகள் (12 ஆணைகள்)

ஜஹாங்கீர் ஆட்சிக்கு வந்ததும் பன்னிரு ஆணைகளை வெளியிட்டு தன் வலிமையையும் மக்களின் அமைதியையும் உறுதிப்படுத்தினார்.

- தம்ஹா, மீர்பாரி போன்ற வரிகளை அகற்றி வரிச் சலுகைகளை ஏற்படுத்தினார்.
- சாலைகளின் ஓரங்களில் சத்திரங்களும் மசூதிகளும் கட்டப்பட்டன.
- வணிகர்களின் மூட்டைகளை இரகசியமாக சோதனையிடுவது நிறுத்தப்பட்டது.
- இறந்தவர்களின் சொத்துக்கள் உரியவர்க்ளுக்கு வழங்கப்பட்டது.
- போதை பொருள்களின் விற்பனை நிறுத்தப்ட்டது.
- ஊடல் அங்கங்களை வெட்டும் பழக்கம் நிறுத்தப்பட்டது
- நில உடடையாளர்களின் சொத்தை பறிமுதல் செய்வது தடை செய்யப்பட்டது.

- வீடுகள் பறிமுதல் செய்வது நிறுத்தப்பட்டது.
- ஜகீர்தாரர்கள் தங்கள் பர்கானா மக்களுடன் திருமண உறவு கொள்ள அரசின் அனுமதி பெற வேண்டும்.
- வசதியுள்ள மருத்துவமனை நகரங்கள் கட்டப்பட்டன.
- வியாழன், ஞாயிறு போன்ற நாட்களில் உயிர்க் கொலைகள் தடுக்கப்பட்டன.
- முக்கிய அதிகாரிகளுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

## ஜஹாங்கீரின் படையெடுப்புகள்

**உஸ்மான்கானை தோற்கடித்தல் (1612)**

வங்கதிதிலிருந்த ஆப்கானியர்கள் உஸ்மான்கள் தலைமையில் நடத்திய கிளர்ச்சியை 1612 –ல் ஜஹாங்கீர் தோற்கடித்து உஸ்மான்கானை கொலை செய்தார்.

**மேவார் படையெடுப்பு (1614)**

ரூாணா அமர்சிங் மேவார் பகுதியை ஆட்சி செய்து வந்தார். இளவரசர் குர்ராம் தலைமையில் நடந்த போரில் ராணா அமர்சிங் அடிபணிந்தார். சமாதான ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டு ஜஹாங்கீரின் மேலாதிக்கத்தை ராணா அமர்சிங் ஏற்றுக் கொண்டார். மேவாரின் பகுதிகள் அனைத்தும் ராணா அமர்சிங்கிற்கே கொடுக்கப்பட்டன.

## தக்காண படையெடுப்புகள்

**அகமது நகர் (1608 – 1617)**

தக்காண பகுதியில் இருக்கும் அகமது நகர் மீது 1608 – ல் முற்றுகையிடச் சென்ற முகலாயப்படை வெற்றி பெற முடியாமல் திரும்பியது. ஜஹாங்கீரின் மகன் குர்ரம் (ஷாஜஹான்) தலைமையில் நடைபெற்ற இரண்டாவது படையெடுப்பு 1617 – ல் நடைபெற்றது. இப்படையெடுப்பின் முடிவில் அகமது நகரை ஆண்டு வந்த மாலிக் ஆம்பர் அகமது நகர் முழுவதையும் மொகலாயருக்கு விட்டுக் கொடுக்க முன்வந்தார். குர்ரத்தின் இவ்வெற்றியை பாராட்டி மூன்று லட்ச ரூபாய் செலவு செய்து நடத்தப்பட்ட வெற்றி விழாவில் **குர்ரத்திற்கு ஷாஜஹான்** என்ற **சிறப்புப் பட்டம்** வழங்கப்பட்டது. மொகலாயப் படைகள் டில்லி திரும்பிய உடனே மாலிக் ஆம்பர் மீண்டும் தாம் இழந்த பகுதிகளை மொகலாயர்களிடமிருந்து கைப்பற்றினார்.

**காங்க்ராவை கைப்பற்றுதல் 1620**

1620 –ல் பஞ்சாப்பின் வட கிழக்கில் அமைந்துள்ள காங்க்ரா கோட்டையை பதினான்கு மாத முற்றுகைக்கு பின் ஜஹாங்கீர் கைப்பற்றினார். இந்துக்களின் மனம் புண்படும் படி கோட்டையில் பசுவை பலியிட்டு குத்பா படிக்கச் செய்து அங்கு மசூதியையும் கட்டினார்.

**காந்தகாரை இழத்தல் (1622)**

பாரசீகர்களுக்கும் மொகலாயர்களுக்கும் காந்தகார் பற்றிய கருத்து வேறுபாடு இருந்தது. பாரசீக மன்னன் ஷாசுப்பாஸ் ஜஹாங்கீரின் நண்பர் போல் நடித்து காந்தகாரை 1622 – ல் கைப்பற்றினார். ஷாஜஹான் தலைமையில் படை அங்கு சென்றதால் வெற்றி பெறலாம் என்று நூர்ஜஹான் கூறினார். தூாம் அங்கே சென்றதால் தனது மகன் ஷாரியர் ஆட்சியை கைப்பற்றி விடுவார் என்று எண்ணி ஜஹாங்கீர் காந்தகாரை மீட்க செல்லவில்லை. இவ்வாறு மொகலாயர் காந்தகாரை இழந்தனர்.

### ஆங்கில கிழக்கிந்திய கம்பெனிக்கு அனுமதி வழங்குதல்

1600 – ல் இங்கிலாந்தில் துவக்கப்பட்ட ஆங்கில கிழக்கு இந்திய கம்பெனியை இந்தியாவில் சூரத் என்ற இடத்தில் தொடங்க அனுமதி கேட்டு வில்லியம் ஹாக்கின்ஸ் 1608 – ல் ஜஹாங்கீரின் அரண்மனைக்கு வந்தார். அனுமதி மறுக்கப்பட்டது. பின் சர் தாமஸ்ரோ 1615 – ல் ஜஹாங்கீர் அரண்மனைக்கு வந்து அனுமதி பெற்றார்.

### நாணயங்கள்

மொகலாயர் காலத்து நாணயங்களில் மிகச் சிறந்தது ஜஹாங்கீர் காலத்து நாணயங்களே. நுாணங்கள் வெள்ளியாலும், தங்கத்தாலும் செய்யப்பட்டவைகளாகும். ஐந்தாண்டு காலத்துக்கு நூர்ஜஹான் பெயரால் காசுகள் வழங்கினார். அவருடைய காசுகளில் ஒன்றில் பேரரசர் கையில் மதுக் கோப்பையோடு காணப்படும் காசு மிகவும் அருமையான ஒன்றாகும்.

### ஜஹாங்கீரின் சமயக் கொள்கை

ஜஹாங்கீரின் சமயக் கொள்கையை திட்டவட்டமாக கூற இயலாது என்றாலும் சமயத் துறையில் பிற மதத்தினரை வெறுத்து, கீழ்தரமாக நடத்தினார். என்று சிலர் கூறிவர். ஊதாரணமாக சீக்கியர்களின் 5 – ம் குருவான குரு அர்ஜுனைக் கொலை செய்ததும்பெ அகமதாபத்தின் சமணத் தலைவரை நாடு கடத்தியதும் குறிப்பிடத்தக்கன. இவற்றைப் பற்றி ஆராயும் பொழுது இத்தகைய நிகழ்ச்சிகள் நடைபெற சமயத்துறையில் ஏற்பட்ட வெறுப்பு என்று முழுமையாக கூற முடியாது. ஆரசியல் காரணமும் உண்டு எனலாம். அதுபோல் காங்ரா கோட்டையை கைப்பற்றியதும், அதனுள்ளே ஒரு பெரும் மசூதியை கட்டி வெற்றி விழா கொண்டாடியதும் அவரது சமய வெறியை காட்டுகிறது. இருப்பினும் அவர் பொதுவாக அனைத்து சமயத்தினருக்கும் மத சுதந்திரம் அளித்தார் என்று வரலாற்று ஆசிரியர் L.A. ஸ்ரீவத்சவா கூறுகிறார். கிறிஸ்தவர்களுக்கு மத வழிபாட்டு சுதந்திரம் அளிக்கப்பட்டது.

## நூர்ஜஹான்

மொகலாய வரலாற்றில் நூர்ஜஹானின் அரசியல் செல்வாக்குப் போல வேறு யாருக்கும் இருந்தது கிடையாது. 1611 முதல் 1627 வரை ஜஹாங்கீர் மொகலாய பேரரசை ஆட்சி செய்தார் என்பதை விட நூஜஹான் ஆட்சி செலுத்தினார் என்றே கூறலாம்.

### பிறப்பும் இளமைக் காலமும்

அக்பரின் பணியில் இருந்த பாரசீகப் படைவீரர் கியாஸ் பெக். அவருக்கு இடிமத்துல்லா என்னும் பட்டத்தினை அக்பர் வழங்கியிருந்தார். பாரசீக நாட்டில் ஏற்பட்ட வாழ்க்கைச் சோதனைகள் மிகுந்த பயணமாக இப்பயணம் அமைந்தது. அப்போது கியாசின் பெண்மகவு ஒன்றைப் பெற்றெடுத்தாள்.

அக்பரின் அரண்மனையில் ஒரு சாதாரணப் பணியில் அமர்த்தினார் அக்பர். நாளடைவில் திறமையினாலும், அறிவுத்திறத்தாலும் கியாஸ் பெக் அரண்மனைப் பணித்தலைவராக உயர்ந்தார். கியாஸ் பெக் தன் மகளுக்கு மெஹருன்னிசா என பெயரிட்டார். ஒரு முறை இளவரசர் சலீமின் பார்வையில் பட்டார். இளவரசர் மெஹருன்னிசாவை மணக்க விரும்பியபோது அக்பர் அதற்கு உடன்படவில்லை போலும். அவருடைய தந்தையைப் போலவே இந்தியாவிற்குக் குடிபெயர்ந்த பாரசீக

வீரர் அலி குலிகான் இஸ்தாக்லு என்ற ஷெர் ஆப்கானுக்கு மணம் முடித்து உன்னிசாவை மணமுடித்தார். இது பிற்கால வரலாற்றறிஞர்களின் கூற்று. இது உண்மையானதா என்பது குறித்துக் கூறப்படும் கருத்துக்களைக் காண்போம
.

நூர்ஜஹானின் தந்தையின் தந்தை, குவாஜா முகம்மது ஷெரீபு. அதாவது பாட்டனார் பாரசீகத்தின் ஒரு மாநிலமான சுல்தான் பேகா பேகி என்பதன் வசீராக விளங்கியவர். ஊயர் குடிப்பிறப்புக் கல்வி பெற்றவர். அவர் மறைவிற்கு பின் 1587 – ல் அவருடைய குடும்பம் முதன்மை நிலையை இழந்தது. எனவே பிழைப்புத் தேடி கியாஸ் பெக் இந்தியா புறப்பட்டார். கியாஸ் பெக்கிற்கு இரண்டு மகன்கள், ஒரு மகள், இந்தியா வரும் வழியில் பெரும்பாலான பணம், உடைமைகளை இழந்து விட்டார். மாலிக் மசூது என்பவர் உதவினார். மாலிக் மசூதுவணிகர், அக்பரிடம் அழைத்துச் சென்று அறிமுகம் செய்து வைத்தார். அக்பர் அவரைத் தம் பணியில் சேர்த்து மான்சப்தாரக உயர்த்தினார். 1595ல் காபூலின் திவானாகவும் நியமித்தார்.

மெஹருன்னிசாவை அப்துல் இரஹீம்கனா கானாவின் பணியிலிருந்த பாரசீகன் அலிகுலி இஸ்தாக்லு என்ற ஷெர் ஆப்னுக்கு மணம் செய்து வைக்கப்பட்டார். 1599 – ல் இளவரசர் மேவாருக்கு எதிரான படையெடுப்பினை மேற்கொண்டபோது அலிகுலிகான் சலீமின் கீழ் பணிபுரிந்தார். புலி ஒன்றைத் தம் கையால் தனியே நின்று எதிர்த்துக் கொன்றமையால் ஷெர் ஆப்கான் என சலீமினால் அழைக்கப் பெற்றார். சலீமின் கிளர்ச்சியின் போது அக்பர் பக்கமே நின்றார் அவர்.

ஜஹாங்கீர் 1605 – ல் பேரரசானதும் ஷெர் ஆப்கன் தம் கிளர்ச்சியின் போது அக்பர் பக்கமே இருந்த் போதிலும் வங்காளத்தில் பர்துவானின் பாஜ்தாராக நியமித்து அங்கு ஜாகிர் அளித்தார். ஷெர் ஆப்கான் சதி வேலைகளில் ஈடுபடுவதாகச் செய்தறிந்த அரசர் 1606 ல் இராஜா மான்சிங்கிற்குப் பின் பதவியேற்ற குதப் உத்தீன் கான் என்னும் வங்காளத்தின் புதிய ஆளுநரை அழைத்து, ஷெர் ஆப்கனைத் தன் அவைக்கு அனுப்பி வைக்கும்படியும், மறுத்தால் தண்டிக்கும் படியும் சொல்லியனுப்பினார்.

ஆளுநரின் அழைப்பின் பேரில் இரு பணியாளர்களுடன் குதுப் உத்தீனின் முகாமினை ஏப்ரல் 9,1607 – ல் ஷெர் ஆப்கன் அடைந்தார். ஆளுநரின் படைவீரர்கள் சூழ்ந்தவுடன் தனக்கு ஏற்பட்ட இழிவைக் கண்டு தன்னை இழிவு செய்வது ஏன் என்று கேட்க இருவருக்கிடையே ஏற்பட்ட கருத்து மோதலில் ஆளுநரை ஷெர் ஆப்கன் தாக்கிவிட, ஆளுநரின் ஆட்கள் ஷெர் ஆப்கனைத் துண்டு துண்டாக்கினார். ஆளுநர் அதன்பின் பன்னிரண்டு மணி நேரத்தில் இறந்து விட்டார்.

குதுப் உத்தீனின் மறைவு பேரரசின் சினத்தை வளர்த்தது. தன்னடைய நினைவுக் குறிப்புகளில் ஷெர் ஆப்கன் நரகத்திற்கு அனுப்பப் பெற்றதாகவும் அவருக்கு நிலையான இடம் அதுதான் எனத் தான் நம்:புவதாகவும் ஜஹாங்கீர் எழுதி வைத்துள்ளார். ஜஹாங்கீர், ஷெர் ஆப்கன் கொலையானவுடன் அவனுடைய மனைவி மெஹருன்னிசாவையும், மகள் லாட்லி பேகத்தையும் அரண்மனைக்குக் கொண்டு வரச் செய்தார். சலீமா பேகத்திற்கு உதவியாக மெஹருன்னிசா விளங்கினார். 1611 மார்ச் மாதம் நடைபெற்ற நவ்ரோஸ் விழாவில் தற்செயலாகச் சந்தித்த பேரரசர் காதல் வயப்பட்டு 1611 – ல் மணம் செய்து கொண்டார்.

**அரசு நிர்வாகம்**

நூர்ஜஹானின் பெயர் பொறித்த நாணயங்கள் வெளியிடப்பட்டன. அதுபோன்று அரசு வெளியிடும் நாணயங்கள், முத்திரைகள் ஆகியவற்றில் நூர்ஜஹானின் கையெழுத்தும் பதிக்கப்பட்டது. ஜஹாங்கீர் தரிசனம் (ஜன்னல் மாடத்தில்

தோன்றி,மக்களின் குறைகளை கேட்பது –ஜரோக்கா டர்சன்) கொடுக்கும் போது நூர்ஜஹான் மக்களின் குறைகளை தீர்த்து வைத்தார்.

**ஆதிக்கக்குழு (துரவெய)**

தன் தந்தைக்கும் சகோதரனுக்கும் உயர்ப பதவி அளித்தது போல தன் நெருங்கிய உறவினருக்கும் பல உயர்ந்த பதவிகளை கொடுத்தார். இவ்வாறு தம் உறவினர்களைக் கொண்டே நிர்வாகம் நடத்தினார். அரியணையின் பின்புறம் அனைத்து திட்டங்களையும் நடத்திய இம்முறைக்கு **ஜன்டா** என்று பெயர். அனைத்து நிர்வாக அதிகாரிகளும் நூர்ஜஹானின் கண்காணிப்பிலேயே பணிபுரிந்தார். போர் தொடுக்கவும், சமாதான உடன்பாடு செய்யவும் கூட நூர்ஜஹானின் ஆலோசனை அவசியமாக இருந்தது.

**அரசியல் வாழ்க்கையிலிருந்து ஜஹாங்கீர் ஒதுங்குதல்**

ஜஹாங்கீர் படிப்படியாக அரசியல் வாழ்க்கையிலிருந்து ஓய்வு பெற்றார். நூர்ஜஹான் தாமே அரசரைப் போலச் செயல்பட்டார். 1611 முதலே பொது வாழ்க்கையிலிருந்து ஜஹாங்கீர் ஒதுங்கிச் கொள்ள அரசியல் அதிகாரத்தை நூர்ஜஹான் படிப்படியாகச் செலுத்த தலைப்பட்டார். நூர்ஜஹான் மேலாதிக்கம் செலுத்தத் தொடங்கினார். திறமையான அறிவுத் திறத்தால் ஒவ்வொரு சூழ்நிலையிலும் அவர் மேலாதிக்கம் செலுத்த விரும்பினார் என்று பேணி பிரசாத் குறிப்பிடுகிறார். இந்த பேரார்வத்திற்கு அவருடைய மதி துணைபுரிந்தது.

**நூர்ஜஹானின் உள் ஆதிக்க குழு**

தன் உறவினர்களையெல்லாம் உயர் பதவியில் இருத்தினார். தந்தை கியாசு பெக்கை முதல் அமைச்சராக்கி **இடிமத் உத்தௌலா**பட்டம்வழங்கினார். ஆசப்கானை நிதி அமைச்சராக்கினார். ஆசப்கானின் மருமகன் இளவரசர் குர்ரமை எல்லா முதன்மைப் படையெடுப்புகளுக்கும் தலைமைப் பொறுப்பு அளித்தார். 1621 – க்குப் பின் தன் சொந்த மருமகன் ஷாரியாரை அவ்வாறு நியமித்துக் குர்ரத்திற்கு எதிராகச் சூழ்ச்சி செய்தார். நூர்ஜஹான் தாம் விரும்பியபடி விரும்பியவற்றைச் செய்து கொண்டார்.

**ஆடை அணிகலன்களின் புதுமை**

நூர்ஜஹானின் செல்வாக்கு ஆடை அணிகலன்களில் புதுமையை உருவாக்கியது. ஆடைகளில் அணிகலன்களில் புதிய பாணியை உருவாக்கினார். புதிய வகை நூர் மகலி என்பது 25 ரூபாயில் மணமகன், மணமகள் ஆடை வகைகளாகும். தூதாமி, பாஞ்சாடோலியோ, பாதா கிளாரி, பார்ஷ் இ சாந்தினி ஆகியன இன்றும் புகழ்பெற்றவை. குடியிருப்புகளை அழகுபடுத்துவதிலும், விருந்துகள் ஏற்பாடு செய்வதிலும் கலை அழகு மிளரச் செய்தார்.

**நூர்ஜஹானின் அறப்பணிகள்**

நூர்ஜகான் திக்கற்ற துயருற்ற பெண்களின் புகலிடமாக விளங்கினார். என அக்கால எழுத்தாளர்கள் நூர்ஜஹானைப் பாராட்டுகின்றனர். ஒடுக்கப்பட்டவர்களுக்காகத் தன் செல்வாக்கை எப்போதும் பயன்படுத்தினார். ஆதரவற்ற பெண்களின் திருமணத்திற்கு அவர் தாராளமாக உதவி செய்தார். அவருடைய பதினாறு ஆண்டுக் காலச் செல்வாக்கில் 500 பெண்களுடைய திருமணம், வரதட்சனை ஆகியவற்றிற்காக உதவியிருக்கிறார் என பேணி பிரசாத் குறிப்பிடுகிறார். அவர் செய்த சிறு சிறு அறப்பணிகள் எண்ணிறந்தன.

### நூர்ஜஹானின் தீய செல்வாக்கு

காண்டகாரின் இழப்பும், குர்ரமின் கிளர்ச்சியும் நூர்ஜ ஹானின் தீய செல்வாக்கின் விளைவுகள் ஆகும். மொத்தத்தில் நூர்ஜஹானின் செல்வாக்கு நாட்டு நலனுக்குத் தீமையாக விளைந்தது. குறிப்பாக 1622 முதல் 1627 வரை நடைபெற்ற அனைத்து முதன்மை அரசியல் பிரச்சனைகளுக்கும் இவரே பின்னணியாவார்.

### காண்டகார் இழப்பு

1622-ல் ஆண்டில் தொடக்கத்தில் பாரசீக ஷா பெரும்படையினை அனுப்பிக் காண்டகாரை முற்றுகையிடத் தொடங்கினார். ஜஹாங்கீர் தக்காணத்திலிருந்த ஷாஜஹானைக் காண்டகாரை மீட்க விரையும் படி செய்தி அனுப்பினார். மழைக்காலம் ஆதலால் படையெடுப்பு நடத்திடல் எளிதன்று எனவும் படையின் முழுப் பொறுப்பும் தம்மிடம் அளித்தல் வேண்டும் எனவும் கேட்டதோடு, தம் குடும்பத்தவர் பாதுகாப்புடன் இருந்திட இரந்தாம்பூர்க் கோட்டையும் அளித்திட வேண்டுமெனவும் கேட்டார்.

காண்டகார்ப் படையெடுப்பிற்குத் தம்மை அனுப்பியதில் சூது இருக்கக் கூடும் என்று ஷாஜஹான் நம்பினார். அவர் அவ்வாறு ஏன் எண்ணினார் எனில் காண்டகார் படையெடுப்பு எளிதில் மிகக் குறுகிய காலத்தில் முடிந்துவிடக் கூடிய படையெடுப்பு இல்லையாததால் ,நூர்ஜஹான் தனக்குப் பதிலாகத் தன் உடன்பிறப்பு ஷாரியாரை அரியணையில் ஏற்றிடக் கூடும் என்று கருதினார்.

நூர்ஜஹான் ஷாஜஹானின் வெண்டுகோள் ஏதோ திட்டமிட்ட வேலையின் அடிகப்படை என்று ஜஹாங்கீரின் மனத்தைக் கலைத்தார். வடக்கு ஜாகீர்களை ஷாஜஹானுக்கும், தோல்பூரை ஷாரியாருக்கும் கிடைக்கச் செய்வதில் நூர்ஜஹான் வெற்றியும் பெற்றார். ஷாரியாரை ஷாஜஹானுக்குப் பதிலாக 12000 சாத், 8000 சவர் மான்சப்தாரி நிலைக்கு உயர்த்திக் காண்டகார் அனுப்பினார். காண்டகார் படையெடுப்பு மொகலாயருக்குத் தோல்வியாக முடிந்தது. காண்டகாரைப் பாரசீகர்கள் பிடித்துக் கொண்டனர். காண்டகாலைப் பிடிக்க முடியாமல் கோட்டை விட்டது நூர்ஜஹானின் கொள்கையால் தான்.

### ஷாஜஹானின் கிளர்ச்சி

மோகலாயப் படைக்கு உதவிக்குச் செல்ல ஷாஜஹான் மறுத்து விட்டார். ஷாஜஹான் பற்றிய புகார் ஜஹாங்கீரிடம் சென்ற போது ஷாரியாருக்குப் பதவி உயர்வ கிடைத்தது. மகபத்கானை 600 ஜாட், 5000 சவர் எண்ணிக்கையாக உயர்த்தினார். மகபத்கான் ஷாஜஹானின் மாமனார் ஆப்கானின் எதிர்ப்பாளர். ஆசப்கானை ஆக்ராவிற்கு அங்கிருந் அரசக் கருவூலத்தைக் கொண்டு வர அனுப்பப் பெற்றிருந்தனர். இவ்வேளையில் தான் காண்டஹாரைக் கைப்பற்றிய செய்தி வந்தது.

ஷாஜஹான் பதேபூர் சிக்ரியைக் கைப்பற்ற மேற்கொண்டட முயற்சிகள் வெற்றி பெறாமல் போகவே ஆக்ராவைத் தாக்கினார். 1623 – ல் பிலோச்புரம் என்ற இடத்தில் பேரரசுப் படையுடன் மோதிய இளவரசர் படையும் பெரும் தோல்வியும் இழப்பும் அடைந்தது.

இதற்கிடையில் பார்வீசு பீகாரிலிருந்தும், மகபத்கான் அவருக்குத் துணையாகவும் வரவே மாண்டுவில் இருந்த வலிமையான கோட்டையினுள் சென்று ஷாஜஹான் புகுந்து கொண்டார். அங்கிருந்து அசிர்கார் சென்றார். மாலிக் அம்பரின்

உதவியை நாடியபோது அவர் உதவிடவில்லை. பிஜப்பூர் சுல்தானும் உதவிட முன் வரவில்லை. மகபத்கானைத் தன் பக்கம் சேர்த்துக் கொள்ள மேற்கொண்ட முயற்சிகள் வெற்றி பெறவில்லை. மகபத்கானிடம் தன் பொருட்டு ஷாஜஹான் பேச அனுப்பியவர்களும் மகபத்கானுடன் சேர்த்து கொண்டனர்.

முகபத்கான் ஷாஜஹானைக் கைது செய்ய நர்மதையைக் கடந்து வந்தார். ஷாஜஹான் கோல்கொண்டாவை அடைந்து மழைக் காலமாததால் பாகான்பூரில் தங்கினார். ஷாஜஹான் பர்த்துவர்னைக் கைப்பற்றினார். அதன்பின் இராஜ்மஹால் எனப்பட்ட அக்பர் நகரை முற்றுகையிட்டார். வங்காளம் ஒரிசாவைக் கைப்பற்றினார். இவ்விரண்டு கிழக்கு மாநிலங்களை அடித்தளமாகக் கொண்டு பீகார், அயோத்தி அலகாபாத் ஆக்ராவைக் கைப்பற்ற முயன்றார். கோட்டாசு உள்ளிட்ட பீகார் முழுவதையும் கைப்பற்றினார். ஜான்பூரைக் கைப்பற்றினார்.

பர்வீசு, மகபத்கான் பாஹான்பூரிலிருந்து விரைந்து வந்தமையால் அலகாபாத்தைக் கைப்பற்ற இயலாது போயிற்று. ஷாஜஹான் பின்வாங்கி ஒரிசா, தெலிங்கானா, கோல்குண்டா வழியாக அகமது நகரில் கால் வைத்தார். மாலிக் அம்பர், பிஜப்பூர் சுல்தானிடையே மோதல் ஏற்பட இருவருமே மகபத்கான் உதவியை நாடினார். மாலிக் அம்பர் ஷாஜஹான் வரவேற்று ஜஹாங்கீருக்கு எதிராக உடன்பாடு கண்டார். மாலிக் அம்பரின் வேண்டுகோளின்படி ஷாஜஹான் பர்ஹான்பூர்க் கோட்டையைக் கைப்பற்ற முயன்று முடியாமல் போயிற்று. இறுதியில் ஷாஜஹான் பேரரசிடம் சரணடைந்தார். மூன்றாண்டுகால இந்த ஷாஜஹானின் இக்கிளர்ச்சியின் விளைவால் மொகலாயப் படை பெரிதும் சேதமடைந்தது. இதற்குக் காரணம் நூர்ஜஹானே ஆவார்.

**மகபத்கானின் கிளர்ச்சி**

ஷாஜஹானைப் பணிய வைப்பதில் மகபத்கானின் பங்கு பெம்பங்கு. ஜஹாங்கீரைத் தவிர வேறு யாருக்கும் கீழ்ப்படியாத இயல்பு படைத்த மகபத்கானைச் சந்தேகக் கண்கொண்டு நோக்கினார் நூர்ஜஹான். வங்காளத்திற்கு ஆளுநராக மாற்றினார். பேரரசருக்கு விசுவாசமாக இல்லையென்று குறை கூறினார். ஷாஜஹான் கிளர்ச்சியின் போது கைப்பற்றியவற்றை ஒப்படைக்கவில்லை என ஊழல் குற்றம் சாட்டினார். மகபத்கானின் மருமகன் பர்குதாவைக் கைது செய்தார். மனம் வருந்திய மகபத்கான் நூர்ஜஹானின் இழிவினைப் பொறுக்க முடியாமல் நூர்ஜஹான், ஆசப்கான் ஆகியோரைக் கைது செய்தார். இரண்டு மாத காலம் மகபத்கானின் கை ஓங்கியிருந்தது. காபூலில் இராஜபுத்திரர்களுக்கும், மகபத்கான் படையினருக்கும் கருத்து வேற்றுடை ஏற்பட்டது. மகபத்கான் லாகூருக்குத் தப்பிச் சென்றார். இறுதியில் மகபத்கான் பணிய நேரிட்டது.

## ஷாஜஹான்

ஷாஜஹான் 1592 – ல் ஜஹாங்கீருக்கு மூன்றாவது: மகனாக பிறந்தார். 1612 – ல் மும்தாஜ் மஹால் (அரண்மனையின் அணிகலன்) என்னும் புகழ்பெற்ற அர்ஜுமந்த் பானுபேகத்தை திருமணம் செய்து கொண்டார். அவர் 1628 – ல் தனது மாமன் ஆஸப்கானின் உதவியால் பேரரசரானார்.

### ஷாஜஹானின் படையெடுப்புகள்

**பண்டல்கன்ட் பகுதி – 1628**

பண்டல்கன்ட் பகுதியினர் ஜீஜார்சிங் தலைமையில் ஒன்று கூடி மொகலாய பேரரசுக்கு எதிராக கலகம் விளைவித்தனர். அதனை அடக்கும் பொருட்டு ஷாஜஹான் தனது படைத்தலைவர் மகாபத்கான் தலைமையில் ஒரு படையை அனுப்பினார். ஜீஜார்சிங் மொகலாயப் படைகளுக்கு அடிபணிந்து ஓர் உடன்பாடு செய்து கொண்டார். அதன் படி போர் இழப்பீடாக 15,000 ரூபாயும் தக்காண படையெடுப்பிற்கு உதவுவதாகவும் ஜீஜார்சிங் உடன்பட்டார். ஆனால் 1635 – ல் மீண்டும் குழப்பம் விளைவித்தார். ஷாஜஹானின் மகன் ஔரங்கசீப்பின் தலைமையில் சென்ற படை ஜீஜாரை தோற்கடித்து, அவரையும் அவரது மகன் விக்ரமஜித்தையும் கொலை செய்து, அவர்கள் இவருடைய தலைகளையும் ஷாஜஹானுக்கு அனுப்பினார். பண்டல் கண்டின் ஆட்சி பொறுப்பு ஜீஜாரின் உறவினர் தேவ்சிங்கிற்கு கொடுக்கப்பட்டது.

**கான்ஜஹான் லோடியின் கலகம் (1628 - 1630)**

கான்ஜஹான் லோடி என்ற ஆப்கானியத் தலைவன் ஜஹாங்கீரிடம் பணிபுரிந்தவன். குஜராத், தக்காண பகுதிகளில் ஆளுநராக இருந்தவன். தக்காணத்தில் பொறுப்பு ஏற்ற கான்ஜஹான் நூர்ஜஹானுடன் சேர்ந்து கொண்டு ஷாஜஹானுக்கு எதிராக வாரிசுரிமை போரில் ஈடுபட்டார் என்பதற்காக ஷாஜஹான் கான்ஜஹானை வெறுத்தார். ஷாஜஹான் ஆமர் பகுதிக்கு வருவதை அறிந்து பயந்து தன்னை மன்னிக்குமாறு வேண்டினான். அப்போது தக்காணத்தில் மகாபத்கான் கிளர்ச்சியில் ஈடுபட்டார். ஷாஜஹான் அங்கு படையெடுப்பை மேற்கொண்டு குஜராத், பீஹார், தெலுங்கானா ஆகிய பகுதிகளில் ஏற்பட்ட கிளர்ச்சிகளை ஒடுக்கினார்.

**போர்த்துக்கீசியர்களுடன் போர் (1631 – 1632 )**

போர்த்துக்கீசியர்கள் வங்காளத்திலுள்ள ஹூக்ளி பகுதியில் வேரூன்றியிருந்தார்கள். வாரிசுரிமை போட்டியில் ஷாஜஹான் தனது தந்தையாருக்கு எதிராக கிளர்ச்சி செய்த போது போர்த்துக்கீசியர்கள் அவருக்கு உதவி செய்யாததால் ஷாஜஹான் ஏற்கனவே அவர்கள் மீது கோபம் கொண்டிருந்தார். இந்நேரத்தில் அடிமை வியாபாரத்தில் ஈடுபட்ட போர்த்துக்கீசியர்கள் மும்தாஜின் இரு அடிமைப் பெண்கள் சென்ற படகுகளை கவிழ்த்ததோடு, அந்த இரு அடிமைகளையும் கொண்டு சென்று விட்டனர். இதனால் கோபம் கொண்ட ஷாஜஹான் வங்காள ஆளுநரான காசிம்கானுக்கு ஒரு ஆணை பிறப்பித்தார். அதன்படி காசிம்கான் போர்த்துக்கீசியர்களை நீரிலும், நிலத்திலும் தாக்கி 400 பேர்கள் கைதிகளாக்கப்பட்டு ஆக்ராவிற்கு அனுப்பினார். இதில் 3000 போர்த்துக்கீசியர்கள் தப்பி ஓடிவிட்டனர். கைது செய்யப்பட்ட 400 பேர்களும் இஸ்லாம் மதத்தைத் தழுவும் படி வற்புறுத்தப்பட்டார்கள். அவர்கள் மறுக்கவே சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

**ஷாஜஹானின் தக்காண கொள்கை**

- **அகமது நகர் மீது படையெடுப்பு (1633)**

இதுநாள் வரை அகமது நகரை தீரத்துடன் பாதுகாத்து வந்த மாலிக்காபூர் இறந்ததும் அவருடைய மகன் பதேகான் அகமது நகர் மந்திரியானார். அகமது நகரின் சுல்தானாக நைசாமூதீன் இருந்து வந்தார். மொகலாயரின் தூண்டுதல் பேரில் பதேகான் சுல்தான் நைசாமுதீனை கொலை செய்து விட்டு அவரது பத்து வயது மகனான ஹூசைன்ஷாவை ஆட்சியில் அமர்த்தி, அதிகாரத்தை தன்வசம் வைத்துக் கொண்டார். தௌலதாபாத் நகரை கைப்பற்ற பிஜப்பூர் சுல்தானிடம் பணியாற்றிய ஷாஜிபான்ஸ்லே முடிவு செய்தார். இதனை மொகலாயர்கள் விரும்பவில்லை. இதனால் மொகலாயர்கள் பிஜப்பூரை எதிர்த்து போரிட்டு வெற்றிப் பெற்றனர். இருந்தாலும் 31∴2 மாதங்களாக

தௌலதாபாத்தை முற்றுகையிட்டு பதேகான் கைப்பற்றியிருந்ததை மொகலாயர் கைப்பற்றினார்கள். தௌலதாபாத் மொகலாயர் வசமானது.

- **கோல்கொண்டாவின் பணிவு**

மொகலாயருக்கு எதிராக செயல்பட்ட கோல்கொண்டா மீது போர்தொடுக்க ஷாஜஹானுக்கு பெரும்படையுடன் புறப்பட்டார். பிஜப்பூரை சார்ந்த ஷாஜிபான்லேவுக்கு அளித்து வரும் உதவியை நிறுத்த வேண்டும் என்றும் அகமது நகர் விசயத்தில் தலையிடக் கூடாது என்றும் கூறி கடிதம் ஒன்றை கோல்கொண்டாவிற்கு ஷாஜஹான் அனுப்பினார். இதை மறுக்கவே மொகலாயர் படை ஷாஜஹானின் மகன் ஔரங்கசீப்பின் தலைமையில் கோல்கொண்டா நோக்கிச் சென்றது. ஔரங்கசீப்பின் படைவலிமையை அறிந்து 1 கோடி ரூபாய் கப்பம் செலுத்தவும் மொகலாய பேரரசின் மேலாண்மையை ஏற்றுக் கொள்ளவும் கோல்கொண்டா முடிவு செய்தது.

- **பிஜப்பூர் அரசுடன் போர்**

மொகலாயரின் அச்சுறுத்தலுக்கு இதுவரை பணியாத பிஜப்பூர் மன்னன் அடில்ஷா மொலாய படைகளை எதிர்த்தார். வலிமை மிக்க மொகலாயப் படைகள் பிஜப்பூர் பகுதியை சூழ்ந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீரர்களை கொன்று குவித்தது. அடில்ஷா பணிந்து ஒவ்வொரு ஆண்டும் ஷாஜஹானுக்கு 20இலட்சம் கப்பம் கட்ட இணங்கினார். 18 வயதான ஔரங்கசீப்பை மொகலாயருக்கு சொந்தமான தக்காண பகுதியில் ஆளுநராக நியமித்தார்.

- **மீண்டும் பிஜப்பூருடன் போர்**

1636 முதல் 1656 வரை மொகலாயருடன் நல்லுறவு கொண்டு அடில்ஷா செயல்பட்டார். 1656 – ல் அடில்ஷா மறைந்தார். அவரைப் பின்பற்றி இரண்டாம் அடில்ஷா ஆட்சிக்கு வந்தார். அவர் உண்மையான மகன் அல்ல என்று குழப்பம் நிலவியது. அதனை பயன்படுத்தி பீரார் கோட்டையை ஔரங்கசீப் 27 நாட்கள் முற்றுகையிட்டு கைப்பற்றினார். பின்னர் குல்பர்க்கா, கல்யாண்நகர் ஆகியவற்றை பேரரசுடன் இணைத்துக் கொண்டார். சுல்தான் மொகலாயரின் மேலாண்மையை ஏற்றுக் கொண்டு ஒரு கோடி ரூபாய் நஷ்ட ஈடு தர இணங்கினார்.

**ஷாஜஹானின் மத்திய ஆசியக் கொள்கை**

தனது மூதாதையருக்கு சொந்தமான (பாபருக்கு) சமர்கண்டு டிரான்ஸ் - சாக்சானியா போன்ற மத்திய ஆசிய பகுதிகளை எப்படியாவது கைப்பற்றிவிட வேண்டும் என்பது ஷாஜஹானின் பேராவலாக இருந்தது. தக்க தருணமும் வந்தது. மத்திய ஆசியாவில் ஆட்சி செய்த இமாம் குலியை நீக்கிவிட்டு அவரது சகோதரர் நாசிர்முகமது ஆட்சியை கைப்பற்றினார். இதனால் நாட்டில் பெரும் கலகம் ஏற்பட்டது. குவாரிசம் என்ற இடத்தில் ஏற்பட்ட பெரும் கலவரத்தை அடக்க நாசிர் முகமது தனது மகன் அப்துல் அஜூஸை அனுப்பினார். ஆனால் அப்துல் அஜூஸ் தன்னை மன்னர் என பிரகடனப்படுத்தி கலகக்காரர்களுடன் ஆட்சி புரிய ஆரம்பித்தார். இதனால் நாசிர் முகமது பால்க் பகுதிகளுக்கு தப்பி ஓடினார். தும்முன்னோருக்கு சொந்தமான சமர்கண்ட், பால்க், டிரான்ஸ் - சாக்சானியா ஆகிய இடங்களை கைப்பற்ற ஷாஜஹான் இத்தருணத்தை பயன்படுத்தினார்.

**பால்க் படையெடுப்பு – 1646**

தனது மகன் அப்துல் ஆஜுசினால் விரட்டப்பட்ட நாசிர்முகமது ஷாஜஹானின் உதவியை நாடினார். அவருக்கு உதவுவது போல் நடித்து ஒரு பெரும்படையை தன்னுடைய மகன் மூரத் தலைமையில் ஷாஜஹான் பால்க் பகுதிக்கு அனுப்பினார். மூரத்தின் வருகை பாரசீகத்தில் பெரும் அச்சம் ஏற்படுத்தியது. நாரின், குவாண்டஸ் ஆகியவற்றை கைப்பற்றிய மொகலாய படைகள் பால்க் பகுதியை எளிதாக கைப்பற்றி பெரும் பொருளை சைவசமாக்கின. பின்னர் திர்மிங் என்ற இடத்தை மூரத் கைப்பற்றி விட்டு டெல்லி திரும்பினார். பின்னர் ஔரங்கசீப் தலைமையில் மற்றொரு படையெடுப்பு நடந்தது. இறுதியில் அஜுஸ்கான் தோற்கடிக்கப்பட்டார். நாசிர் முகமதுவின் பேரனுக்கு அக்கோட்டையும், நகரமும் கொடுக்கப்பட்டன. பால்க் பகுதியிலிருந்து காபூலுக்கு ஔரங்கசீப் திரும்பும்பொழுது ஔரங்கசீப்பின் படைகளில் சுமார் 2000 – க்கும் மேற்பட்ட வீரர்கள் பனியால் மூடப்பட்டு இறந்தனர்.

**விளைவுகள்**

பால்க் படையெடுப்பு மொகலாயருக்கு ஒரு சோதனை காலம் என்று சொல்லலாம். மோகலாயப் படை திட்டமிட்டு போர் செய்யாமைக்கு ஒரு சவுக்கடி என்றும் கூறலாம். ஷாஜஹானின் ஆக்கிரமிப்புக் கொள்கைக்கு மரண அடியாக அமைந்தது. கோடிக்கணக்கான ரூபாண் செலவான போதும் மொகலாயாகளுக்கு ஒரு சிறு பகுதி கூட கிடைக்கவில்லை. பனியால் மூடி 2000 – க்கும் மேற்பட்ட வீர்கள் இறந்தது மொகலாயருக்கு பெரும் அச்சத்தை ஏற்படுத்தியது.

**சமயக் கொள்கைகள்**

பொதுவாக ஷாஜஹான் தீவிர முஸ்லீம் மதப் பற்றுடையவராக இருந்தாலும் ஒரு சில நேரங்களில் இந்துக்களுக்கு ஆதரவாகவும் செயல்பட்டார். இந்துக்கள் மீது யாத்திரை வரி போடப்பட்டது. புதியதாக கட்டப்பட்ட இந்து கோயில்கள் இடிக்கப்பட்டன. காசி மாவட்டத்தில் மட்டும் சுமார் 74 ஆலயங்கள் இடிக்கப்பட்டன. முஸ்லீம் கல்லறை அருகே இந்துக்களின் பிணம் எரிப்பது தடுக்கப்பட்டது. இந்து – முஸ்லீம் திருமணம் தடை செய்யப்பட்டது. முஸ்லீம் பெண்களை திருமணம் செய்யும்ட இந்துக்கள் உடனடியாக முஸ்லீம் சமுதாயத்தில் சேரவேண்டும் அல்லது அப்பெண்கள் கணவரை விட்டுவிட்டு தனியே வரவேண்டும் என்றார். சீக்கியர்களையும் இந்துக்களையும் கொடுமைப்படுத்தினார். அதனை எதிர்த்து ஹரிகோவிந்த் சிங் ஷாஜஹானுடன் போர்புரிய வேண்டியதாயிற்று. கிறித்தவ சமய வளர்ச்சிக்கும் தடை செய்யப்பட்டது. போர்ச்சுகீசியரின் சமயப் பிரச்சாரத்திற்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

இவ்வளவு முஸ்லீம் பற்றுடைய ஷாஜஹானிடம் சமயப் பொறை காணப்படவில்லை என்று கூறமுடியதாது. இந்துக்களின தசராவிழா, வசந்த விழா ஆகிய விழாக்கள் கொண்டாட அனுமதி வழங்கியதோடு, தாமும் கலந்து கொண்டார். இந்துக்கள் வாழும் பகுதியில் பசுவதையைத் தடைச் செய்தார்.

**ஷாஜஹான் காலம் ஒரு பொற்காலம்**

1627 முதல் 1656 வரை ஆட்சி செய்த ஷாஜஹானின் மொகலாயப் பேரரசு கலைத்துறையில் மிக உயர்ந்த நிலையை அடைந்தது. இக்கால கட்டத்தில் மக்கள் அமைதியாக வாழ்ந்தனர். கல்வியும், இலக்கியமும் மேன்மையுற்றன. படையெடுப்புகள் பெருமளவில் நடைபெற்றன. அயல்நாட்டு வியாபாரம் சிறந்து விளங்கியது. அதனால் ஷாஜஹானின் ஆட்சிக் காலம் பொற்காலம் என அழைக்கப்படுகிறது.

- **ஆட்சிமுறை**

அரசர் தனது நாட்டை 22 மாநிலமாக பிரித்து இருந்தார். மாநிலங்கள் முறையாகவும், சீராகவும் ஆட்சி செய்யப்பட்டன. திறமைமிக்க அமைச்சர்கள் மாகாண அரசு சிறப்புற அமைய உதவி புரிந்தனர்.

- **நிதித்துறை**

நிதி நிலை மிகவும் திருப்திகரமாக இருந்தது. நிலத்திலிருந்து கிடைத்த வருமானம் மட்டும் 21 கோடி ரூபாயாக இருந்தது. கிராமங்களிலிருந்தும் அதிக வருமானம் கிடைத்தது. அதிகாதிகள் முறையாகவும், தவறு செய்யாமலும் வரிவசூல் செய்ததால் இத்தகைய வருமான உயர்வுக்கு காரணமாக இருந்தது.

- **இலக்கிய வளர்ச்சி**

ஷாஜஹான் ஒரு இலக்கியவாதி. ஆதனால் இலக்கியக் கலை வளர்ச்சிக்கு ஊக்கம் கொடுத்தார். அப்துல் ஹமீதுலகோரி, ஹஸ்வானி, மீர்அப்துல் காசிம், இராணி போன்ற இலக்கிய வாதிகள் இவரது அவையை அலங்கரித்தனர். சுந்தர்தாஸ், சிந்தாமணி, கவீந்திர ஆச்சார்யா, ஜகநாத் போன்ற இந்து சமயத்தைச் சார்ந்த இலக்கியவாதிகளும் ஊக்குவிக்கப்பட்டனர். **அப்துல் ஹமீது லாகோரி** என்பவர் பாதுஷா நாமா என்ற் நூலையும் எழுதினார்கள். இனாயத்கான் என்பவர் ஷாஜஹான் நாமாவையும் எழுதினார்கள். ஜெகநாத் என்ற கவிஞருக்கு மாகாகவிராயர் என்ற பட்டம் சூட்டிச் சிறப்பித்தார். மகாகவிராயர் என்ற சிறப்புப் பெயர் பெற்ற சுந்தரதாஸ் ஷாஜஹானின் அந்தரங்க ஆலோசராக இருந்தார்.

- **கட்டிடக்கலை**

ஷாஜஹான் காலத்தில் கட்டிட கலையில் ஒரு பெரும் புரட்சி ஏற்பட்டது. தனது மனைவி மும்தாஜின் ஞாபகார்த்தமாக பளிங்கு கற்களால் கட்டப்பட்ட தாஜ்மஹால் உலக அதிசயங்களில் ஒன்றாக கருதப்படுகிறது. இது கட்டுவதற்கு மூன்று கோடி ரூபாய் அப்பொழுது செலவானது. 20,000 – க்கு அதிகமானோர் வேலை செய்தனர். தாஜ்மஹாலை கட்டுவதற்கு உலகின் பல பகுதிகளிலிருந்தும் கட்டிடக்கலை நிபுணர்கள் வரவழைக்கப்பட்டனர். இந்தியாவிலேயே பெரிய மசூதியான ஜூம்மா மசூதி, முத்து மசூதி, டெல்லி செங்கோட்டை, திவானி ஆம், திவானி காஸ் போன்ற கட்டிடங்களும் கட்டப்பட்டது. மண்ணிலே காணப்படும் விண்ணுலகம் என்ற ஒரு பாரசீக கல்வெட்டு திவானி ஆமில் காண்பபடுகிறது. கூறுகிறது. பூமியில் ஒரு சொர்க்கம் உண்டென்றால் அது இது! அது இது!! என்று ஒரு இளமையான பாரசீக காதல் ஜோடி கூறுவது போன்று ஓவியம் அதனுள் தீட்டப்பட்டுள்ளது. கோகினூர் வைரத்தால் செய்யப்பட்ட மயிலாசனம் உலகப் புகழ் பெற்றதாகும். கட்டிடக் கலைஞர்களின் இளவரசன் என்று ஷாஜஹான் அழைக்கப்பட்டார்.

- **இசைக்கலை**

ஷாஜஹான் இசைக் கலைக்கு ஊக்கம் கொடுத்தார். இசைக் கலைஞர்களுக்கு பட்டப் பெயர்களும் சூட்டி சிறப்பித்தார். அவர்களால் **சுக்சென்** எனும் **கிடார் வாத்திய கலைஞரும்** அவரது அவைக்களத்தை அலங்கரித்தார்

- **சோதிட நம்பிக்கை**

ஷாஜஹான் சோதிடத்தில் அதிக நம்பிக்கை கொண்டிருந்தார். அரச குடும்பத்திற்கு ஜாதகங்கள் எழுதவும், திருமணங்கள், படையெடுப்புகள் மற்றும் முக்கியமான நிகழ்ச்சிகளுக்கான சுபலக்னங்களை குறிப்பிடவும் பல இந்து சோதிடர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

- **நீதி**

நீதித்துறை முறையாக செயல்பட்டது. நீதி வழங்குவதில் மன்னரே தனிகவனம் செலுத்தினார். தவறு செய்யும் அரசின் அதிகாரிகள் உடனுக்குடன் தண்டிக்கப்பட்டார்கள். பிறரை துன்புறுத்தியவர்களையும் தண்டித்தார்.

- **சமூக உதவி**

1641 – ல் காஷ்மீரிலும் 1646 – ல் பஞ்சாபிலும் அதிக மழை காரணமாக மக்கள் அல்லலுற்றனர். அதற்கு ஷாஜஹான் பெருமுயற்சி எடுத்து மக்களுக்குப் பணமும், உணவும் வழங்க ஏற்பாடு செய்தார். பல கஞ்சி தொட்டிகள் திறக்கப்பட்டன. 50,000 ரூபாய் பண உதவி கொடுக்கப்பட்டது. மக்களை கவனிக்காத அலுவலர்கள் பணியிலிருந்து நீக்கப்பட்டனர். ஷாஜஹானிடம் மத சகிப்புத் தன்மை காணப்படவில்லை என்று கூற முடியாது. இந்துக்களின் தசரா விழா, வசந்த விழா ஆகிய விழாக்கள் கொண்டாட அனுமதி கொடுத்ததோடு தாமும் கலந்து கொண்டார். இந்துக்களின் வாழும் பகுதியில் பசுவதையை தடைச் செய்தார்.

ஷாஜஹானின் காலம் கலை வளர்ச்சியின் பொற்காலமாக கருதப்படுகின்றது தனது மனைவியின் ஞாபகச் சின்னமாக எழுதப்பட்ட தாஜ்மஹால் உலக அதிசியங்களில் ஒன்றாக விளங்குகின்றது. இவரது வெற்றிகளும், நிர்வாகமும் மொகலாய பேரரசை மென்மேலும் வளர்ச்சியடைவதற்கு உறுதுணையாக இருந்தது எனலாம்.

## ஔரங்கசீப்

ஔரங்கசீப் எளிமையானவர், பகம்டை விரும்பாதவர், சட்டத்தை மதிப்பவர், குரானில் கூறியபடி நடக்க விரும்பியவர், மிகவும் சுறுசுறுப்பானவர், தீயபழக்கம் இல்லாதவர், சாதாரண குடிமகன் போல் வாழ விரும்பியவர், தன் குல்லாவை தானே தைத்து போர்த்தியவர், தான் சார்ந்த மதத்தில்; மிகுந்த பக்தியுடையவர், குடிப்பழக்கத்தை தடை செய்தவர். மது உற்பத்தியை நிறுத்த ஆணையிட்டவர், ஆடம்பரம் இல்லாதவர், மக்களை நல்வழிப்படுத்த மனமகிழ்ந்து செயல்பட்டவர்.

### வாரிசுரிமைப் போர் (ஷாஜஹானின் இறுதி காலம்)

ஷாஜஹானுக்கு நான்கு மகன்கள் இருந்தனர். தாராஷிகோ, ஷுஜா, ஔரங்கசீப், மூரத் ஆகிய இவர்கள் அனைவரும் அழகி மும்தாஜின் பிள்ளைகள். ஒவ்வொருவரும் பேரரசின் ஒவ்வொரு பகுதிக்கு ஆளநராக இருந்தவர்கள். ஆட்சியை கைப்பற்ற ஒவ்வொருவரும் ஆசைக் கொண்டனர். 1657 – ல் ஷாஜஹான் உடல்நிலை மோசமானதும் தாராவை தம்முடைய வாரிசாக ஷாஜஹான் நியமித்தார். இதனை அறிந்த மற்ற இளவரசர்கள் ஆத்திரமும், அதிருப்தியும் கொண்டனர். ஔரங்கசீப் சரியான காரியவாதி, ஔரங்கசீக் தனது ஆதரவை மூரத்திற்கு அளிப்பதாக கூறினார்.

ஷீஜா தனது தந்தையை எதிர்தது ஒரு படையெடுப்பை நடத்தினார். இப்போர் பகதூர்பூர் அருகில் நடைபெற்றது. ஷாஜஹானுக்கு ஆதரவாக தாராவின் படைகள் போர் செய்ததால் ஷீஜாவின் படை தோற்கடிக்கப்பட்டது. மூரத், ஔரங்கசீப் படைகள் உஜ்ஜயினுக்கு அருகிலுள்ள தர்மத் என்ற இடத்தில் முகாமிட்டிருந்தது. இதை அறிந்த தாரா காசிம்கான் தலைமையில் ஒரு படையை அனுப்பினார். இப்போரில் ஔரங்கசீப்பின் படைகள் வெற்றி பெற்றது. ஔரங்கசீப்பின் பெருமை உயர்ந்தது. படைவலிமை அதிகமானது. பின்னர் சமூகார்க் என்ற இடத்தில் ஏற்பட்ட போரில் தாராவின் படைகள் தோற்கடிக்கப்பட்டன. ஔரங்கசீப் தரைப்படைகளை பெருமிதத்துடன் ஆக்ராவிற்கு அனுப்பி தனது தந்தை ஷாஜஹானை சிறைப்படுத்தினார். 1666 ஜனவரி 22 – ல் ஷாஜஹான் காலமானார்.

மூரத்தும், ஔரங்கசீப்பும் இணைந்தே தாராவை தோற்கடித்தனர். அவ்வெற்றியை கொண்டாட ஔரங்கசீப் மூரத்திற்கு ஒரு பெரும் விருந்து வைத்தார். தாராவிற்கு அளவு கடந்த மது கொடுக்கப்பட்டது. சுய நினைவு இழந்தார் மீண்டும் சுயநினைவு திரும்பிய போது, அவர் சிறையில்இருப்பதைஉணர்ந்தார்.அவர் மீது கொலைக் குற்றம் சாட்டப்பட்டு 1661 – ல் டிசம்பர் 4 – ம் நாள் கொலைச் செய்யப்பட்டார். அதனால் மொகலாயர்களின் ஆட்சி ஔரங்கசீப் கைக்கு வந்தது.

## ஔரங்கசீப் வடமேற்கு கொள்கை

- **யூசுப்சாய்கள் கலகம் (1667**

1667 – ல் பாகு என்பவரின் தலைமையில் யூசுப்சாய்கள் கிளர்ந்தெழுந்தனர். யூசுப்கான் பெஷாவரை தாக்க முயலுவதை அறிந்த ஔரங்கசீப் 10000 (பத்தாயிரம்) படைவீரர்களை அமீர்கான் தலைமையில் அனுப்பினார். 1671 – ல் இராஜபுத்திர தளபதியான ஜஸ்வந்த்சிங் அப்பகுதியில கண்காணிப்பாளராக ஔரங்கசீப்பால் நியமிக்கப்பட்டார்.

- **ஆப்ரிடிகளின் கலகம் 1672**

1672 – ல் அக்மலகான் தலைமையில் ஆப்ரிடிகள் கிளர்த்தெழுந்தனர். அக்மல்கான் தன்னை மன்னரென முடிசூட்டிக் கொண்டு ஷியா பிரிவு மக்களாகிய பட்டானியர்களை தன் பக்கம் சேர்த்துக் கொண்டு மொகலாயர்களை எதிர்த்தார். காபூல் ஆளுநரான அமின்கான் தலைமையில் நடந்த போரில் அமின்கான் தோற்கடிக்கப்பட்டார். 10000 – க்கும் அத்கமானோர் கொல்லப்பட்டனர். 2000 – க்கும் அதிகமானோர் அடிமைகளாக்கப்பட்டு மத்திய ஆசியா அனுப்பப்பட்டனர்.

- **கட்டாக் புரட்சி**

ஆப்ரிடிகளின் வெற்றி, பெஷாவர், பன்னு, கேஸத் ஆகிய பகுதிகளில் வாழ்ந்த கட்டாக் இனத்தவரையும் புரட்சி செய்யத் தூண்டியது. இப்புரட்சி மொகலாயர்களால் அடக்கப்பட்டது.

### II. ஔரங்கசீப்பின் வடகிழக்கு எல்லைப்புற கொள்கை

- **குச் பகுதியை கைப்பற்றுதல**

வடகிழக்கு எல்லையில் அஹோம்கள் என்ற முரட்டு இனத்தவர் வாழ்ந்து வந்தனர். இவர்கள் பர்மாவிலிருந்து அஸ்ஸாம் வந்த மங்கோலிய

இனத்தவர்,மொகலாயர்களின் வாரிசுரிமைப் போர் நடைபெற்ற பொழுது குச் மன்னன் கௌகாத்தியை (இப்பொழுது அஸ்ஸாமின் தலைநகர்) சூறையாடி கைப்பற்றினார். இதை அறிந்த ஔரங்கசீப் குச் மன்னனை அடக்க ஒரு பெரும்படையை அனுப்பினார். இப்படை மன்னனை தோற்கடித்து குச் பகுதியை கைப்பற்றியது. அங்கிருந்த இந்து கோயில்கள் இடிக்கப்பட்டு மசூதிகள் கட்டப்பட்டன.

- **கடற் கொள்ளைக்காரத்களுடன் ஷெயிஸ்டகான்**

ஔரங்கசீப் தனது மாமன் ஷெயிஸ்ட் கானை வங்காளத்தில் ஆளுநராக நியமித்தார். அரக்கான் பகுதியில் போர்த்துக்கீசியர்கள் கடற்கொள்ளையில் இறங்கினார். கடற்கொள்ளையின் தல்லமை இடமான சிட்ட காங்கை அரக்கன் மன்னரிடமிருந்து ஷெயிஸ்ட ஹான் விலைக்கு வாங்கி கொள்ளையை தவிர்த்தார். ஔரங்கசீப்பிடம் கடற்படை இல்லாததால் கடலில் ஆதிக்கம் செலுத்த முடியவில்லை.

## III. ஔரங்கசீப்பின் இராஜபுத்திரக் கொள்கை

ஔரங்கசீப்பின் மூதாதையர்கள் இராஜபுத்திரர்களை நன்மதிப்புடன் நடத்தினார். அதனால் பல நன்மைகள் விளைந்தன. ஆனால் ஔரங்கசீப் காலத்தில் அனைத்தும் தலைகீழானது. இராஜபுத்திரர்களை கொடிய விரோதியாக ஔரங்கசீப் நடத்தினார். 1676 – ல் ஜஸ்வந்த் சிங் (இராஜபுத்திரன்) காலமானதும் ஔரங்கசீப் படைகள் மார்வாரைக் கைப்பற்றியது. மார்வார், ஜோத்பூர் ஆகிய பகுதிகளில் இருந்த இந்து ஆலயங்கள் இடிக்கப்பட்டன. இந்துக்களின் மீது ஜிஸியா வரி விதிக்கப்பட்டது. ஜஸ்வந்த்சிங்கின் மனைவி இராணிக்கு **அஜித்சிங்** என்ற குழந்தை பிறந்தது. தாயையும்,சேயையும் (குழந்தை) ஔரங்கசீப் டெல்லிக்கு அழைத்தார். அவர்கள் சென்றனர். உடனே ரத்தர்கள் அஜித்சிங்கை ஜஸவந்தின் வாரிசாக நியமிக்க வேண்டும் என்று ஔரங்கசீப்பிடம் வேண்டினர். ஔரங்கசீப் மறுத்தார். உடனே ரத்தர்களில் சிலர் மாறுவேடத்தில் சென்று இராணியையும்,அவளது மகன் அஜித் சிங்கையும் அழைத்து வந்து அபுமலையில் தங்க வைத்தனர். மறைந்திருந்த இராணி ராணாவின் உதவியை நாடினார். இராஜபுத்திரர்கள் ஒருங்கிணைத்து ஔரங்கசீப் எதிர்த்தனர்.

ஔரங்கசீப் தனது மகன் அக்பர் தலைமையில் ஒரு படையை அனுப்பினார். இப்படை மார்வாரை கைப்பற்றியது. ஆரவல்லி மலைப் பகுதியில் இருந்த ராணா ராஜ்சிங் அக்பரை கடுமையாக எதிர்த்தார். இந்நேரத்தில் ஔரங்கசீப் ஆசும் என்பவரை தனது மகனுக்கு பதிலாக நியமித்து அக்பரை திரும்ப அழைத்தார். இதனால் அவமானப்பட்ட அக்பர் இராஜபுத்திரர்களுடன் சேர்ந்து கொண்டு தாமே இனி மொகலாய பேரரசர் என்று முடிசூட்டிக் கொண்டார். ஔரங்கசீப்பின் படைவலிமைளை அறிந்த மேவார் ராணா 1681ல் ஔரங்கசீப்புடன் ஓர் உடன்பாடு செய்து கொண்டார். அதன்படி ஜிஸியா வரி வாங்குவதில்லை என்றும், ராணாவின் நாட்டை அவருக்கே திருப்பித் தரவும் உறுதி கூறப்பட்டது. ஔரங்கசீப்பின் இராஜபுத்திரக் கொள்கை மொகலாயரின் பெருமையை குறைத்தது. பொருள் நட்டத்தை ஏற்படுத்தியது. மொகலாயரின் மதிப்பும், உயர்வும் குறைந்தது.

## IV ஔரங்கசீப்பின் தக்காண கொள்கை

தக்காணத்தை ஷியாப்பிரிவு முஸ்லீம்கள் ஆண்டு வந்தனர். ஔரங்கசீப் முஸ்லீமில் ஒரு பிரிவாகிய சன்னி பிரிவை சார்ந்தவர். அதனால் ஷியாப்பிரிவின் வளர்ச்சியை ஒடுக்க நினைத்தார். தக்காணத்தில் எழுச்சியுற்ற சிவாஜியை

ஒடுக்கவும்,சன்னிப்பிரிவின் சமயத்தை பரப்பவும் தக்காண படையெடுப்பில் ஔரங்கசீப் ஆர்வம் காட்டினார். இது முகலாயப் பேரரசு வீழ்ச்சியுற முக்கிய காரணமாக அமைந்தது.

### a.பிஜப்பூர் படையெடுப்பு 1685

இரண்டாம் அடில்ஷா பிஜப்பூரை ஆட்சி செய்து வந்தார். இரண்டாம் அடில்ஷா முஸ்லீமின் மற்றொரு பிரிவாகிய ஷியா பிரிவை சார்ந்தவர். அவழர சன்னிப் பிரிவில் சேருமாறு ஔரங்கசீப் கட்டாயப்படுத்தினார். அதற்குஅவர் மறுக்கவே அவர் மீது ஔரங்கசீப் படையெடுத்தார். 15 மாதங்கள் நடந்த போரில் பிஜப்பூர் சுல்தான் கைது செய்யப்பட்டு தௌலதாபாத் சிறையில் வைக்கப்பட்டார். 1686ல் பிஜப்பூர் மொகலாய பேரரசுடன் இணைக்கப்பட்டது.

### b. கோல்கொண்டா படையெடுப்பு – 1687

கோல்கொண்டா சுல்தான் அப்துல்ஹாசன் ஷியாப் பிரிவைச் சார்ந்த முஸ்லீம் ஆவர். அவரையும் சன்னிப் பிரிவில் சேர ஔரங்கசீப் கட்டாயப்படுத்தினார். ஔரங்கசீப் படையெடுத்தால் பல நஷ்டங்கள் ஏற்படும் என்று எண்ணி கோல்கொண்டா சுல்தான் அப்துல்ஹாசன் இளவரசருடன் ஒப்பந்தம் செய்து கொண்டு மொகலாயர்களின் மேலாண்மையை ஏற்றுக் கொண்டார். அதன்படி ஒரு கோடியே இருபது லட்சம் ரூபாய் நஷ்ட ஈட்டு தொகையும், ஒவ்வொரு ஆண்டும் இரண்டு லட்சம் ஹான் (நாணயத்தின் பெயர்) நாணயங்கள் தருவதாக கோல்கொண்டா சுல்தான் ஒத்துக் கொண்டார். அதோடு மால்கட், சிரம் ஆகிய கோட்டைகளையும் தருவதாக ஒப்புக் கொண்டார்.

இந்த உடன்பாட்டை ஏற்காத ஔரங்கசீப் 1687 – ல் கோல்கொண்டாவை முற்றுகையிட்டார். இம்முற்றுகை எட்டு மாத காலம் நீடித்தது. இறுதியில் கோல்கொண்டா கோட்டையும், ஏழு கோடி ரூபாயும் கணக்கற்ற தங்கமும் ஔரங்கசீப்பிற்கு கிடைத்தது. கோல்கொண்டவின் வீழ்ச்சிக்குப்பின் அதோனி, கர்நூல், ரெய்சூர், பெங்களூர், பெல்காம், காசி ஆகிய கோட்டைகளும் ஔரங்கசீப்பால் கைப்பற்றபட்டன.

### c. சிவாஜியை அடக்க முடியாமை (1663)

மாராட்டியப் பகுதியை ஆண்டு வந்த சிவாஜியை ஔரங்கசீப்பால் அடக்க முடியவில்லை. 1663 –ல் கல்கத்தாவிலிருந்து ஷெியஸ்டகானை ஔரங்கசீப் அழைத்தார். ஷெயிஸ்டகானை தக்காணத்தின் பொறுப்பாள்ராக நியமித்து, சிவாஜியை தாக்க ஆணையிட்டார். ஷெயிஸ்டகானும் அவரது படைகளும் பூனா கோட்டையை பிடித்தனர். அன்றிரவு அங்கேயே தங்கினார். இரவோடு இரவாக சிவாஜியும் அவருடன் 200 வீரர்களும் மாறுவேடமிட்டு பூனா கோட்டைக்குள் நுழைந்து மொகலாய வீரர்களை கொன்று குவித்தனர். ஷெயிஸ்டகான் தப்பி ஓட நினைத்த நேரத்தில் சிவாஜி வீசிய கத்தி ஒன்று அவரது கட்டை விரலை துண்டாக்கியது. ஷெயிஸ்டகான் தப்பி ஓடி விட்டார். அவனது மகன் அப்துல் ∴பாத்தா (யுடினரட குயவயா)வும் கொல்லப்பட்டார். ஒரு சில மொகலாயர்கள் பதறி ஓடி தப்பித்தனர். இதனால் சிவாஜியின் புகழ் மராத்திய பகுதியில் ஓங்கியது. மேலும் மொகலாயர்களுக்கு சொந்தமான பல பலகோட்டைகளையும் மாராட்டியர்கள் பிடித்தனர்.

### புரந்தர் உடன்படிக்கை

மோகலாய படை ஒன்றிற்கு தலைமை தாங்க வந்த ஜெய்சிங் சிவாஜிக்கு ஆசை வார்த்தை காட்டி புரந்தர் என்ற இடத்தில் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார். இவ்வுடன்படிக்கைக்கு பிறகு சிவாஜியை ஆக்ராவிற்கு வரும்படி வஞ்சக அழைப்பு ஒன்றை ஜெய்சிங் விடுத்தார். ஜெய்சிங்கை நம்பி சிவாஜியும் அவரது மகன் சம்பாஜியும் ஆக்ரா சென்றனர். அங்கே ஔரங்கசீப்பால் சிறை வைக்கப்பட்டார். பின் ஒரு ஆரஞ்சு பழக்கூடை வழியாக சிவாஜியும் சம்பாஜியும் தப்பி ரெய்காரை வந்தடைந்தனர். மராத்தியர்கள் மொகலாயருக்கு சொந்தமான பல கோட்டைகளை முற்றுகையிம ஆரம்பித்த்னர். ஔரங்கசீப்பின் தக்காண படையெடுப்பால் பெரும் பொருட் சேதம், உயிர் சேதம் ஏற்பட்டது. மொகலாய படைகள் அச்சத்தோடு இருந்தனர். ஊழல் பெருகியது. வெறுப்பு வளர்ந்தது, மராத்தியர்களின் திடமான செயலுக்கு முன் மொகலாயர்களால் ஈடுகொடுக்க முடியவில்லை.

## மொகலாயப் பேரரசின் வீழ்ச்சி

பேரரசுகள் தோன்றுவதும் மறைவதும் இயற்கை. இருப்பினும் நிலையான அரசு நீண்டகாலம் இருந்து பின்னர் திடீரென நிலைகுலைந்து வேரற்ற மரமாக வீழ என்ன காரணங்கள் என்பதை ஆராய்வது மிக அவசியம். புபரால் தோற்றுவிக்கப்பட்டு பின்னர் அக்பர், ஜஹாங்கீர், ஷாஜஹான் போன்றவரால் பெரிதும் பாதுகாக்கப்பட்டு வளமுடன் இருந்த அரசு வீழ்வதற்கு ஔரங்கசீப் எவ்வகையில் காரணமாகிறார் என்பதையும் ஆராய வேண்டும.

**சர்வாதிகார ஆட்சிமுறை**

- மொகலாயர் ஆட்சியில் மன்னர்கள் அதிக செல்வாக்கு பெற்றவர்களாக இருந்தனர். ஏல்லா அதிகாரங்களும் அவர்களிடமே இருந்தன. இத்தகைய அதிகாரம் பெற்றவர்கள் திறமை மிக்கவர்களாக இருந்தால் எந்தவித ஆபத்தும் இல்லை. அக்பர், ஜஹாங்கீர், ஷாஜஹான் ஔரங்கசீப் போன்றவர்கள் பின்பற்றி வந்த நிலைமை தலைகீழாக இருந்தது. ஔரங்கசீப்பை பின்பற்றி வந்த மன்னர்களில் எவரும் திறமையுடன் செயல்படவில்லை.
- முஸ்லீம் பிரபுக்கள் ஷாஜஹான் காலத்தில் மிகவும் உண்மையுடன் பேரரசின் வளர்ச்சிக்கு ஆதரவு தந்தனர். ஔரங்கசீப்பிற்கு பிறகு வந்த பிரபுக்கள் கருத்து வேறுபாடு, இன வேறுபாடு காரணமாக தனித்தனியே பிரிந்தனர். ஈராணி, தூராணி, இந்துஸ்தானி என பல பிரிவுகளுடன் சண்டையிட்டுக் கொண்டனர். ஒருவரை ஒருவர் காட்டிக் கொடுத்கதனர். அதனால் அவர்களின் பலவீனம் வெளிப்பட்டதோடு, மொகலாய பேரரசின் வலிமையும் நலியுற்றது.
- மோகலாயப்பெ பேரரசு பரந்து விரிந்து கிடந்தது. அப்பரந்த பேரரசை ஒருவரே கட்டி ஆள்வது பெரும் சுமையாக இருந்தது. தக்காணம், வடகிழக்கு, வடமேற்கு இந்தியப் பகுதிகள் என்று அனைத்து பகுதிகளிலும் குழப்பம் நிலவிக் கொண்டிருந்தது. அதை அடக்க ஒருவரால் முடியாத நிலை ஏற்பட்டது. இது பேரரசு அழிவுக்கு ஒரு காரணமாக விளங்கியது.
- பேரரசின் படையில் இந்துக்கள், ஆப்கானியர், பாரசீகர். மத்திய ஆசியாவினர் என்று பல்வேறு பிரிவினர் இருந்தனர். இவர்கள் அவர்களின் இனத்தலைவருக்கு மட்டும் தான் கட்டுப்பட்டு நடந்தனர். சில சமயங்களில் எதிரிகளுக்கு காட்டிக் கொடுத்தனர். லஞ்சம் பெற்றனர். படையெடுப்பின் போது தீவிரம் காட்டாமல் இருந்தனர்.
- மான்சப்தாரி முறையில் குறையிருந்தது. மான்சப்தாரி படைவீரர்களுக்கு கருவூலத்திலிருந்து அரசு நேரடியாக ஊதியம் கொடுக்கவில்லை.அதனால் படைவீரர்கள் மான்சப்தாரிகளை நம்பியே இருந்தனர். அரசு மான்சப்தாரி வீரர்களுக்கு நிலங்கள் மட்டும் கொடுத்தன. அந்நிலங்களை மான்சப்தாரிகள் தம் வாரிசுகளுக்கு சொந்த நிலங்களாக ஆக்கிக் கொண்டனர். இதனால் படைவீரர்கள் கட்டுப்பாடற்ற திறமை

இல்லாதவர்களாக காணப்பட்டனர். அவர்களிடம் பயனற்ற பழைய கால ஆயுதங்கள் புழக்கத்தில் இருந்தது. அவர்கள் சோம்பேறிகளாக இருந்தனர். சுகவாழ்வில் விருப்பம் கொண்டவர்களாக காணப்பட்டனர்.

- மன்னர்கள் தாங்கள் பெற்ற சிறு வெற்றியை குறிப்பிடும் வகையில் பெரும் களியாட்டமே நடத்தினர். பெரும் பரிசுகளும் பட்டங்களும் கொடுத்தனர். இதற்கு ஹீமாயூனே சிறந்த எடுத்துக்காட்டு.
- மொகலாயர்கள் கடற்படைக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. அதனால் ஏற்பட்ட தீமைகள் ஏராளம். ஐரோப்பியர்களான போர்த்துக்கீசியர்களும், ஆங்கிலேயர்களும் கடல் ஆதிக்கம் பெற்றிருந்தனர். இதனால் மாராட்டியர்கள் வலிமை பெற்று எதிர்த்த போதெல்லாம் மொகலாயர்கள் ஐரோப்பியர்களை சார்ந்திருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.
- ஒவ்வொரு மன்னரும் காலம் சென்றதும், அதற்கு அடுத்த மன்னன் யார்? என்ற கேள்விக்கு சரியான பதில் கிடைக்கவில்லை. ஆகவே ஒவ்வொரு மன்னின் இறுதிக் காலத்திலும் வாரிசு உரிமைப் போர் ஏற்பட்டது. அதனால் மக்களிடையே பிளவு ஏற்பட்டது. இப்பிளவு மொகலாய பேரரசின் வீழ்ச்சிக்கு வித்திட்டது எனக் கூறலாம்.
- மோகலாய மன்னர்களில் ஔரங்கசீப்பை தவிர மற்ற எல்லா மன்னர்களும் ஆடம்பர வாழ்க்கை நடத்தினர். ஷாஜஹான் அரசு பணத்தில் தாஜ்மஹாலை கட்டினார். அக்பர் அரசு பணத்தில் இபாதத்கானா என்ற வழிபாட்டு மண்டபம் அமைத்தார். இத்தகைய ஆடம்பரம் மக்களிடையே வெறுப்பை ஏற்படுத்தியது.
- ஆயல் நாட்டவரின் படையெடுப்பால் மொகலாய பேரரசு அடியோடு மண்ணாகியது. நாதிர்ஷா படையெடுத்து ஷாஜஹானது கோகினூர் வைரத்தால் செய்யப்பட்ட மயில் ஆசனத்தை அபகரித்தான். இது தற்போது பிரிட்டிஷ் அருங்காட்சியகத்தில் உள்ளது. அகமதுஷா அடிக்கடி படையெடுத்து மொகலாயர்கள் சேர்த்து வைத்த தங்க நகைகளையும், வைரங்களையும் கொள்ளையடித்து சென்றான். இதனால் மொகலாய பேரரசு அடியோடு சரிந்தது.
- ஐரோப்பியர்கள் வருகை மொகலாய பேரரசு அடியோடு அழிவதற்கு காரணமாயிற்று. ஐரோப்பியர்களிடமிருந்த நவீன போர் ஆயுதங்கள் மொகலாயர்களிடம் இல்லை.
- ஔரங்கசீப்பின் மதவெறி மொகலாய பேரரசின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாக விளங்கியது. ஔரங்கசீக் முஸ்லீம் மதத்தின் சன்னி பிரிவை சார்ந்தவர். இந்துஸ்தானத்தில் வாழும் மக்களை சன்னி பிரிவில் சேர்க்க வேண்டுமென்று வெறி அவரிடம் காணப்பட்டது. பல இந்துக்களை கட்டாயப்படுத்தி மதமாற்றம் செய்தார். சன்னி பிரிவில் சேராத இந்துக்களை பல வழிகளிலும் துன்புறுத்தினார். இது இந்துக்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தியது.
- ஔரங்கசீப் இந்துக்கள் மீது யாத்திரிகர் வரியும், ஜிஸியா வரியும் திணித்தார். கங்கையாற்றில் புனித நீராட செல்லும் யாத்திரிகர்கள் 6 ¼ரூபாய் வரி செலுத்தி விட்டுதான் குளிக்க வேண்டும். அதே போன்று இந்துக்களுக்கு சுங்கவரி 5 சதவீதம் விதிக்கப்பட்டது. ஆனால் முஸ்லீம்களுக்கு சுங்கவரி 2 ½ சதவீதம் மட்டும் விதிக்கப்பட்டது. இந்த ஏற்றத்தாழ்வை இந்துக்கள் எதிர்த்து மொகலாய பேரரசு வீழ்ச்சிக்கு ஒரு காரணமாக விளங்கியது.
- பல இந்து கோயில்கள் இடிக்கப்பட்டு, அதே இடத்தில் மசூதிகள் கட்டியது இந்துக்களுக்கு மேலும் வெறுப்பை ஏற்படுத்தியது.
- ஔரங்கசீப்பின் குணங்களே அனைவரையும், அவர் மீது வெறுப்பு ஏற்பட வைத்தது. சொந்த மகனையே அவர் நம்பவில்லை. அவர் போருக்கு தனது மகனை அனுப்பும் போது அவனுடன் இரண்டு பேர்களை அனுப்புவார். இதனால் தன் பிள்ளைகளின் வெறுப்பையும் ஏற்படுத்திக் கொண்டார்.
- சீக்கியர்களின் 9 – ம் குரு தேஜ்பகதூரை அழைத்து தேஜ்பகதூர் மறுக்கவே அவரை ஐந்து நாட்கள் சித்திரவதை செய்து கொலை செய்தார். தேஜ்பகதூரின் மகன் 10 – ம் குரு குரு கோவிந்தசிங் ஔரங்கசீப்பிற்கு எதிராக புனிதப் போர் தொடுக்குமாறு

மக்களுக்கு கட்டளையிட்டார். சீக்கியர்களை ஔரங்கசீப் பகைத்துக் கொண்டது மொகலாய பேரரசு அழிவுக்கு வித்திட்டது எனலாம்.

- நீதி வழங்குவதில் இஸ்லாம் சமயத்தவர்களுக்கு தனி சலுகைகள் வழங்கப்பட்டன. ஆனால் இந்துக்கள், சீக்கியர்கள், இராஜபுத்திரர்கள், ஷியாபிரிவு முஸ்லீம்கள் இவர்களுக்கு அதிக தண்டனை வழங்கப்பட்டது. இது மற்ற இனமக்களின் வெறுப்பை ஏற்படுத்திக் கொண்டது.
- ஔரங்கசீப் காலத்தில் அவரை சூழ்ந்திருந்த நாடுகள் சிறப்பாக, திறமையாக, வீரத்துடன் ஆட்சிபுரிந்தனர். மராட்டிய பகுதிகளை ஆண்ட சிவாஜியும் , ஜாட் இனத்தவர்களும், பண்டேலா இனத்தவர்களின் தீரமும், சீக்கியர்களின் எழுச்சியும், வடகிழக்கு எல்லை மாநிலத்தவர்களின் கிளர்ச்சியும், மொகலாய பேரரசை ஆட்டிப் படைத்தன.
- இந்துக்களுக்கு ஆட்சித் துறையில் வாய்ப்பு வழங்கப்படவில்லை. அதே சமயம் திறமையாக செயல்பட்டு வந்த இந்துக்களை ஆட்சி துறையிலிருந்து அகற்றினார். இது கற்றவர்களின் வெறுப்பை ஏற்படுத்திக் கொண்டது.
- ஔரங்கசீப்பின் தக்காண கொள்கை தான் மொகலாய பேர்ரசு அழிவாற்கு முக்கிய காரணமாக இருந்தது. தக்காணத்தை ஆண்ட பிஜப்பூர், கோல்கொண்டா சுல்தான்கள் முஸ்லீமின் ஷியாப்பிரிவை சார்ந்தவர்கள். இவர்கள் இருவரையும் சன்னிப்பிரிவில் சேர ஔரங்கசீப் கட்டாயப்படுத்தினார். சுல்தான்கள் மறுத்ததால் ஔரங்கசீப் தக்கா்ணத்தின் மீது படையெடுத்தார். இப்போரின் காரணமாக பொருளாதார சீரழிவு ஏற்பட்டது. பேரரசர் தரைநகரத்தில் இல்லாமல் தக்காண பகுதிக்கு சென்றதால்
- வடஇந்தியாவில் பல இடங்களில் கிளர்ச்சிகள் தோன்றியது. அயோத்தி,வங்காளம், பீஹார், ஒரிஸ்ஸா ஆகிய பகுதியில் தங்களை சுதந்திர நாட்டினர் என்று பிரகடனப்படுத்தினார். இது மொகலாய பேரரசு வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாக விளங்கியது.

## அலகு –II

## மொகலாயர்ஆட்சி முறை

## அலகு –I ல் உள்ள அக்பரின் ஆட்சிமுறை அல்லது மொகலாயர் ஆட்சிமுறை என்ற பாடத்தைப் பார்க்கவும்

## மொகலாயர் கால கலை மற்றும் கட்டிடக் கலை

### கட்டடக்கலை

வரலாற்றாசிரியர்கள் கட்டடக் கலை பற்றிப் பல்வேறு கருத்துக்களைக் கூறுகின்றனர். பெர்கூலன் என்பார் மொகலாயர் காலக் கட்டடக் கலை அந்நிய நாட்டுக் கலைத் திறனைக் கொண்டுள்ளதென்றும், ஹாவன் என்பர் இந்தியர்கள் இயல்பாகவே கலை நுணுக்கங்கள் அறிந்தவர்கள். அந்நியர்களின் வருகையால் அவர்களது பாதிப்பு ஓரளவிற்கு ஒத்திருக்கலாம் அஎன்றும் கருத்துத் தெரிவிக்கின்றனர். மொகலாயர் காலக் கட்டடக் கலை மெசடோனியக் கலையிலிருந்த வளர்ச்சி கூடாரங்களின் பாதிப்பு எனச் சிலர் கருதுகிறார்கள். பின்னர் அது பாக்தாத்திற்கும், இந்தியாவிற்கும் பரவியிருக்கலாம் எனவும் கருத்து நிலவுகிறது. அக்பர் காலக் கட்டடக் கலை வரையிலும் பாரசீகக் கலை படிந்திருப்பதைக் காணலாம். ஆதன் பிறகே இந்தியக் கலைத் திறனைத் காண முடிகிறது. மோகலாயர் காலக் கட்டடங்கள் அலங்கார மணிகளாலும், கண்ணைக் கவரும் வண்ணங்களாலும் மிளிர்கின்றன.

அரண்மனை மண்டபங்களும் அரைவட்ட வடிவக் கவிகை மாம அமைப்புடைய நுழைவாயில்களும், தூண்களால் தாங்கப்பட்ட அரண்மனை மண்டபங்களும் மூலைச் சிறு கோபுரங்களும்ஈ கவிகை மோடுகளும், உயர்ந்த அடுக்கு மாடிகளும், கவிகை

மாடமும் மொகலாயா் காலக் கட்டடக் கலையில் காணலாம். இந்தியக் கரையும், இஸ்லாமியக் கலையும் கலக்க இரு காரணங்கள் கூறுகின்றனா். மொகலாயப் பேரரசா்கள் கட்டடங்களைக் கட்ட இந்தியச் சிற்பிகளையும், கலைஞா்களையும் பணித்ததால் அவா்களிடமிருந்த கட்டடக் கலை நுணுக்கங்களைக் கொண்டே அமைத்தனா் என்பது முதல் காரணம். இந்து, சமணக் கோவில்களை இடித்து அந்த இடத்திலேயே அரண்மனைகளும், மசூதிகளும் எழுந்ததால் இடிபாட்டுப் பொருட்கள்ளக் கொண்டே புதிய கட்டடங்கள் கட்டப்பட்டதால் பழைய உருவம் அதில் பிரதிபலித்தது ஜும்மா மஸ்ஜித்தும் ஆக்ராவிலுள்ள லோதிக் கோட்டையும் பாபா் காலக் கட்டக் கலைக்குரிய சான்றுகளாகும்.

**ஹுமாயூன்**

இவா் அரசியல் தொல்லைக் காரணமாகக் கட்டடக் கலையில் கவனம் செலுத்திட இயலவில்லை. பீஹாரில் ஷொ்ஷாவால் கட்டப்பட்ட மசூதி ஒன்றுள்ளது. இது இந்து முஸ்லீம் கட்டடக் கலையின் இணைப்பாகும். பதேபாத்தில் பள்ளிவாசல் ஒன்றும் உள்ளது.

**அக்பா்**

இவரது காலத்தில் கட்டடக் கலையில் முன்னேற்றம் கண்டபோதும் இந்தியப் பண்பாட்டைப் போற்றிய போதும், இவரது காலக் கட்டடக் கலையிலும் பாரசீக கலையின் சாயல் படிவதைத் தடுக்க இயலவில்லை. ஆக்ராவிலுள்ள ஜஹாங்கீரி மகாலும் பழைய டில்லியிலுள்ள ஹுமாயூன் சமாதியும் சான்றாகும். ஆக்பா் ஏராளமான கோட்டைகள், மசூதிகள், கோபுரங்கள், அரண்மனைகள், பள்ளிகள், தங்குமிடங்கள் , நுழைவாயில்கள் ஆகியவற்றைக் கட்டியுள்ளாா். ஆக்ரா கோட்டையின் மதில் சுவா் 70 அடி உயரமும், கோட்டை ஒன்றரை மைல் சுற்றளவும் கொண்டுள்ளது.

எழில் கொஞ்சும் பதேபூா் சிக்ரியும், அங்குள்ள கட்டடங்களும் அக்பரின் கலையாா்வத்திற்குச் சான்றாகும். ஜோதிபாயின் அரண்மனை, மரியம், சுல்தான் ஆகியோரின் அரண்மனைக்குள் பீா்பாலின் இல்லம், திவானி ஆம், திவானி காஸ், பாஞ்ச் மஹால், ஜும்மா மஸ்ஜித் புலந்தா்வாசா, சலீமின் கல்லறை ஆகியவை குறிப்பிடத்தக்க்வையாகும். சிகந்தராவில் உள்ள அக்பரின் ˙கல்லறை பிறவற்றைவிட தனித்தன்மையுடன் விளங்குகிறது. புலந்தவா்வாசாவைப் போல உயரமான நுழைவாயிலை இந்தியாவில் எங்குமே காண முடியாது.

**ஜஹாங்கீா்**

ஆக்பரைப் போல் கட்டடக் கலையில் நாட்டம் கொள்ளவில்லை. ஜஹாங்கீரின் மனைவி நூா்ஜஹான் கட்டிய இதமத்துல்லா சமாதி சலவைக் கல்லாலும், உள் மடிப்புகளில் அழகிய பல வண்ணக் கற்களைப் பதித்துப் பூவேலைப்பாடுகளை அழகுற அமைத்திருப்பது குறிப்பிமத்தக்கதாகும்.

**ஷாஜஹான்**

கட்டடக் கலையின் இளவரசா் என்றழைக்கப்பட்ட ஷாஜஹான் காலத்தில் தான் கட்டடக் கலை உச்ச நிலையை அடைந்தது. ஆக்ரா, டெல்லி, ஆஜ்மீா், அலகாபாத், காஷ்மீா், காண்டகாா், காபூல் ஆகிய இடங்களில் கோட்டைகள், தோட்டங்கள், மாளிகைகள் ஆகியவற்றை ஒன்றாக விளங்கும் தாஜ்மஹால் சலவைக் கற்களால் ஆனது. யமுனை ஆற்றங்கரையில் 22 ஆண்டு காலம் ஏராளமான பொருட் செலவில் பல்லாயிரக்கணக்கோரைக் கொண்டு எழுப்பியதாகும்.

**இலக்கியம்**

பாபர் துசாக்கி பாபரி எனத் தன் வாழ்க்கை வரலாறு எழுதிச் சிறப்பு சேர்த்தார். தத்துவ ஞானிகளுடன் உமாயூன் உடனிருந்து இலக்கிய ஆர்வத்தை வெளிப்படுத்தினார். அக்பர் கால வரலாற்றுப் படைப்புகள், மொழிபெயர்ப்புகள், பாடல் என மூன்றாகப் பிரிக்கலாம். அக்பர் 24,000 கையெழுத்துப் படிகள் அடங்கிய நூல் நிலையத்தை நிறுவிப் பராமரித்து குறிப்பிடத்தக்கதாகும். முல்லாதாவூதின் தரீக்கி அலிபி, அபுல்பாசலின் அயினி அக்பரி அக்பர் நாமா, பதாவுனியின் முண்டாகப் உல் தவாரிக், நிர்சமுத்தீன் அகமது பகத் இ அக்பர், அபுல்பதேயின் இரஹீமி ஆகியவை வரலாற்றுப் படைப்புகளாகும். இராமாயணத்தைப் பாரசீக மொழியில் பாவுனி மொழி பெயர்த்தனர்.

இராஜதரங்கினி, அதர்வண வேதம், லீலாவதி ஆகிய வடமொழி நூல்களும் பாரசீக மொழியில் மொழி பெயர்க்கப்பட்டன. இந்தி மொழி இலக்கியமும் அக்பர் காலத்தில் வளர்ச்சியடைந்தன. அக்பரின் அமைச்சர் அப்துல் ரஹிம் இயற்றிய தோ ஹாஷ் எனும் அறிவியல் நூல் இன்றும் போற்றிப் பாதுகாக்கக் கூடிய நூலாகும். அக்பரின் நண்பர் ராஜ்பீர்பாலின் கவிதைகள் நகைச்சுவையுடன் கூடிய நூலாகும்.

ஜஹாங்கீர் பாரசீக மொழியில் தன் வாழ்க்கை வரலாற்றனைக் கவிதை நடையில் வடித்துள்ளார். ஷாஜஹான் காலத்தில் தோன்றிய வரலாற்று நூல்களுள் அப்துல் ஹமீது லாகூரி எழுதிய பாதுஷா நாமாவும், இனாயத்கான் எழுதிய ஷாஜஹான் நாமாவும் குறிப்பிடத்தக்கவை. அவருடைய மகன் தாராஷிகோ எழுத்துலகில் ஈடுபட்டவர். உபநிடதம், பகவா் கீதை, யோகசாத்திரம் முதலிய வடமொழி நூல்களைப் பாரசீகு மொழியில் மொழி பெயர்த்தார். காசீம் எழுதிய ஆலம் கீர்நாமாவும் மஸ்தாயித்கான் எழுதிய மாசீர் ஆலம் கீர் நூல்கள் ஔரங்கசீப்பின் காலப் படைப்புகளாகும்.

**கவிதைகள்**

கிஸாவி என்ற பாரசீக கவிஞர் மிராதி உல் கைனத் நாஸர் இ பாதித்த, இஸ்ரார்-இ-மக்த்ப போன்ற பாடல்களை இயற்றினார். அமீர்குஸ்ரு என்பவர் மஸ்நாவி நூல், ஒதாமன், சவாதி-உ-இல்கம் போன்ற சில கவிதை தொகுப்புகளை இயற்றினார். சூர்தாஸ் என்பவர் சூர்சாகர், சூறாவளி, ராமதாஸர் என்பவர் ரஸிக்பிரியா, அலங்கிரித, மஞ்சரி ஆகிய இலக்கண கவிதைகளையும் எழுதினார். ராஜாபீர்பால் என்பவர் கவிராயர் என்ற பட்டடம் பெற்றார். அப்துல் ரஹிம் என்பவர் பன்மொழிக் கவிஞராக இருந்தார்.

**மொழிபெயர்ப்பு துறை**

அக்பர் தம்முடைய நேரடி மேற்பார்வையின் கீழ் ஒரு மொழி பெயர்ப்புத் துறையை நிறுவினார். இத்துறையின் மூலம் பல இந்து புராணங்கள் பாரசீக மொழிக்கு மொழி பெயர்க்கப்பட்டன. மகாபாரதம், இராமாயணம், அதர்வண வேதம், லீலாவதி, ராஜதரங்கிணி ஆகியவை பாரசீக மொழியில் மொழி பெயர்க்கப்பட்டது. இம்மொழி பெயர்ப்புக்கு அபுல்பாசல், பெய்சி, பதௌனி போன்றோர் உதவினர். டஜாக் என்ற வானவியல் நூலை முகமன்கான் என்பவரும் பஞ்ச தந்திரக் கதைகளை அபுல் பாசலும், மொழிபெயர்த்தனர்.

**ஓவியக்கலை**

மொகலாயர்கள் டெல்லிச் சுல்தாளியர் கலைக்கு உயிருட்டினர். சீன மங்கோலிய நுணுக்கங்களும் திபெத்தியன் வழியாக இந்திய வந்து இந்திய நுணுக்கங்களைக் கலந்து மொகலாயர் கலையாக மிளிர்ந்தது. அரசியல் அல்லல் காரணமாக கட்டடக் கலையில் கவனம் செலுத்தாத உமாயூன் பாரசீகத்திலிருந்த வண்ண ஓவியங்கள் கண்டுகளித்து இந்திய திரும்புகையில் **சையத் அலி, குவாஜா அப்துல் சமத்** எனும் இரு ஓவியர்களைத் தன்னுடன் அழைத்து வந்த ஓவியக் கலையைத் தன் காலத்தில் ஆரம்பித்து வைத்தார்.

ஓவியத்திற்குத் தனித்துறையை அக்பர் அமைத்ததோடு, இந்து முஸ்லீம் ஓவியர்களை ஊக்குவித்தார்.அ குவாஜா சமது என்பவரைத் தலைவராக நியமித்ததுடன் சிறந்த ஓவியங்களுக்கப் பரிசளித்தார். பதேபூர் கோட்டையின் சுவர்களை ஓவியங்களால் அழகு செய்தார். ஜஹாங்கீர் காலம் ஓவியக்கலையின் பொற்காலம் எனலாம். மலர்கள், செடிகள், கொடிகள், பறவைகள், விலங்குகள் போன்றவற்றை ஓவியமாக வரைந்தனர். இந்திய ஓவியங்களை ஆதரிக்காதவராக இருந்த போதிலும் பிஸன்தாஸ், கேசவ மனோகர், வர்தங், துளசி ஆகிய இந்திய ஓவியர்களும் பெயர்பெற்றனர். பரூக் பெக் முகமது நதிர், முகமது முதலானவர்களை ஆதரித்தார். சர் தாமஸ்ரோ இவர்களின் திறமையை புகழ்ந்துள்ளார். கட்டடக் கலைக்கு ஆதரவளித்த ஷாஜஹான் ஓவியக் கலையை வளர்க்க முன் வரவில்லை.

**இசைக் கலை**

பாபர் இசைக் கலையைப் பற்றி ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்று எழுதினார். ஹீமாயூனும் பாபரைப் போன்று இசைக்கலைக்கு ஆதரவு கொடுத்தார்.அவர் திங்கள் , புதன் ஆகிய நாட்களில் தன் ஓய்வு நேரத்தை இசைக்கஞைரோடு பகிர்ந்துக் கொண்டார். அக்பரும் இசைக்கலை வளர்ச்சிக்கு பெரிதும் ஊக்கம் கொடுத்தார் அவர் இந்து இசைவாணர்களிடமிருந்து இறை நுணுக்கங்களை கற்றறிந்தார். ராம்தாஸ், பாவ்ரா, சூர்தாஸ், தான்சென் போன்றவர்கள் அக்பர் காலத்தில் வாழ்ந்த இசைக் கலைஞர்களாவர். தானசென் தம் இசைப்புலமையால் யமுனை நதியின் ஓட்டத்தையே தடை செய்தார். என்று கூறுவர். ஜஹாங்கீர் காலத்தில் இசைக் கலை மேலும் வளர்ந்தது. அவருடைய அவையில் ஆறு புகழ்பெற்ற பாடகர்கள் இருந்தனர். என்று வில்லியம் ∴பிரெஞ்ச் குறிப்பிட்டுள்ளார். ஜஹாங்கீர் இந்தி பாடல்கள் எழுதி இசையமைத்தார். மேலும் நடனக் கலைஞர்களும் இவர் அவையில் இருந்தனர். ஷாஜஹானின் காலத்திலும் இசைக்கலை வளர்ந்தது. ஜகந்நாதன் என்பவரின் பாடலின் இனிமையை பாராட்டி அவரது எடைக்கு எடை தங்கம் கொடுத்தாராம். ராம்தாஸ், மஹாபட்டர் போன்றோர் ஷாஜஹானின் அவைக்களத்திலிருந்த பிற பாடகர்களாவர்.

ஔரங்கசீப் காலத்தில் பிற கலைகளை போல் இசைக் கலையையும் சீரழிந்தது. இசைக்கலையை அழிக்க வேண்டும் என்பதற்காக ஒரு தனித்துறையை ஔரங்கசீப் நிறுவினார். புல இசைக் கலைஞர்கள் நாட்டை விட்டு வெளியேற்றினர். கலைஞர்கள் எங்கு கச்சேரி நடத்தினாலும் அங்கு சென்று இத்துறையினர் தங்கள் கைவரிசையைக் காட்டி இசைக்கருவிகளை உடைத்து எறிந்து விடுவர்

## அலகு – 3
## மராட்டியர்கள் - சிவாஜி

### சிவாஜியின் எழுச்சி

அரசியலில் மொகலாயருக்கு எதிராக மேலோங்கிய சக்தியாக விளங்கியது மராட்டிய பேரரசு. அம்மராட்டிய பேரரசில் சிங்கமென விளங்கிய எதிரிகளின்

போராட்டங்களுக்கு ஈடு கொடுத்து இணையற்ற பேராட்சியை புரிந்தவர் தான் சந்திரபதி சிவாஜி.

சிவாஜி எழுச்சி மொகலாயப் பேரரசின் வளர்ச்சிக்கு ஏற்பட்ட தடை, மொகலாய பேரரசின் சமயக் கொள்கைக்கு இடப்பட்ட முற்றுப்புள்ளி.

சிவாஜி வெறும் போர் வீரர் மட்டுமல்லர், பாசம் மிகுந்த தந்தை, பரிவு கொண்ட தளபதி, மக்களை மதித்து நடக்கும் மாண்பு மிகுந்த மன்னன, பெண்களின் மானத்தை காக்கும் நற்குணம் படைத்தவர், மராட்டிய பெண்தெய்வம் பவானியின் கருணை பெற்ற கண்ணியவான், மத சகிப்புத் தன்மைக் கொண்ட உத்தமர்.

**ஆரம்ப காலம்**

சிவாஜியின் தந்தை ஷாஜிபான்ஸ்லே, தாய் ஜீஜாபாய். 1627 – ம் ஆண்டு ஏப்ரல் 3 – ம் தேதி ஷிவ்னர் என்ற இடத்தில் பிறந்தார். 1639ல் தாதாஜி கொண்டதேவ் என்பவரிடம் கல்வி கற்க ஆரம்பித்தார். மகாபாரதம், இராமாயணம் போன்ற காவியங்களிலுள்ள வீரம் செறிந்த கதைகளை ஜீஜாபாய் சிவாஜிக்கு எடுத்துக் கூறினார். மொகலாயர்களிடமிருந்து இந்து சமயத்தை காக்க வேண்டியதின் அவசியத்தையும் சிவாஜிக்கு அறிவுறுத்தினார்.

1646 – ம் ஆண்டு பிஜப்பூர் சுல்தானிடமிருந்த தோர்ன கோட்டையை கைப்பற்றினார். பின்னர் சாக்கான், கோண்டனா ஆகிய கோட்டைகளைக் கைப்பற்றினார். 1648 – ம் ஆண்டு சிவாஜியுடைய தந்தை ஷாஜிபான்ஸ்லேயை பிஜப்பூர் அரசு கைது செய்து சிறையிலிட்டது. பெங்களூர் கோண்டனா ஆகிய இடங்களை பிஜப்பூர் அரசுக்கு சிவாஜி திருப்பிக் கொடுத்தால் ஷாஜிபான்ஸ்லேயை விட்டு விடலாம் என்ற நிபந்தனையை விதித்ததன்படி சிவாஜி அவ்விடங்களை திருப்பிக் கொடுத்ததினால் ஷாஜிபான்ஸ்லேவை பிஜப்பூர் அரசு விடுவித்தது.

**மொலாயருடன் போராட்டம்**
**பிஜப்பூர் அரசுடன் ஒப்பந்தம்**

பிஜப்பூர் அரசு முறையாக கப்பம் செலுத்த தவறியதால் ஷாஜஹான் தம்முடைய மகனான ஔரங்கசீப்பை பிஜப்பூருக்கு அனுப்பி பிஜப்பூர் மீது போர்தொடுக்த செய்தார். உடனே பிஜப்பூர் அரசு சிவாஜியின் துணையை நாடியது. ஆதனை சிவாஜி நன்கு பயன்படுத்திக் கொண்டு முதன் முதலாக மொகலாயருடன் போரிடத் தயாரானார்.

**ஜாவுலியை கைப்பற்றுதல்**

1656 –ம் ஆண்டு ஜாவுலியை கைப்பற்றி **ரெய்க்கர்**என்ற கோட்டையை சிவாஜி கட்டினார். ஜாவுலி கோட்டையை சந்திரராவ் என்ற மாராட்டியரின் வசம் இருந்தது. ஆனால் சந்திராவ் பிஜப்பூர் அரசோடு ஒரு இரகசிய உடன்பாடு செய்து கொண்டு சிவாஜியின் வளர்ச்சிக்கு தடையாக இருந்தார். அதனை அறிந்த சிவாஜி அரகசிய ஒற்றன் ஒருவனை அனுப்பி சந்திரராவை கொலை செய்துவிட்டு 1656 –ம் ஆண்டு ஜனவரி மாதம் கோட்டையை கைப்பற்றினார்.

**கொங்கணத்தைக் கைப்பற்றுதல்**

1657 –ம் ஆண்டு சிவாஜி வட கொங்கணத்திலுள்ள கல்யாணி, பீவாண்டி ஆகியவற்றைத் தாக்கி அவற்றை கடற்படைத் தளங்களாக ஆக்கினார். மேலும்

அதனருகிலுள்ள போர்ச்சுக்கீசியர்களையும் தாக்கி, டாமன் பகுதிகளைச் சூறையாடினார். போர்ச்சுக்கீசியர்கள் அவருக்கு ஆண்டுதோறும் கப்பம் செலுத்துவதாக உறுதி கூறினார். கல்யாணி என்ற பகுதியில் படையெடுத்த போது தான் அழகான முஸ்லீம் பெண் ஒருத்தி கைப்பற்றப்பட்டு சிவாஜிக்கு பரிசாகத் தரப்பட்டாள். ஆனால் சிவாஜி அப்பெண்ணை மிக்க மரியாதையுடன் நடத்த விலையுயர்ந்த ஆடை ஆபரணங்களை அளித்து மீண்டும் பிஜப்பூர் அரசுக்கே அவளை அனுப்பினார்.

**அப்சல்கானும் சிவாஜியும்**

மொகலாயர்களின் ஆக்கிரமிப்பும், சிவாஜியின் ஆதிக்கமும் பிஜப்பூர் அரசின் அழிவை நெருங்கிக் கொண்டிருந்தன. அச்சமயம் பிஜப்பூரில் இருந்த ராணி, அப்சல்கானை அனுப்பி சிவாஜியை அடக்க வேண்டுமென்று விரும்பினார். ராந்தம்பூருக்கு அப்சல்கான் சென்றார். சிவாஜியுடன் போர் செய்:து அவரை வெல்லுவது அரிது என உணர்ந்த அப்சல்சான் அவரை வஞ்சகமாகக் கைது செய்ய நினைத்தார். கிருஷ்ணராஜ பாஸ்கர் என்பவரை சிவாஜியிடம் தூதனுப்பி உடன்பாடு செய்து கொள்ள முயற்சி செய்தார். உடன்பாடும் ஏற்பட்டது. சிவாஜி அப்சல்கானை மிதாப்கார் கோட்டையில் சந்தித்தார். அப்ச்லகான் அவரைக் கட்டித் தழுவுவது போலக் கொல்ல திட்டமிட்டார். சிவாஜி அதனை உடனே அறிந்து தன் புலிநகத்தின் உதவியால் அப்சல்கானின் வயிற்றைக் கீறிவிட்டு உயிர்தப்பினார். அப்சல்கான் கொல்லப்பட்டார். இந்நிகழ்ச்சி மொலாயர்களுக்கும், பிஜப்பூர் அரசுக்கும் ஐரோப்பிய நாட்டினருக்கும் அச்சத்தை விளைவித்தது.

## ஷெயிஸ்டகானும் சிவாஜியும் - 1663

**ஷெயிஸ்டகானின் முன்னேற்றம்**

ஔரங்கசீப் டெல்லி அரசின் மன்னரானார். 1660 —ல் தக்காணத்தின் ஆளுரநாக தனது மாமன் ஷெயிஸ்டகானை நியமித்து சிவாஜியை அடக்கும் படி பணித்தார். அகமது நகரிலிருந்து பூனா வரையிலுள்ள பல பகுதிகளை ஷெயிஸ்டகான் கைப்பற்றினார். சாக்கான் பகுதியையும் தாக்கினார். சாக்கானும் ஷெயிஸ்டகான் வசமாகியது.

**இரவு நேரத் தாக்குதல்**

இரவோடு இரவாக ஷெயிஸ்டகானை ஒழிக்க சிவாஜி முடிவு செய்தார். அத்திட்டப்படி 200 வீரர்களைக் கொண்ட ஒரு சிறிய படையை மாறுவேடங் கொண்டு ஷெயிஸ்டகான் தங்கியிருந்த பூனா கோட்டையைத் தாக்கி ஷெயிஸ்டகானை கொல்ல முயற்சித்தார். ஆனால் ஷெயிஸ்டகான் தன் ஒரு விரலைப் பறிகொடுத்து விட்டு கூச்சலிட்டார். அவரது மெய்க்காப்பாளர்களும், ஷெயிஸ்டகானின் மகனான அபுல்பாத்கானும் கொல்லப்பட்டனர்.

**சூரத் கொள்ளை நிகழ்ச்சி — 1664**

மேற்குப் பகுதியில் மிக உயர்ந்த வர்த்தக நிலையமாக இருந்த சூரத் 1664 —ம் ஆண்டு சிவாஜியின் தாக்குதலுக்கு உள்ளானது. ஆங்கிருந்த ஆங்கில டச்சுப் பண்டக சாலைகள் தவிரமற்ற அனைத்தும் கொள்ளையடிக்கப்பட்டன. சிவாஜி ஆங்கிலேயர்களை மூன்று லட்சம் ரூபாய் கட்டும்படி ஆணையிட்டார்.

**ஜெய்சிங்கும் புரந்தர் உடன்படிக்கையும் (1665)**

சிவாஜியை அடக்க இறுதியில் ஔரங்கசீப ஒரு தந்திரத்தை கையாண்டார். இந்துவாகிய சிவாஜியை அடக்க ஒரு இந்துவை அனுப்ப முடிவு செய்தார். இதற்கா ஜெய்சிங்கை தேர்ந்தெடுத்தார். பிஜப்பூர் அரசு சிவாஜிக்கு ஆதரவு கொடுக்காதபடி ஒரு ஒப்பந்தத்தை ஜெய்சிங் பிஜப்பூர் அரசுடன் ஏற்படுத்திக் கொண்டு சிவாஜியை தாக்க முற்பட்டார். சிவாஜியை வெல்ல முடியாது என்று உணர்ந்த ஜெய்சிங் சிவாஜிக்கு உதவ முன் வந்தார். அதேசமயம் மொகலாய பேரரசின் படைக்கு வெற்றிதரவும் விரும்பினார். இப்படையெடுப்பில் ஜெய்சிங்கிடம் பணிந்து சென்றால் மன்னரிடம் கூறி சிவாஜிக்கு பல சலுகைகளை பெற்றுத் தர முடியும் என்று ஜெய்சிங் கூறினார். சிவாஜியும் இதற்கு ஒத்துக் கொண்டு புரந்தர் என்ற இடத்தில் ஓர் உடன்படிக்கை 1665 –ல் செய்து கொண்டனர். அவ்வுடன்படிக்கையின் படி சிவாஜி தனது மகன் சம்பாஜியுடன் ஆக்ராவிற்கு சென்றார்.

அப்பொழுது ஔரங்கசீப்பிற்கு 9 – வது ஆட்சியாண்டு விழா ஆக்ராவில் மி சிறப்பாக நடந்து கொண்டிருந்தது. சிவாஜியை கண்காணிக்க ஒரு ரகசிய ஏற்பாடு செய்திருந்தார் ஔரங்கசீப். இது சிவாஜிக்கு தெரியவில்லை. விழாவில் சிவாஜிக்கு எந்தவித மரியாதையும் கொடுக்கப்படவில்லை. அதோடு அவர் தனி மாளிகைக்குள் சிறைவைக்கப்பட்டார். இதை அறிந்த சிவாஜி அங்கிருந்து தப்ப முடிவு செய்தார். சிவாஜி தான் பிறந்த நாளை கொண்டாட வேண்டும் என்றும், தான் விரும்புவோருக்கு பழமும், இனிப்பும் வழங்க வேண்டுமென்றும் காவலாளிகள் மூலம் உரிய அதிகாரிகளுக்கு தெரிவித்தார். பழக்கூடைகளும், இனிப்புகளும் மிகப்பெரிய அளவில் இறங்கின. பழக்கூடையின் வழியாக சிவாஜியும், சம்பாஜியும் தந்திரமாக தப்பிச் சென்றனர். அங்கிருந்து சாமியார் போல் வேடமணிந்து நடந்தே தமது தாயகம் திரும்பினார்.

கூடையில் தப்பிவந்த சிவாஜியும் சம்பாஜியும் ஆக்ராவிற்கு ஆறு கல் தொலைவிலுள்ள ஊருக்கு நடந்து சென்றார். அங்கு குதிரைகளுடன் நிராஜி ராவ்ஜி வந்து சேர்ந்தார். துறவி வேடத்தில் தப்பிய அவர்கள் பயணம் செய்து மதுராவில் வாழ்ந்த மராத்தியக் குடும்பத்தில் சாம்பாஜியை ஒப்படைத்தனர். ஆக்ராவிலிருந்து தப்பிய இருபத்தைந்தாம் நாளில் காண்டுவானா, கோல்கொண்டா வழியாக ராஜ்காரை அடைந்தார். சிவாஜி வெளியேறிய பன்னிரண்டு மணிகள் கழித்துச் சந்தடியின்றி ஹிரோஜி வெளிவந்தார்.

சிவாஜி தப்பியோடிய செய்தியறிந்த ஔரங்சீப் தக்காணத்திற்குச் செல்லும் பாதைகளையும், பிற பாதைகளையும் மறித்துப் தப்பிப் போனவர்களைப் பிடித்திட மேற்கொண்ட முயற்சிகள் பயனற்றுப் போயின. இராம்சிங்கின் உதவியால் தான் வெளியேறி இருப்பார் என நம்பிய ஔரங்கசீப் அவரை அவைக்கு வரவேண்டாமென்று கூறியதுடன் பதவி நீக்கமும் செய்தார். ஜெய்சிங் தன் எண்ணம் வீணாகியதாலும் தன் எதிர்காலமும், தன் மகனின் எதிர்காலமும் கருதிக் கவலைப்பட்டார். எப்படியும் சிவாஜியைத் தந்திரமாக அழைத்துச் சென்று கொன்று விடுவதாகக் கூறி ஔரங்கசீப்பிற்கு கடிதம் அனுப்பினார். மனநிறைவடையாத ஔரங்கசிப் ஜெய்சிங்கைத் தக்காணத்திலிருந்து நீக்கினார். இளவரசர் முவாசத்திடம் பொறுப்பை ஒப்படைத்து விட்டு வந்த ஜெய்சிங் ஆக்ராவிற்குத் திரும்பும் வழியில் 1667 – ல் பர்ஹான்பூரில் உயிர் துறந்தார்.

**மொகலாயருடன் மறுபடியும் உறவு**

சிறை அனுபவத்தாலும், கடுமையான பயணத்தாலும் உடல் நலம் பாதிக்கப்பட்ட சிவாஜிக்கு நீண்டகால ஒய்வு தேவைப்பட்டது. இளவரசா் முவாசம் அரசப் பிரதிநிதியாகப் பணியைக் கவனிக்காது இன்ப வாழ்வில் திளைத்தார். இளவரசரது வலதுகரமாக விளங்கிய ஜெஸ்வந்த் சிங் சிவாஜியுடன் நட்பு கொண்டிருந்தார். ஔரங்கசீப்பால் தக்காணம் மீது அதிக கவனம் செலுத்திட இயலவில்லை. சிவாஜியும் மூன்றாண்டுகளாக உள்நாட்டுச் சீர்திருத்தங்கள் மேற்கொண்டு அரசினை உறுதிப்படுத்தினார். இளவரசரின் சிபாரிசால் சிவாஜி பேரரசுக்காகப் போரிடத் தன்னால் முடியும் என்ற கருத்தை ஏற்றார். ஔரங்கசீப். ஔரங்கசீப் ராஜா என்னும் சிவாஜியிடம் பட்டப் பெயரையும் ஏற்றுக் கொண்டார்.

**மொகலாயருடன் மீண்டும் பகை (1670)**

ஔரங்கசீப் சிவாஜிக்கும் இளவரசா் முவாசத்திற்கும் இடையான உறவைச் சந்தேகித்தார். சிவாஜியை இரண்டாம் முறையும் ஒடுக்கிட எண்ணினார். தக்காணத்தில் மொகலாய ஆளுநர் கலைத்த மராத்தியப் படைப் பிரிவுகளை சிவாஜி தமது படைப்பிரிவில் அமர்த்திக் கொண்டதாலும் கி.பி. 1666 – ம் ஆண்டில் சிவாஜி ஆக்ராவிற்கு வருவதற்காக சிவாஜியின் புதிய ஜாகீரான பேரரசின் ஒரு பகுதியைக் கைப்பற்றிக் கொள்ள ஔரங்கசீப் முயன்றதாலும் மொகலாயர், மராத்தியர் நட்புறவு முறிந்தது.

புரந்தர் ஒப்பந்தத்தினால் இழந்த கோட்டைகளான புரந்தர், கல்யாண் பீவந்தி, மஹுலி முதலானவற்றை மீட்டார். ஜுனார், பாரண்டா ஆகியவற்றிற்கருகே பல ஊர்களைக் கொள்ளையடித்து அறுபத்து ஆறு லட்சம் ரூபாய் மதிப்புள்ள கொள்ளைப் பொருட்களுடன் சிவாஜி ஊர் திரும்பினார். வரும் வழியல் சூரத்தை அழிக்க முயன்றார். மொகலாயப் பகுதிகளிடமிருந்து சௌத் வரியினைப் பெறத் தொடங்கினார். இதனால் ஆத்திரமடைந்த ஔரங்கசீப் மகபத்கானை சால்கர் கோட்டையை முற்றுகையிட அனுப்பினார். 1672 – ல் மொகலாயர் தோற்றனர். சால்கர் மராத்தியரின் கையில் வீழ்ந்தது. 1672 – ல் சிவாஜிக்கும்,பிஜப்பூருக்குமிடையே போர் மூண்டது.

**சிவாஜியின் முடிசூட்டுவிழா**

1674 – ம் ஆண்டு ஜுன் மாதம் மிக்க ஆரவாரத்துடன் பெரும் பொருட் செலவுடன் சிவாஜி “சத்திரபதி சிவாஜி” என்ற பட்டத்தை சூட்டிக் கொண்டார். ரெய்க்கார் கோட்டையில் நடந்த இவ்விழாவிற்கு சுமார் 50 லட்சம் ரூபாய் செலவானது. மீண்டும் இந்து சமய வேள்விகளும், தர்மமும் புதுப்பிக்கப்பட்டன.

**சிவாஜியும், தென் இந்தியப் படையெடுப்பும்**

தன் அதிகாரத்தை மேலும் வட இந்தியாவில் வளர்க்க முடியாத சூழ்நிலையை அறிந்த சிவாஜி தென் இந்தியா மீது படையெடுத்தார். அவர் செஞ்சி, பெங்களூர், வேலூர் போன்ற பகுதிகளை எளிதில் கைப்பற்றி தஞ்சை நோக்கி தம் படையைடுப்பை நடத்தினார். இப்படையெடுப்பில் ஒவ்வொரு ஆண்டும் 96 லட்சம் ஹென்களும் (அப்போதைய ரூபாய்) நூற்றுக்கும் மேற்பட்ட பல சிறிய கோட்டைகளும் இவருக்கு கிடைத்தன. மராட்டிய மக்களை ஒன்றுபடுத்தி, மக்களின் மனதில் தேசீய உணர்ச்சியை எஊட்டி மொகலாயருக்கு சிம்ம சொப்பனமாக இருந்த மாவீரன் சிவாஜி 1680ல காலமானார்.

## மராட்டியர் ஆட்சிமுறை அல்லது
## சிவாஜியின் ஆட்சிமுறை

இந்துப் பேரரசை விஜய நகரப் பேரரசர் கிருஷ்ண தேவராயருக்குப்பின் நிலை நிறுத்திய பெருமை சிவாஜியைச் சாரும். தனிதனியேசிதறுண்டு வாழ்ந்த மராத்தியர்களைத் தன் அறிவாற்றவாலும் வீரத்தாலும் புத்துணர்ச்சி ஊட்டப்பட்டு உருவாக்கப்பட்ட அரசு. முராத்தியர்கள் தேசிய இனமாக மாறுவதற்குரிய அதிகாரமும், உரிமையும் உடையவர்களாக ஆக்கிய பெருமை சிவாஜிக்கே உரியதாகும். மராத்திய மக்களிடம் வெளிப்படாதிருந்த சக்தியை வெளிப்படுத்திப் புதுவாழ்வும், புதுதெம்பும் அளித்துப் புத்துணர்வூட்டினார். பல வெற்றிபளைக் கண்டபோதும் முறையான முடிசூட்டும் விழாவை மேற்கொள்ளப் பல காரணங்கள் இருந்தன. அக்காலத்திய அரசுகளோடு சம நிலையில் தொடர்பு கொள்ளும் உரிமை அவருக்கு உண்டு என்பதை வலியுறுத்த வேண்டும் என்பது முதல் காரணமாகும். சிவாஜியால் வெளியிடபடும் ஆணைகளுக்கு மற்ற அரசர்களோடு மேற்கொள்ளும் உடன்படிக்கைகளுக்கும் சட்டமுறையான நேர்மை தகவு அளித்திடும் பொருட்டு அமைந்தது இரண்டாவது காரணம். சமுதாய நிலையில் சமமாகவோ ஈ உயர்வாகவோ இருந்த மராத்தியக் குடும்பங்கள்அவரது நிலைப் பற்றிய கருத்தை மாற்ற வேண்டிய கடமை மூன்றாவது காரணமாகும்.

மராத்திய அறிஞர்கள் இந்துப் பேரரசை நிறுவிட விரும்பினர். சிவாஜிக்கு முடிசூட்டிப் பெரும் விழாவாகக் கொண்டாட சிவாஜி க்ஷத்திரியராக இல்லாததால் தடை ஏற்பட்டது. பண்டைய இந்து வழக்கமான பழைமைப் பண்பு பொண்ட வைதிகப் பார்ப்பனர்அவரைஅரசராக அங்கீகரிக்கவில்லை. வேதங்கள், இந்து சமய நூல்கள் ஆகியவற்றில் தேர்ந்தவரும் தற்கால பிரம்மத் தேவர், வியாசர் என்றெல்லாம் அழைக்கபட்ட காகப்பட்டர் சிவாஜியின் வேண்டுகோளுக்கிணங்க சிவாஜியை க்ஷத்திரியனாக டீற்று முடிசூட்டினார். சிவாஜி முடிசூட்டும்முன் புகழ்பெற்ற பல கோவில்களுக்குச் சென்றவர். பிரதாப்கார், சிப்சன் ஆகிய ஊர்களிலிருந்த கோவில்களுக்கு விலையுயர்ந்த பொருட்களை வழங்கினார். தவமிருந்த காகபட்டரால் பூணூல் அணிந்து திலிரர் எனப்படும் இருப் பிறப்புப் பெற்ற க்ஷத்திரியராக ஆக்கப்பட்டார். அப்போது காகப்பட்டரும் மற்ற புரோகிதர்களும் மந்திரம் ஓதினர். பின்னர் தான் செய்த பாவங்களுக்குப் பரிகாரமாகப் பல பொருள்களையும், தராசில் நிறுத்தித் துலாதானம் செய்தார். ஒரு லட்சம் ஹீன்களையும் அளித்தார்.

**அமைச்சர்கள்**

முடிசூட்டுவிழாவன்று அதிகாலையில் குல தெய்வத்தை வணங்கி, பின்னர் குல குருவான பாலபட்டர், காகப்பட்டர் ஆகியோரை வணங்கி அவர்களுக்கு ஆடை அணிகலண்கள் வழங்கினார். தூய வெண்ணிற ஆடை அணிந்து அரசி அருகிலிருக்க, இளவரசர்கள் பின்னிருக்க அமைச்சர்கள் எண்மரும் புண்ணிய ஆறுகிளிலருந்து கொண்டு வந்த நீரை அரசர், அரசி, பட்டத்து இளவரசர் ஆகியோர் தலைகளில் தெளிக்க வேத மந்திரங்களும் இசையும் முழங்கின. ஆரத்தி எடுத்தனர்.

மேற்கூறிய சடங்குகள் முடிந்ததும் அரசர் தம் ஆடையை மாற்றி மூத்தோரையும் பிராமணர்களையும் வணங்கி அலங்கரிக்கப்பட்ட அரியணையிருந்த மண்டபத்தினுள் நுழைந்து இசைக் கருவிகள் முழங்க அரியணையில் அமர்ந்தார். மந்திரங்கள் ஓதப்பட்டன. சிவாஜியின் அரசு புதிய இந்து அரசு, சிவாஜி தன் ஆட்சியை நன்கு அமைத்திட அவருக்கு முன்பு அருந்து வந்த அரசுகள் முன் மாதிரியாகவும், மொகலாய அரசு ஒரு விளக்கமாகவும், அமைந்தன. சிவாஜி மற்ற அரசர்களைப் போல் அதிகாரங்கள் அனைத்தையும் தான் கொண்டிருந்த போதிலும் மக்கள் நலன் கருதி ஆட்சி புரிந்தார்.

**அஷ்டபிரதான்**

அரசர் ஒருவரால் மட்டும் ஆடசி செய்திட இயலாது. ஆமைச்சர்கள் சிவாஜிக்குப் பொறுப்பானவர்களாக விளங்கினார்கள். அமைச்சர்கள் தங்கள் பொறுப்பையுணர்ந்து நடந்து கொண்டனர். அரசரும், அவர்கள் பால் நம்பிக்கை கொண்டு அவர்களுக்குப் பொறுப்பான பணிகளை அளித்தார். விஜய நகரைப் போல் அஷ்டபிரதான் என்னும் எண்மரை கொண்ட அமைச்சரவையை ஏற்படுத்தினார்.

- பேஷ்வா அல்லது முக்கிய பிரதான்
- மஜீம்தார் அல்லது அமரத்தியர்
- தபீர் அல்லது சுமந்தா
- வாக்னிஸ் அல்லது மந்திரி
- சர்னிஸ் அல்லது சுமந்தா
- பண்டிட் ராவ்
- சேனாபதி
- நியாயதீஷ்

ஆகியோர் ஆவார்கள். இக்குழு எப்போது ஏற்பட்டது எனத் தெரிவதில்லை. சிவாஜியால் அஷ்டப்பிரதான உருவாக்கப்பட்டதெனக் கூற இயலாது. பாரசீக சொற்கள் முகமதியர்களின் காலத்திலும் இருந்தன. சிவாஜி காலத்தில் இப்பதவிகள் ஆயுள் முழுமைக்கும் நியமிக்கப்படவில்லை. ஆனால் பேஷ்வாக்கள் காலத்தில் மரபுவழி ஆக்கப்பட்டது. சிவாஜி காலத்தில் ஆறு சேனாதிபதிகள் நியமிக்கப்பட்டனர். முன்னாலிருந்த சேனாதிபதிகளுக்கு இவர்கள் யாரும் உறவு முறை கிடையாது. சிவாஜி ஊதியமே விங்கினார். ஜாகீர் விங்கவில்லை. இந்த அமைச்சர்களுக்கு இணையாக சிட்னிகள் என அழைக்கப்பட்ட செயலர்கள் இருந்தனர். எண்மருக்குக் கீழே பணி புரிபவர்களைக் கூட தேர்ந்தெடுக்கும் உரிமை கிடையாது. வேலை நிமித்தம் வெளியூர் வென்றால் பொறுப்பிலிருந்த முதலிகள் என்பரைக் கூட அரசரே நியமித்தார்.

அஷ்டப்பிரதானிகளின் துறைப் பணிகளை எட்டு எழுத்தர்கள் மேற்கொண்டனர். திவான்,மஜீம்தான்,பட்னிகள், சப்னிகள், கர்காணிக்கர்கள், சிட்னிகள், சமேதார், போட்டினிகள், என அழைக்கப்பட்டனர்.

### பேஷ்வா

ஆமைச்சர்களிடையே சறப்பான இடத்தைப் பெற்றவர் பேஷ்வா என அழைக்கப்பட்டார். அமைச்சர்கள் பணியில் அரசர் தலையிடுவதில்லை. பேஷ்வா அமைச்சர்களைத் தன் கட்டுபாட்டின் கீழ் வைத்திருந்தார். அரசரில்லாத போது அவருக்குப் பதிலாக பணிபுரியும் உரிமையும் பேஷ்வாவுக்கு இருந்தது. அரசு கடிதங்கள், செய்தி மடல்கள் ஆகியவற்றில் அரசரின் முத்திரையுடன், தன் முத்திரையையும் பொறித்தார்.

### ஆமாத்தியர்

ஆமாத்தியர் அல்லது மஜீம்தார் என்று அழைக்கப்பட்டவர் வரவு செலவு கணக்குகளைச் சரிபார்த்து நாடு முழுவதையும் சார்ந்த அல்லது குறிபிட்ட மாவட்டங்களைச் சார்ந்த கணக்கு விவரப் பட்டியலின் மேல் கையெழுத்திடும் தணிக்கையாளர் பணியைச் செய்தார்.

**வாக்கியநவிஸ்**

அரசரின் அன்றாடப் பணிகள், எதிரிகளின் சதி பற்றித் தெரிந்து தடுத்தல், அரசருக்கு வரும் அழைப்பிதழ்களின் உண்மைத் தன்மையை ஆதரித்தல், உணவுப் பண்டங்களில் நச்சுப் பொருள்கள் கலந்துள்ளவா என்று கண்காணித்தல் ஆகிய பணிகள் இவரைச் சாரும், வாக்கியள நவிஸ் அல்லது மந்திரி அல்லது நிகழ்ச்சித் தொகுப்பாளார் என அழைக்கப்பட்டார்.

**சச்சிவா**

அரசரின் அஞ்சல்கள், அறிக்கைகள், சரியாக எழுதப்பட்டுள்ளனவா எனக் கண்காணித்தல், குறைந்திருத்தல், ஆகிய பணிகள் சச்சிவாவைச் சேரும், பர்கானாக்களின் கணக்குகளைச் சரிபார்க்கும் பொறுப்பு இவருக்குரியது.

**சுமந்த்**

சுமந்த் அல்லது தபீர் என அழைக்கப்பட்ட அயல்நாட்டு ச் செயலாளர் அயல்நாடுகளுடன் உறவு, போர், சமாதானம் ஆகிய பிரச்சனைகளில் அரசருக்கு ஆலோசனையும்,தக்க வழி காட்டுதலையும் செய்து வந்தார்.

**சாரிநெளபத்**

சேனாதிபதி என அழைக்கப்பட்ட இவர் உயர் படைத் தலைவர் ஆவார். படையினைத் திரட்டிடவும் படையை ஒழுங்காகக் கட்டுபாட்டுடன் வைத்திருக்கவும்,போர்க்காலங்களில் படைகளின் நிலையை ஒழுங்குபடுத்துவதும் இவர் பணியாகும்.

**தலைமைக் குரு**

சமயச் சடங்குகளுக்கு நாள் குறித்தல், அறக் கொடைகளுக்கு ஒதுக்கிய பெருந்தொகையைப் பிராமணர்களுக்குப் பகிர்த்தல், இவரது பணியாகும். இவர் சமயச் சட்ட நடுவராகவும், அரசரின் பஞ்சாங்கமாகவும், பொது ஒழுக்கக் காவலராகவும் விளங்கினார், சாதரும் முஹதாசிப், பண்டிட்ராவ், தானாதி லட்சா என்றெல்லாம் தலைமைக் குரு அழைக்கப்பட்டார்.

**நியாயதீசர்**

நாட்டின் உயர்நிதிபதி என அழைக்கப்பட்ட இவரது பணி பொறுப்பு பொது ஆட்சித்துறை, படைத்துறை ஆகியவற்றைச் சார்ந்த நீதி விங்குவது ஆகியனவாகும். நிலங்கள் பற்றிய உரிமைகள், ஊர்த்தலைவர் பதவி ஆகியவற்றில் சட்ட முழறயான தீர்ப்புகளுக்கு ஏற்பிசை அளிப்பது இவரது பொறுப்பாகும்.

**முத்திரை**

மொகலாயர்களைப் போல் எத்துறையிலும் பணிபுரிந்தாலும் இராணுவப் பணியிலும் பங்கேற்றத்தைப் போல் சிவாஜியின் ஆட்சியிலும் பண்டிட்ராவையும், நியாயதீசரையும் தவிர மற்றவர்கள் அனைவரும் படைகளுக்குத் தலைமை தாங்கவும், படைகளை நடத்திச் செல்லவும் கடமைப்பட்டவர்கள். அரசரின் கடிதங்களில், உரிமைப் பத்திரங்களில் உடன்படிக்கைகளில் அரசருடைய முத்திரையோடு, பேஷ்வாவின் முத்திரையும் காணப்பட்டது. அமாத்தியர், வாக்கியநவீஸ், சச்சிவா, சுமந்த்

ஆகியோரின் புறக்குறிப்புகளும் அவற்றில் காணப்பட்டன. நாட்டில் மொத்தம்பதினெட்டுத் துறைகள் அமைச்சர்களின் பொறுப்பிலும், மேற்பார்வையிலும் இருந்தன.

**பகர ஆள்**

சிவாஜியின் பேரரசு நான்கு மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொன்றும் ஒவ்வோர் அரசப் பகர ஆளின் பொறுப்பில் இருந்தது. இம்மாநிலங்களைத் தவிரதென் தார்வார் மேட்டு நிலங்களையும் சிவாஜி பெரும்பாலும் வெற்றிபெற்று அடக்கினார். ஆனால் இவர் இற்கும் போது அப்பகுதி அவரது ஆட்சிக்குட்பட்டு இல்லையெனினும், அவரது ஆணைக்குக் கட்டுபட்டுத் திறை செலுத்தி வந்தது.

**பர்கானாக்கள்**

மாநிலங்கள் பர்கானாக்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பர்கானாவிலும் படைப்பிரிலு உன்றுடன் மாவட்டத் தலைவர் பணியாற்றி இருக்க வேண்டும். ஆனால் இத்தகைய உட்பிரிவுகளின் ஆட்சி பற்றிய விளக்கங்களை அறிய முடியவில்லை.

**படை**

படை வீரர்கள் நன்றியும், விசுவாசமானவர்களாகவும் நடந்து கொண்டதால் சிவாஜியின் ஆட்சி சிறப்புடன் விளங்கியது. சிவாஜியின் படையில் 45,000(பாகா) குதிரை வீரர்களும், 60000 (சிலாதார்) குதிரை வீரர்களும் ஒரு லட்சம் (மாவ்லி) காலாட் படையினரும் அடங்கியிருந்தனர். சிவாஜி பார்கீர்களுக்கு அளித்த 5000 குதிரைகள் நீங்கலான 32000 பரிசுகளைத் தம்முடைய கொட்டில்களில் வைத்திருந்தார். அவரிடம் இருந்த யானைகளின் எண்ணிக்கை 1260என்றும், 125என்றும், 300 என்றும் பலவாறாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. டாக்டா.ஸ்ரீவத்சவா 300 என்னும் எண்ணிக்கையையே அதிகப்பொருத்தமுடையதாகக் குறிப்பிடுகின்றார்.

**பாகா**

சிவாஜியின் படையில் மிகச் சிறந்த பகுதி பாகா அல்லது அரசக் குதிரைப் படைதான். ஹவில்தாரின் கீழிருந்த பிரிவில் 25 பர்கீர்கள் (படைவீரர்கள்) இருந்தனர். ஐந்து ஹவில்தார்களுக்கு மேல் ஒரு ஜம்லாதாரும், 10 ஜம்லா தாரர்களுக்கு மேல் ஒரு ஹலாரியும் இருந்தனர். 1250 வீரரைக் கொண்டபெரும் படை பிரிவிற்கு ஹஸாரியும் தலைவராவர். புாகாவில் பாஞ்ச் ஹலாரியே மிக உயர்ந்த பதவியாகும். ஆரசின் குதிரைப் படை முழுவதற்கும் உயர் படைத்தலைவர் அல்லது குதிரைப் படையின் சாரி நௌபத் ஒருவர் இருந்தார். 25 வீரர்கள் அடங்கிய படைப்பிரிவில் நீர் கொண்டு செல்பவர் ஒருவரும், குதிரை மருத்துவர் ஒருவரும் இருந்தனர். சிலாதார் என்னும் மற்றொரு வகையான குதிரைப்படையினரும்பணிபுரிந்தனர். சிலாதார் தங்களுக்கென்று புதிரைகளையும், படைக்கலன்களையும் வைத்திருந்தனர். ஆனால் அவர்கள் பாகா குதிரை வீரர்களுக்குத் தாழ்ந்தவர்கள். ஆனாலும் குதிரைப் படைகள் சாரி நௌபாத்தின் தலைமையிலேயே இருந்தனர்.

**காலாட்படை**

காலாட்படையும் படைத்துறையிலும் முக்கியப் பிரிவாக அமைந்தது. இது ஒன்பது படைவீரர்கள் அல்லது தனிப்பட்ட வீரர்கள் அடங்கிய சிறுசிறு படைப்பிரிவுகளாகப் பிரிந்திருந்தது. ஒவ்வொரு பிரிவிற்கும் ஒவ்வொரு சிறு படைத்தலைவர் அல்லது நாயக் தலைவராக விளங்கினார். ஐந்து நாயக்குகளுக்கு மேல் ஒரு ஹவில்தாரும் இரண்டு அல்லது மூன்று ஹவில்தார்களுக்கு மேல் ஒரு ஜம்லா தாரும், பத்து

ஜம்லாதார்களுக்குமேல் ஒரு ஹலாரியும் இருந்தனர். சாதாஹஸாரிகளுக்கு மேல் தலைவராகக் காலாட்படையின் சாரிநௌபத் விளங்கினார். 20000 மாவ்லிப் படை வீரர்களைக் கொண்ட சிவாஜியின் காவற்படைப் பிரிவு பெரும் பொருட் செலவில் மிகச் சிறந்த முறையில் உடை, படைக்கலன்கள்,பிற சாதனங்கள் ஆகியவற்றைப் பெற்று திகழ்ந்தது.

**ஓய்வு**

படைவீரர்களுக்குச் செலவழித்திடப் போதிய அளவு செல்வம் இல்லாததால் அந்நியருக்குச் சொந்தமான பகுதிகளைத் தாக்கியே தம் படைகளுக்குத் தேவையான பொருட்களைக் கொண்டு வந்தார் சிவாஜி. மழைக்காலங்களில் படைவீரர்களுக்கு ஓய்வு. தசராவிற்குப் பின்னர் அரசர் தேர்ந்தெடுத்த பகுதியின் மேல் படை எடுத்தனர். படைவீரர்கள் படை நடத்திச் செல்வதற்கு முன் அவர்களிடமிருந்த பொருள்கள் குறித்த பட்டியல் தயாரிக்கப்பட்டது. போர்களத்திலிருந்து திரும்பிய பின்னும் பொருட்கள் பட்டியலிடப்பட்டு இரண்டும் சரிபார்க்கப்பட்டன. அப்படி ஒப்பிடும் போது முன்னமே குறித்த பட்டியலைவிட அதிகம் இருந்தால் அப்பொருள்களை அரசு எடுத்துக்கொண்டது.

## பீஷ்வாக்களின் ஆட்சி

## பாலாஜி விஸ்வநாத் (1713-1720)

**ஷாகுவும் பாலாஜி விஸ்வநாத்தும்**

ஷாகு கி.பி. 1709-ல் மராட்டிய சத்திரபதியாக முடிசூட்டிக் கொண்டார். அவருக்கு உதவியாக பாலாஜி விஸ்வநாத் நியமிக்கப்பட்டார். ஷாகுவின் சிற்றன்னை சாராபாய் ஷாகுவிற்கு பெரும் ஆதரவாக இருந்தார். பாலாஜிவிஸ்வநாத் சிறந்த படை அமைப்பாளராகவும், உயர்ந்த நிர்வாகத்திறனும் கொண்டும் விளங்கியதால் 1713-ல் பீஷ்வா என்னும் உயர் பதவியில் அமர்த்தப்பட்டார். அது முதல் பீஷ்வாக்கள் தோன்றிய வாரிசாக ஆட்சி புரிய ஆரம்பித்தனர். மன்னரைவிட பீஷ்வாக்கள் அதிகாரம்மிக்கவர்களாகவும், நிர்வாகத் திறன் உடைவர்களாகவும் இருந்தனர்.

**கானோஜி ஆங்கிரே**

பாலாஜி பீஷ்வாக பொறுபேற்ற பொழுது கானோஜி ஆங்கிரேவின் கீழ் கடற்படை செயல்பட்டது. உள்நாட்டு கலகத்தின் போது கானோஜி என்பவர் தாராபாயை ஆதரித்தார். அதனை பாலாஜி விஸ்வநாத் மாற்றியமைத்து அவரை ஷாகுவுடன் இணங்கி போகும்படி செய்தார்.

**மராட்டிய மொகலாய உடன்பாடு**

ஔரங்கசீப்பின் மறைவுக்குப் பின் ஏற்பட்ட குழப்பத்தைப் பயன்படுத்தி பாலாஜி விஸ்வநாத் மராட்டிய செல்வாக்கை விரிவுபடுத்தினார். டெல்லியில் சிறைப்பட்டிருந்த ஷாகுவின் உறவினர்களை விடுவித்தார். சிவாஜியிடம் இருந்த பகுதிகள் அனைத்தும் ஷாகுவிடம் வரப்பட்டது. தக்காணத்திலிருந்து ஆறு பகுதிகளிலும் மற்றும் மைசூர், தஞ்சை போன்ற இடங்களில் சௌத், சர்தேஷ்முகி போன்ற வரிகளை வசூல் வெய்யும் உரிமை அளிக்கப்பட்டது. இத்தகைய உடன்பாடு டெல்லியில் முகலாயர்களுக்கு பாலாஜி விஸ்வநாத்துக்கும் இடையே ஏற்பட்டது. உடன்பாடு முடிந்து திரும்பும் வழியில் கோலாப்பூரைச் சார்ந்த சாம்பூஜியால் தொல்லை ஏற்பட்டது. 1720-ல் சாம்பூஜியை தோற்கடித்து பாலாஜி விஸ்வநாத் வெற்றிபெற்றார். இரண்டாவது மராத்திய பேரரசிற்கு உண்மையில் அடிகோலியவர் பாலாஜி விஸ்வநாத் என்று சொல்வது பொருந்தும்.

### பாஜிராவ் (1720-1740)

பாலாஜி விஸ்வநாத்தைப் பின்பற்றி அவரது மூத்தமகன் 19 வயதான பாஜிராவ் 1720-ல் பீஷ்வாவாக நியமிக்கப்பட்டார். இவர் கூர்மையான மதிநுட்பம் உடையவராகவும், கணக்குகளில் தேர்ச்சிப் பெற்றவராகவும் இருந்தார். தக்காண முகலாயப் பேரரசின் நிஜாம் உல்முல்க் என்பவர் நிஜாமாக இருந்தார். அவர் மொகலாய பேரரசை எதிர்த்து போரிடும் போதும் பாஜிராவின் உதவிகளைப் பெற்றார். அதற்காக தக்காண பகுதியல் சௌத், சர்தேஷ்முகி போன்ற வரிகளை வசூலித்து தருவதாக பாஜிராவிடம் உறுதிக் கூறினார். நிஜாம் போரில் வெற்றி பெற்றதும் ஒப்பந்தத்தை மீறி பாஜிராவை ஒழிக்க முயன்றதோடு, வரிவசூலித்து தரும் உரிமையும் மறுத்தார். இதனால் பாஜிராவுக்கும் நிஜாமுக்கும் இடையே பால்கேட் என்ற இடத்தில் போர் நடைபெற்றது. நிஜாம் தோற்கடிக்கப்பட்டார்.. 1728ல் முங்கிஷேவாகான் உடன்படிக்கை கையெழுத்தானது. இதன்படி மீண்டும் தக்காணத்தில் வரிவசூல் செய்யும் உரிமை பெற்றதோடு பல கோட்டைகளையும் பாஜிராவ் பெற்றார்.

### கூர்ஜரம் - மாளவம்

கூர்ஜா நாட்டில் புரோச், சூரத் ஆகியவை சிறந்த வணிக நகரங்களாக விளங்கின. 1730-ல் சிம்னாஜி அப்பாவின் தழஷலைமையில் சென்ற மராத்தியப் படையை எதிர்க்க முடியாமல் மொகலாய படைத்தலைவன் சர்புலந்துகான் ஒரு உடன்பாடு செய்து கொண்டார். அதன்படி சௌத், சர்தேஷ்முகி ஆகிய வரிகளை வசூலிக்கும் உரிமை மராத்தியருக்கு வழங்கப்பட்டது. 1723-ல் மாளவத்தை தாக்கி மராத்திய படை சௌத், சர்தேஷ்முகி வரிகளைப் பெற்றது. மொகலாயப் படை ஆஜ்மீரில் எதிர்த்த பொழுதும் சிம்னாஜி அப்பாவினிடம் தோல்வி கண்டது. 12 இலட்ச ரூபாய் மாளவ நாடு சௌத் வரியாக அளித்தது.

### பண்டேல் கண்ட்

சத்திர சால் என்பவரால் பண்டேல் கண்ட் ஆளப்பட்டது. 1727ல் மொகலாயர் சந்திர சாலை சிறைப்படுத்தி கொடுமைப்படுத்தியது. இதனால் சந்திரசால் பாஜிராவின் உதவியை நாடினார். 1729ல் மொகலாய படை தலைவனான முகமது பங்கேஷை பாஜிராவ் தோற்கடித்தார், அதற்கு நன்றியாக பண்டேல் கண்டின் ஒரு பகுதியை பாஜிராவிற்கு ஜாகீராக சற்திரசால் அளித்ததோடு தன் மகள் மஸ்தானி என்னும் பேரழகியைத் திருமணம் செய்து வைத்தார்.

### ஜன்ஜிராவின் சித்திகள்

சிவாஜியின் மறைவிற்கு பிறகு ஜன்ஜிராவைச் சார்ந்த சித்திகள் என்னும் கொள்ளைக் கூட்டத்தினர் பெரும் குழப்பம் ஏற்படுத்தினர். சித்திகளின் தலைவன் அப்துல் ரகுமான் பாஜிராவின் உதவியைப் பெற்று சித்திகளின் குழப்பத்தை அடக்கினான். அதற்கு நன்றியாக சித்திகள் கைப்பற்றிய சில இடங்களை மராட்டியர்களுக்கு திருப்பித் தந்தனர்.

### டெல்லி மீது படையெடுப்பு

பேரரசரின் மழறவிற்கு பின்பு மராட்டியப்படை டெல்லியை நோக்கி சென்றது. ஆனால் எதிர்பாராமல் மராட்டிய படை மொகலாயர்களால் தோற்கடிக்கப்பட்டது. அதனால் மாற்று வழியில் மராட்டியப் படை பாஜிராவின் தலைமையில் சென்றது.

தால்கட்டோர் என்ற இடத்தில் நடந்த சண்டையில் மொகலாயர் படை தோற்கடிக்கப்பட்டது. மொகலாயருக்கு உதவிக்கு வந்த நிஜாமும் போபாலுக்கருகில் தோற்கடிக்கப்பட்டார்.

**போர்ச்சுக்கீசியர்**

மராட்டியரை ஏளனம் செய்த போர்ச்சுகீயரை சிம்னாஜி அப்பாவின் தலைமையில் சென்ற படை பம்பாய் கடலோரத்தில் தாக்கி தோற்கடித்ததோடு தானாவையும் கைப்பற்றியது. மேலும் பேசின், மாஹிம், தாராகூர் ஆகியவற்றை கைப்பற்றி வடகொங்கண் முழுவதும் மராத்திய படை வென்றது. சிறந்த போர்வீரராகவும், ராஜதந்திரியாகவும் விளங்கிய பாஜிராவை இரண்டாம் சிவாஜி எனக் கூறலாம். 1740-ல் இவர் தனது இளம் வயதிலேயே மரணமடைந்தார்.

**பாலாஜி பாஜிராவ்**

பாஜிராவின் புதல்வாரன பாலாஜி பாஜிராவ் சிறந்த போர்ப்பயிற்சியும், அரசியல் தந்திரங்களும் தெரிந்தவர்.

**மாளவம்**

மாளவத்தில் அசப்ஜாவின் மகன் கலகம் செய்ததால் அவனை அடக்க அசப்ஜா,பாலாஜி பாஜிராவின் உதவியை நாடினார். அசப்ஜா வெற்றிபெற்று கலகத்தை அடக்கினார். இதற்கு நன்றிக் கடனாக 15 லட்ச ரூபாய் பாலாஜி பாஜிராவிற்கு வழங்கினார். மேலும் ஒரிஸ்ஸா மீது படையெடுத்து 21 லட்ச ரூபாய் சர்தேஷ் முகி வரியை பாலாஜி பாஜிராவ் பெற்றார்.

**பாலாஜியும் இராஜபுத்திரர்களும்**

1743ல் ஜெய்ப்பூர் மன்னர் ராஜஜெயசிங் இறந்தார். அவருடைய புதல்வர்களான ஈஸ்வர சிங்குக்கும் மாதோ சிங்குக்கும் இடையே வாரிசுரிமைப் போர் நடந்தது. இருவரிடமும் நட்புரிமை பூண்டு பெரும்பொருளை பெற்றதோடு ஜெய்ப்பூரையும் மராத்தியர் கொள்ளையடித்தனர். மராத்தியர் தொல்லை தாங்காமல் ஈஸ்வர சிங் விஷமுண்டு இறந்ததும் மாதோசிங் அரசரானார். தந்திரக்காரரான மாதோசிங் மராட்டியர்களை பழிவாங்க வேண்டுமென எண்ணம் கொண்டு ஜெய்ப்பூருக்கு மராட்டிய படையை அழைத்தார். மராட்டியர் படை ஜெய்ப்பூருக்குள் நுழைந்ததும் ஜெய்ப்பூர் நகரத்தின் வாயில்கள் அடைக்கப்பட்டன. நகரத்திற்குள் சிக்கிக் கொண்ட மராட்டியர்களை இராஜபுத்திரர்கள் கொன்று குவித்தனர். ஏறக்குறைய 3000 பேர்கள் கொல்லப்பட்டனர். 1000-க்கும் மேற்பட்டோர் காயமுற்றனர். மராத்தியர்களின் உடமைகள் இராஜபுத்திரர்களால் கொள்ளையிடப்பட்டது. இச்சம்பவம் 1751-ஆம் ஜனவரி மாதம் 20-ம் தேதி நண்பகலில் இருந்து நள்ளரவு வரை நடைபெற்றது. இதனால் இராஜபுத்திரர்களிடம் உள்ள உறவு சீர்கேடுற்றது.

**மார்வார்**

மார்வார் நாட்டுமன்னர் அபயசிங் மறைந்ததும் அரசுரிமைப் போட்டி ஏற்பட்டது. இப்போட்டியில் மராட்டியர்கள் தலையிட்டு 50 லட்சம் ரூபாயும், ஆஜ்மீர் பகுதியையும் பெற்றனர்.

சாகுவின் மறைவிற்கு பிறகு ஏற்பட்ட போட்டியில் 1750-ல் இராமராஜர் சத்திரபதியாக முடிசூட்டிக் கொண்டார். தன் சொல்படி இராமராஜர் கேட்காததால் தாராபாய் அவரை சிறையில் அடைத்தார். 1757-ல் சிறையிலேயே காலமானார். 1761-ல் தாராபாயும்

இறக்கவே உள்நாட்டு கலகத்தை அடக்கி பாலாஜி பாஜிராவ் மராட்டியர்களின் மன்னரானார்.

## மூன்றாம் பானிபட் போர்

அகமதுஷா அப்தாலி என்ற ஆப்கானியன் மூன்று முறைகள் இந்தியா மீது படையெடுத்து கொள்ளையடித்துச் சென்றான். 1756-ல் நான்காம் முறையாக டெல்லி மீது படையெடுத்து வட மதுரா, ஆக்ரா முதலிய இடங்களில் கொள்ளையடித்து சென்றதுடன் மொகலாய பேரரசர் இரண்டாம் ஆலம் கிரீடமிருந்து பஞ்சாப், சிந்து, காஷ்மீர், சர்ஹிந்து ஆகிய பகுதிகளையும் பறித்துக் கொண்டார். அகமதுஷா அப்தாலி தன்னுடைய மகன் தைமூர்ஷாவை லாகூரில் அரசப் பிரதிநிதியாக அமர்த்திவிட்டுஆப்கானிஸ்தான் சென்றான்.டெல்லி அவையிலிருந்து உதவிகேட்டு பாலாஜிக்கு அழைப்பு வந்தது.அவ்வழைப்பின் பேரில் சென்ற மராட்டிய படை லாகூருக்கு சென்ற சர்ஹிந்தையும் லாகூரையும் கைப்பற்றியது.தைமூர்ஷாவை பதவியிலிருந்து விலக்கி அவருக்கு பதிலாக தமது ஆளான அதினாபெக்கான்னாவை பதவியில் அமர்த்தினர்

1759-ல் 5-வது தடவையாக அகமதுஷா அப்தாலி இந்தியா மீது படையெடுக்க உடனடி காரனம் பதவியிலிருந்து விலக்கப்பட்டது தான்.தம் நாட்டின் மீது அயலான் ஆதிக்கம் செலுத்துவதை சீக்கயரும், முஸ்லீம்களும் சிறிதும் விரும்பவில்லை. பஞ்சாபில் ஒரே குழப்பமாக இருந்தது. பஞ்சாபில் நிலைமையை சீர்செய்ய பீஸ்வா, மாதாஜி சிந்தியாவின் சகோதரன் தத்தாஜி சிந்தியாவை அனுப்பினார். இதற்கிடையில் அப்தாலி பஞ்சாபை மீட்டு 1760-ல் பரய்காட்டில் நடந்த மோதலில் அப்தாலி தத்தாஜி சிந்தியாவை தோற்கடித்து கொன்றார். எனவே 17 வயதான தனது மகன் விஸ்வாசராவின் தலைமையில் ஒரு படையும் பெயரளவு தலைவராய் இருந்த சதாசிவராயின் தலைமையில் ஒரு படையையும் பீஸ்வா அனுப்பினார். போகும் வழியில் அப்படையுடன் ஹோல்கார், சிந்தியா, கெயிக்வார் ஆகியவர்கள் படையும் இணைந்தன.

மொகலாய பேரரசர் ஆலம் கீர் 11 அவருடைய வசீர் காஸி-உத்-தீனுக்கும் இருந்த தீராப் பகையிக் காரணமாக வசீர் ஆலம்கீர்-11 கொன்றுவிட்டு 1759-ல் மூன்றாம் ஷாஜஹானை அரியணையில் அமர்த்தினார். ஆலம்கீர் 11-ன் மூத்தமகன் அலிகௌஹர் ஷாஆலம் என்னும் பட்டத்துடன் பீஹாரிலுள்ள சாசரம் அருகே தாமே பேரரசர் என முடிசூட்டிக் கொண்டார். ஷீஜாஉத்-தௌலாவை அவர் தம் வஸீராக நியமித்தார். ஆனால் வஸீரின் கெடுமதி தந்திரத்தால் பேரரசர் நடோடியாக திரிந்தார்.

சதாசிவராயர் மூன்றாம் ஷாஜஹானை பதவியிலிருந்து மாற்றிவிட்டு இரண்டாம் ஷா ஆலமை பேரரசாக பிரகடனப்படுத்தினார். பின் அப்பதாலியுடன் போர் செய்வதற்கு சதாசிவராயர்ஆயத்தமானார். ஆவர் பானிபட் களத்தில் கூடாரம் அமைத்துக் கொண்டார். ரோகில்லர்களும், இரண்டாம் ஷா ஆலமும் மராத்தியர்களும் ஆதரவு கொடுத்தனர். அப்தாலியின் படையும் முகாமிட்டது. மராட்டியர்களின் துருப்புகள் நெடுநாட்கள் அப்தாலியின்படைகளை தாக்காமல் இருந்தனர். காரணம் அவர்களுக்கு உணவு நெருக்கடி கொடுப்பதற்குதான். வுரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மூன்றாம் பானிபட் போர் 1761-ல் நடந்தது.

ஆரம்பத்தில் சதாசிவராயருக்கு அனுகூலமாகத்தான் அமைந்தது. ஆனால் இறுதியில் வெற்றி திசை திரும்பியது. போரில் விஸ்வசராவும், சதாசிவராவும் போர்களத்திலேயே கொல்லப்பட்டனர். அகமதுஷா அப்தாலி வெற்றி வாகை சூடினார்.

**பீஷ்வா மறைவு 1761**

பானிபட்டில் ஏற்பட்ட பேரிழப்பை அறிந்து பீஷ்வா அதிர்ச்சியுற்றார். இதயம் ஒடிந்த பீஷ்வா 1768-ல் உயிர் நீத்தார். மராட்டியர்கள் தோல்விக்குரிய காரணங்கள்

- கட்டுபாட்டிலும், செயல் திறமையிலும் மராட்டிய படைகளை விடஅப்தாலியின் படைகள் மிகவும் மேம்பட்டதாக இருந்தது.
- மராட்டிய படையில் பெரும் அளவு பெண்கள் இருந்ததால் அவர்களின் திறமை குறைவுற்றது.
- கொரில்லா போர் முறையை சதாசிவராவ் கையாளவில்லை.
- சதாசிவராவின் மந்தமான போக்கால் மராட்டியர்களின் நிலை மிக மோசமானது.
- இராஜபுத்திரர்களும், சீக்கியர்களும் மராட்டியர்களுக்கு ஒத்துழைக்கவில்லை.

**பானிபட் போரின் விளைவுகள்**

- மகாராஷ்டிராவில் வாழ்ந்த மக்களை ஈவிரக்கமின்றி கொன்று குவித்தனர்.
- மராட்டியர்களுக்கு சொந்தமான பல பகுதிகளை சூறையாடினர்.
- பலவீடுகளில் குடும்பத் தலைவரை பறிகொடுத்ததன் மூலம் ஒரு முழு தலைமுறையே அழிந்தது.
- மகாராஷ்டிரா அரசியல் அமைப்பில் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது.
- மராட்டிய இராணுவத்தின் திறமையின்மை இப்போரில் வெளிப்பட்டது.
- இப்போரில் ஆங்கிலேயர்கள் தலையிடவில்லை. இருந்தாலும் இப்போர் அவர்கள் வளர்ச்சிக்கு அடிகோலியது.

## சீக்கியர்களின் வளர்ச்சி

குருநானக் என்பவரின் உபதேசங்களைப் பின்பற்றியவர்கள்தான் சீக்கியர்கள் (சீடர்கள்) எனப்பட்டனர். அவர்கள் பின் பற்றிய கொள்கைகளே சீக்கிய சமயமாக உருவெடுத்தது. இந்த இயக்கம் பஞ்சாப்பகுதியில் பரவியது. ஆரம்பத்தில் கட்டுபாடான அமைதியைக் கொண்டிருந்த அந்த இயக்கம் முகலாய மன்னர்கள் பின்பற்றிய சமயக் கொள்கையின் விளைவாக கட்டுப்பாடுமிக்க, வலிமையான ஒரு இயக்கமாக மாறியது. புடைப்பயிற்சி பெற்று தங்கள் சமயத்தைக் காத்திட முனைந்தார். சீக்கிய புருமார்கள் நமயத்தலைவர்களாக வளங்கியதுடன் படைத்தலைவர்களாகவும் பணிபுரிந்தனர். கால்சா என்ற தனிப்படையை அமைத்ததுடன் தங்களுக்கென தனியான சீக்கிய சாம்ராஜ்யம் ஒன்றையும் அமைத்துக் கொண்டனர்.

**குருநானக் : 1469-1538**

இன்றைய பாகிஸ்தானில் லாகூருக்கு அருகில் உள்ள தால்வந்தி என்ற கிராமத்தில் 1469அக்டோபர் மாதம் பிறந்தார். குருநானக். சிறுசயதில் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பபட்ட போதிலும் கல்வியில் அவர் அதிக ஆர்வம் கொள்ளவில்லை. பின்னர் ஆடு மாடு மேய்த்ததலில் ஈடுபட்டார். அதிலும் திறமையாக செயல்படாததால் வாணிபத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டார். வாணிபத்தில் உண்மையைப் பின் பற்றியதால் அதிகலாபம் கிடைக்கவில்லை. அவரது மனம் ஏதோ ஒரு சிந்தனையில்

ஈடுபட்டிருந்தால் 1488-ல் அவருக்கு திருமணம் செய்து வைத்தனர். இருமைந்தர்கள் பிறந்தனர்.

பின்னர் நானக் பல பணிகளில் அமர்த்தப்பட்டார். இப்பணிகளை உண்மையோடு செய்தார். 1499-ல் சுல்தான்பூருக்கு அருகில் பாயன் என்ற ஆற்றில் குளித்துக் கொண்டிருக்கும் போது இறை அருளைப் பெற்று துறவியானார். அது முதல் பல இடங்களுக்கு சுற்றித்திரிந்து 1499 முதல் 1538 வரை தனது கொள்கையைப் போதித்தார். இவரது பக்திஇயக்கப் பயணங்களுக்கு உதசீஸ் என்று பெயர். 1538-ல் கர்த்தார்பூரில் உயிர் நீத்தார்.

**குருநானக்கின் போதனைகள் :**

“கடவுள் ஒருவரே: அவரே உண்மையானவர். உலகைப் படைப்பவர். ஏல்லாம் வல்லவர். அச்சமும் பகையும் அற்றவர். ஆதியும் அந்தமும் இல்லாதவர். தாமாகவே இயங்குபவர். குருவின் உதவியாளர். அவரது நாமத்தை அறிந்து அதை ஓயாமல் உச்சரிக்க வேண்டும். அவர் எல்லாவற்றிற்கும் மேலானவர். எக்காலத்தும் உள்ளவர். ராமர்,கிருஷ்ணர்களைப் படைத்தவர். ஆவரை வணங்குபவர்கள் கடவுள் பயம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். நற்செயல்கள் புரிய வேண்டும். யாவரையும் ஒப்புணர்ச்சியுடன் நோக்க வேண்டும். கேடு நிறைந்த உலகில் தூய்மையாக வாழவேண்டும்”.

இவ்வாறு குருநானக் பல கருத்துக்களைத் தெரியவித்தார். இவரைப் பின்பற்றியவர்களே சீக்கியர்கள் எனப்பட்டனர். ‘ஆதிகிரந்தம்’ என்பது சீக்கியர்களின் வேத நூலாகும். இந்தநூல் குருநானக், கபீர் ஆகியோரின் பாசுரங்கள் அடங்கிய நூலாகும்.

**வரலாற்றில் குருநானக் :**

ஒரு சமய சீர்திருக்க வாதியாகவும், மத குருவாகவும் விளங்கிய குருநானக் வரலாற்றில் முக்கிய இடம் வகித்தார். குருநானக் இந்து சமயத்தின் அடிப்படையை வெறுக்கவில்லை. அதில் ஊடுருவி நின்ற அறியாமையை அகற்றவே விரும்பினார்.பக்தி பக்தி இயக்கத்தை சேர்ந்த சிந்தனையாளர்களில் இவரும் ஒருவர். இந்து தெய்வங்களுக்கு அளிக்கப்பட்ட உயர்நிலைகளை எதிர்த்தார். ஆனால் அந்த தெய்வங்களை அவமதிக்கவில்லை. இந்து சமுதாயத்தின் அடிப்படையில் அமைந்திருந்த சாதிமுறை, நோன்புகள், தவங்கள் போன்றவற்றை அவர் சாடினார். சமய வேறுபாட்டை எதிர்த்த அவர் ஒரு புதிய சமயத்தை உருவாக்க முயற்சி செய்யவில்லை. ஆனாலும் அவரது உயர் நோக்கில் அமைந்த கொள்கைகளும், அவர்வழி வந்த குருமார்களின் செயல்களும் காலப்போக்கில் சீக்கிய சமயம் என்ற தனியான சமயம் தோன்றக் காரணமாயின.

**குருநானக்கும் பாபரும்**

முகலாயர்களின் ஆட்சிக்காலமும் சீக்கிய மதகுருக்களின் காலமும் கிட்டதட்ட உன்று போல் அமைந்திருப்பதைக் காணலாம். 1524-ல் பாபர் பஞ்சாபை வென்ற போது குருநானக் தனது நான்காவது சமயப் பிரச்சார பயணத்தை முடித்து தனது சொந்த இடத்திற்கு திரும்பினார். அப்போது பாபரின் இஸ்லாமிய படைவீரர்கள் இந்து வீரர்களுக்கும் இந்து பெண்களுக்கு இழைத்த கொடுமைகளை நேரடியாகப் பார்த்தார். அதனால் வருத்தம் அடைந்த குரு டில்லியில் ஆட்சி செய்த லோடி வம்சத்தினரை பழித்து கூறினார். பாபரையும் பற்றி புண்படத் தக்க வார்த்தைகளைப் பேசினார். அதைக் கேள்விப்பட்ட பாபர் நானக்கை கைது செய்தார். என்றாலும் நானக்கின் ஏழ்மையான வாழ்க்கையும், தூய்மையான புணங்களும் பாபரைக் கவர்ந்தன. பாபர்

அவரை விடுதலை செய்து சீக்கியக் கொள்கைகளைப் பரப்பி இந்து முஸ்லீம் மக்களிடம் ஒற்றுமை ஏற்படும்படி கேட்டுக்கொண்டார்.

**2)குரு அங்காட் : 1538 – 1552**

குருநானக் இறப்பதற்கு முன்பாகவே தனது வாரிவாக அங்காட் என்பவரை நியமித்தார். நானக்கின் கொள்கைகளைப் பரப்புவதில் இவர் அதிக அக்கரை உள்ளவராக இருந்தார். 1540-ல் குரு நானக்கின் வாக்கை வரலாற்று நூல் ஒன்று வெளியிடப்பட்டது. இவர்காலத்தில் தான் 'குருமுகி' என்ற சீக்கிய எழுத்து முறையும் பரவியது. இவர் சீக்கியர்களுக்கு சிறந்த ஒழுக்கமும் கட்டுபாடும் நிலைக்கும்படி செய்தார். கொள்கைகளை மீறியவர்களை தமது கூட்டத்திலிருந்து விலக்கினார். ஷெர்ஷாவினால் தோற்கடிக்கப்பட்ட ஹீமாயூன் இவரது ஆசிர்வாதத்தைப் பெறுவதற்காகப் பஞ்சாப் சென்றார்.

**குரு அமர்தாஸ் 1552 – 1774**

குரு அங்காடுக்கு பிறகு குரு அமர்தாஸ் சீக்கியர்களின் தலைவரானார். ச4ீக்கிய மத்தில் சேர்வதற்கு முன்னால் இவர் சிறந்த விஷ்ணு பக்தராக விளங்கினார். எனவே இவர் பதவி ஏற்றதற்கு எதிர்ப்பு ஏற்ப்பட்டது. ஆனால் அமர்தபஸின் தியாகத்தினாலும் பொறுமையாக துன்பங்களை சகித்த திறமையினாலும் நாளடைவில் அந்த எதிர்ப்பு மறைந்து போனது. இவர் கோவிந்தவால் என்ற இடத்தில் ஒரு வழிபாட்டு ஸ்தலத்தை ஏற்படுத்தி அதை சீக்கியர்களின் புண்ணியஸ்தலமாக ஆக்கினார்.

இவரது காலத்தில் சீக்கியமதம் பரவியிருந்த பகுதிகள் 22 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. அவை மஞ்சிகள் என்று அழைக்கப்பட்டன. ஒவ்வொரு பிரிவும் ஒரு சீக்கியத்தலைவரின் கீழ் வைக்கப்பட்டது. சீக்கியரின் பிறப்பு இறப்பு காலங்களில் தனி விழாக்கள் கொண்டாடப்பட்டன. சதி என்ற உடன்கட்டை ஏறும் வழக்கம் தடை செய்யப்பட்டது. பெண்கள் முகத்திரையிடுதல் நிறுத்தப்பட்டது. இவ்வாறு இவர் காலத்தில்தான் இந்து மதத்திலிருந்து முற்றிலும் மாறுபட்ட சமயமாக சீக்கிய சமயம் உருப் பெற்றது. விழாக்காலங்களில் பாடுவதற்காக 'ஆனந்த சாகிப்' என்ற பாடலை அமர்தாஸ் இயற்றினார்.

ஒரு சமயத்தில் மதசகிப்புதன்மை வாய்ந்த பேரரசர் அக்பர் லாகூருக்கு சென்று குரு அமர்தாஸைக் கண்டார். அவரது எளிய வாழ்க்கையைக் கண்ட அக்பர் அவரிடமிருந்து பல உண்மைகளைக் கேட்டறிந்தார். குருவின் தூய்மைத் தன்மையைக் கண்ட அக்பர் அவருக்கு சில ஜாகிர்களைக் கொடுக்க முன்வந்தார். குரு அதை ஏற்றுக்கொள்ள மறுக்கவே அவரது மகள் பீபிபாய் என்பருக்கு 22 கிராமங்கள் அடங்கிய ஜாகீர் ஒன்றைக் கொடுத்தார்.

**4)குருராம் தாசும் அக்பரும் : 1575 – 1581**

குரு அமர்தாசுக்குப் பின்பு அவரது மருமகன் ராம்தாஸ் குருவானார். ஆமர்தபசின் காலத்தில் கோவிந்தவாலில் இருந்த சத்தியர்கள் சீக்கியர்களுக்கு விரோதமாக ஒரு குற்றசாட்டை அக்பரிடத்தில் சமர்ப்பித்தனர். அந்தக் குற்றசாட்டை விசாரிப்பதற்காக அமர்தாஸ் அழைக்கப்பட்டபோது அவர் தனது மருமகனான ராம்தாஸை அனுப்பிவைத்தார். ராம்தாஸ் கொடுத்த விளக்கத்தினால் பேரரசர் திருப்தியடைந்து அந்த வழக்கைத் தள்ளுபடி செய்தார்.

இவ்வாறு ஏற்கெனவே முகலாயப் பேரரசோடு தொடர்பு கொண்டிருந்ததால் ராம்தாஸ் அக்பருடன் நெருங்கிப் பழகினார். எனவே அக்பர் ஐந்நூறு பிகாஸ் அளவுகள் நிலப் பகுதி ஒன்றை இனமாக அளித்து சீக்கிய ஆலயம் கட்டும்படியாகக்

கேட்டுக்கொண்டார். அந்த இடத்தில் ராம்தாஸ் புரம் என்ற நகரம் நிர்மாணிக்கப்பட்டது. ஓர் ஆண்டு முழுவதும் பஞ்சாப் மாநிலத்திலிருந்து வந்த வருமானம் முழுவதையும் அந்த செலவுக்காக பேரரசர் அளித்தார். இவ்வாறு பேரரசரின் ஆதரவில் சீக்கியமதம் ராம்தாஸ் காலத்தில் வளர்ச்சியடைத்தது. இந்த ராம்தாஸ் புரமே பின்னர் அமிர்தசரஸ் ஆனது. ஆமிர்ததரஸ், சாந்தாக்சரஸ் என்ற ஏரிகள் வெட்டப்பட்டன. இதற்கான செலவினை சீக்கிய தொண்டர்களே ஏற்றுக் கொண்டனர்.

### 5) குரு அர்ஜீனரும் அக்பரும்: 1581 – 1606

சீக்கிய சமய வரலாற்றில் குரு அர்ஜீனரின் காலம் சிறப்பு மிகுந்தகாலமாகும். இவர் சுமார் கால் நூற்றாண்டுகளாக பதவி வகித்தார். ராம்தாஸ்புரம் நகரைக் கட்டி முடித்தார். லாகூரிலும் ஒரு தொழுகை ஸ்தலத்தைக் கட்டினார். சீக்கியர்களின் புனித நூலான ‘ஆதிகிரந்தம்’ இவரால் 1604ல் தொகுக்கப்பட்டது.ஆதிகிரந்தம் குருமுனி எழுத்துக்களால் பஞ்சாபி மொழியில் எழுதப்பட்டது. ஐந்து சீக்கிய சமயபுருமார்களின் போதனைகளையும் பதினாறு இந்து துறவிகளின் பக்தி இயக்கக் கோட்பாடுகளையும் அது உள்ளடக்கியது. சீக்கியர்களின் வழிபாட்டுக்கும் விைாக்களுக்கும் ஆதிகிரந்தமே மையப் பொருளாகும். “இந்து ஆலயங்களில் காணப்படும் விக்கிரத்தைப் போன்றதோ, கிறிஸ்தவ தோலாயங்களில் காணப்படும் சிலுவைப் போன்றோ,அல்ல அது. வுழிபாட்டின் மூலப்பொருளே அதுதான்”’ஆதிகிரந்தம் ஒரு அதிக சிறப்பு வாய்ந்த ஒரு புத்தகம்’ என்றார் அக்பர்.

சீக்கியர்கள் தங்கள் வருவாயில் பத்தில் ஒரு பங்கினை சமயக் கொடையாக வழங்கிட ஏற்பாடு செய்தார். அதனை மக்கிளடமிருந்து கெற ‘மசந்துகள்’ எனப்டும் தொண்டர் குழுவை உருவாக்கினாா. வாகூரில் பவோலி எனப்டும் சமயமன்றமும் கட்டப்பட்டது. சீக்கியர்கள் குதிரை வாணிபத்தை மேற்கொள்ள ஊக்குவிக்கப்பட்டன.

அக்பர் காலத்தில் முகலாயப் பேரரசருடன் நட்புறவு கொண்டிருந்த குரு அர்ஜீனன் ஜஹாங்கீர் காலத்தில் பேரரசரால் பகைக்கப்பட்டார். ஜஹாங்கிரின் மகனான இளவரசர் குஜரு தனது தகப்பனுக்கு விரோதமாக கரகம் செய்து குரு ஆசி பெற்றார். இதனால் குருவைக் கொல்ல உத்தரவிட்டார். இது தவிர மேலும் ஒரு காரணம் சொல்லப்படுகிறது. லாகூரில் திவானாக இருந்த சந்துஷா என்பவர் தனது மகளை அர்ஜீனரின் மகன் ஹரிகோவிந்தருக்கு திருமணம் செய்துகொடுக்க முன்வந்தார். ஆனால் அதற்கு அர்ஜீனர் மறுக்கவே, ஜஹாங்கீர் அவருக்கு இரண்டு லட்சம் ரூபாய் அபராதம் விதித்தார். இதனைக் கட்ட மறுத்தார் அர்ஜீனர். எனவே குரு அர்ஜீனனை சித்திரவதை செய்து கொல்ல உத்தரவிட்டார் ஜஹாங்கீர்.

குரு அர்ஜீனரின் கொலை செய்யப்பட்ட நிகழ்ச்சி சீக்கியரின் வாழ்வுமுறையில் பெரிய மாற்றத்ததை ஏற்படுத்தியது. தாங்கள் உயிரோடு உலவவேண்டுமானால் ஆயுதமேந்துவது அவசியம் என்று உணர்ந்தனர் சீக்கியர்கள்.

### • குரு கோவிந்த்: 1606 – 1644

குரு அர்ஜீனருக்கு பிறகு அவரது மகனான குரு ஹர்கோவிந்த குருவாக வந்தார். இவர் தமது தகப்பனை ஜஹாங்கீர் கொன்று விட்டதால் அவர்மீது வஞ்சம் தீர்க்க திட்மிட்டார். போர் வீரர் போன்று எப்போதும் காட்சியளித்த இவர் இருவாள்களை தாங்கிச் சென்றார். பிரி வாள்தான் மதத்தலைவர் என்பதையும், மிரி என்ற வாள் தான் அரசியல் தலைவர் என்பதையும் காட்டுவதாகக் கூறினார். ஒரு குடை, இருவாள்கள், ஒரு வல்லுறு ஆகியவற்றை அரசுச் சின்னங்களாக வைத்துக் கொண்டார்.

சீக்கியர்களிடமிருந்து வருமானத்தில் பத்தில் ஒரு பங்கை காணிக்கையாக வாங்குவதைவிட போர்க் குதிரைகளையும், போர் ஆயுதங்களையும் காணிக்கையாக

பெறுவது நல்லது என்றார். இவ்வாறு முகலாய பேரரசுக்கு எதிராக ஒரு சீக்கியப் படையை நிறுவினார். இதைக் கண்டு பயந்த ஜஹாங்கீர் குரு அர்ஜீனனையும் ஐம்பத்தி இரண்டு சீடர்களையும் கைது செய்து குவாலியர் கோட்டையில் சிறை வைத்தார். மக்களின் எதிர்ப்பைக் கண்ட ஜஹாங்கீர் இரண்டு ஆண்டுகளுக்குப் பின் அவரை விடுதலை செய்தார்.

முகலாயப் பேரரசர்ஷாஜஹான் காலத்திலும் சீக்கியர்களுக்கும், முகலாயர்களுக்கும் இடையே உள்ள உறவு அதிகவிரோதமானது. ஆரம்பத்தில் அவர்களிடையே ஏற்பட்ட சிறிய சண்டைகள் நாளடைவில் பெரும் புரட்சிகளாகவும் போர்களாகவும் மாறின. லூகூரிலிருந்த சீக்கிய ஆலயத்தை ஷாஜஹான் அழித்ததால் சீக்கியர்கள் வெகுண்டெழுந்து ஷாஜஹானுடன் போரிட்டனர். சுமார் ஆறு ஆண்டுகளில் இப்போர்கள் நடைபெற்றன. நடைபெற்ற போர்களில் முகலாயப் படைகளை சீக்கியர்கள் தோற்றகடித்தனர். ஆனால் தனது இறுதிக் காலத்தில் மலைப்பகுதிகளுக்கு சென்று அங்கே உயிர் நீத்தார் குரு ஹர்கோவிந்த்.

- **குரு ஹரிராய்: 1644 – 61**

குரு ஹர் கோவிந்த் காலமானதும் அவரது பேரானான ஹரிராய் குருவாகப் பதவி ஏற்றார். இவர் ஆரம்ப முதலே முகலாயர்களுடன் சமாதானக் கொள்கைகளைப் பின்பற்றி தனது சமயக்கொள்கைகளை பிரச்சாரம் செய்வதிலேயே முனைந்து நின்றார். முகலாயப் பேரரசரின் மகனான தாராஷீகோ இவரது நெருங்கிய நண்பரானார். ஷாஜகானுக்குப் பிறகு ஏற்பட்ட அரியணைப் போட்டியில் தாரா தோல்வியுற்று ஔரங்கசீப் வெற்றியடைந்தார். இந்தப் போட்டியில் குருஹரிராய் தாராஷீகோவிற்கு உதவி செய்தார்.

ஔரங்கசீப் பேரரசர் ஆனஉடன் தன்னை வந்து சந்திக்கும்படியாகவும், சீக்கியரின் வேத நூலான ஆதிகிரந்ததில் இஸ்லாமியக் கொள்கைகளை இழித்துக் கூறும் சில வசனங்கள் எழுதப்பட்டிருப்பதற்கு நேரில் விளக்கம் தரவும் வேண்டுமென ஹரிராய்க்கு செய்தி அனுப்பினார். அதைக் கேள்விபட்ட ஹரிராய் தான் நேரில் வரமுடியாமல் போனதற்கு வருத்துவதாகக் கூறி தனது மூத்த மகன் ராம்ராய் என்பவரை அனுப்பி வைத்தார்.

ஆனால் ராம்ராய் பேரரசரைப் பிரியப்படுத்துவதற்காக ஆதிகிரந்தத்தில் உள்ள சில வசனங்களை மாற்றியமைத்தார். இதைக் கேட்ட ஹரிராய் தனது வாரிசுரிமை அவருக்கு கிடையாது என்று சொல்லி தனது இளையகுமாரன் ஹரிகிருஷ்ணன் என்பவரை வாரிசாக நியமித்தார்.

**8)குரு ஹரிகிருஷ்ணன் : 1661- 64**

குரு ஹபிகிருஷ்ணன் குருவாக நியமிக்கப்பட்டதைஎதிர்த்து ராம்ராய் ஔரங்கசீப்பிடம் வழக்கு தொடுத்தார். ஔரங்கசீப் உடனடியாக ஹரிகிருஷ்ணனுக்கு ஆள் அனுப்பி அதற்கான விளக்கத்தை தெரிவிக்கும்படி கேட்டார். இளவயதான குருஹரிகிருஷ்ணன் திறமையாகவும் சாமர்த்தியமாகவும் பேரரசரை அணுகி விளக்கம் தெரிவித்ததால் பேரரசர் மகிழ்ச்சி கொண்டு ராம்ராயின் வழக்கை தள்ளுபடி செய்தார். ஆனால் டில்லிக்குச் சென்ற அவர் பெரியம்மைநோய் கண்டு அதன் விளைவாக 1664-ல் இறந்தார்.

**9)குரு தேஷ்பகதூர் : 1664 – 75**

இவர் சீக்கிய சமயத்தின் ஒன்பதாவது சமயகுரு ஆவார். தீவிர இஸ்லாமிய பற்றுடையவரான ஔரங்கசீப் சீக்கியர்களின் ஜென்ம விரோதியாகவே இருந்தார். குரு தேஷ்பதூரின் ஆரம்ப காலத்தில் புரட்சியை அடக்குவதில் ஔரங்கசீப்பின் கவர்னரான

ராஜாராமுக்கு உதவியாக இருந்தார். இதனால் ஔரங்கசீப் குருவை நேரடியாகப் பகைக்க தயங்கினார்.

அப்போது காஷ்மீரில் முகலாய கவர்னராக இருந்தவர் இந்துக்களைக் கொடுமைப்படுத்தினார். இதனால் பாதிக்கப்பட்ட அந்தணர்கள் சிலர் குரு தேஷ்பகதூரிடம் வந்து தங்களுக்கு பாதுகாப்பு அளிக்கும்படி கோரினர். கோபமடைந்த குரு தான் இந்துக்களுக்கும், இந்து சமயத்திற்கும் பாதுகாப்பு அளிக்கும் தலைவன் என்று கூறி, பேரரசருக்கு எதிராக சவால் விட்டார். அதைக் கேள்விபட்ட ஔரங்கசீப்தேஷ்பகர்ரைக் கைது செய்து டில்லி கொண்டு வரச் செய்தார்.ஔரங்கசீப் அவரிடம் 'இஸ்லாமை ஏற்றுக் கொள்ள வேண்டும் அல்லது தான் பின்பற்றும் கடவுளின் சக்தியால் ஒரு அற்புதத்தை உடனடியாகச் செய்து காட்ட வேண்டும்' என்றார். அப்படி செய்யாவிடில் மரணதண்டனை விதிக்கப்படும் என்றார். பேரரசரின் விருப்பத்தை நிறைவேற்றாததால் அவருக்கு மரணதண்டனை அளிக்கப்பட்டது. குரு கொலை செய்யப்பட்டது இந்து சமயத்தையும் இந்துக்களையும் பாதுகாப்பதற்காக செய்யப்பட்ட ஒரு நிவாரணம் என்று கருதி இந்துக்கள் பேரரசருக்கு விரோதமாக கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.

**10)குரு கோவிந்த் சிங் : 1675 – 1708**

குருதேஷ்பகதூரின் மகனான குருகோவிந்த் சிங் பத்தாவது குருவாகப் பதவி ஏற்றார். இவரே கடைசிக்குரு ஆவார். இவர் இளமையில் நல்ல படைப்பயிற்சி பெற்றார். ஆரம்பத்திலேயே மிலாஸ்பூர் மன்னருடன் பகை கொள்ள நேரிட்டது. ஆனால் அவருடன் செய்த போரில் வெற்றி பெற்றார். பெரும்போருக்கு ஆயத்தமாக விரும்பிய அவர் ஆனந்தகார், லோகார், கேஷ்கார், பதேகார் என்ற நான்கு கோட்டைகளைக் கட்டினார். ஆனால் இவரது படைவலிமை வளருவதை விரும்பாத ஔரங்கசீப் இளவரசர் மௌசம் தலைமையில் பெரும்படை ஒன்றை அனுப்பினார். அந்தப்படையுடன் மோதவிரும்பாத குருகோவிந்த்சிங் மலைப்பகுதிகளுக்கு பின்வாங்கினார்.

**கால்சா அமைப்பு :**

1669ல் கால்சா என்ற படையை உருவாக்கினார் குருகோவிந்த்சிங். பைசாகி நாள் என்று ஆனந்தபூரில் சீக்கியர்களின் மாநாடு கூட்டப்பட்டது. கையில் வாளுடன் வெளிவந்த குருதர்மத்தைக் காத்திட தலை கொடுக்கவும் தயங்காதவர் முன்வருக என்றார். ஐந்துபேர் முன்வந்தனர். அவர்கள் பாஞ்ச்பியாரே எனப்பட்டனர். அவர்கள் கால்சாவைத் தொடங்கி வைக்க,'குரு கால்சாவிலும்' கால்சா குருவிலுமாக இணைந்தனர்.

கால்சாவில் சேருவோர் சிலகொள்கைகளைக் கடைபிடிக்கவேண்டும். கால்சாப் படையினர் தங்களை 'சிங்' என்று அழைத்துக்கொள்ளவேண்டும். ஒவ்வொருவரும் நீண்ட தலைமுடி, கட்டாரி, உள்ளாடை, சீப்பு, மணிகட்டு வளையம் போன்ற ஐந்து பொருட்களை வைத்துக்கொள்ளவேண்டும். மயக்கப் பொருட்களை ஒதுக்கி ஒழுக்கத்திற்கு முதலிடம் அளிக்க வேண்டும். அமிர்தசரசிலுள்ள புனிதக்குளத்தில் நீராட வேண்டும். சமயத்தைப் பாதுகாக்க முகலாயரை முறியடிக்க வேண்டும்.

கால்சா அமைப்பின் மூலம் சீக்கியர்கள் தூய்மை பெற்றனர். அவர்களிடம் ஒற்றுமை உணர்வு ஓங்கியது. சாதி வேறுபாடுகள் மறைந்தன. அமைதி நோக்கு அழிந்து போர் நோக்கு புகுந்தது. "நான்கு சாதிகளிலிருந்தும் சிங்கங்களை உருவாக்கி முகலாயர்களை ஒழிப்பேன்"என்ற குருவின் நோக்கம் நிறைவேறியது. கால்சாவுக்கு எதிராக மலைப்பகுதி மன்னர்கள் ஒன்றுபட்டு சீக்கியர்களை எதிர்த்தனர். ஆனால் பல இடங்களில் சீக்கியர்கள் வெற்றி பெற்றனர். 1706ல் கித்ரானா என்ற இடத்தில் நடைபெற்ற போரில் இறுதியாக அவர் வென்றார். அந்த வெற்றிக்கு பிறபு

பாட்டியாலாவிலுள்ள தால்வண்டிசபோ என்ற இடத்திற்கு சென்று தனது இறுதி நாட்களை கழித்தார். அந்த நாளில் ஆதிகிரந்தம் மீண்டும் வெளியிடப்பட்டது. இவர் ஔரங்கசீப்பின் சமயக் கொள்கைகளைக் கண்டித்து 'ஜாபர்நாமா' என்ற நூலை எழுதினார்.

1707ல் ஔரங்கசீப் இறக்கவே அவரது மகள் பகதூர்ஷா பேரரசரானார். குருகோவிந்த்சிங் அவருடன் நல்லுறவு கொண்டதுடன் அவருடன் இணைந்து தக்காணப் பயணமும் மேற்கொண்டார். ஆனால் பயணவழியில் 1708 அக்டோபர் 7ம் தேதி ஒரு பட்டாணியரால் குத்தி கொல்லப்பட்டார். இறக்கும் தருவாயில் 'எங்கெல்லாம் ஐந்து சீக்கியர்கள் கூடுகிறார்களோ அவர்கள் மத்தியில் நான் இருப்பேன்' கால்சாவில் குருவும், குருவில் கால்சாவுமாக இணைவோம்' என்றார்.

இந்திய வரலாற்றில் சீக்கியர்களிடையே ஒற்றுமையை உருவாக்கி உயர்நோக்கில் அமைந்த ஒரு படையையும் உருவாக்கியவர் குருகோவிந்த்சிங் ஆவார். இந்து சமயத்தை இஸ்லாமியரின் கொடுமையிலிருந்து பாதுகாத்தவர் அவரே. இஸ்லாமியரின் வெறிக் கொள்கையை தெிர்த்தாரே தவிர இஸ்லாமியக் கோட்பாடுகளை வெறுத்ததில்லை.. அவர் ஒரு அரசியல் தலைவரோ, சமயத்தலைவரோ இல்லை. உண்மையில் இறைவனின் பிரதியாகவே செயல்பட்டார். கால்சாவை உருவாக்கியதன் மூலம் சாதீயச் சாக்கடையை குழிதோண்டிப் புதைத்தார். குருகோவிந்த்சிங் எழுதிய 'ஜாபர் நாமா,ஜாப் சாகிப், விசித்தர் நாடக்' ஆகிய மூன்று நூல்களும் புகழ்பெற்றவை ஆகும். இவர் தனக்குப் பிறகு யாரையும் குருவாக நியமிக்கவில்லை.

## அலகு - IV

### ஐரோப்பியர் வருகை

**போர்ச்சுக்கீசியர்**

இந்தியாவிலிருந்து சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம், கிராம்பு, மயில் இறகு போன்ற வாசனைத் திரவியங்கள் ஐரோப்பா கண்டத்திற்கு இந்தியாவின் வடமேற்கு கைபர், போலன் கணவாய் வழியாக கான்ஸ்ஸான்டி நோபிளை கடந்து தங்கு தடையின்றி சென்றுகொண்டிருந்தது. எதிர்பாராத விதமாக கான்ஸ்றான்டி நோபிளை துருக்கியர்கள் பிடித்து கொண்டதால் தரைமார்க்க முக்கிய வழி தடைப்பட்டது. இதனால் இந்தியாவிலலருந்து வாசனைத் திரவியங்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு செல்வதுதடைப்பட்டது. இதன் காரணதாக ஐரோப்பிய நாடுகள் புதிய கடல் மார்க்கமாக இந்தியாவிலிருற்கு செல்ல வழிதேடினார். இதில் முதலில் வெற்றிக் கண்டவர் போர்ச்சுக்கீசியர்கள் ஆவர்.

ஐரோப்பிய வல்லரசுகளில் இந்தியாவிற்கு முதன்முதலாக வந்மவரும், இந்தியாவை விட்டு முதலில் வெளியேறிய வரும் போர்ச்சுக்கீசியர் ஆவர். வுாஸ்கோடகாமா 1498-ல் கடல் வழியாக நன்னம்பிக்கை முனையை கடந்து கள்ளிக்கோட்டைக்கு வந்து சேர்ந்தார். அப்போது கள்ளிக்கோட்டையை ஆண்ட ஸாமொரின் என்ற அரசர் இவரை அன்புடன் வரவேற்றார். வாஸ்கோடகாமா மேற்கொண்ட பயணம் போர்ச்சுக்கீசியர் தம்முடைய வாணிபம், அரசியல் மதமாற்நு நடவடிக்கைகளை ஊக்கமுடன் செய்தற்கான புதிய வாய்ப்புகளை ஏற்படுத்தி தந்தது.

போர்ச்சுக்கீசியர்கள் முதன்முதலில் கொச்சியில் ஒரு பண்டகசாலையை நிறுவினர். கோச்சி ராஜாவோடு வியாபாரத்தை தொடங்கினர். பின்பு கண்ணூரிலும் பண்டக சாலைகளை நிறுவினர். பிற்கால வைசிராயாக இருந்த அலடபோன்ஸா-டி-

அல்புர்க் கப்பற்படையின் ஒரு பிரிவின் தழலவராக 1503ல் இந்தியாவிற்கு வந்து கொச்சி பண்டக சாலையை வலிமை மிக்க இராணுவ அரணாக மாற்றினார்.

**1.பிரான்சிஸ்கோ-டி-அல்மேடா (1505-09)**

போர்ச்சுகீசிய பேரரசை இந்தியாவில் நிறுவுவதற்கு வாய்ப்பு உண்டென கருதிய போர்ச்சுக்கீசிய அரசாங்கம் தமது கொள்கையில் சில முக்கியமான கொண்டு வந்தது. ஆண்டுதோறும் கடற்பயணங்கள் செல்லும் முறை கைவிடப்பட்டது. கொச்சி, கண்ணனூர், கொல்லம் ஆகியவற்றிற்கு வைசியராக(அரசபிரதிநியாக) பிரான்சிஸ்-கோ-டி-அல்மேடா 1505ல் இந்தியாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டார். இவர் கொச்சியை தலைமையிடமாக அமைத்தார். 1509ல் தமது பதவியிலிருந்து விலகினார்

**2.அல்புக்கர்க் (1505-1515)**

ஆளுநர்களில் மேன்மையானவரும், உண்மையில் போர்ச்சுக்கீசிய வல்லரசை இந்தியாவில் நிறுவியரும்அல்போன்சோ-டி-அல்புக்கர்க் ஆவார். இவர் 1510ல் பிஜப்பூர் சுல்தானிடமிருந்து கோவாவை கைபற்றினார். இவர் முஸ்லீம்களை வெறுத்தார். இவர்1511ல் மலாக்காவை கைப்பற்றியது இரண்டாவது பெரிய சாதனையாகும். பாரசீக வளைகுடாவிலுள்ள ஆர்தஸை 1515ல் இவர் கைப்பற்றியது மூன்றாவது பெரிய சாதனையாகும். இவர் இந்துக்களை தனது படையில் சேர்த்துக்கொண்டார். 1515 டிசம்பர் 16ல் உயிர் நீத்தார். இவரது பூத உடல் கோவாவில் அடக்கம் செய்யப்பட்டது.

அல்புக்கர்க்கிற்கு பிறகு வந்தவர்களின் ஆட்சியில் கோது பஸீன், டையூ,இலங்கை,பம்பாய்,டாமன்,சால்ஸெட்டி,ஹீக்ளி, சாந்தோம் ஆகிய இடங்களை கைப்பற்றினர். 17வது நூற்றாண்டில் கோவா, டையூ, டாமன் ஆகிய இடங்களை தவிர பிற இடங்கள் அனைத்தையும் இழந்தனர்.

**3.போர்ச்சுக்கீசியர்கள் தோல்வியுற காரணங்கள்**

1. இந்தியாவில் போர்ச்சுக்கீசியர்கள் தமது குடியேற்றங்களை ஆரம்பிக்கும் போது வடக்கே மொகலாய பேரரசும், தெற்கேவிஜய நகர பேரரசும் சிசறப்புடன் செயல்பட்டுக் கொண்டிருந்தது. இதனால் போர்ச்சுக்கீசியர்களால் பெரிய குடியேற்றங்களையோ அல்லது பெரிய பண்டக சாலைகளையோ இந்தியாவில் அமைக்க முடியாமல் ஆகிவிட்டது.

2. 17வது நூற்றாண்டில் போர்ச்சுக்கீசியர்களுடைய குடியேற்றங்கள் கைப்பற்றப்பட்டன. மாமன்னர் ஷா அப்பாஸ் 1622ல் ஆர்மழஸ மீட்டார். 1632ல் ஷாஜஹான் ஹீக்ளியை கைப்பற்றினார். 1641ல் டச்சுக்காரர்களால் மராக்கா கைப்பற்றப்பட்டது. போர்ச்சுக்கீசியரை கண்ணனூரிலிருந்து 1656-லும் கொச்சியிலிருந்து 1663லும் டச்சசுக்காரர்கள்விரட்டியடித்தனர்.இறுதியில் கோவா, டையூ, டாமன் ஆகிய பகுதிகளை 1962ல் அந்தியா கைப்பற்றியது.

3. டச்சுக்காரர்களின் எழுச்சியும், பிரிட்டிஷாரின் கப்பல் படை ஈதிக்கமும் போர்ச்சுக்கீசியர்களின் செல்வாக்கை அடியோடு அளித்தது.

4. போர்ச்சுக்கீசியர்களின் மதமாற்றம் நடவடிக்கைகள் இந்தியர்களின் வெறுப்பை ஏற்படுத்திக் கொண்டது. பலவந்தமாக மதம் மாற்றுவது அன்றைய நாளில் வழக்கமாக இருந்தது. இறுதியாக வந்த ஆளுநர்கள் சோம்பேறிகளாகவும்,திறமையற்றவர்களாகவும் இருந்தனர்.

5. போர்ச்சுக்கல் ஒரு சிறிய நாடு. போதுமான மனித சக்தி இல்லை. பெரும்பான்மையான வீரர்கள் கப்பல் கவிழ்ந்ததால் மாண்டனர். போர்களினால் ஏற்பட்ட செலவு போர்ச்சுக்கல்லின் வருமானத்தை மிகவும் பாதித்தது.

**டச்சுக்காரர்கள்**

டச்சு கிழக்கிந்திய கம்பெனி 1602ல் நெதர்லாந்து நாட்டில் தொடங்கப்பட்டது. 1605ல் டச்சுக்காரர்கள் மசூலிப்பட்டணத்திலும், பிறகு சென்னைக்கு அருகில் புழலேரிப் பக்கத்திலும், வணிக தலங்களை நிறுவிக் கொண்டனர். 1617ல் சூரத்தில் ஒரு வணிகத் தலம் நிறுவிக் கொண்டனர். சங்கத்தில் ஒரு கோட்டை கட்டி அதற்கு குஸ்டாபஸ் கோட்டை என்று பெயரிட்டனர். 1658ல் தூத்துக்குடியிலும் வியாபாரத் தலத்தை நிறுவினர். 1659ல் நாகப்பட்டிணத்தையும் கைப்பற்றினர். கொச்சி, கண்ணனூர் ஆகிய இடங்களும் டச்சுக்காரர்கள் வசமாயின.

**அம்பாயினா படுகொலை**

1623-ல் ஆங்கில வணிகர்கள் சிலரை அம்பாயினா என்னும் இடத்தில் பிடித்து படுகொலை செய்தார்கள். இதனை வரலாற்றில் அம்பாயினா படுகொலை என்பர். டச்சுக்காரர்களின் கோட்டையை கைப்பற்ற ஈங்கில வணிகர்கள் சதி செய்ததாக குற்றம் சாட்டிதான் இப்படுகொலையை செய்தனர். இந்நிகழ்ச்சியை சட்டபூர்வமான கொலை என்றும் அழைப்பர்.

டச்சுக்காரர்கள் இந்தியாவில் நிலைத்து கொண்டு ஆட்சி புரியவோ, நாடு பிடிக்கவோ கருதவில்லை. அவர்களுடைய எண்ணமெல்லாம் கிழக்கிந்திய தீவுகளான சுமத்ரா, ஜாவா, போர்னியோ என்பவற்றைப் பற்றியே இருந்தது. போர்ச்சுக்கீசியர்களுக்கும், டச்சுக்காரர்களுக்கும் ஏற்கெனவே பகைமை இருந்ததால் போர்ச்சுக்கீவியர்களுக்கு சொந்தமான பல வணிக ஸ்தலங்களை டச்சுக்காரர்கள் கைப்பற்றினார்கள்.

**டேனிஷ்காரர்கள்**

டேனிஷ்காரர்கள் (டென்மார்க் நாட்டவர்) கி.பி. 1616-ல் ஒரு கிழக்கிந்திய கம்பெனியை நிறுவிக் கொண்டு 1620ல் தரங்கம்பாடியில் ஒரு வாணிக நிலையத்தை ஏற்படுத்திக் கொண்டனர். அவர்கள் அப்போது தஞ்சையை ஆண்ட ரகுநாத நாயக்கரோடு நட்புறவு பூண்டனர். கிரேப் என்பவர் தரங்கம்பாடியை டேனிஷ்காரர்களுக்காக வாங்கினார். இக்கம்பெனியின் நோக்கம் இந்தியாவில் சரக்குகளை வாங்கி கிழக்கிந்திய தீவுகளில் விற்றல் என்பதே. இவர்களால் நிலைத்து நிற்கமுடியவில்லை. கி.பி. 1845-ல் அவர்கள் தரங்கம்பாயையும், செரம்போரையும் 12 அரை லட்ச ரூபாய்க்கு ஆங்கில கிழக்கிந்திய கம்பெனிக்கு விற்றவிட்டனர்.

**பிரெஞ்சுக்காரர்கள்**

17-ம் நூற்றாண்டின் இடைப்பகுதியில்14-ஆம் லூயி என்பவர் பிரெஞ்சு மன்னரானார். அவருக்கு கால்பர்ட் என்ற அறிவுடைய நிதி அமைச்சர். ஒருவர் இருந்தார். அவருடைய முயற்சியால் 1664-ல் பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனி இந்தியாவில் நிறுவப்பட்டது.

1668-ல் சூரத்திலும், 1669-ல் மசூலிப்பட்டணத்திலும் அவர்கள் வாணிகக் குடியேற்றங்களை நிறுவினர். பிரான்ஸ்வா மார்ட்டின் என்பவர் பாண்டிசேரி(புதுச்சேரி) யில் தங்கள் வியாபார நிலையம் ஒன்றை ஏற்படுத்திக் கொண்டார். 1690-ல் பிரெஞ்சுக்காரர்கள் வங்காளத்தில் சந்திர நகரில் ஒரு வணிக நிலையத்தை ஏற்படுத்திக்கொண்டனர். 1693-ல் டச்சுக்காரர்கள் பாண்டிசேரியைகைப்பற்றினர். அதை பிரெஞ்சுக்காரர்கள் திரும்ப பிடிப்பதற்கு ஆறு ஆண்டுகள் ஆயின. இதற்கிடையே

பிரெஞ்சுக்காரர்கள் சூரத், மசூலிப்பட்டிணம் போன்ற இடங்களில் வர்த்தகஸ்தலங்களை கைவிட்டனர். மார்டின் 38 ஆண்டுகள் தமது நாட்டின் நலனுக்காக உழைத்தார். கி.பி. 1706-ல் டிசம்பர் 31-ம் நாள் இறந்தார். இந்தியாவிற்கு வந்த பிரெஞ்சுக்காரர்களில் டியூப்ளேக்கு நிகராக கூறக் கூடியவர் மார்டின்.

### ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி

குிழக்கிந்திய தீவுகளுடன் வாணிபம் வெய்வதற்கான உரிமைப் பத்திரத்தை எலிசபெத் அரசியார் 1600-ல் ஆங்கிலேயருக்கு வழங்கினார். இவர்களுக்கு இந்தியாவில் வியாபாரம் செய்ய உரிமைக் கேட்டு வில்லியம் ஹாக்கின்ஸ் 1608-ல் இந்தியா வந்தார். அப்போது டெல்கியை தலைநகரமாக கொண்டு மொகலாய மன்னர் ஜஹாங்கீர் ஆண்டு வந்தார். இவர் ஜஹாங்கீர் அரண்மனைகக்கு வந்து இங்கிலாந்து அரசர் முதலாம் ஜேம்ஸ் எழுதிய கடிதத்தை ஜஹாங்கீரிடம் கொடுத்தார். ஜஹாங்கீர் அனுமதி கொடுக்க மறுத்தார். பின் சர்தாமஸ்ரோ என்பவர் 1615-ல் இந்தியா வந்து சூரத் என்ற இடத்தில் வியாபார ஸ்தலத்தை ஏற்படுத்த ஜஹாங்கீரின் அனுமதியைப் பெற்றார். 1619-ல் ஆக்ரா, அகமதாபாத், புரோச் ஆகிய இடங்களில் ஆங்கிலேயர் வியாபார ஸ்தலங்களை ஏற்படுத்திக் கொண்டனர்.

தென் இந்தியாவில் ஆங்கிலேயர்கள் மசூலிப்பட்டணத்தில் முதல் பண்டக சாலையை அமைத்தனர். 1639-ல் சந்திரகிரி ராஜாவிடமிருந்து சென்னையை வாடகைக்கு பெற்றனர். சென்னையில் செயின்ட் ஜார்ஜ் கோட்டையை ஆங்கிலேயர் கட்டி வியாபாரத்தை ஆரம்பித்தனர். 1651-ல் ஹீக்ளியிலும் பின் பாட்னா, காஸிம்பஜார், டாக்கா ஆகிய இடங்களிம் பண்டக சாலைகள் நிறுவப்பட்டன. வங்காளத்தில் 1696-ல் வில்லியம் கோட்டை கட்டப்பட்டது. ஔரங்கசீப் ஆட்சிக் காலத்தில் கடுமையான எதிர்ப்பு இருந்தது. ஔரங்கசீப் பின் தோன்றல்களிடமிருந்து சில வாணிப சலுகைகளைப் பெற்றனர். கர்நாடகப் போர்களில் கிடைத்த வெற்றி, கர்நாடகத்தின் மீதான உரிமை கிடைத்தது. பிளாசிப்போரில் 24 பர்னாக்கள் கம்பெனிக்கு கிடைத்தது. பக்ஸார் போரினால் பர்துவான், மிட்னபூர், சிட்டகாங் ஆகிய மாவட்டங்கள் கிடைத்தது. இந்தியாவில் பிரிட்டிஷ் ஆதிக்கத்திற்கான அடித்தளம் அமைக்கும் வாய்ப்பை கிளைவிற்கு அவ்வெற்றி ஏற்படுத்தியது. இந்தியாவின் மீது மேலாட்சி புரிவதற்கு வந்த நான்கு முனைப் போட்டியில் போர்ச்சுக்கல் பின் வாங்கியது. டச்சுக்காரர்கள் விரட்டியடிக்கப்பட்டனர். பிரெஞ்சு வல்லரசு நசுக்கப்பட்டது. பிரிட்டன் வல்லரசு வெற்றி வாகை சூடியது.

## கர்நாடகப் போர்கள்

பிரெஞ்சுக்காரர்கள் புதுச்சேரியை தலைமையிடமாகக் கொண்டும், ஆங்கிலேயர்கள் சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையை தலைமையிடமாகக் கொண்டும் வாணிபம் நடத்தினர். ஆரம்பத்தில் வாணிபம் ஒன்றிலேயே முழுக்கவனம் செலுத்தினர். ஆனால் 18-ம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் அவர்கள் இந்திய உள்நாட்டு அரசியல் விவகாரங்களில் தலையிடலாயினர். ஆதனால் இரு கம்பெனிகளுக்கும் பகை ஏற்பட்டது. இப்பகையின் காரணமாக மூன்று கட்டங்களில் போர்கள் நடைபெற்றன. அவற்றை கர்நாடகப் போர்கள் என்று கூறுவர்.

### முதல் கர்நாடகப் போர் (1746-48)

ஐரோப்பாவில் தோன்றிய ஆஸ்திரிய வாரிசுரிமைப் போரில் பிரிட்டனும் பிரான்சும் எதிரெதிர்ப் பக்கங்களில் சேர்ந்தன. அதாவது பிரான்ஸ் பிரடரிக்கையும், பிரிட்டன் மரியதெரசாவையும் ஆதரித்தது. இப்போர் 1640-ல் ஏற்பட்டது. அதனால் இந்தியாவில் இப்போர் ஆங்கில பிரெஞ்சு போராக 1746-ல் மாறியது.

**டியூப்ளே**

1697-ல் பிறந்த டியூப்ளே 1720-ல் புதுச்சேரி பிரெஞ்சு வர்த்தக குழுவில் பணிக்கு சேர்ந்தார். 1731 முதல் 1741 வரை சந்திரநாகூரில் பணிபுரிந்தார். பின்னர் 1742ல் புதுச்சேரி கவர்னராக அமர்த்தப்பட்டார். அதிலிருந்து பிரெஞ்சு அரசை வலுப்படுத்த உறுதி கொண்டார்.

**அன்வருதீன்**

இவர் ஆற்காடு நவாப்பாக ஆட்சி செய்து வந்தார். டியூப்ளே இவருடன் நட்புக் கொண்டிருந்தார். ஆங்கில கம்பெனிக்கு ஆதரவாக ஒரு கப்பற்படைவ ந்தது. அப்படையை தமிழ்நாட்டில் இறங்கவிடாமல் அன்வருதீன் தடுத்தார். ஆங்கிலப்படை திரும்பி விட்டது.

**அடையாற்றுப்போர்**

பிரெஞ்சு படையினர் செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலிருந்த ஆங்கிலேயரை தோற்கடித்து விட்டு, சென்னையை கைப்பற்றினர். இதை அன்வருதீன் கடுமையாக எதிர்த்தார். சென்னையை விட்டு வெளியேறும்படி பிரெஞ்சு படையினருக்கு எச்சரித்தார். உடனே அன்வருதீன் பிரெஞ்சு படையை தாக்குவதற்கு தனது மகன் மாபூஸ்கான் தலைமையில் ஒரு குதிரைப் படையை அனுப்பினார். ஆனால் பிரெஞ்சுப்படை மாபூஸ்கானை சாந்தோமில் தோற்கடித்தது. இதனை அடையாற்று போர் என்று கூறுவர். சென்னையை கைப்பற்றிய பிரெஞ்சுப்படை கடலூரிலிருந்த செயிண்ட் டேவிட் கோட்டையை கைப்பற்ற முயன்றது. ஆனால் வெற்றி பெறமுடியவில்லை. அதுபோல புதுச்சேரியை ஆங்கிலப் படைகள் தாக்க முயன்றன. அது தோல்வியில் முடிந்தது. இந்நிலையில் ஐரோப்பாவில் ஏற்பட்ட வாரிசுரிமைப் போர் 1748-ல் எய்-லா-சப்பேல் ஒப்பந்தம் படி முடிவடைந்தது. அதன்படி பிரெஞ்சுக்காரர்கள் சென்னை வெயிண்ட் ஜார்ஜ் கோட்டையை ஆங்கிலேயருக்கு திருப்பிக் கொடுத்தனர்.

முதல் கர்நாடகப் போரில் பிரெஞ்சுக்காரர்களுக்கு வெற்றி கிடைத்தது. டியூப்ளேயின் மதிப்பு உயர்ந்தது. இப்போரின் விளைவாக இந்திய ராணுவத்தின் வலிமையின் தரம் என்ன என்பதை அறிந்து கொள்ள முடிந்தது. இதனால் இவ்விரு வெளிநாட்டு வல்லரசுகளில் ஒன்றுடன் இந்திய அரசுகள் நேச உறவு கொள்வதற்கான அடித்தளத்திற்கு முதல் கர்நாடகப் போர் அடிகோலியது.

**இரண்டாம் கர்நாடகப்போர் (1749-54)**

ஹைதராபாத் நிஜாம்-உல்-முல்க் 1748ல் காலமானார். ஆவர் இறக்கும் முன்பு தம்முடைய மகள் வழி பேரனான முஸபர் ஜங்கைத் தமக்கு பின்னர் ஆட்சிக்கு வரவேண்டியவராக நியமனம் செய்திருந்தார். ஆனால் நிஜாமின் இரண்டாவது மகன் நாஸர்ஜங் ஹைதராபாத் நிஜாமாக தம்மை பிரகடப்படுத்தினார். 1741-ல் மராட்டியர் சந்தாசாகிப்பை சிறைப்படுத்தியிருந்தனர். அவருக்கு ஏழு லட்சம் ரூபாய் தந்ததால் விடுதலை செய்யலாம் என மராட்டியர்கள் அறிவித்தார்கள்.

முஸபர்ஜங் பிரெஞ்சுக்காரர்களின் ஆதரவைக் கேட்டார். உடனே பிரெஞ்சுக் கவர்னர் மராட்டியர்களுக்கு ஏழு லட்ச ரூபாய் கொடுத்து ஆற்காட்டின் முன்னாள் நவாப்பாக இருந்த தோஸ்த் அலியின் மருமகன் சந்தாசாகிப்பும் முஸபர்ஜங்கிற்கு ஆதரவு கொடுத்தனர். முஸபர்ஜங் ஹைதராபாத் நிஜாமானார். சுந்தாசாகிப் முஸபர்ஜங் கூட்டுப்படைகள் பிரெஞ்சுபடையுடன் சேர்ந்து ஆற்காடு நவாப் அன்வருதீனை ஆம்பூர் போரில் (1749) தோற்கடித்தது கொன்றனர். அவரது மகன் முகமது அலி தப்பி திருச்சிராப்பள்ளி கோட்டையில் ஒழிந்து கொண்டார். ஆற்காட்டுக்கு நவாப்பாக சந்தாசாகிப் வெற்றிகரமாக அமர்த்தப்பட்டார். திருச்சி கோட்டையில் ஒழிந்திருந்த

முகமது அலி, ஆங்கில கம்பெனிக்கு ஒரு கடிதம் எழுதி உதவி கேட்டார். ஆங்கில கம்பெனியின் கவர்னர் கிளைவ் முகமது அலிக்கு ஆதரவுக் கொடுத்தார். 1750-ல் நாஸர்ஜங் கொல்லப்பட்டார். 1751-ல் முஸபர்ஜங் ஔரங்கபாத்திற்கு சென்று கொண்டிருக்கையில் அவரும் கொல்லப்பட்டார்.

பிரெஞ்சுபடையுடன் சந்தாசாகிப்பின் படைகள் முகமது அலியை கொல்வதற்கு திருச்சிராப்பள்ளியை முற்றுகையிட்டது. ராபர்ட் கிளைவ் முகமது அலியை காப்பாற்றுவதற்கு ஆங்கிலப் படையோடு வந்தார். 1751-ல் ஆற்காட்டை கைப்பற்றினார். பின் ஆரணி, காவேரிபாக்கம் ஆகிய இடங்களில் நடந்த போர்களிலும் ராபர்ட் கிளைவ் வெற்றி பெற்றார். பின் இப்போர் ஓர் ஒப்பந்தம்படி முடிவடைந்தது. அதன்படி அவரவர் கைப்பற்றிய இடங்கள் அவரவருக்கு திருப்பி கொடுத்து விட வேண்டும்.

**மூன்றாம் கர்நாடகப் போர் (1757-61)**

ஐரோப்பாவில் ஏற்பட்ட ஏழாண்டு போரே மூன்றாம் கர்நாடகப் போர் ஏற்படுவதற்கு உடனடி காரணமாகும். ஐரோப்பாவில் ஏற்பட்ட போர் பிரஸ்யாவை ஆண்ட பிரடரிக்கும், ஆஸ்திரியாவை ஆண்ட மரியதெரசாவிற்கும் இடையே ஏற்பட்டது. இப்போரில் பிரான்ஸ் மரியமெரசாவிற்கும் இங்கிலாந்து பிரடரிக்குக்கும் ஆதரவு கொடுத்தது. இப்போர் ஏழு ஆண்டுகள் நடந்தால் ஏழாண்டு போர் எனப் பெயர் பெற்றது. ஹைதராபாத்தில் பிரெஞ்சு கப்பற்படை தலைவர் புஸ்லி அருந்து வந்தார். கௌண்ட்-டி-லாலி என்பவர் பிரான்சின் படைத் தலைவரானார். அவர் சென்னையை முற்றுகையிட விரும்பி புஸ்லியை வரவழைத்தார். புஸ்லி சென்னைக்கு வந்தார். இந்த வாய்ப்பை கிளைவ் பயன்படுத்தி ஹைதராபாத்தை நோக்கி படையெடுத்தார். அங்கேயிருந்த பிரெஞ்சு ஆதிக்கத்தை அகற்றி அதனை ஆங்கிலேயர் வசமாக்கினார். மேலும் வடசர்க்காரை சலபத்ஜங்கிடமிருந்து ஆங்கிலேயர் பெற்றனர்.

**புதுச்சேரி வீழ்ச்சி**

ஆங்கில படை வருகையால் பிரெஞ்சு படை மேலும் தளர்ச்சியுற்றது. பிரெஞ்சு படைக்கும் ஈங்கிலப் பரடக்கும் போர் ஏற்பட்டது. சர்-அயர்-கூட் என்ற ஆங்கில படைத்தளபதி ஆங்கிலப்படைக்கு தலைமை தாங்கினார். 1760-ல் வந்தவாசி என்ற இடத்தில் ஏற்பட்ட போரில் சர்-அயர்-கூட் பிரெஞ்சு படையை தோற்கடித்து புதுச்சேரியை கைப்பற்றினர். இவ்வாறு பிரெஞ்சுக்காரர்கள் அடக்கப்பட்டனர். அவர்கள் பகுதிகள் அனைத்தும் ஆங்கிலேயர் கைப்பற்றினர்.

**ஏழாண்டு போர் முடிவு**

ஐரோப்பாவில் ஏற்பட்ட ஏழாண்டு போர் முடிவுற்றது. 1763-ல் பாரீஸ் ஒப்பந்தம்படி முடிவடைந்தது. இவ்வுடன்படிக்கைப்படி புதுச்சேரியை ஆங்கிலேயர்கள் பிடிரஞ்சுக்காரர்களுக்கு திருப்பி கொடுத்தனர். மூன்றாம் கர்நாடகப் போர் இந்தியாவில் பிரெஞ்சு வல்லரசிற்கு சாவு மணி அடித்தது என கூறலாம்.

## கர்நாடகப்போரில் ஆங்கிலேயரின் வெற்றிக்குரிய காரணங்கள்

1.பிரெஞ்சு கம்டிபனிக்கு முன்னரே ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி ஆரம்பிக்கப்பட்டது. எனவே நாடு முழுவதும் பரவலாக பல குடியேற்றங்களை ஏற்படுத்தும் வகையில் ஆங்கில கம்பெனி வேகமாக முன்யேறிது. பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனி பிந்தி ஆரம்பிக்கப்பட்டதால் அதன் செழிப்பு குறைவாகவும், குடியேற்றங்களை நாடு முழுவதும் உருவாக்க முடியாமலும் இருந்தது.

2.பிரெஞ்சு கிழக்கு இந்திய கம்பெனி ஒரு அரசு கம்பெனி. எந்த முடிவு எடுத்தாலும் தாய் நாட்டின் அனுமதியை கெற்ற பிறகே செயல்படுத்த முடியும். இதனால் துரித நடவடிக்கயைில் இறங்க முடியாமல் இருந்தது. ஆனால் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி ஒரு தனியார் கம்பெனி. எந்த முடிவு எடுத்தாலும் உடனுக்குடன் எடுக்கலாம். தாய்நாட்டின் அனுமதிபெற வேண்டியதில்லை.

3.பிரான்ஸில் இருந்த நிர்வாக ஊழல் இந்தியாவிலும் புகுந்தது. பங்குதாரர்களுக்கு குறிப்பிட்ட சதவீத ஆதாயம் உறுதியாக கிடைக்கும் என்ற நம்பிக்கை பங்குதாரர்களுக்கு ஏற்பட்டதால் அவர்கள் கடின உழைப்பிற்கான ஊக்கம் சிறிதும் கூட இருக்கவில்லை. ஆனால் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி ஒஐ தனியார் கம்பெனியாக இருந்ததால் அதன் வளர்ச்சி அதிகமாக இருந்ததால் தான் பங்குதாரர்களுக்கு அதிக வருமானம் கிடைக்கும் என்ற நிலையில் பங்குதாரர்கள் கடினமாக உழைப்பிற்கு ஊக்கம்கொடுத்தார்கள்.

4.இங்கிலாந்து கப்பற்படை முதன்மை வாய்ந்ததாக இருந்தது. அதோடு அவர்கள் ஆரம்பித்த வியாபார தலங்களான சென்னை பம்பாய், கல்கத்தா ஆகிய இடங்கள் துறைமுகத்தோடு சேர்ந்து இருந்தது. எந்த நேரத்திலும் கப்பல்கள் வந்து போவதற்கு வசதி இருந்தது. ஆனால் பிரெஞ்சு கப்பல் படை பின்தங்கிய நிலையில் இருந்தது. அதோடு அவர்கள் இந்தியாவில் ஆதிக்கம் பெற முடியாத நிலையில் இருந்தது. புதுச்சேரி மட்டும் தான் பிரெஞ்சுக்காரர்களுக்கு சிறப்பான இடத்தில் அமைந்திருந்தது. அதுவும் மூன்றாவது கர்நாடகப் போரில் ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்டதும் பிரெஞ்சு வல்லரசு மீளமுடியாத அளவிற்குசிதைவுற்றது.

5.இந்தியாவில் நடந்த போர்களில் பிரெஞ்சு கம்பெனிக்கு அதிக செலவீனம் ஏற்பட்டது. இதனால் கம்பெனிக்கு கடன் பெருகியது. நிறைவுற்ற நிதி நிலைமை பிரெஞ்சுக்காரர்களுக்கு வீழ்ச்சியைக் கொடுத்தது. அதற்கு மாறாக ஆங்கிலேயர்கள் கல்கத்தாவிலிருந்து போதுமான பொருள் வளம் பெற்றனர். இதனால் இக்கம்பெனி செல்வ செழிப்புடன் இருந்தது.

6. இராபர்ட் கிளைவ், லாறன்ஸ், சர்அயர்கூட் போன்ற நல்ல தலைவர்களையும், தளபதிகளையும் ஆங்கிலக் கம்பெனி பெற்றிருந்தது. அதேப்போல் டியூப்ளே, லாலி, புஸ்லி போன்ற தகுதியுள்ள தலைவர்களையும் பிரெஞ்சுக் கம்பெனி பெற்றிருந்தது. ஆனால் லாலி ஆணவ போக்குடைய தளபதியாக இருந்தார். பிரெஞ்சு தலைவர்கள் அடிக்கடி சண்டை போட்டுக் கொண்டிருந்தனர். ஆங்கில கம்பெனி தலைவர்கள் எந்தவித சண்டை சச்சரவுக்கும் இடம் கொடுக்காமல் ஒற்றுமையாக உழைத்தனர்.

ஐரோப்பிய வல்லரசுகளிடையே நடந்த நான்கு முனைப் போட்டியில் போர்ச்சுக்கல் சிறப்பாக பின்வாங்கியது. டச்சுக்காரர்கள் விரட்டியடிக்கப்பட்டனர். பிரெஞ்சு அதிகாரம் நசுக்கப்பட்டது. பிரிட்டன் வெற்றி வாகை சூடியது.

**சிராஜ்உத்தெளலா பிரிட்டிஷாரோடு சச்சரவிடல்**

ஆலிவார்திகானுடைய மரணத்திற்குப்பின் அவருடைய பேரன் சிராஜ்உத்தெளலா வங்காள நவாபானார். 24 வயது நிரம்பிய அவர் ஆதிக்க மனப்பான்மை கொண்டவர். எனவே ஆங்கிலயரோடு தகராறு செய்ய ஆரம்கித்தார். அதற்கான காரணங்கள்:

- ஏழாண்டுப்போர்மூளும் என எதிர்ப்பார்து ஆங்கிலேயர் வங்காளத்திலுள்ள தங்கள் கோட்டைகளை செம்மையாக்கி வலுப்படுத்தினர் ஆனால் இதற்கு நவாப்பினுடைய முன்

அனுமதி பெறவில்லை எனவே அவற்றை இடிக்குமார் ஆணையிட்டார் ஆனால் ஆங்கிலேயர் அந்த ஆணைக்கு அடிபணிய மறுந்தனர்.

- மேலும் ஆங்கிலேயர்கள் சிராஜ் உத்தௌலாவின் எதிரியான சௌக்கத்ஜங் என்பவருக்கு ஆதரவு கொடுத்தார் அதுமட்டுமின்றி நவாப்புடைய ஆணையை மீறிய பல வர்த்தகர்களுக்கு ஆங்கிலேயர்கள் புகலிடம் அளித்தனர்.
- ஆங்கிலேயர்கள் தங்கள் வர்த்தகத்திற்கு அளிக்கப்பட்ட பல சலுகைகளைத் துஷ்பிரயோகம் செய்தனர்.
- கல்கத்தாஇருட்டறைச் சம்பவம்: மேற்கூறியவற்றினால் ஆத்திரம் அடைந்த நவாப்காஸிம்பசார். கல்கத்தாஆகிய இடங்களிலுள்ள ஆங்கில வர்த்தகக் கம்பெனிகளைக் கைப்பற்றிஅ ங்குள்ள 146 பேரைக் கைது செய்து 18x 14x 10 என்ற அளவுள்ள அறையில் தள்ளி பூட்டினர். கடுமையான கோடை காலமானதால் அச்சிறிய அறை அவ்வளவு பெரிய தொகையினர்க்கு இடமளிக்காததால் 123 பேர் மூச்சுத் திணறி இறந்தனர். 23 பேரே தப்பினர். இந்த சம்பவமே ‘கல்கத்தா இருட்டறைச் சம்பவம்’ என அழைக்கப்படுகிறது.
- **கிளைவ்வாட்சன் ஆகியோருடைய எதிர் நடவடிக்கைகள்**

சென்னைக்கு இந்த விபத்துச் செய்தி எட்டியவுடன் வாட்சன் தலைமையிலான கடற்படை கிளையினுடைய படை வீரர்களை ஏற்றி கல்கத்தாவிற்கு வந்தது. கல்கத்தாமீண்டும் கைப்பற்றப்பட்டது. ஒரு சிறிய போருக்குப் பின் நவாப் ஆங்கில கம்பெனியின் சொத்துக்களை மீண்டும் ஒப்படைக்க வர்த்தக உரிமைககளை ஏற்றுக்கொண்டார்.

**சீராஜ் உத்தௌலாவுக்கு எதிரான சதி**

கிவைவ் சிராஜ் உத்தௌலாவை தீர்த்துக்கட்ட திட்டம் தீட்டினார். நவாபின் மீது அதிருப்தி அடைந்த அவரது பிரதம மந்திரியும் தளபதியுமான மிர்ஜாபர் என்பவரோடு கிவைவ் இரகசிய தொடர்பு கொண்டார். அமின்சந்த் என்பவர் மூலமாக இந்த இரகசியச்சதி உருவாயிற்று. அதன்படி கிவைவ் உடனடியாக படைதிரட்டி பிளாசியை நோக்கி வரவேண்டும் என்றும் உடனே மிமஜாபர் தம் படைகளுடன் நவாப்பிடமிருந்து விலகி ஆங்கிலேயர்களோடு சேர்ந்து கொள்ள வேண்டும் என்றும் மிர்ஜாபர் நவாப்பாக ஆக்கப்பட வேண்டும் என்றும் உடன்பாடாயிற்று.

**கிளைவினுடைய கள்ளக் கையெழுத்து**

இந்த ஏற்பாடுகளெல்லாம் முடிவடையும் தருணத்தில் அமின்சந்த் தனக்கு 30 லட்சம் ரூபாய் தராவிடில் சதிவேலைகளை அம்பலப்படுத்தி விடுவேன் என்று மிரட்டினார். எனவே 30 லட்ச ரூபாய்க்கு பத்திரம் தயாரித்து அதில் வாட்சன் கையெழுத்தை தாமே இட்டார்.

**பிளாசிப் போர் (1757)**

கிளைவ் தமது படைகளுடன் பிளாவியை நோக்கி புறப்பட்டார். நவாபினுடைய படைபளுக்கு பிரெஞ்சுக்காரர்கள்உதவி செய்ய முன்வந்தனர். ஆனால் நவாபினுடைய படையில் பெரும் பகுகிக்கு தலைமை தாங்கிய துரோகி மிர்ஜாபர்போர் நடவடிக்கைகளில் கலந்துகொள்ளவில்லை. கிளைவிற்கு இது ஒரு மிக எளிதான வெற்றி. பிளாசிக் சண்டை ஒரு சிறு சச்சரவே அதன் பிற்கால அரசியல்விளைவு காரணமாகவே அது ஒரு பெரும் பேரரசு வரலாற்றில் சித்தரிக்கப்படுகிறது. பிளாசிப்போர் வங்காளத்தில்பிரிட்டிஷாருடைய மேலாதிக்கத்தை நிலைநாட்டியது சிராஜ்

உத்தௌலா போர்களத்திலிருந்து தப்பி ஓடும்போது மிர்ஜாபருடைய மகன் மீரான் என்பவரால் கொல்லப்பட்டார். மிர்ஜாபர் வங்கான அரியணையில் அமர்த்தப்பட்டார். அவர் வங்காளத்தில் 24 பர்னாக்களையும் ஒருகோடி ரூபாயையும் கம்பெனிக்கு அன்பளிப்பாகக் கொடுத்ததார்.

**டச்சுக்காரர்களைத் தோற்கடித்தல் (1758)**

ஆங்கிலேயருக்கு அடித்த இந்த யோகம் டச்சுக்காரர்களுடைய பொறாமையைக் கிளறிவிட்டது. அவர்கள் மிர்ஜாபருடன் சேர்ந்து ஆங்கிலேயருக்கு விரோதமாக சதிசெய்ய ஆரம்பித்தார். கிவைவ் டச்சு ஆதிக்கத்தை அடியோடு ஒழிக்கத்திட்டமிட்டார். நிலத்தின் வழியாகவும் கடலின் வழியாகவும் தாக்குதல் தொடுத்தார். டச்சுப்பற்படை தோற்கடிக்கப்பட்டு டச்சுக்காரர்கள் கைதியாக்கப்பட்டனர். அதன்பின் டச்சுக்காரர்கள் வர்த்தகத் துறையிலும் மட்டுமே தம் கவனத்தை வெலுத்தினர்.

**கோகூரின் படையெடுப்பு (1758)**

முகலாய பேரரசர் ஆலம்கீருடைய மூத்த மகனான அலி கோகூர் தந்தைக்கெதிராக கலகம் வெய்து பீகார் நோக்கி படையெடுத்தார். அவர் வங்காளம் வருவதை அறிந்த கிளைவ் ஒரு படையுடன் சென்று அவரை தோற்கடிட்து விரட்டினார். இந்த சாதனைக்காக மிர்ஜாபர் அவருக்கு கல்கத்தாவிற்கு அருகில் ஜாகிர் ஒன்றை பரிசாக அளித்தார். பின்னர் கிவைவ் இங்கிலாந்து சென்றார். அங்கே அவரது சிறப்பான சேவையைப்' பாராட்டி பிரபு பட்டம் அளித்தனர்.

**மிர்ஜாபரை பதவியிலிருந்து விலக்குதல்**

மிர்ஜாபர் செயல்மிறனற்ற நவாப்பாக இருந்தார். அவர் பெயரளவில் மட்டுமே நவாப்பாக இருந்தார். ஆனால் முழு அதிகாரமும் ஆங்கிலேயர் கையலேயே இருந்தது. அவரால் கம்பெனிக்கு கொடுக்க வேண்டிய பணச் சலுகைகளை சரிவர செலுத்த இயலவில்லை. எனவே அவர் பதவி விலகுமாறு கட்டாயப்படுத்தப்பட்டார். மிர்காசிம் என்பவர் புதிய நவாபாக்கப்பட்டார்.

**மிர்காசிமும் ஆங்கிலேயரும்**

நேர்மையற்ற கிரிட்டிஷ் கம்பெனி அதிகாரிகள் மிர்காசிமமயும் ஒழுங்காக ஆட்சி நடத்த விடவில்லை. அவர்கள் சட்ட விரோதமான தனி வர்த்தகத்தில் ஈடுபட்டு பணம் திரட்டினர். உடனே மிகாசிம் பொருட்களை ஓரிடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு கொண்டு வெல்வதற்கான வரிகனை எல்லாம் ரத்து செய்தார். இது ஆங்கிலேயர்களை ஆத்திரமடைய செய்தது. எனவே நவாப்பிற்கும் ஆங்கிலேயருக்கும் மோதல் ஏற்படலாயிற்று. ஆங்கிலேயர்கள் பாட்னா மீதுபடையெடுத்து அதைக் கைப்பற்றினார்கள். இதனால் ஆத்திரமடைந்த நவாப் தனது கைக்கு அகப்பட்ட அனைத்து ஆங்கிலேயர்களையும் படுகொலை செய்தார்.இறுதியில் மிர்காசிம் மோற்கடிக்கப்பட்டு விரட்டப்பட்டார். மீண்டும் மிர்ஜாபரே நவாப்பாக்கப்பட்டார்.

**பக்சார் போர்**

மிர்காசிம் அயோந்தி நவாபானஷீஜா உத்தௌலாவுடனும் முகலாய பேரரசர் ஷா ஆலத்துடனும்கூட்டுச்சோந்துகொண்டு ஆங்கியோகளைத் தாக்கினார்.ஆனால் இந்தக்கூட்டுப்படைகள் 1764ல் பக்சார் என்ற இடத்தில் மன்ரோ என்ற தளபதியால் தோற்கடிக்கப்பட்டன. பிளாசி யுத்தத்தைவிட பக்சார் போர் பல வகையிலும் முக்கியத்துவம் வாய்ந்தது. ஆங்கிலேய ஆதிக்கத்தின் ஆரம்பம் பக்சார் போரிலிருந்துதான் எனக் கூறலாம்.

**வங்காள கவர்னராக கிளைவ்**

1765ல் கிளைவ் வங்காள கவர்னராக நியமனம் பெற்றார். அவர் முன் உடனடி பிரச்சனைகள் இருந்தன.

- கம்பெனியிலுள்ள மிதமிஞ்சிய ஊழல்களை அகற்றி கம்பெனியிலுள்ள பொருளாதார நிலைகளை சீர்படுத்துதல்.
- முகலாய பேரரசர் ஷா ஆலத்துடன் ஒரு உடன்பாட்டிற்கு வந்து கம்பெனியின் நிலைமைகளை சட்ட ரீதியாக்குதல்.

**அலகாபாத் உடன்படிக்கை (1765)**

- பக்சார் வெற்றினால் கிடைக்கப்பெற்ற அரசியல் ஆதாயங்களை உறுதிப்படுத்தி அயோத்தி நவாப்புடனும் 1765ல் முகலாயப்பேரரசருடனும் அலகாபாத் உடன்படிக்கை செய்து கொண்டார். அதன்படி ஷா ஆலம் கோரா அலகாபாத் மாவட்டங்களைப் பெற்றார். ஆங்கில வர்த்தக கம்பெனி ஆண்டுக்கு 26 லட்சம் கொடுக்க ஒப்புக்கொண்டது. பேரரசர் வங்காளம் பீகார் ஒரிஸ்ஸா ஆகிய மாநிலங்களில் வரிவசூல் செய்யும் உரிமையை கம்பெனிக்கு அளித்தார்.

- அயோத்தி நவாபிடம் அவரது அரசு ஒப்புடைக்கப்பட்டது. அவர் 15 லட்சம் ரூபாய் நஷ்ட ஈடாகக் கொடுப்பது எனவும் ஒப்புக்கொள்ளப்பட்டது. அவர் பிரிட்டிஷாருடன் ஒரு பாதுகாப்பு ஒப்பந்தம் செய்துக் கொண்டார்

**கிளைவ் இரட்டையாட்சி**

கிழக்கிந்தியக் கம்பெனி முகலாய பேரரசர்களிடமிருந்து திவானி உரிமையைப் பெற்றது. கம்பெனி தற்சமயம் வரிவசூல்செய்யும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருந்தது. எனவே கிவைவ வரிவசூல் செய்யும் பொறுப்பை நவாபின் அதிகாரிகள் வசம் விட்டார். நீதிவிசாரணை செய்யும் பொறுப்பும் அவர்கள் வசமே ஒப்படைக்கப்பட்டது. நாட்டின் நிர்வாகப் பொறுப்பை கம்பெனி மேற்கொண்டது. இந்த ஆட்சி முறையே இரட்டை ஆட்சி என அழைக்கப்பட்டது. பொறுப்பிலிருந்து அதிகாரத்தை பிரிப்பது துரதிருஷ்டசவமானது. அதுபல குழப்பகளுக்கு காரணமாக ஒரு பெரிய பயங்கர பஞ்சத்தை ஏற்படுத்திவிட்டது.

**மதிப்பீடு**

இராபட் கிவைவ் ஆங்கில பேரரசிற்கு மாபெரும் பணிகளை செய்திருக்கிறார். டூப்ளேயினுடைய தந்திரங்களை சிதறடித்து தென்னிந்தியாவின் ஆங்கில ஆதிக்கத்தைநிலைநாட்டினார். பிளாசிக் வெற்றியின் காரணமாக பிரிட்டிஷ் பேரரசிற்கு அடிப்படை போட்டுவிட்டார். அலகாபாத் உடன்படிக்கையின்படி கம்பெனியின் அரசியல்உரிமைகளை சட்ட ரீதியாக நிலைநாட்டினார். அவர் ஒரு பெரும் போர்வீரர் மட்டுமல்ல நிர்வாகி இராஜதந்திரியுமாவார். கிளைவினுடைய இந்திய வாழ்க்கை கீழ்க்கண்டவாறு சுருக்கமாக விளக்கப்படலாம். “முதலில் ஒரு வணிகர் பின்பு ஒரு போர் வீரர் தளபதி இறுதியில் ஒரு ராஜதந்திரி.”

**வங்காளத்தில் ஆங்கில ஆதிக்க வளர்ச்சி**
**பிளாசிப் போர் 1757**

**பிளாசிப் போருக்கான காரணங்கள்.**

- 1756ல் அலிவா்திகான் இறந்தாா். அவருக்கு ஆண்பிள்ளை இல்லாத காரணத்தினால் அவரது மகளின் மகனான(பேரன்) சிராஜ் உத்தௌலா எவ்வித சிரமமுன்றி அரியணை ஏறினாா். ஆனால் அவருக்குப் பல பிரச்சினைகள் ஏற்பட்டு அதன் விளைவாக இறுதியில் பிளாசிப்போா் நடைபெற்றது.
- ஐரோப்பாவில் ஏழாண்டுப்போா் ஏற்படுதற்கான வழிநிலைகளைக் கண்ட ஆங்கிலேயா்கள் முன்னேற்பாடாக, வங்காளத்தில் தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்தவும், பிரெஞ்சுக்காரா்களின் ஆக்ரமிப்பிலிருந்து தங்களைக் காத்ர்க் கொள்ளவும், தங்கள் வியாபாரக்கிடங்குகளைச் சுற்றி புதியகோட்டைகள் கட்ட ஆரம்பித்தாா்கள். பழைய கோட்டைகளில் பீரங்கிகளை அமைத்தனா்.
- இதனால் அதிக கோபம்கொண்ட நவாப், தன்னுடைய அனுமதியில்லாமல் புதிய கோட்டைகள் கட்டக்கூடாதுஎன்றும், கட்டபபட்டகோட்டைகளை தகா்த்தெறிய வேண்டும் என்றும் கட்டளையிட்டு கல்கத்தாவின் ஆங்கில கவா்னா் டிரேக் என்பவருக்கு கடிதம் எழுதினாா். இக்கட்டளைக்கு ஆங்கிலேயா் அடிபணிய மறுத்தனா்.
- இதற்கிடையில் அரண்மனையில் அரசு காரியங்களை கவனித்துவந்த ராஜவல்லவா் என்ற திவானன் மகனான கிருஷ்ணதபஸ் பணத்துடனும் தனது சுற்றத்தினருடனும் தப்பி ஓடிவிட்டாா். அவருக்கு ஆங்கிலேயா் அடைக்கலம் கொடுத்தனா். அந்த குடும்பத்தினரை ஒப்படைக்கும்படி கேட்டு இரண்டு தூதா்களை கல்கத்தாவிற்கு அனுப்பினாா் சிராஜ் உத்தௌலா. ஆனால் அந்த இரண்டு தூதா்களையும் அவமரியாதை செய்து திருப்பி அனுப்பிவிட்டனா் ஆங்கிலேயா். இது சிராஜ் உத்தௌலாவை வெகுண்டெசை செய்தது.

- சிராஜ்உத்ளௌலா பதவியிலமா்ந்தபின் அவருக்கெதிராகச் சதிசெய்த அவருடைய பெரியம்மா கசிதி பீகம் என்பவரை முறியடித்து தனது பாதுகாப்பின்கீழ் வைத்ததா். இவ்வாறு உள்நாட்டு சதியை போக்கிய சிராஜ் உத்ளௌலாவைக்கண்டு பயந்த ஆங்கிலேயா் தங்களின் தவறுக்கு மன்னிக்க வேண்டினா். ஆனால் கட்டிய கோட்டைகள் இடிக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக அருந்தாா். இது பற்றி டிரேக்கின் பதில் கடிதம் போருக்கு இழுப்பதாகவேயிருந்தது. அத்துடன் அவரது சித்தி மகனான சௌகத்ஜங் என்பவருடன் (அவரது மதுட போட்டிக்காரா்) சோ்ந்து சதித் திட்டம் தீட்ட ஆரம்பித்தனா் ஆங்கிலேயா். எனவே ஆங்கிலேயரை அடக்கி ஒடுக்க எண்ணினாா் சிராஜ் உத்தௌலா.

- **கல்கத்தா இருட்டறை சம்பவம்**:

உடனடியாக செயலில் இறங்கினாா் சிராஜ் உத்தௌலா. 1757 ஜீன் 4ம் தேதி மூா்ஷிதாபாத்தை அடைந்து காசிம்பஜாரிலிருந்த ஆங்கிலேயரின் பண்டகச் சாலையை கைப்பற்றினாா். ஜீன் 20ல் கல்கத்தா சென்று வில்லியம் கோட்டையை பிடித்தாா். அங்கிருந்த கவா்னா் டிரேக்கும், ஆலோசனை குழுவினரும், முக்கிய ஆங்கிலேயா் பலரும் கோட்டையை விட்டு வெளியேறி, கப்பலில் ஏறி தங்களை பாதுகாத்துக் கொண்டனா். ஆனால் ஹோல்வெல் மற்றும் சிலரும் சிறைப்படுத்தப்பட்டனா்.

சிராஜ் உத்தௌலா கல்கத்தாவைப் கைப்பற்றிய நிகழ்ச்சி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. சிறைப்படுத்தப்பட்ட 146 ஆங்கிலேயரை ஓா் இருட்டறையில் அடைத்து வைக்குமாறு சிராஜ் உத்தௌலா கூறியதாகச் சொல்லப்படுகிறது. அந்த அறையின் நீளம் 18அடி அகலம் 14'10"ஆகும். ஒரு நான் இரவு முழுவதும் அடைக்கப்பட்டிருந்ததால் மறுநாள் 123 போ் இறந்தனா். 23போ்தான் தப்பிப் பிழைத்தனா். அவா்களில் ஒருவா்தான் ஹோல்வெல் (இந்த நிகழ்ச்சியே அவா் கூறியதாக வந்ததுதான்) இத்தகைய கொடுமை நடைபெறவே இல்லையென சில வரலாற்றாசிரியா்கள் கூறுகிறாா்கள். இருட்டறையில் சில கைதிகள் அடைக்கப்பட்டனா்

என்பதையும், அவர்களுள் சிலரும் காயம்பட்டவர்களும் இறந்தார்கள் என்பதையும் உண்மையென்று நம்பலாம்.

கல்கத்தா இருட்டறை சம்பவம் உண்மை அல்ல என்பதற்கான காரணங்கள்:

- அக்காலத்து முகமதிய வரலாறுகளிலாவது, இந்தியக் குறிப்புகளிலாவது அதைப்பற்றிய செய்தி ஒன்றையும் காண்பதில்லை.
- அத்தகைய சிறிய அறையில் 146 பேர் அடைக்கப்பட்டார்கள் என்பது நம்பக்கூடியதாக இல்லை.
- ஹோல்வெல் என்பவர் பொய் சொல்ல அஞ்சாதவர்.
- மேலும் அக்காலத்திய எந்த ஆங்கிலக் குறிப்புகளும் இந்த நிகழ்ச்சியைப்பற்றி கூறவில்லை.
- இறுதியாக, உயிரிழந்தவர்களுக்காக எவ்வித நஷ்டஈட்டையும் நவாப்பிடம் ஆங்கிலேயர் கோரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இக்காரணத்தால்'கல்கத்தாஇருட்டறை சம்பவம்' என்பது ஆங்கிலேயரால் தங்கள் நலனுக்காக புனைந்து கூறப்பட்ட கட்டுக்கதையாகும். நோயினாலும் காயம்பட்டும் சிலர் இறந்திருக்ககூடும். ஆனாலும் இந்த நிகழ்ச்சி நடைபெறவே இல்லையென்று கூறமுடியாது. கிளைவ் சில இடங்களில் இதைப்பற்றி குறிப்பிட்டுள்ளாார். டுச்சுக்காரர்களும் சான்று பகிர்கின்றனர். ஆயினும் இக்கொடுமைக்கு சிராஜ் உத்ளௌலா காரணம் அல்ல என்றும் கூறப்படுகிறது.

- கல்கத்தாவைப் பிடித்தபின் மாணிக்சந்து என்ற படைதலைவரிடம் கல்கத்தாவை ஒப்படைத்துவிட்டு மூர்ஷிதாபாத்துக்கு திரும்பிவிட்டார் சிராஜ் உத்தௌவா. இதற்கிடையில் மகுடப்போட்டியாளரான சௌகத்ஜங் மீது தான் வங்காளத்தின் முகராயப் பிரதிநிதியாக இருப்பதற்கான உத்தரவைப் பெற பகிரங்க முயற்சி செய்தார். எனவே சிராஜ் உத்தௌலா சௌகத்ஜங் மீது படையெடுத்து அவரைக் கொன்றார். இப்போது நவாப் தனது பாதுகாப்பிற்கு ஆபத்தில்லை என்று கருதினார். தோல்வியடைந்த ஆங்கிலேயர் வங்காளத்தை விட்டே வென்று விடுவலார்கள் என்று எதிர்பார்த்தார். இது மிகவும் முட்டாள்தனமானது ஆகும். பின் யோசனையின்மையும் இது காட்டுகிறது. வுரப்போகும் ஆபத்தை அவர் அறியவில்லை.
- கல்கத்தா வீழ்ச்சிக்குப் பின்னர் ஆங்கிலேயர்கள் பால்ட்டா என்ற இடத்தில் தஞ்சம் அடைந்திருந்தனர். அந்த இடத்திலுந்த நவாபின் முக்கிய விரோதிகளுடன் தொடர்பு கொண்டு சதிசெய்ய ஆரம்பித்தனர். கல்கத்தாவின் அதிகாரிகளான மாணிக்சந்து, அமிசந்து, ஜெகத்சேத்து ஆகியவர்களை தம் கொள்கைகளை ஒப்புக்கொள்ள வைத்தார்கள். நவாபும் ஆங்கிலேயர்களுக்கு இழந்த சலுகைகளை திருப்பி அளிக்க சம்மதித்தார்.
- இதற்கிடையில் ரகசியமாக போருக்கான ஆயத்தங்களை செய்து வந்தனர் ஆங்கிலேயர். சேன்னையிலிருந்து ஒரு படையுடன் கிளைவும், வாட்சனும் 1756 டிசம்பர் 14ல் பால்ட்டா வந்து சேர்ந்தனர். பால்ட்டாவிலிருந்து கொண்டு வாட்சன் நவாபுக்கு கடிதம் ஒன்று எழுதினார். துங்கள் கம்பெனிக்கு கொடுக்கப்பட்ட பழைய உரிமைகளையும் சலுகைகளையும்திரும்பக் கொடுத்து, தாங்கள் அடைந்த துன்பத்திற்கு நஷ்ட ஈடும் தரும்படி அதில் கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தது. நவாபும்

சமாதானத்தை விரும்பி பதில் எழுதினார். அது கிடைப்பதற்து முன்பாகவே(அல்லது கிடைக்கவில்லை என்று சொல்லிக் கொண்டு) கிளைவ் கல்கத்தா மீது படையெடுத்தார். 1757, ஜனவரி 12ம் தேதி கல்கத்தா கைப்பற்றப்பட்டது. ஹீக்ளி கொள்ளையடிக்கப்பட்டது.

- இந்த ஆத்திரமூட்டும் ஆங்கிலேயரின் நடவடிக்கைகளுக்குப் கிறகும் சிராஜ் உத்தௌலா கல்கத்தாவிற்கு வந்து 1757 பிப்ரவரி 9ம் தேதி ஆங்கிலேயருடன் 'ஆலிநகர் உடன்படிக்கை' ஒன்றை செய்து கொண்டு ஆங்கிலேயர் கேட்ட பெரும்பான்மை சலுகைகளை கொடுத்துவிட்டார். (முதலில் ஆங்கிலேயரின்ன மீது வெறுப்படைந்து படையெடுத்து சென்று விரட்டியதும், இப்போது ஓடி வந்து அவர்களுடன் சமாதானம் செய்துக் கொண்டதும் சிராஜ் உத்தௌலாவின் குண இயல்புகளில் காணப்பட்ட முரண்பாடுகளையே காட்டுகிறது)

- ஆப்போது ஐரோப்பாவில் ஊழாண்டுப் போர் ஆரம்பித்துவிட்டது. இந்தியாவில் கிளைவும் வாட்சனும் பிரெஞ்சுக்காரரின்பண்டகச் சாலைகளைக் கைப்பற்ற நினைத்தார். வங்காளத்தில் சந்திரநாகூரைப் பிடிக்க விரும்பினர். ஆனால் சிராஜ் உத்தௌலா இதனை எதிர்த்தார்.தனது ஆதிக்கத்தில் உள்ள பிரெஞ்சு மக்களை அழிக்க தான் அனுமதிக்க முடியாது என்றார். ஆனால் இதனைப் பொருட்படுத்தாது 1757 மார்ச் 17ல் சந்திரநாகூரைப் பிடித்தனர் ஆங்கிலேயர். ஆனால் மிக்க தைரியத்துடன் பிரெஞ்சுக்காரர்களின் உதவியை நாடி தக்காணத்லிருந்து புஸ்ஸியை அழைத்தார் சிராஜ் உத்தௌலா. வங்காளத்திலிருந்து பிரெஞ்சுக்காரர் உதவியுடன் மீண்டும் தங்களை வெளியேற்ற முயற்சி நடக்கக்கூடும் என்று பயந்தனர் ஆங்கிலேயர்.

- எனவே சிராஜ் உத்தௌலாவிற்குப் பதிலாக தமக்குச் சாதகமான ஒரு நவாபை பதவியிலமர்த்த ஆங்கிலேயர் முயற்சித்து அதற்கான சதித் திட்டத்தில் இறங்கினர். நவாப்பின் படைத்தளபதியும் மைத்துனருமான மீர்ஜாபரை நவாப் ஆக்குவதாக கூறினர். மீர்ஜாபர், ராய்துர்லப் மற்றும் ஐகத்சேத்து என்ற பாங்கர் ஆகியோருடன் சதிசெய்து முறையான சதி ஒப்பந்தம் 1757 ஜீனில் செய்துக்கொள்ளப்பட்டது. அதன்படி வங்காள நவாப்பாக மீர்ஜாபர் நியமிக்கப்படுவார். ஆங்கிலேயரின் பழைய உரிமைகளும் ஆதிக்கமும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. டாக்கா, காஸீம் பஜாரிலிருந்த ஆங்கிலேயரின் பண்டகசாலைகளை காவற்படுத்திக்கொள்ளும் உரிமை வழங்கப்பட்டது. தங்கள் படையை வைத்துக்கொள்ள சில நிலப்பகுதிகளைப் பெற்றார்கள். தலைநகர் மூர்ஷிதாபாத்தில் ஒரு ஆங்கிலேய ரெசிடண்ட் இருப்பார்.

இந்த சதிதிட்டத்தின் கடைசி நேரத்தில் ஒரு தடங்கல் ஏற்பட்டுவிட்டது. காரணம் ஆங்கிலேயருக்களுக்கும், சதிகாரர்களுக்கும் மத்தியஸ்தராக இருந்த அமின்சந்து என்பவர். இந்த சதித்திட்டத்தை தான் நவாபிடம் கூறிவிடாமல் இருப்பதற்காக நவாபின் கருவூலத்திலிருந்து 5 சதவீதம் பங்கு லஞ்சமாக கேட்டார். கிளைவ் வஞ்சகமாக அவரை ஏமாற்றிவிட்டார். நகல் பத்திரத்தில் வாட்சனின் கள்ளக் கையெழுத்தைப்போட்டு, அதில் அமின்சந்துக்கு கொடுக்கப்பட்ட வேண்டியதொகை குறிப்பிடபட்டிருந்தது. ஆனால் மூலப்பத்திரத்தில் அத்தகைய நிபந்தனை குறிப்பிடப்படவில்லை. நவாபுக்கு விரோதமாக ஆங்கிலேயர் படையெடுக்கும்போது படைத்தலைவர் மீர்ஜாபர் ஆங்கிலேயர் பக்கம் சேர்ந்து கொள்வதாக ஒப்புக்கொண்டார்.

**பிளாசிப் போர்: 1757,ஜீன் 23**

சிராஜ் உத்தௌலாவிற்கு எதிராக இத்தனை சதித்திட்டங்களையும் வகுத்த கிளைவ் ஆங்கிலேயருக்கு நவாப் செய்த அநீதிகளைபற்றி ஒரு கடிதம் எழுதி அனுப்பிவிட்டு 1300 வீரர்களைக் கொண்ட ஒரு படையுடன் சிராஜ் உத்தௌலாவைத் தாக்க சந்திர நாகூரிலிருந்து புறப்பட்டார். நம்பிக்கைத் துரோகத்தின் காரணமாக ஹீக்ளி, காட்வா ஆகிய பகுதிகளிலிருந்த ஆங்கிலேயரின் படைகள் தீவிரமாக முன்னேறி நாதிய மாவட்டத்தில் கங்கை நதிகரையிலுள்ள பினாசி என்ற இடத்தை ஜீலை 22ம் தேதி இரவு வந்து சேர்ந்தன. இதனை அறிந்த நவாப் ஐம்பது ஆயிரம் படைவீரர்களுடன் பகைவர்களை எதிர்த்தார்.

1757,ஜீன் 23ம் தேதி காலையில் பிளாசிப் போர் ஆரம்பமானது. நவாபின் சிறந்த படைத்தலைவர்களான மீர்ஜாபர், யார்லதில்கான், ராய்துர்லப் ஆகியோர் நம்பிக்கை துரோகம் செய்து போரிடாமல் இருந்தனர். விசுவாசமிக்க சிறிய படைத் தலைவர்களான மோகன்லால், மீர்மதன் ஆகியோர் கடுமையாகப் போர்புரிந்தனர். நவாபின் பீரங்கிப்படைத் தாக்குதல்களைச் சமாளிக்க முடியாத கிளைவின் படைகள் அருகிலுள்ள மாந்தோப்பினுள் ஓடிவிட்டது. அங்கிருந்தப்படியே சுட்டுக் கொண்டிருந்தனர். அதில் நவாப்பின் நம்பிக்கைகுரிய மீர்மதன் கொல்லப்பட்டார். சதியை அறியாத நவாப் மீர்ஜாபரை அழைத்து ஆலோசனை நடத்தினார்.

சதிகாரன் மீர்ஜாபரின் ஆலோசனையின் பேரில் படைகளை பின் வாங்கிக் கொள்வது என்று முடிவு செய்யப்பட்டது. எல்லாப் படைதலைவர்களுக்கும் பின்வாங்குமாறு ஆணை பிறப்பிக்கப்பட்டது. திறமைமிக்க தளபதி மோகன்லாலும் பின் வாங்கினார். இது வீரர்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தியது.

ஒருவரைப் பார்த்து ஒருவர் ஓட ஆரம்பித்தனர். யாரும் விரட்டாமலே ஓடினர்!(இதுதான் ஊழ்வினையோ?)சிறிது நேரத்தில் படை வீரர்களின் கூடாரங்கள் காலியாயின. கலங்கிப் போன சிராஜ் உத்ளௌலாவும் இரவோடு இரவாக நடந்தே

மாறுநாள் 24ம் தேதி காலை எட்டு மணிக்கு மூர்ஷிதாபாத் வந்தார். சேர்ந்து ஓடி ஒளிந்த படைத்தலைவர்களை அழைத்தார். யாரும் வரவில்லை. கலங்கியசிராஜ் உத்தௌலாதனது மனைவி மக்களுடன் மூர்ஷிதாபாத்தை விட்டுஓடிவிட்டார். அதிக இழப்பும் இல்லாமல் பிளாசிப் போரில் 'நம்பிக்கை துரோகம்' என்ற ஆயுதத்தை மட்டுமே ஆங்கிலேயர் பயன்படுத்தி வென்றனர். ஆங்கிலேயர் பக்கம் 23 பேர் கொல்லப்பட்டனர். 47பேர் காயம் அடைந்தனர். நவாப் பக்கம் 500 பேர் கொல்லப்பட்டனர்.

**போரின் விளைவுகள்**

- பிளாசிப் போர் ஒரு சிறிய யுத்தம் என்றாலும் அதன் விளைவுகள் உலகத்தில் ஏற்பட்ட பெரிய உலகப்போரின் விளைவுகளைவிட முக்கியமானவைகள். ஆங்கிலேயர் முதலில் வங்காளத்தையும் பின்னர் இந்தியா முழுவதையும் கைப்பற்ற பிளாசிப் போர் வழிவகுத்தது.

- சிராஜ் உத்தெளலா தலைநகரை விட்டு ஓடிபோன போதிலும் ஒருசில நாட்களுக்குள் கண்டுபிடிக்கப்பட்டு கைதியாக கொண்டுவரப்பட்டார். அவர் மீர்ஜாபரின் மகன் மீரான் என்பவரால் கொல்லப்பட்டார்.

- 1757ஜீன் 29ல்மீர்ஜாபர் மூர்ஷிதாபாத்தை அடைந்தார். கிளைவின் உதவியால் வங்காளத்தின் நவாபாகப் பிரகடனப்படுத்தப்பட்டார். அவரும், அவருக்குப்பின் வந்த நவாபுகளும் ஆங்கிலேயர்கட்கு அடங்கியகைப்பாவையாகவே இருந்தனர்.

- நன்றியுள்ள மீர்ஜாபர் ஆங்கிலேயர்களுக்கு ஒரு கோடி ரூபாய் கொடுத்ததுடன் 24 பர்கானாக்களில் வரி வசூலலிக்கும் உரிமையையும் கொடுத்தார். இந்த நிலப்பகுதி பின்னர் ஆங்கிலேயரின் நேரடி ஆட்சிக்குட்பட்டது. இது தவிர மீர்ஜாபர் கிளைவிற்கும், அவரது ஊழியர்களுக்கு ஏராளமான வெகுமதிகள் வழங்கினார்.

- ஆங்கிலேயர்படையின் போர் திறனும்,ராபர்ட் கிளைவின் அரசியல் தந்திரும்பாராட்டப்பட்டது.

'ஆங்கிலேய வியாபாரக் கம்பெனிக்குமட்டுமல்லாமல் இங்கிலாந்து தேசத்திற்கேசிறப்பைக் கொடுத்த யுத்தம் இது' என்றார் வாட்நன். இப்போரின் விளைவாக ஆங்கிலேயரின் வியாபாரம் பல்கி பெருகியது.

6.இஸ்லாமிய அரசர்களாலும், கவர்னர்களாலும் ஆளப்படுவதை விரும்பாத இந்தியர்கள் அவர்களுக்கு விரோதமாகக் கிளர்ச்சி செய்து அவர்களை அழிக்ககூடிய எந்தக் கூட்டத்தோடும் ஒத்துழைக்கத் தயங்கவில்லை என்பதை பிளாசிப்போர் காட்டியது
7.வங்காளத்திலிருந்த பிரெஞ்சுக்காரர்களும் வெளியேற்றப்பட்டு விட்டதால் ஆங்கிலேயர்கள் ஏகபோக வியாபார உரிமையை அனுபவிக்க ஆரம்பித்தனர்.
8. நவாபின் சபையில் ஆங்கிலப் பிரதிநிதி ஒருவரை வைத்துக்கொள்ளவும், ஒரு ஆங்கிலப் படையைப் பாதுகாப்பாக வைப்பவும் ஆங்கிலேயர் உரிமை பெற்றனர்.
9.போரின் ஆரம்பத்தில் சாதாரண தளபர்த்தராக இருந்த கிளைவ் 1758ல் கல்கத்தா வில்லியம் கோட்டையின் கவர்னராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1760ல் அவர் இங்கிலாந்துக்குத் திரும்பியபோது மாபெரும் வரவேற்பும், பாராட்டுகளும் கிடைத்தது.

**பக்ஜார் போர்1764**
**பிளாசிப் போருக்குப்பின் மீர்ஜாபரின் நடவடிக்கைகள்**

பிளாசிப் போருக்கு பின்னர் அரசாங்கம் சம்பந்தப்பட்ட வகையில் பெரிய மாற்றம் ஏதும் ஏற்படவில்லை. நவாப் பதவியேற்ற மீர்ஜாபர் திறமையற்றவலாக இருந்தாலும், அரசாங்கத்தில் பண நெருக்கடி ஏற்பட்டாலும் கிளைவின் பாதுகாப்பிலேயே இருக்கவேண்டியதிருந்தது. கொடுக்க ஒப்புக் கொண்ட பணத்தை தவணை முறையில் கொடுத்தார். முறையாக உரிமைகள் அல்லது சிறப்புரிமைகள் எதுவும் இல்லாமல் மீர்ஜாபரின் நடவடிக்கைகள் மீது அதிக அதிகாரத்தைச் செலுத்தி வந்தார் கிளைவ். சுயமாக எதுவும் செய்ய இயலாத மீர்ஜாபர் ஆங்கிலேயர் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முயன்று கொண்டிருந்தார்.

**பக்ஜார் போருக்கான காரணங்கள் :**
**1.ஆங்கிலேயர் மீது மீர்ஜாபருக்கு ஏற்பட்ட வெறுப்பு :**
தனது வருமானம் கணிசமான அளவு குறையவே, இந்து அதிகாரிகள், செல்வந்தர்கள் ஆகியோரை மிகவும் கொடுமைப்படுத்த ஆரம்பித்தார் மீர்ஜாபர். ராய்துர்லப் என்ற செல்வந்தர், ராம் நாராயணன் என்ந பீகாரின் கவர்னர் ஆகியோருக்கு தீங்கு செய்து அழிக்க திட்டமிட்டார் மீர்ஜாபர்.ஆனால் அந்த அதிகாரிகளும் எவ்விதப்கேடும் உண்டதகாதபடி அவர்களை நவாபிடமிருந்து காப்பாற்றினார் கிளைவ். இந்துக்களின் நலன்களைப் பாதுகாத்து வந்த ஆங்கிலேயர் மீது வெறுப்புக்

கொண்டார் மீர்ஜாபர். அதே நேரம் இவரது செயல்களால் மக்கள் இவரை வெறுக்க ஆரம்பித்தார்கள்.

- **பேரரசர் 11-ம் ஷாஆலமின் படையெடுப்பு :**

வுங்காளத்தின் வளம்மீது மோகம்கொண்ட முகலாயப்பேரரசா இரண்டாம் ஷா ஆலம் (1759-1806) பாட்னா மீது படையெடுத்து முற்றுக்கையிட்டார். வங்காளத்தையும், பீகாரையும் கைப்பற்ற திட்டம் தீட்டினார். மீர்ஜாபரின் மகன் மீரானின் தலைமையில் படை ஒன்று முகலாயர்களை விரட்டியது. அத்துடன் நவாபின் உதவிக்காக கிளைவின் தலைமையில் ஒரு படைவந்ததால் எவ்வித பிரச்சனையும் இல்லாமல் போர் ஓய்ந்தது. எனவே மீர்ஜாபர், தான் பதவியில் நீடிக்கவேண்டுமானால் ஆதரவு அவசியம் என்பதையும் உணர்ந்து கொண்டார். கிளைவிற்கு நன்கொடையாக 24 பர்கானா என்ற ஜாகிரை அளித்தார். இது கிளைவினுடைய ஜாகிர் எனப்பட்டது.

3.டச்சுக்காரர்களுடன் மீர்ஜாபர் செய்த சதி :

ஆனாலும் நன்றி கெட்ட மீர்ஜாபர் ஆங்கிலேயரின் பிடியிலிருந்துதன்னை விடுவித்துக்கொள்ள சின்சூராலிருந்த டச்சுக்காரர்களுடன் தனது மகன் மீரான் முலம் ரகசிய தொடர்புக் கொண்டார். டச்சுத்தலைவர்களான பிஸ்டம்,வெர்னட் ஆகியோர் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஆங்கிலேயர்களை வங்காளத்தலிருந்து விரட்டிவிட நினைத்தார்கள். படைவீரர்களுடன் ஏழு டச்சுக்கப்பல்கள் தயாராயின. கிளைவும் காலம் தாழ்த்தாமல்போரைத் துவங்கினார். சந்திர நாகூருக்கும் சின்சுராவுக்குமிடையில் பிதேரா என்ற இடத்தில் போர் 1759 நவ.25ல் நடைபெற்றது.

டச்சுப்படை ஆங்கில தளபதி கானல் போர்ட் என்பவரால் தோற்கடிக்கப்பட்டு கப்பல்கள் கைப்பற்றப்பட்டன. இப்போர் டச்சுக்காரர்களுக்கு அழிவை ஏற்படுத்தியது. வங்காளத்தில் பெரும் செல்வாக்குடன் ஆங்கிலேயர் அரசியல் ஆதிக்கம் பெற்றனர்.

**4.வாரிசுரிமைப் பிரச்சனை :**

1760- பிப்ரவரியில்கிளைவ் தாய்நாடு திரும்பியபோது குழப்பம் ஏற்பட்டது. ஏனெனில் மீத்ஜாபரிடம் அவர் தரவேண்டிய பாக்கிக்காகத் தொந்தரவு செய்தனர் ஆங்கிலேயர். முறையற்ற வாணிப நடவடிக்கைகளில் ஈடுபட்டு பொருளீட்டினர். மேலும் மராட்டியர்களும் பேரரசர் இரண்டாம் ஷா ஆலமும் வங்காளத்தின் மீது படையெடுப்புகள் நிகழ்த்தினர். எனவே இச்சூழ்நிலையில் ஆங்கிலேயரின் உதவியைத்தான் மீர்ஜாபர் நாடவேண்டியதிலுந்தது. இச்சமயத்தில் 1760ல் மீர்ஜாபரின் ஏகபுதல்வனாக இருந்த மீரான் இறந்ததால் வாரிசு பற்றிய பிரச்சனை ஏற்ப்பட்டது. இப்பிரச்சனையே போருக்கு நேராகவழி நடத்திச் சென்றது. இடைக்கால கவர்னராகப் பதவி ஏற்றியிருந்த ஹோல்வெல் மீர்ஜாபரை வெறுத்தார். டச்சுக்காரர்களுக்கு ஆதரவுக் காட்டியதால் அவர் மீது சினம் கொண்டிருந்தார். மீர்ஜாபருக்குப் பின் அவரது மருமகனான மீர்காசிமை நவாபாக நியமிக்க ஹோல்வெல் திட்டமிட்டார். அத்திட்டத்தை 1760 ஜீலையில் புதிதாகப் பதவி ஏற்ற கவர்னர் வான்சிட் டார்ட் பின்பற்றி மீர்காசிமுடன்1760 செப்டம்பர் 27ல் ஒரு ரகசிய உடன்படிக்கை செய்துக் கொண்டார்.

அதன்படி, கம்பெனிக்கு கொடுக்கப்பட வேண்டிய பாக்கித் தொகையைத் தான்கொடுப்பதாகவும் பர்துவான், மிதினப்பூர்,சிட்டகாங் ஆகிய மாவட்டங்களையும் கொடுப்பதாகவும் மீர்காசிம் ஒப்புக்கொண்டார். கம்பெனியார் பதிலுக்கு வாரிசுரிமையை அவருக்குப் பெற்றுத்தர உறுதியளித்தனர்.

**1760-ம் வருடத்தமில்லாப் புரட்சி :**

இந்த உடன்படிக்கைக்குப்பின்னர் வங்காளத்தில் ஒரு 'ரத்தமில்லாப்புரட்சி' ஏற்பட்டது. 1760 அக்.14ம் தேதி வான்சிட்டார்ட் கைல்லார்டு என்ற தளபதியுடன்

மூர்ஷிதாபாத் சென்றார். மீர்ஜாபருடன் தங்கள் திட்டம் குறித்து ஐந்து நாட்கள் ஆலோசனை நடத்தினார் மீர்ஜாபர் மறுக்கவே அவர் அரண்மனை முற்றுகையிடப்பட்டது. உடனே மீர்ஜாபர் தாமாகவேமுடிதுறந்தார். ஓய்வூதியம் கொடுக்கப்பட்டு கல்கத்தாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

**மீர்காசீம் வங்காள நவாப் ஆனார்**

**6.நவாப் மீர்காசீம் (1760-63)**

பாரசீகத்தில் உள்ள ஓர் குடும்பத்தைச் சேர்ந்தவர் மீர்காசீம்.திறமைமிக்கவர். நாட்டுப்பபற்று மிக்கவர். கல்வியறிவுமிக்கவர். மீர்ஜாபர் பட்டத்திற்கு வந்த பின் இவர் செல்வாக்குப் பெருகிறது. வங்காள நவாபாக ஆவதற்கு முன்பே நிர்வாக அனுபவம் இவருக்கியிருந்தது. 1760ல் ரத்தம் சிந்தாப் புரட்சியின் மூலம் நவாபானார். பின்னர் ஆங்கிலேயருக்கு வாக்களித்தப்படி பர்துவான்,மிதினப்பூர், சிட்டகாங் ஆகிய மாவட்டங்களை அளித்தார். வணிகக் குமுவிற்கு தரவேண்டிய பாக்கியைக் கொடுத்தார். குர்ஜின்கான் என்ற ஆர்மினியரின் உதவியுடன் படைக்கு நல்ல பயிற்சி அளித்தார். நாட்டில் நல்லாட்சி ஏற்படுத்துவதற்கான பல முயற்சிகள் எடுத்தார். ஆனால் கூடிய சிக்கிரமே ஆங்கிலேயருடன் பெரிய போராட்டத்தில் மீர்காசீம் ஈடுபட வேண்டியதிருந்தது. 7.மீர்காசீம் ஆங்கிலேயருடன் கொண்ட சச்சரவு :

1761-ம் ஆண்டு இறுதியில் பாட்னாவின் ஆங்கில பண்டகச் சாலையின் தலைவராக எல்லிஸ் என்பவர் அமர்ந்தபின் நவாபுக்கும் ஆங்கிலேயருக்கிடையே நிலவிய உறவு சீர் கெட்டது. இதற்கு காரணம் ஆங்கிலேயர்கள் தங்களை எஜமானர்களாக நினைத்துக்கொண்டு நவாபின் அதிகாரிகளை மதிக்கவில்லை. மீர்காசீமிடம் பல வழிகளில் பணம் பறித்தனர். எனவே கம்பெனி பணியாளர்கள் செய்து வந்த தனிவியாபாரத்திற்கு வரி சலுகை கிடையாது என்றார் மீர்காசீம். அத்துடன்தனது தலைநகரை மூர்ஷிதாபாத்திலிருந்து மாங்கீருக்கு மாற்றினார். அங்கே காவலை வலிமைப்படுத்தினார். தனது ராணுவத்தைப் பெருக்கி பலப்படுத்திக் கொண்டார். இந்த நிகழ்ச்சிகளால் கோபம் கொண்டனர் ஆங்கிலேயர். சிக்கலைத் தீர்ப்பதற்கு போரை தவிர வேறு வழி இல்லாது போயிற்று. 1763மே மாதம் 25-ம் தேதி எல்லிஸ் பாட்னாவைக் கைப்பற்றினார். கோபம் கொண்ட மீர்காசீம் கல்கத்தாவிலிருந்து பாட்னாவிற்கு போர் தளவாடங்களை ஏற்றிக் கொண்டு சென்ற சில ஆங்கிலப் படகுகளைக் கைப்பற்றினார். மேஜர் ஆடம்ஸ் என்பவர் தலைமையில் சென்ற ஆங்கிலப் படைகாட்வா, மூர்ஷிதாபாத், உதயநாலா, மாங்கீர் ஆகிய இடங்களில் நடந்த போரில் வெற்றியடைந்தன.

ஆங்கிலேயர்களை பழிவாங்கும் நோக்கத்துடன் பாட்னா சென்று அதைக் கைப்பற்றினார் மீர்காசீம். அங்கிருந்த இருநூறு பேரைக் கைது செய்தார். பின்னர் அந்தக் கைதிகள் தனக்கு துரோகம் செய்ததாகக் கருதி பலரைக் கொலை செய்தார். இந்த நிலையில் ஆடம்ஸ் மீர்காசீமை தோற்கடிக்க விரைந்தார்.ஆனால் மீர்காசீம் அயோத்திக்கு ஓடிவிட்டார். கல்கத்தாவிலிருந்த மீர்ஜாபர் மீண்டும் நவாப்பாக்கப்பட்டர்.

8.**ஆங்கிலேயருக்கு எதிரான மீர்காசியின் ராணுவக் கூட்டு :**

பாட்னாவை விட்டு ஓடிய மீர்காசீம் அயோத்தி நவாப் சூஜா உத்தௌளலாவின் அரச சபையில் தஞ்சமைடைந்தார். மீர்காசீம், தன்மையில் மீர்ஜாபரைப் போன்றவர் அல்ல. வங்காளத்தைத் திரும்ப நோக்கத்துடன் அயோத்தி நவாபான சூஜா உத்தௌளலாவுடனும், முகலாய பேரரசர் இரண்டாம் ஷா ஆலத்துடனும் ராணுவக் கூட்டு ஒன்றை செய்துகொண்டு ஆங்கிலேயருக்கு எதிராக படைவீரர்களைத் திரட்டினார்.

**பக்ஸார் போர் : 1764, அக்டோபர் 23**

ஆங்கிலேயருக்கு எதிராக உருவாக்கப்பட்ட இந்த கூட்டுப் படையை மேஜர் ஹெக்டர் மன்றோ என்பவர் தலைமையிலான ஆங்கிலப்படை 1764 அக். 23ல் பக்ஸார் என்ற இடத்தில் சந்தித்தது. ஆங்கிலேயரின் படையில் 2000 போர் வீரர்களுடன் 20 பீரங்கிகளும் இருந்தன. போர் மிக்க கடுமையாக நடைப்பெற்றது. ஆங்கிலேயர் தரப்பில் 900 பேரும் கூட்டுப் படையினரின் தரப்பில் 1000 பேரும் கொல்லப்பட்டனர். இப்போரில் கூட்டுப் படைகள் அறவே தோற்றகடிக்கப்பட்டன. அயோத்தியையும் ஆங்கிலேயர் பிடித்தனர். சூஜா உத்தௌலா ஓடிவிட்டார். மீர்காசீம் அனைத்தையும் இழந்து வடமேற்கு இந்தியாவுக்கு ஓட்டம் பிடித்தார். பேரரசர் இரண்டாம் ஷா ஆலம் ஆங்கிலேயர் பக்கம் சேர்ந்து கொண்டு அமைதியை நாடினார்.

**பக்ஸார்போரின் விளைவுகள் :**

- ஆங்கிலேயர் பலமிக்க அயோத்தி நவாபையும், அதற்கும் மேலான முகலாயப் பேரரசரையும் தோற்றகடித்தனர். இது ஆங்கிலேயரின் படைவலிமையை வெளிப்படுத்தியது. வட இந்தியப் படைகள் ஆங்கிலப் படைக்கு நிகரானவை அல்ல என்பது தெளிவானது.
- முகலாயப் பேரரசர் ஆங்கிலேயர்களால் போற்றப்பட்டு அவர்களிடமிருந்து உபகாரச் சம்பளம் பெறுபவரானார். அயோத்தி நவாப் சூஜா உத்தௌலாவும் ஆங்கிலேயரின் மேலாதிக்கத்தை ஏற்றுக்கொண்டார்.
- பிளாசிப் போரினால் ஆங்கிலேயர் இந்தியாவில் அடைந்திருந்த ஆதிக்கத்தை உறுதிப்படுத்துவதற்காகவே அமைந்தது பக்ஸார் போர். வங்காளத்தில் மட்டுமல்லாது

  இந்தியாவின் வடபகுதியிலும் ஆங்கிலேயர் செல்வாக்கு உயர இப்போர் வழிவகுத்தது.
- இப்போர் பிற்கால இந்தியாவை நிர்ணயிக்கிற போராகவே இருந்தது.
- கல்கத்தாவிலிருந்து டில்லி வரை ஆங்கிலேயரின் வியாபாரம் அமோகமாக நடைபெற்றது.
- பக்ஸார் போரில் வெற்றிக்கண்ட ஆங்கிலேயர் மகிழ்ச்சியுடன் மராத்தியர்களையும் ஆப்கானியர்களையும் தாக்கத் திட்டமிட்டனர்.

## வங்காளத்தில் கம்பெனியின் ஆட்சிமுறை
## (இரட்டை ஆட்சி, (1765-72)

பக்ஸார் போரில் ஆங்கிலக் கம்பெனியார் அடைந்த வெற்றிச் செய்தி இங்கிலாந்திற்கு எட்டியுடன் கம்பெனியின் நிர்வாகக் குழுவினர்குதூகலம் அடைந்தனர். ‘வங்காளத்தில் பிரிட்டிஷ் பேரரசுக்கு அடிக்கல் நாட்டியவர் கிளைவ்’என்று பாராளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றிப் பாராட்டினார்கள். வங்காளத்தில் ஆட்சிமுறையில் சீர்கேடுகள் தோன்றியதால் மீண்டும் கிளைவே அங்குச் சென்று ஆட்சி முறையில் ஒழுங்குசெய்யவேண்டும் என்று முடிவு செய்தனர். அதன்படி ராபர்ட்கிளைவ் 1765மே மாதம் வில்லியம் கோட்டையின் கவர்னராக நியமிக்கப்பட்டார்.

**வங்காளத்தின் நிலை :**

கிளைவ் இந்தியாவின் வடபகுதி முழுவதிலும் ஆட்சிமுறை அழிந்துபோகின்ற நிலையிலிருப்பதைக் கண்டார். பண ஆசை பிடித்த பணியாளர்கள் கம்பெனியின் பொருளாதாரத்தைக் கெடுத்ததோடு மட்டுமல்லாமல் மக்களின் எதிர்ப்புக்கும் ஆளாகியிருந்தனர். மேலும் பல சிக்கலான பிரச்சனைகளை நீக்கி கிளைவ் அங்கு ஓர்

சிறந்த ஆட்சிமுறையை அமைக்க பல வழிகளைக் கையாண்டார். அயோத்தி நவாப் சூஜா உத்தௌலாவுடனும் பேரரசர் இரண்டாம் ஷா ஆலத்துடனும் ஓர் உடன்படிக்கை செய்துக்கொண்டு அவர்களை ஆங்கிலேயரின் கைப்பாவைகளாக மாற்றினார். இச்சூழ்நிலையில்தான் வங்காளத்தில் புகழ்பெற்ற இரட்டை ஆட்சி முறையைப் புகுத்தினார் ராபர்ட் கிளைவ்.

**கிளைவின் இரட்டை ஆட்சி :**

முகலாயப் பேரரசர் காலத்தில் ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு திவானும் ஒரு சுபேதார் நியமிக்கப்பட்டிருந்தார்கள். சுபோதார் என்பவர் 'நிசாமத்' எனப்படும் படை பாதுகாப்பு, போலீஸ், குற்றப் பதிவு வழக்கு முதலிய அதிகாரங்களைக் கவனித்து வந்தார். திவான் என்பவர் வரிவசூல், சிவில் வழக்குகளில் நீதி வழங்குதல் ஆகிய அதிகாரங்களை கவனித்து வந்தார்.

1764-பக்ஸார் போரின் போது மீண்டும் நவாபான மீர்ஜாபர் 1765-பிப்ரவரியில் மாண்டார். அவருக்குப் பின் பதவியேற்ற நிஜாம் உத்தௌலா ஆங்கிலேயருக்கு கட்டுப்பட்ட நிலையில் இருந்தார். நிவாமத் உரிமையை ஆங்கிலேயருக்கு வழங்கினார். எனவே ஆங்கிலேயர் நிவாமத் உரிமையைப் பெற்றனர். பின்னர் ராபர்ட் கிளைவ் முகலாயப் பேரரசுடன் செய்துகொண்ட அலகாபாத் உடன்படிக்கையின்படி 'திவானி' உரிமையையும் பெற்றனர். 1765 ஆகஸ்ட் 12ம் தேதி முகலாயப் பேரரசர் பிறப்பித்த அரசக் கட்டளைப்படி கிழக்கிந்தியக் கம்பெனிக்கு வங்காளம், பீஹார்,ஒரிசா ஆகிய மாகாணங்களில் வரிவசூலிக்கும் திவானி உரிமையை அளித்திருந்தார்.

இவ்வாறு ஆங்கிலேயர்கள் திவான் என்ற முறையிலும் சுபேதார் என்ற முறையிலும் இருவகையான பணிகளையும் ஆற்றவேண்டியவர்களாயினர். அதாவது, திவான் என்ற முறையில் மாகாணங்களில் வரிவசூல் செய்வதற்கும் சிவில் நீதி வழங்குவதற்கும் கடமை ஏற்பட்டது. சுபேதார் என்ற முறையில் குற்றதுறை ராணுவம் ஆகிய அலுவல்களைச் செயலாற்றவேண்டும். ஆனால் கம்பெனியார் இந்த இரண்டு கடமைகளையும் தாமே நேரடியாக ஏற்றுக் கொள்ள தயங்கினர். அத்தகைய வேலைகளை இந்திய அதிகாரிகளிடமே ஒப்படைப்பது சிறந்தது என்று கருதினார் கிளைவ்.திவானி வேலையைச் செய்வதற்காக முகமது ரசாக்கான் என்பவரை வங்காளத்தின் துணை நவாபாகவும், ராஜாசிடப்ராய் என்பவரை பீஹாரிலும் நியமித்தார் கிளைவ். ஆவர்கள் பெயரளவில் நவாபிற்குப் கட்டுப்பட்டவர்கள் என்றாலும் உண்மையில் ஆங்கிலேயர்கட்கே கட்டுப்பட்டவர்கள்.

இவ்வாறு கம்பெனியாலும் நவாபினாலுமு் ஆட்சி நடத்தப்பட்டதால் வங்காளத்தில் கம்பெனியால் நடத்தப்பட்ட இந்த ஆட்சிக்கு 'இரட்டை ஆட்சி' என்று பெயர். ***"Nawab was saddled with responsibility without power and the company had power but would not undertake responsibility".*** இதன்படி கம்பெனியே அரசியல் காரியங்களை நடத்தி வந்தது. இந்திய அதிகாரிகள் கம்பெனியின் கையாட்களாகவேகாணப்பட்டனர். இவ்வகை ஆட்சிமுறை 1765 முதல் 1772 வரை நடைபெற்றது.

**கிளைவ் இரட்டை ஆட்சி முறையை அமைத்ததின் நோக்கம் :**

கிளைவ் ஏன் ஆட்சிமுறையை நேரடியாக ஏற்று நடத்த மறுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. நவாப் பொம்மையாகவே இருந்தார். எல்லா அதிகாரங்களும் ஆங்கிலேயரிடமே இருந்தன. ஆனாலும் அதிகாரங்களை நேரடியாக உபயோகப்படுத்தவில்லை. ஏனெனில்,

- கம்பெனியின் உண்மை நிலை என்னவென்று வெளியில் தெரியாமல் இருக்கச்செய்தல், அப்படிச்செய்து மற்ற ஐரோப்பிய நாடுகளின் பொறாமையிலிருந்து

தப்பித்தல், வெளிப்படையாக ஆட்சி முறையை ஏற்றுக்கொண்டால் அது மற்ற ஐரோப்பிய நாடுகளின் பகைமையை வளர்க்கும்.

- மேலும் கம்பெனியில் எண்ணிக்கையில் குறைந்த ஊழியர்களே இருந்தனர். அதனால் வங்காள நிர்வாகம் முழுவதையும் ஏற்று நடத்துவது ஏற்று நடத்துவது சிரமம். இருந்த கம்பெனி ஊழியர்களும் நிர்வாகத் திறமையற்றவர்கள். வேலைகளை ஒழுங்காகச் செய்யும் ஆற்றல் அற்றவர்கள்.எனவேதான் அறிவுக் கூர்மையுடன் இரட்டை ஆட்சிமுறையைப் புகுத்தினார் ராபர்ட் கிளைவ்.

**நன்மைகள்:**

கிளைவ் ஆரபித்த இரட்டைஆட்சிமுறை கம்பெனியின் புகழை உயர்த்தியது. அதில் சில குறைபாடுகள் இருந்தாலும் கம்பெனிக்குப் பல நன்மைகள் கிடைத்தன.

- கம்பெனிக்கும், நவாபுக்கும் இடையே அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டுவிட்டதால் இனிமேல் நவாப் ஆங்கிலேயரிடம் போரிடவோ உரிமை கேட்க வேண்டியதோ இல்லை.அவர் ஆங்கிலேயரின் கட்டுபாட்டில் வைக்கப்பட்டார். கம்பெனியும் ஓர் உண்மை நிலையை அடைந்தது. எனவே குழப்பங்களுக்கும் ஊழல்களுக்கும் இடமில்லை. கம்பெனிக்கும் நவாபுக்கும் எதிர்காலத்தில் சண்டை ஏற்பட வழி இல்லை.

- வணிகக் குழுவாக விளங்கிய முரட்டுத்தனமுடைய குணங்களைக் கொண்ட தலைவர்களாக விளங்கிய ஆங்கிலேயர், நாட்டை ஆட்சி செய்யும் பொறுப்புள்ள நிர்வாகத்தினராக இருக்கத் தூண்டியது. அவர்களின் முறைதவறிய செயல்களும் மோசடிகளும் ஓரளவு குறைய ஆரம்பித்தன.

- கம்பெனியின் உண்மையான அதிகாரங்களை கிளைவ் மறைத்ததின் விளைவாக மற்ற ஐரோப்பிய நாடுகளின் பகை ஏற்படாமல் தடுக்கப்பட்டது. இது ஆங்கிலேயரின் நிலையை மேலும் உறுதிப்படுத்தியது. மேலும் இந்தியாவிலும் மக்கள் கம்பெனி மீது சந்தேகப்படாமல் இருக்கும்படி செய்தது. எனவே தேவையில்லாத கஷ்டங்கள் கம்பெனிக்குக் கிடையாது.

- இச்சமயத்தில் மராட்டியர்கள் வளர்ச்சியடைந்து வலிமை பெற்றிருந்தனர். வெளிப்படையாகஆங்கிலேயர் அதிகாரம் பெற்றால் மராட்டியர்கள் துன்பம் விளைவிப்பார்கள். அவர்களுடன் போர் ஏற்படும் என்று நினைத்தார் கிளைவ். எனவே இம்முறை மராட்டியர்களின் படையெடுப்பைத் தேவையில்லாததாக்கி விட்டது.

- இரட்டை ஆட்சியினால் கம்பெனியன் பொருளாதார நிலை மிகவும் உயர்ந்தது.எவ்விதப்பொறுப்பும் இல்லாமல் அதிக வருமானம் வந்தது. வசூலித்தப் பணத்தில் நிர்வாகச் செலவு, பேரரசர் மற்றும் வங்காள நவாபுக்கு கொடுக்க வேண்டியது போக எஞ்சியதை தங்கள் கருவூலத்தில் ஆங்கிலேயர் சேர்த்துக் கொண்டார்கள்.

**தீமைகள் :**

கிளைவ் வங்காளத்தில் ஏற்படுத்திய இரட்டை ஆட்சிமுறையின் மூலம் கம்பெனிக்கு உடனடியாக சில நன்மைகள் கிடைத்தாலும் மொத்ததில் தீமைகளே அதிகம். முழு ஆட்சி முறையையும் கிளைவ் நேரடியாக ஏற்றுக்கொள்ளாதது குறைபாடு உள்ளதாகக் கருதப்படுகிறது. திவானி உரிமையைப் பெற்ற பின்பும் வரிவசூலை இந்திய அலுவலர்களிடம் விட்டது குறித்து இந்த ஆட்சிமுறை இகழப்படுகிறது. இந்த இரட்டை ஆட்சிமுறை முழுத்தோல்வியடைந்தது என்று கூறலாம்.

- **நிர்வாகச் சீர்கேடு :**

கம்பெனியார் தங்கள் நிலையை வலிமைப்படுத்துவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தார்களேயன்றி மக்களின் நலனில் அக்கரை கொள்ளவில்லை. கடமைகளையும் பொறுப்பையும் ஏற்காது பணத்தை மட்டுமே பெற்றுக்கொண்டனர். சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட முடியாது போயிற்று. நவாப் சுயமாக நீதி செலுத்த முடியவில்லை. கம்பெனியும் சரியாக கவனிக்க முடியவில்லை. நாட்டில் கொள்ளைகள் கூட்டத்தினர் கேட்பாரற்று அலைந்தனர். உண்மையும், நம்பிக்கையும் கொண்ட இந்திய அதிகாரிகளைக் கண்டுபிடித்து கம்பெனி நியமிக்க முடியாது போயிற்று.ஊழல் மலிந்து காணப்பட்டது. மக்கள் அவதிப்பட்டனர். இது குறித்து பிரிட்டிஷ் பார்லிமெண்டில் பேசிய ஜார்ஜ் காரன்வால் என்பவர் “ கிழக்கிந்தியக் கம்பெனியால் இந்தியாவில் ஏற்படுத்தப்பட்டிருந்தது போன்ற ஊழல்கள் நிறைந்ததும், நம்பிக்கையற்றதுமான ஒரு அரசை மக்கள் உலகத்தில் எந்த நாட்டிலும் சந்தித்ததில்லை”என்று கூறினார்.

**2.பொருளாதாரச் சீர்கேடு :**

வரிவசூல் குத்தகைதாரர்கள் மக்கள் மீது அதிக வரிவிதித்தார்கள். ஆனால் பெருந்தொகை வசூலித்து கம்பெனிக்கு குறைந்த தொகையையே செலுத்தினார்கள். வரிச்சுமையினால் மக்கள் ஊரைவிட்டே ஓடும் நிலை ஏற்பட்டது. கொடுமையாக வரிவிதித்ததால் வரிசெலுத்துவதில் பல ஏமாற்று முறைகளைக் கையாண்டு வந்தனர் மக்கள். அவற்றைக் கண்டு பிடிக்க ஆங்கிலேயர்களால் முடியவில்லை. வரி வசூலிக்கும் இந்திய அதிகாரிகளைக் கண்கபணிப்பதற்கு ஆங்கில மேற்பார்வையாளர் அமர்த்தப்பட்டனர். அவர்களில் சிலர் பணம் பறிக்கும் வழிகளைக் கையாண்டனர்.

**3.கொடிய பஞ்சம் :1770**

1770ல் வங்காளத்தில் கொடிய பஞ்சம் என்று ஏற்பட்டது. அதன் விளைவாக பீஹார், வங்காளம் ஆகிய மாகாணங்களில் பெரும் பகுதிகள் பாழாயின. மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கு அழிந்தது. பல இடங்களில் மக்கள் பிணங்களைக்கூட உண்டனர் என்று சொல்லப்படுகிறது. ஆனால் பஞ்ச காலத்திலும் வரிகள் கடுமையாக வசூலிக்கப்பட்டது.கம்பெனியும் சமயம் பார்த்து அத்தியாவசிய உணவுப் பண்டங்களின் மீது வரிகளைக் கூட்டி கொள்ளை லாபம் சம்பாதித்தது. உரிமைகளைப் பெற்ற ஆங்கிலேயர் மக்களுக்கு நன்மை செய்யும் கடமையை மறந்தனர். எனவே இரட்டை ஆட்சியை மக்கள் வெறுத்தனர். கிராமங்களைவிட்டு வெளியேறி, களவு, கொள்ளையடித்தல் ஆகியவற்றில் ஈடுபட்டனர்.

**4.வியாபாரச் சீர்கேடு :**

பேரரசர் பரூக்ஷயர் காலத்திலிருந்தே தடையிலா வியாபாரம் நடத்த கம்பெனிக்கு உரிமை கிடைத்தது. ஆனால் அந்த உரிமையை கம்பெனி ஊழியர்கள் சுயநலத்திற்காக உபயோகத்தினர். கம்பெனியார் அரிசியை தங்கள் வாணிபத்தின் தனி உரிமை பொருளாக கொண்டு ஏராளமாக லாபம் பெற்று வந்ததால் மக்களின் துயரம்

மிகுதியாயிற்று. வேளாண்மை மூன்றில் ஒரு பங்காக குறைந்தது. பயிர்த்தொழில் வீழ்ச்சியடைந்ததால் தங்கள் ஆதாயத்தைக் கருதிய கம்பெனி ஆட்கள் பொருட்களை வெளிச்சந்தையில் குறைந்த விலைக்கு விற்க ஆரம்பித்தனர். இதனால் உண்மையாக கம்பெனியிடமிருந்து சரக்கு வாங்கிய இந்திய வியாபாரிகள் பெருநஷ்டமடைந்தனர்.

**கம்பெனியின் பணியாளர்கள் மேலும் மேலும் பணக்காரர்களாயினர்.**

**5.தொழில்கள் கெடுதல்** :

நெசவுத் தொழிலில் சிறந்து விளங்கிய வங்காளம் பின்னடைய ஆரம்பித்தது. கம்பெனி தன்னுடைய அதிகாரத்தை உபயோகித்து இங்கிலாந்திலிருந்து வந்த பட்டுத்துணி வியாபாரத்திற்கும் வங்காளத்தில் செய்யப்பட்ட பட்டுத்துணி வியாபாரத்திற்பும் ஏற்பட்ட போட்டியைத் தவிர்க்க முயற்சித்ததில் வங்காள நெசவுத் தொழில் நசுங்கியது. நெசவாளர் கம்பெனி தொழிற்சாலைகளில் வேலை செய்யக் கட்டாயப்படுத்தப்பட்டனர். இதனால் பருத்தியும், பட்டுநூலும் விலையில் வீழ்ச்சியடைத்தன. உற்பத்தியாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். மக்கள் உழைப்பின் உயர்வை மதிக்கவில்லை, அரசுக்கு அதிக வரி கொடுக்க வேண்டியயிருந்ததால் தங்கள் தேவைக்குத் தக்கவே உழவர்கள் பயிரிட்டனர். மக்கள் சோம்பேறிகளாயினர். வெறுப்புற்ற மக்கள் வேளாண்தொழிலை விட்டு வெளியேறினர். நிலங்கள் தரிசாக விடப்பட்டன.

இவ்வாறு கிளைவினால் வங்காளத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட இரட்டை ஆட்சி முறையால் மக்களின் துயரம் அதிகரித்தது. நாட்டில் அமைதி அழிந்தது. கொள்ளையடிக்கும் தன்மைகொண்ட அலுவலர்களே ஆட்சி செய்து வந்தனர். இந்த நிலை1772ல் வாரன்ஹேஸ்டிங்ஸ்வங்காள கவர்னராக பதவியேற்கும் வரை நீடித்தது. அவர் பதவியேற்றதும் செய்த முதல் வேலை கிளைவினால் ஏற்படுத்தப்பட்ட இந்த இரட்டை ஆட்சிமுறைக்கு முற்றுப்புள்ளி வைத்ததேயாகும். கம்பெனி நிர்வாகக் குழுவினரின் ஆதரவுடன் வங்காளம், பீஹார், ஒரிசா மாநிலங்களின் ஆட்சிமுறையை நேரடியாகவே எடுத்துக்கொண்டார் வாரன்ஹேஸ்டிங்ஸ்.

## டியூப்ளேயின் வரலாறு

**முதற்பகுதி : (1697-1742)**

ஜோசப் பிராங்காய் டியூப்ளே என்பவர் பிரான்சில் ‘லாண்ட் ரெசீஸ்’ என்னுமிடத்தில் பிறந்தார். இவர் முதலில் கணிதத்துறையில் ஆர்வம் கொண்டவராக இருந்தபோதிலும் அமெரிக்கா, இந்தியா சென்றுவந்தபின் வாணிபத்தில் ஊக்கம் ஏற்பட்டது. 1720ல் பாண்டிசேரி ஆலோசனைக் குழுவில் இடம் கிடைத்தது. தனிப்பட்ட முறையில் வாணிபம் செய்து பெரும் செல்வந்தர் ஆனார்.பொறைமை கொண்ட சிலரின் குற்றச்சாட்டினால் திரும்ப அழைத்துக் கொள்ளப்பட்டர். பின்னர் மீண்டும் 1731ல் சந்திரநாகூர் பண்டக்சசாலையின் இயக்குநராக அமர்த்தப்பட்டார்.

**பாண்டிசேரி கவர்னராதல் : (1743-’63)**

1742ல் டியூப்ளே பாண்டிசேரி கவர்னராக நியமிக்கப்பட்டார். பதவியேற்றப் பின் கர்நாடகத்தில் பிரெஞ்சுக்காரர்களின் செல்வாக்கை நிலைநாட்ட முடிவு செய்தார். இதனால் முதலில் நிர்வாகத்தை சீர்திருத்தினார். சிக்கனத்தைக் கையாண்டு நிதிநிலையை உயர்த்தினார். பாண்டிசேரியின் பாதுகாப்பை வலிமைபடுத்தினார்.

**டியூப்ளேயின் கொள்கைகள்** :

டியூப்ளே, வாணிபத்தில் பிரெஞ்சுக்காரர்கள் முன்னேறுவதையே தனது குறிக்கோளாகக் கொண்டிருந்தார். உள்நாட்டு அரசுரிமைப் போட்டிகளில் தலையிடுவதின் மூலம் தனது அதிகாரத்தைப் பெருக்க முடியும் என்று

நினைத்தார்.தனது அதிகாரம் பெருக வேண்டுமானால் திருச்சி தன்வசம் இருக்கவேண்டுமென நினைத்தார். இந்தியாவிலிருந்து ஆங்கிலேயரின் அதிகாரத்தை ஒழிக்க பேரவாகொண்டார்.

**டியூப்ளேயும் இரண்டாவது கர்நாடகப் போரும்** :

(இரண்டாவது கர்நாடகப போரில் டியுப்ளே பங்கு பற்றிய செய்திகளை முந்தய பக்கங்களில் படித்து இந்த தலைப்பில் எழுதிக் கொள்ளவும்)

**டியூப்ளேயின் இறுதிக்காலம்** :

இரண்டாவது கர்நாடகப் போரின் இறுதியில் டியூப்ளே தனது தாய் நாட்டிற்கு அழைத்துக் கொள்ளப்பட்டார். தாய்நாடு திரும்பிய டியூப்ளே மிகவும் துயருயுற்றார். அவரது வாழ்க்கை இருளிலும், தரித்திரத்திலும், தனிமையிலும் கழிந்தது. ஏழையாக பெருந்துயரத்திற்குள்ளாகி டியூக்ளே 1763 நவம்பரில் இறந்தார். “ நான் என்னுடைய இளமை, வாய்ப்புகள், என் வாழ்க்கை முழுவதுமே தியாகம் செய்தேன். ஏன் பணிகள் யாவற்றையும் கட்டுக் கதைகள் ஆக்கிவிட்டனர். மானிட சமூகத்தில் இழிந்தசனாக மதிக்கப்படுகிறேன் என்னிடமிருந்த சிறிய அளவு செவ்வத்தை அபகரித்துக் கொண்டனர்.”

இந்திய அரசியலில் இணையற்ற வீரத்துடன் அருஞ்செயல் ஆற்றிப் புகழ்பெற்றுத் தமக்கும், நம் நாட்றெகும் சிறப்பைத் தேடிதந்த டியூப்ளேயின் முடிவு அத்தகையதாயிற்று. “இந்தியர்களைக் கொண்டே இந்தியாவை வெல்லும் நயத்தைத் தொடங்கியவர் டியூப்ளே” என்பது மெக்கலேயின் கருத்து.

**டியூக்ளேயின் தோல்விக்கான காரணங்கள் :**

1751ம் ஆண்டு டியூப்ளே புகழின் உச்சியிலிருந்தார் ஆனால் அவரது சிறப்புகள் 1752ம் ஆண்டிலிருந்து இறங்கு முகமாயிற்று. அவர் அடைந்த தோல்விக்கு அவரது கொள்கையிலும், தன்மையிலும் காணப்பட்ட குறைபாடுகளே காரணமாகும். அவைகள் பின்வருமாறு:

- டியூப்ளேயின் கொள்கைகளை பிரெஞ்சு அரசாங்கம் புரிச்துகொள்ளவில்லை. எனவே அவரது கொள்கையிலுள்ள திறமையைப் பாராட்டாமலும், தேவையான உதவிகளை அவருக்கு உரிய நேரத்தில் அனுப்பாமல் இருந்ததுமே அவரது தோல்விக்கு முக்கியமான காரணம் ஆகும். இதற்கு டியூப்ளேதான் பொறுப்பாளி.. ஏனெனில் டியூப்ளே தனது கொள்கையை அரசுக்கு விளக்கவில்லை.

  மேலதிகாரிகளுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்ளவில்லை. தகது பொருளாதார நெருக்கடிகள் பற்றியும் தாம் அடைந்த தோல்விகளைப் பற்றியும் அவர்களுக்கு தெரிவிக்கவில்லை. எனவேதான் பிரான்ஸ் நாட்டிலிருந்து வந்த ஆணைகள் டியூப்ளேயின் கொள்கைக்கு முன்னுக்குப் பின் முரணாக இருந்தன.

- தனது நிலையைக் கடந்த அளவுக்கு பேராவையை பெருக்கி வந்தார். வியாபார விருத்தியைக் குறித்தேஎண்ணிய அவர் கம்பெனியின் நிதி நெருக்கடியை அறியார்.ஏனெனில் பிரெஞ்சுக் கம்பெனி, இங்கிலாந்து கிழக்கிந்தியக் கம்பெனிப் போல தனிக்குழுவாக இல்லாமல், பிரான்ஸ் நாட்டின் பரந்த அரசியல் கொள்கைகள் மீது எழுப்பப்பட்டது ஆகும். எனவே பிரெஞ்சு அரசுக்கு இருந்த பணமுடைகள் நேரடியாக கம்பெனிப் பாதித்தன. இதனை டியூப்ளே உணரவில்லை.

- தக்காணமும், கர்நாடகமும் செழிப்பற்ற இடங்களாகும். தக்காணத்தில் டியூப்ளேயின் திட்டங்கள் அதிக செலவிற்கு வழிவகுத்தன.

- டியூப்ளே அதிக ஆசைப்பட்டு தனது படையைத் தக்காணத்திலிருந்து, கா்நாடகத்திலும் பிரித்து வைத்தது மாபெரும் தவறு ஆகும்.பிரெஞ்சுப்படைத்தலைவா் புஸ்ஸி ஐதராபாத்தில் இருந்ததால் கா்நாடகத்தில் கிளைவுக்கு சமமான ஆற்றல் மிக்க படைத்தளபதி இல்லாமல் போயிற்று.

- தக்காணத்தில் உள்ள முகலாயப் பகுதிகளுக்கு கவா்னராக இருக்க டியூப்ளே சம்மதித்ததே தவறு ஆகும்.

- இந்தியாவில் பிரான்சுக்கும், பிரிட்டனுக்கும் ஏற்பட்ட போட்டியும் பகைமையும் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் அந்த நாடுகளுக்கிடையே காணப்பட்ட உறவின் அடிப்படையில் அமைந்தவை என்பதை டியூப்ளே அறியவில்லை.

- தனது திட்டங்களை மறைக்காமல் வெளிப்படையாக அறிவித்து வந்ததால் அரசியலில் அதிகமான பயிற்சி இல்லாதவா் கூட அதன் விளைவுகளை உணா்ந்து தற்காப்புக்கான முன்னேற்பாடுகளைச் செய்யமுடியும். ஏனெனில் டியூப்ளே பயிற்சி பெற்ற ஒரு படைத்தழலவா் இல்லை. அவா் ஒரு அரசியல்வாதியாவாா்.படைகளைப் போரில் ஈடுபடுத்தும் ஆற்றல் அற்றவா்.

- டியூப்ளே குணங்களில் காணப்பட்ட குறைபாடுகளும் அவரது தோல்விக்குக் காரணமாகும். தன்னடக்கம் இவரிடம் கிடையாது.தனக்குகீழ்ப்பட்ட அதிகாிகளிடம் சாமா்த்தியமாகப் பழகி வேலை வாங்காமல் அடிக்கடி சண்டையிடுவாா். ஒற்றுமை கிடையாது. பின்னால் நடக்கப்போகும் காாியங்களை முன் ஆலோசிக்கும் ஆற்றல் அற்றவராக இருந்தாா். தான் நினைத்தது சாி என்று நினைத்ததால் ஏராளமான பகைவா்களைச் சம்பாதித்துக் கொண்டாா்.

## இந்திய வரலாறு 1773 முதல்

### காரன்வாலிஸ்பிரபுவின் சீா்திருத்தங்கள்

- காரன்வாலிஸ் பிரபுவின் வருவாய் மற்றும் நிா்வாக சீா்திருத்தங்களைப் பற்றிய விவரங்களைத தருக அவற்றின் நிழற குறைகளைக் குறிப்பிடுக.

“காரன்வாலிஸ் பிரபுவைப்போல் இந்தியாவில் நிலையாக நிற்கக்கூடிய பணிகளை செய்த குறிப்பாகஉள்நாட்டு துறையில் திறம்பட பணியாற்றியவா்கள் வெகுசிலரே” என்ற பி.இ.ராபட்ஸ் அவரைப் பற்றி கூறுவது முற்றிலும் உண்மை. ஆவா் ஒரு போா் வீரா். இராஜதந்திாியுமாவாா். ஆவா் ஒரு பிரபுக் குடும்பத்ததைச் சாா்ந்தவா். ஊயாிய பண்பும் நன்நடத்தை. உடையவா். இவருடைய நியமனம் பிாிட்டிஷ் இந்திய வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தை துவக்கியுள்ளது. கவா்னா் ஜெனரல் பதவிக்கு ஆள் மட்டும் மதறவில்லை முறைகளும் பொது நோக்கும் சூழ்நிலையும் மாறியது.

- **கம்பெனி நிா்வாகச் சீா்திருத்தம்**

கம்பெனி நிாவாகத்தின் பணியை புனிதப்படுத்துவதே முதல் வேலை. இவா் தலைமையின் கீழ் உள்ள அரசு ஊழலும் குழப்பமும் நிறைந்ததாயிருந்தது. கம்பெனி ஊழியா்கள் திறனற்றவா்கள். ஊழல் மிகுந்தவா்கள் சட்டவிரோதமான தனிப்பட்ட

வர்த்தகத்தின் மூலம் அதிக இலாபம் சம்பாதித்தனர்.அவர்கள் குறைந்த சம்பளம் பெற்றதாவல் இவ்வாறு லஞ்சம்பெறுவதில் ஈடுப்பட்டனர் என்று உணர்ந்து அவர்கள் சம்பளத்தை உயர்த்தினர்.தனிவர்த்தநகத்தை தடைசெய்யும் சட்டங்களை உறுதியாக அமுல் நடத்தினார் தவறு புரிந்தவர்கள் தாய்நாடு அனுப்பப்பட்டனர். இவ்விதமாக கம்பெனி நிர்வாக ஊழலை சீர்திருத்தினார். காரன்வாலிஸ் ஆட்சி முறைக்கு ஏற்றவாறு மாநிலத்தை பல மாவட்டங்களாகப் பிரித்தார். மாவட்டகளாகப் பிரித்தே அவருடைய சீர்திருத்தங்களுக்கு அடித்தளமாக அமைந்தது.

- **நீதித்துறை சீர்திருத்தங்கள்**

சிவில் கிரிமினல் நீதிமன்றங்கள் சீர்திருத்தங்களை பொருத்தமட்டில் வாரன்ஹேஸ்டிங்ஸ் துவக்கியதை இவர் முற்றுப் பெற செய்தார். படிப்படியாக உயர்வழடயும் ஒன்றுக்கொன்று தொடர்புள்ள நீதிமன்றங்களை ஏற்படுத்தினார்.

- இந்திய முன்சீப்களும் சாதர் அமீன்களும் கொண்ட தலைமை தாங்கும் நீமன்றங்கள் சிறிய சிவில் வழக்குகளை விசாரனை செய்தது.
- அவற்றிற்கு மேலே ஒரு பிரிட்டிஷ் நீபதியம் அவருக்க உதவி செய்ய இந்திய சட்ட வல்லுநர்களும் அடங்கிய மாவட்ட நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டன.
- அவற்றிற்கு மேலே நான்கு மாநில மேல் விசாரணை நீதி மன்றங்கள் கல்கத்தா முர்ஷிதாபாத் பாட்னா டாக்கா ஆகிய இடங்களில் பிரிட்டிஷ் நீதிபதிகள் தலைமையில் நிறுவப்பட்டன.
- எல்லா நீதிமன்றங்களும் மேலே ‘சாதர் திவானி அதலத்’ என்ற நீதிமன்றம் கவர்னர் ஜெனரல் அவரது ஆலோசனைக்குழும் அடங்கியது. இதுவே இறுதி விசாரனை நீதிமன்றம்.
- நான்கு மாநில நீதிபதிகளும் தங்கள் அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதிகளில் சுற்றி வந்து வழக்குகளை விசாரிப்பர்.
- கிரிமினல் வழக்குகளில் உயர் அப்பீல் நீதிமன்றம் ‘சாதர் நைசாமத் அதலத்’
- காரன்வாலிஸ் சட்டதொகுப்பு என்று அழைக்கப்பட்ட புதிய சட்டதெபகுப்பை வில்லியம் ஜோன்ஸ் ஜார்ஜ் பார்லோ எனடபவர்கள் தயாரித்து வெளியிட்டனர்
- கலெக்டர்களுடைய அதிகாரங்களை குறைத்து நிலவரி வசூல் பொறுப்கை மட்டும் அவர்களிடம் ஒப்படைத்தார். இவ்விதமாக நீதியை நிர்வாகத்தினின்றும் பிரித்தார்.
- இவருடைய நீதி நிர்வாகச் சீர்திருத்தங்களில் ஒரு முக்கிய குறை என்னவென்றால் முக்கிய பதவிப்பொறுப்பு இந்தியர்களுக்கு கொடுக்கப்படவில்லை எனடபதே.

- **போலீஸ் முறை**

முதலில் கல்கத்தாவிலும் பின் மாவட்டங்களிலும் அமைதியை நிலைநாட்ட போலிஸ் துறை ஏற்படுத்தப்பட்டது.இதன் மூலம் ஜமீன்தார்கள் போலீஸ் நியமனம் செய்வது ஒழிக்கப்பட்டது

- **சுகாதர வரி நிலவரித்திட்டம் ஸமீக்தாரி முறை**

குாரன்வாலிஸ் பெயரோடு பாகவத நிலவரித்திட்டம் பிரிக்கமுடியாதபடி பிணைக்கப்பட்டுள்ளது. ஏனென்றால் 25 ஆண்டுகளாக பல்வேறு முழறகளை பரீட்சித்துப்பார்த்து இறுதியில் சிக்கலான நிலவரி பிரச்சனைக்கு தீர்வுகண்டவர் இவரே.

பிரிட்டானிய இரசாங்கம் மக்களுக்கு வெய்த நன்மைகளில் நிலையபன நிலவரித் திட்டம் மிகச் சிறப்பானதாகும் என்று அறிஞர் டாட் கூறுகின்றார்.

முன்பிருந்த நிலவருவாய் முறை

1765ஆம் ஆண்டு ஏற்பட்ட அலகாபாத் உடன்படிக்கையின் படி வங்காளம் பீகார் ஒரிசா ஆகிய மாநிலங்களில் வரிவசூல் டிசய்யும் உரிமை (திவானி உரிமை) ஆங்கிலேயர்களுக்கு கிடைத்தது. வரிசசூல் செய்வதில் உள்ள சிரமத்தை உணர்ந்த ராபர்ட் கிளைவ் வங்காளத்'தில் இரட்டை ஈட்சியை ஏற்படுத்தினார். அதன்படி வரிவசூல் செய்யும் பொறுப்பு நவாப்பின் கீழுள்ளஅதிகாரிகள் வசம்விடப்பட்டது. வாரன்ஹேஸ்டிஸ் இம்முறையைு ஒழித்து வரிவசூல் செய்யும் முறையை வருடம் தோறும் ஏலம் விட்டு உயர்ந்த பட்சம் ஏலம் கேட்பவர் வசம் விட்டார். ஆனால் இம்முறையும் நன்மை பயப்பதாக இல்லை. எனவே காரன்வாலிஸ் பதவிஏற்றவுடன் போர்ட்ஆப் கன்ட்ரோலின் தலைவர் டான்டாஸ் என்பவருடன் பிரதமர் இளையபிட்டுடனும் கலந்து ஆலோசித்து சாசுவத நிலவரித் திட்டத்தைக் கொண்டு வந்தார்.

**இத்திட்டத்தின் முக்கிய அம்சம்**

நிலத்தை ஏலம்எடுத்த ஜமீன்தார்கள் இம்முறையின்படி நிலத்தின் நிரந்தர சொந்தக்காரர்களாக்கப்பட்டனர். அவர்கள் குறிப்பிட்ட தொகையை ஆண்டு தோறும் காலவரையறைக்குள் வெலுத்திவிடவேண்டும். இந்தத்தொகை மாறாது சாசுவதமானது. குறிப்பிட்ட தொகையை செலுத்தாவிட்டாலன்றி மற்றபடிஅவர்கள் நிலத்திலிருந்து வெளியேற்றப்படமாட்டார்கள்.

**இதன் நன்மைகள்**

- இந்த சாசுவத நிலவரித்திட்டத்தின் மூலம் அரசாங்கத்திற்கு குறிபிட்ட அளவு நிலவருவாய் மாறாமல் உறுதியாய் தொடர்ந்து கிடைத்து வந்தது. இந்த திட்டவட்டமான வருமானத்தைக் கொண்டு முன்கூட்டியே செலவினங்களை திட்டமிட அரசாங்கத்திற்கு வாய்ப்பு ஏற்பட்டது. (2) வரி வசூலிக்கும் பொறுப்பை ஜமீன்தார்களிடம் விட்டுவிட்டதால் அப்பமு அரசாங்கத்தை விட்டு நீங்கியது. ஆல்லையென்றால் ஆயிரக்கணக்கான நிலவரி வசூல் அதிகாரிகளை நியமனம் செய்து அவர்களுக்கு பெரும் தொகையை சம்பளமாக கொடுக்க வேண்டியது இருந்திருக்கும்.(3) அடிக்கடி நிலஉரிமையையும் நில வருவாயையும் மாற்றுவதால் உண்டான தீமைகளான காலதாமதம் ஏமாற்று நிலங்கள் தரிசாகப் போடப்படல் போன்ற தீமைகள் தவிர்க்கபட்டன.(4) ஜமீன்தார்கள் நிலத்திற்கு நிரந்தரசொந்தக்காரர்களாக ஆக்கப்பட்டதால் தரிசு நிலங்

களை சாகுப்படிக்கு கொண்டு வந்து உற்பத்தியை அதிகப்படுத்துவர் என எதிர்பார்க்கப்பட்டது (5)இத்திட்டம் அரசாங்கத்தை சாந்திருக்கக்குடிய பண்ணை முதலாளிகளை உருவாக்கியது. அவர்கள் ஆங்கில அரசுக்கு உண்மை உள்ளவர்களாக விளங்கினர்.

**தீமைகள்**

இந்த ஜமீன்தார் நிலவரித்திட்டம் பல எதிர்பாராத ஏமாற்றங்களை அளித்தது.

நிலத்தை உண்மையில் சாகுபடி செய்தவற்கு அரசாங்கத்திற்கும் நேரடி தொடர்கு இல்லாமல் போயிற்று. அவர்கள் தங்கள் குறைகளை போக்க ஜமீன்தார்களையே நம்பி

அருக்க வேண்டியதாயிற்று. (2) ஜமீன்தார் அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டியதொகை இத்திட்டத்தின் மூலம் நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் அவர்குடியானவர்களிடம் எவ்வளவு வசூல் செய்யவேண்டும் என்பது நிர்ணயிக்கப்படவில்லை.இதனால் ஜமீன்தார்கள் குடியபனவர்களை கசக்கிபிழிந்து ஏராளமான வரிவசூல் செய்தனர். ஆனால் அரசாங்கத்திற்கு குறிப்பிட்ட பழைய தொகையையே செலுத்தி வந்தனர். (3) அரசாங்னத்திற்து பணத்தேவை ஏற்படும்போது ஜமீன்தார்களிடம் அதிகப்பணம் கேட்கமுடியவில்லை. (4) எதிர்பாராதபடி ஜமீன்தார்கள் விவசாய உற்பத்தியை அதிகரிக்க எதுவும் செய்ததாகத் தெரியவில்லை.மாறாக அவர்கள் தங்கள் பண்ணையைவிட்டு மாநில தலைநகர்களில் சுகபோகிகளாக வாழ்ந்தனர். எனவே இந்த ஜமீன்தார் முறைத்திட்டம் ஜமீன்தார்களுக்குச் சர்தகமானது: விவசாயகளுக்குப் பாதகமானது: அரசாங்கத்திற்கு ஏமாற்றம் அளிப்பது ஆகும்

**மூன்றாம்மைசூர்போர்**

மைசூர் மன்னரான திப்புசுல்தான் ஆங்கிலேயரிடம் தொடர்ந்து பகைமை பாராட்டி வந்தார்.ஏற்கனவே நடைப்பெற்ற இரண்டாம் மைசூர் போர் வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்தது. எனவே திப்புநுல்தான் மீண்டும் ஒருமுறை பலப்பரீட்சையில் இறங்கத் தயரானார்.காரன்வாஸிஸ்பிரபுஹைதராபாத் நவாப்பிற்கு படை உதவி அளிக்கும்போது அப்படையானது ஆங்கிலேயரின் நண்பர்களுக்கு எதிராக உபயோகப்படுத்தக்சுடாது என்று நிபந்தனை விதித்தார். தம் நண்பர்களின் பட்டியலையும் கொடுத்தார்.அதில் வேண்டுமென்றே திப்புவின் பெயரை நீக்கிவிட்டார். இது திப்பிவின் கோபத்தை அதிகரித்தது. எனவே ஆங்கிலேயரின் நண்பரான திருவாங்கூர் மன்னரைத் தாக்கினார். அதுவே போருக்கு உடனடி காரணமாயிற்று. போரில் திப்புவிற்கு எதிராக ஆங்கிலேயருடன் னுஹதராபாத் நிஜாமும் மராத்தியர்களும் கூட்டுச்சேர்ந்து கொண்டனர். திப்பு தோற்கடிக்கப்பட்டார். முடிவில் ஏற்பட்ட ஸ்ரீரங்கப்பட்டணம் உடன்படிக்கையின்கடி ஆங்கிலேயர் மலபார்,திண்டுக்கல்குடகு, பாராமகால் ஆகிய இடங்களைப் பெற்றனர்.

**மதீப்பீடு**

இந்தியாவில் பிரிட்டிஷநிர்வாக அமைப்பை உருவாக்குவதில் காரன்வாலிஸ் பெரும்பங்கு வகித்தார். அவரது சாசுவத நிலவரித்திட்டம் நீதிதுறை சீர்திருத்தங்கள்,நீதிதுறையிலிருந்து நிர்வாகத்தைப் பிரித்தது. சட்டதொகுப்புஆகியவை பிரிட்டிஷ் இந்தியநிர்வாக அமைப்பில் முக்கிய விளைவுகளை தோற்றுவித்தது. தென்னிந்தியாவில் ஆங்கிலேயர்களின் முக்கிய எதிரியான திப்பு சுல்தானை தேபற்கடிப்பதிலும் வெற்றி பெற்றார்.

## வெல்லெஸிலி பிரபு

இந்தியாவில் ஆங்கிலேய ஆதிக்கத்தை வித்திட்டவர் இராபர்ட் கிளைவ்: அதை பாதுகாத்தவர் வாரன்ஹேஸ்டிங்ஸ்: அதை தன்னிகரற்ற பேரரசாக்கியபெருமைக்குரியவர் வெல்லெஸ்பிரபுவே ஆவார். ஸர் ஜான் ஹோருக்குப் பின் மார்னிங்டன் பிரபு கவர்னர் ஜெனரலானார். நூன்காம் மைசூர் போரின் வெற்றிக்குப் பிறகு மார்க்விஸ் வெல்லஸ்லி என்றழைக்கப்பட்டார். இவருடைய ஆட்சிக்காலம் 1768லிருந்து 1805 வரை ஆகும். சிறந்த ராஜதந்திரியும் அனுபவம் பெற்ற அரசியல்வாதியும் ஆவார்.

**நோக்கங்கள்**

- ஆங்கில ஆட்சி இந்திய மன்னர்களின் ஆட்சியைவிட சிறந்தது. எனவே மன்னர்களின் பகுதிகளை ஆங்திலேய ஆட்சியின் கீழ் கொண்டுவந்த பிரிட்டிஷாரின் தலைமை அதிகாரத்தை ஏற்படுத்தவேண்டும்.

- இந்தியாவிலிருந்து பிரெஞ்சுக்காரர்களை விரட்டவேண்டும் என்பது அவரது அசையாத கொள்கையாகும்.

- இந்திய அரசியல் நிலைக்கு தலையீடாக கொள்கை ஒத்துவராது என்று புரிந்துகொண்டார். எனவே தலையீடா கொள்கையை நீக்கிவிட்டு இந்தியாவில் ஆதிக்கத்தை ஏற்படுத்த தலையீடும் கொள்கையே சிறந்தது என்று எண்ணினார்.
  ஆங்கிலேயரின் பேராதிக்கத்தை இரண்டுமுறைகளை கையாண்டார். 1) ஆங்கிலேயருக்கு உட்பட்டு நன்கு ஆளப்படாத நாடுகளை ஆங்கிலேய ஆட்சியுடன் சேர்த்துக்கொள்வது:2) துணைப்படைமுறை என்ற புதிய திட்டத்தின் கீழ் சிற்றரசர்களை ஆட்கொண்டுவிடுவது.

**துணைப்படை முறை**

- இத்திட்டத்தில் கையொப்பமிடும் இந்திய சிற்றரசர்கள் பாதுகாப்பிற்காக ஆங்கிலப்படையை தம்நாட்டில் துணையாக வைத்துக்கொள்ளவேண்டும். இதுவே துணைப்படை ஒப்பந்தம்.
- அடிப்படை வீரர்களின் ஊதியத்தை அந்த அரசரே பணமாக கொடுக்கவேண்டும் அதற்கு துணைப்படை தொகை என்றுப் பெயர். அல்லது அந்த தொகைக்கு ஈடான நிலத்தை மானியமாக ஆங்கிலேயருக்கு அளிக்க வேண்டும்.

- இவ்வாறு ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்ட சிற்றரசர்கள் தம் தலைநகரில் ஒரு ஆங்கில ஸ்தானிகரை வைத்துக்கொள்ளவேண்டும்.

- அயல்நாட்டுக் கொள்கையை ஆங்கிலேயருடன் விட்டுவிட வேண்டும். ஆங்கிலேயரின் அனுமதியின்றி போரோ, சமாதானமோ செய்து கொள்ளக்கூடாது.

- இப்படையை உள்நாட்டு விவகாரங்களுக்காக பயன்கடுத்தக் கூடாது. இதற்கு மாறாக உள்நாட்டு கலகத்திலிருந்தும் வெளிநாட்டு படையெடுப்பிலிருந்தும் ஆங்கிலேயா் சிற்றரசர்கள் பாதுகாக்க வேண்டும்.

- மேலும் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடமாட்டோம் என்று ஆங்கிலேயா் கூறினா்.

**ஹைதராபாத் (1798)**

முதன்முதலாக துணைப்படைத் திட்டத்தை நிஜாமுடன் வெல்லஸ்லி செய்துகொண்டார். மராத்தியர்கள் ஜான்ஷோர் காலத்தில் எதிர்த்தபோது ஆங்கிலேயா் ஆதரவு கொடுக்காத காரணத்தால் நிஜாம் பிரெஞ்சுக்காரருடன் உறவை ஏற்படுத்திக்கொண்டார். வெல்லஸ்லியின் தூண்டுதலால் நிஜாம் பிரெஞ்சுக்கரரை விலக்கி விட்டுதுணைப்படை ஒப்பந்தத்தைச் செய்து கொண்டார். இத்திட்டத்தை முதன்முதலில் ஆங்கிலேயருடன் செய்துக்கொண்டவர் நிஜாமே ஆவார்.

**மைசூர் (1799)**

திப்புவின் போக்கு பொறுக்கமுடியாத காரணத்தால் 1799ல் திப்புவிடம் போர் தொடுத்தார். அதுவே நான்காம் மைசூர் போராகும். நான்காம் மைசூர் போருக்குப் பிறகு இந்து வம்சத்தை சேர்ந்தச் கிருஷ்ணராஜ உடையாருக்கு நாட்டைதிரும்பக் கொடுத்து

அவருடன் துணைப்படை ஒப்பந்தத்தை செய்துக் கொண்டார். மைசூர் அரசர் தென் கன்னடம், வயநாடு, கோயம்புத்தூர் பகுதிகளை மானியமாக வழங்கினார்.

**அயோத்தி (1801)**

ஆப்கானிய மன்னர் ஜாமன்ஷாமின் கயத்தாலும் நெப்போலியன் போனபர்ட் இந்தியாவின்மேல் படையெடுக்ககூடுமென்ற எண்ணத்தாலும் வடமேற்கு எல்லையில் தனி கவனம் செலுத்த வேண்டிய அவசியத்தை உணர்ந்தது அயோத்தி நவாப்பை துணைப்படைத் திட்டத்தை செய்துகொள்ள கட்டாயப்படுத்தினார். ரோஹில்கண்டு கீழ்தோவாரப் பகுதியையும் மானியமாக எடுத்துக்கொண்டார். இது ஒரு எதேச்சதிகார செயலாகும்இந்த செய்கை வரலாற்று ஆசிரியர்களால் கடுமையாக தாக்கப்பட்டுள்ளது.

**மராத்தியர் (1802)**

இரண்டாம் பாஜிரான் பஸ்ஸில் உடன்படிக்கைப்படி துணைப்படை ஒப்பந்தத்தை வெல்லிஸ்லியுடன் செய்துகொண்டார். பேஸின் பகுதியை மானியமாகவும் அளித்தார். இவ்வுடன்படிக்கையே இரண்டாம் மராத்தியர் போருக்கு மூலகாரணமாயிற்று.

**மற்ற பகுதிகள்**

ஆட்சித் தன்மையின்மை சரியான வாரிசுன்மைன்மை போன்ற காரணங்களைக்காட்டி அவ்வரசக்களை வணிகக்குழுவின் நேரடி ஆட்சியின் கீழ்க்கொண்டுவந்தார். இவ்வாறு இணைக்கப்பட்டவைதான் தஞ்சாவூர், சூரத், கர்நாடகம் போன்ற சிறிய அரசுகளாகும்.

**தஞ்சாவூர் (1799)**

தஞ்சை அரசர் சரபோஜிக்கு ஆண்டிற்குநான்குலட்சம் ரூபாய் ஓய்வு கால ஊதியம் அளிப்பதாகக்கூறி 1799-ல் தஞ்சை அரசருடன் உடன்படிக்கை செய்து கொண்டார்சரபோஜியின் மறை விற்கு பிறகு அன்னாருடைய மகன் சிவாஜியும் ஓய்வுகால ஊதியம் பெற்றுத் தஞ்சை ஆட்சியை ஆங்கிலேயரிடம் விட்டு வைத்தார் அவருடைய மறைவிற்குப் பிறகு டல்ஹௌஸி 856 தஞ்சையை ஆங்கில அரசுடன் இணைத்துக்கொண்டார்

**சூரத் (1800)**

1759ல் சூரத் வணிகக் குழுவுடன்ஓர் ஒப்பந்தம் செய்திருந்தது. 1759ல் நவாப் இறந்தவுடன் அவருடைள வாரிசுக்கு ஒரு இலட்சம் ரூபாய் ஓய்வுகால ஊதியம் அளிப்பதாக கூறி 1800ல் வெல்லஸ்லி சூரத்தை ஆக்கிரமித்துக்கொண்டார்.

**கர்நாடகம் (1801)**

நவாப்வாலாஜாவுக்கும் சென்னை அரசியலாருக்கும் ஏற்பட்ட உடன்படிக்கைப்படி கர்நாடகத்தில் இரட்டை ஆட்சிமுறை ஏற்படுத்தப்பட்டது. 1795 வாலாஜா காலமானதை தொடர்ந்து அவருடைய மகன் உல் உம்தத் உம்ரா பதவழக்கு வந்தார். இவன் ஒரு ஆடம்பர பிரியர். ஆங்கிலேயரிடம் பெற்ற கடனையும் கட்ட வேண்டிய தொகையும் கட்டவில்லை. மேலும் வணிகக்குழுவிற்கு எதிராக திப்புவுடன் தொடர்பு கொண்டதற்கு சில ஆதாரங்கள் வெல்லஸ்லிக்கு கிடைத்தன. நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கும் நேரத்தில் அவரே இறந்துவிட்டார். அவருக்குப்பின் அஸம் உத் தௌலஸி

வெல்லஸ்லியுடன் ஒப்பந்தம் செய்து மூன்றாம் வாலாஜா என்ற பட்ட பெயருடன் கர்நாடக வருமானத்தின் ஐந்தில் ஒரு பங்கை உதவித் தொகையாகப் பெற்றார். கர்நாடக நவாப் என்ற பட்டத்தை வைத்துக் கொள்ள உரிமையும் வழங்கப்பட்டது.

**நன்மைகள்**

- வெல்லஸலியின் துணைப்படைத் திட்டத்தால் ஆங்கிலேயரின் செல்வாக்கும் படைபலமும் உயர்ந்த நிலைக்குமாற்றமடைந்தன.2)பிரேஞ்சுக்காரர்களுக்கு அரசியலில் பங்கு பெறவாயிப்பில்லாமல் போகவும் ஆங்கிலேயருக்கு பிரெஞ்சுக்காரரைப் பற்றிய பயம் நீங்கியது.3)படையின் ஊதியத்தை இந்திய அரசர்களே கொடுத்ததால் பெருத்த பொருள் வருவாயும் ஆங்கிலேயரின் செலவும் கணிசமாக குறையலாயிற்று. 4)இறந்திய சிற்றரசர்கள் உள்நாட்டு கலகங்களிலிருந்தும் அந்நிய படையெடுப்பிலிருந்தும் பாதுகாக்கப்பட்டனர். 5)செலவுக்கு நிலப்பகுதிகளையே கொடுக்க வேண்டும் என்று முறை இருந்ததால் ஆங்கில ஆட்சியின் பரப்பும் பெருகிற்று. 6)இந்திய அரசர் ஒருவரோ டொருவர் கலந்து கொள்ளும் வாய்ப்பு குறைந்ததால் சதியாலோ சனைக்க இடமில்லாமல் போயிற்று.

**இத்திட்டத்தின் தீமைகள்**

- அரசர்களுக்கு ஆதரவும் பாதுகாப்பும் அளிக்கப்பட்டதால் பொறுப்பற்று நடந்து கொண்டனர். 2) ஆடம்பர வாழ்க்கையில் முழுக் காலத்தையும் பொருளையும் செலவிட்டனர். 3) ஆங்கிலேயரின் பாதுகாப்பில் இந்திய சிற்றரசர்கள் பரம்பரையாக அரசராகப்பட்டனர். ஆகையால் திறமையற்றவர்கள் அரசராகி நாட்டை வீழ்ச்சியடைய செய்தனர். 4) சிற்றரசர்கள் ஆங்கிலேயருக்கு செலுத்தவேண்டிய தொகை வெலுத்தாததால் பொருளாதார நிலை வெகுவாகப் பாதிக்கப்பட்டது. 5) துணைப்படை வந்த காரணத்தால் பின்னர் இவர்களை தக்கர்கள், பிண்டாரிகள், எனப்படும் கொள்ளை கூட்டத்தினரால் விளங்கினர். அரசின் கொடுங்கோல் ஆட்சியை எதிர்க்கும் வாய்ப்பு இல்லாமல் போயிற்று. பிறகு கொடுங்கோல் அல்லது மற்ற காரணங்களுக்காக இந்திய அரசின் உரிமையை பறிக்க இத்திட்டம் உதவியது. 6) இந்திய சிற்றரசர்கள் இத்திட்டத்தால் ஆங்கிலேயருக்கு அடிமையாகி விட்டார்கள் என்றே கூறலாம்.

7) போரில் வென்று நாட்டைக் கைப்பற்றுவதற்கு பதிலாக மறைமுகமாய் ஆங்கிலேயர் நாடுகளை இணைத்துக் கொண்டார் என்று கூறலாம்.

## ஹைதர்அலியும் திப்பு சுல்தானும்

**ஹைதர்அலி:**

19ம் நூற்றாண்டில் தென்னிந்தியாவில் தோன்றிய துணிச்சல் மிக்க வீரர்களுள் ஹைதர் அலி முக்கியமானர். மைசூர் உடையார் அரசில் ஒரு சாதாரண போர் வீரராக வாழ்க்கையைத் தொடங்கிய அவர் தனது விடாமுயற்சி காரணமாக திண்டுக்கல்பௌஜ்தாராக உயர்த்தப்பட்டார். அங்கு தம் சொந்த முயற்சியால் படையொன்றை திரட்டி மைசூர் படைத் தளபதியானார். பின் மைசூர் அரசர் சிக்க கிருஷ்ணராஜரைத் தம் கைப்பாவையாக்கிவிட்டு நாட்டின் ஆட்சிப் பொறுப்பைத் தாமே மேற்க்கொண்டார்.

**ஹைதருக்கும் ஆங்கிலேயருக்கும் தகராறு முழக்காரணங்கள்**

- தென்னிந்தியாவில் தங்கள் ஏகபோக ஆதிக்கத்தை நிலைநாட்டமுயன்று கொண்டிருந்த ஆங்கிலேயர் ஹைதரின் திடீர்எழுச்சி கண்டு பொறாமையுற்றனர். இந்த புதிய அரசியல் சக்தியை முளையிலே கிள்ள விரும்பினார்.

- ஆரம்ப முதலே ஹைதர் பிரெஞ்சுக்காரருடன் நட்புறவு கொண்டார். மூன்றாம் கர்நாடகப்போரில் ஆங்கிலேயர் பாண்டிசேரியைக் கைப்பற்றியபோது 300பிரெஞ்சுப்படை வீரர்களைத் தமது ஊழியத்தில் சேர்த்துக்கொண்டார்.

- ஆங்கிலேயரின் நண்பரும் கர்நாடக நவாபுமான முகமது அலிக்கு ஹைதருக்கும் பகை உணர்ச்சி மிகுந்திருந்து. பல கர்நாடக மாவட்டங்களை ஹைதர் உரிமை கொண்டாடினார்.

- எனவே ஹைதரின் திடீர் வளர்ச்சியைக் கண்டு பொறாமைக் கொண்ட பிற தென்னிந்திய அரசுகளான நிஸாம் மராத்தியர்களோடு ஆங்கிலேயர் முக்கூட்டு உடன் படிக்கை செய்துகொண்டார்.

**முதல் மைசூர் போர் (1767-1769)**

முதலில் ஹைதரைத் தாக்கிய மராத்தியருக்கு பொருள் வழங்கி அவர்களுடன் சமாதானம் செய்துக்கொண்டு மூக்கூட்டிலிருந்து பிரிந்துவிட்டார். பின் அதே சூழ்ச்சித்திறனுடன் நிஸாமையும் ஆங்கிலேயரிடமிருந்து பிரித்துவிட்டார். தனியே விடப்பட்ட ஆங்கிலேயர் ஹைதரை செங்கமா கணவாயில் தோற்கடித்தனர். எனினும் ஹைதர் தீரத்துடன் போரைத் தொடர்ந்தார். மங்களூர் நகரை மீட்டு பாராமஹாலக்கைப்பற்றினார். திடீரென பெரும் படையுடன் சென்னைக்கு ஐந்து மைல் தொலைவில் வந்து அச்சுறுத்தினார். ஆங்கிலேயர் பயந்து சமாதானம் செய்துகொள்ள விரும்பினர். அதன்படி 1769ல் சென்னை உடன்படிக்கை ஏற்ப்பட்டது. 1) அவரவர் கைப்பற்றிய இடங்களையும் கைதிகளையும் உரியவருக்கு திருப்பி அளிக்கவேண்டும்.2) ஹைதரைஎந்த அரசு தாக்கினாலும் ஆங்கிலேயர் உதவி புரிய வாக்களித்தனர். இந்த பாதுகாப்பு நடவடிக்கையின் ஹைதானை தொலை நோக்குடைய இராஜதந்திரத்தை வெளிப்படுத்தியது.

**இரண்டாம் மைசூர் போருக்கு இட்டுச் சென்ற சூழ்நிலைகள்**

1774ல் மராத்தியர்கள் மைசூர் அரசின் மீது படையெடுத்தபோது ஹைதர் 1769ஆம் ஆண்டு உடன்படிக்கையின்படி ஆங்கிலேயரிடம் உதவி கோரினார். ஆனால் அவர்கள் உதவிக்கு வரவில்லை. அதனால் ஹைதர் ஆத்திரம் அடைந்தார்.

- 1778ல் ஹைதரின் ஆட்சிப்பகுதிக்குள் அமைந்திருந்திருந்த மாஹி என்ற பிரெஞ்சு வர்த்தக நிலையத்தை ஆங்கிலேயர்கள் கைப்பற்றினர். தன் நாட்டு பகுதிக்குள் தன் அனுமதியின்றி படையனுப்பி போர் நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஆங்திலேயர் மீது கடுங்கோபம் கொண்டார்.

- தம்மைப் போலவே ஆங்கிலேயர் மீது வெறுப்படைந்திருந்த நிஸாம், மராத்தியர் ஆகியோருடன் கூட்டுச்சேர்ந்து போர் தொடுக்க முயன்றார்.

**இரண்டாம் மைசூர் போர்**

1780ம் ஆண்டு ஹைதர் எண்பதினாயிரம் வீரர்களுடன் வாளும், நெருப்பும் ஏந்தி 'பனிப்பிரளயம் போல' செங்கமா கணவாய் வழியாக கர்நாடகச் சமவெளியினுள் நுழைந்தார். கர்னல் பெய்லி படுதோல்வியுற்றார். 'பக்சார்டிவற்றி வீரர் மன்ரோ'தம் பீரங்கிகளை காஞ்சிபுரம் அருகேயுள்ள குளத்தில் தள்ளிவிட்டு சென்னையை நோக்கி ஓட்டம் பிடித்தார். ஹைதர் ஆற்காட்டைக் கைப்பற்றினார்.

இச்சமயம் வாரன்ஹேஸ்டிங்ஸ் தமக்கே உரிய ராஜதந்திரத்துடன் நிஸாமையும் மராத்தியரையும் ஹைதரிடமிருந்து பிறிந்து விட்டார். பின் ‘வந்தவாசி புகழ்’ சர் அயர்கூட் என்ற தளபதியை கர்நாடகத்திற்கது அனுப்பினார். அவர் ஹைதரை போளுர், பரங்கிப்பேட்டை,சோளிங்கபுரம் ஆகிய இடங்களில் தோற்கடித்தார்.இதற்கிடையே பிரெஞ்சுகடற்படைத் தளபதி சப்ரென் என்பார் கடற்படையுடன் வந்து திரிகோண மலையைக் கைப்பற்றி ஆங்கிலேயரை அச்சுறுத்தினர். ஹைதர் கடலூரைக் கைப்பற்றினார். அவர் மகன் திப்பு கர்னல் பிரெய்ந்தகை தோற்கடித்தார்.

**ஹைதர் மரணம்**

இத்தகைய சூழ்நிலையில் ஹைதர் 1782ல் ஒயிர்நீத்தார். அவர் மகன் தொடர்ந்து போரை வெற்றிகரமாக நடத்தினார். 1781ல் மஞ்களுர் உடன்படிக்கை மூலம் போரை முடிவிற்குக் கொண்டு வந்தார். அதன்படி அவரவர் கைப்பற்றிய நாடுகளையும் அவரவர்க்கே திருப்பிக்கொடுக்க முடிவாயிற்று.

**திப்புசுல்தான்**

ஹைதரின் மரணத்திற்குப்பின் அவரது அரசுரிமைக்கு மட்டுமல்லாது அவரது ஆற்றலுக்கும் வாரிசாக மைசூர் அரியணையில் அமர்ந்தவர் திப்புசுல்தான். தந்தையின் அரசியல் கோட்பாடுகளை அப்படியே கடைபிடிக்க முயன்றார். ஆங்கிலேயர்களைத் தம் அரசியல் எதிரியாக கருதினார். அவர்களை இந்தியாவிலிருந்து வெளியேற்றுவது ஒன்றையே தம் இலட்சியமாகக் கொண்டார்.

**இரண்டாம் மைசூர் போரும், திப்புவும்**

தன் தந்தையின் காலத்திலே இரண்டாம் மைசூர் போரில் தன் ஆற்றலைக் காட்டியுள்ளார். ஆங்கில கர்னல் பிரெய்த் என்பவரை 1782ல் தோற்கடித்தது குறிப்பிடதக்கது. தன் தந்தையின் மரணத்திற்குப் பின் போரை தொடர்ந்து நடத்தினார். பெத்தனூரை மீட்பதில் தமது தீரத்தை காட்டினார். கின் 1784ல் மங்களுர் உடன்கடிக்கை செய்ததின் மூலம் ராஜதந்திரத்தையும் வெளிப்படுத்தினார்.

**மூன்றாவது மைசூர் போருக்கு இட்டுச்சென்ற சூழ்நிலைகள்**

- மங்களுர் உடன்படிக்கை ஓர் போர் நிறுத்தமேயொழிய சமாதானம் அல்ல. ஆங்கிலேயர் ஆதிக்கத்தைஒழிக்க உறுதிபூண்ட திப்பு அயல்நாட்டுஉதவிகளை நாடவும் முயற்சித்தார். ஏற்கெனவே கூறியபடி பாரீசிற்கும் கான்ஸ்டாண்டி நோபிகளுக்கும் உதவி வேண்டி தூது விடுத்தார். 2) மகாராஷ்டிரர்களைத் தாக்கி கிருஷ்ணா, துங்கப்பத்ரா நதிகளுக்கிடைப்பட்ட பிரதேசத்தை கைப்பற்றி தம் வலிமையைப் பெருக்கி கொண்டார். 3)திப்புவின் ஆதிக்க வளர்ச்சி கண்ட கவர்னர் ஜெனரல் காரன்வாலிஸ் கலக்கமுற்றார். நிஸாமிடருந்த குண்டூர் மாவட்டத்தைப் பெற்றுக்கொண்டு அவர் இழந்த பிற பகுதிகளை மீட்க படைகொடுத்து உதவுவதாக வாக்களித்தார். அந்த ஆங்கிலேயப்படையை தமது நட்பு நாடுகளுக்கெதிராக பயன்படுத்தக்சுடாது என்ற நிபந்தனை விதித்தார். நட்பு நாடுகள் எவை என்று ஓர் அட்டவணை இணைக்கப்பட்டது. அந்த அட்டவணையில் மைசூர் நாடு வேண்டுமென்றே விடப்பட்டது. இந்த நடவடிக்கைகளை கண்ணுற்ற திப்பு போர் நடவடிக்கைகளைத் தொடங்கலானார். 4) 1789ல் ஆங்கிலேயர் பாதுகாப்பிலிருந்த திருவாங்கூரைத் தாக்கினார். இதுவே போருக்கு உடன்படிக்காரணமாயிற்று.

**மூன்றாம் மைசூர் போர் (1790-1792)**

போர் தொடங்குவதற்கு முன் காரன்வாலிஸ் திப்புவின் எதிரிகளான மகாராஷ்டிரர் நிஸாம் ஆகியோருடன் ஓர் முக்கூட்டு உடன்படிக்கை செய்துகொண்டார். முதலில்

ஆங்கிலத் தளபதி மெடோஸ் குறிப்பிடதகுந்த வெற்றி எதுவும் பெறவில்லை. எனவே காரன்வாலிஸ் தாமே படைகளுக்கு தாங்கி போரை நடத்தலானார். அவர் வேலூர், ஆம்பூர், பெங்களுர் போன்ற இடங்களைக் கைப்பற்றிவிட்டு தலைநகரான சீரங்கப்பட்டணத்து கோட்டை வாசிலலே தாக்குதல் தொடுத்தார். திப்பு வேறு வழியின்றி சமாதானம் செய்துகொள்ள முன்வந்தார்.

**சீரங்கப்பட்டண உடன்படிக்கை (1792)**

திப்பு தன் நாட்டின் பாதியை தம் எதிரிகளுக்கு கொடுக்க வேண்டியதாயிற்று. நிஸாம் மைசூரின் வடகிழக்குப் பகுதிகளையும் மகாராஷ்டிரர் வடமேற்குபகுதிகளையும் பெற்றனர். ஆங்கிலேயர் திண்டுக்கல், சேலம், மலபார், பாராமஹால் பகுதிகளைப்பெற்றனர். 2) குடகு மன்னர் ஆங்கிலப் பாதுகாப்பில் விடப்பட்டார். 3) முப்பது இலட்சம்பவுண் போர் நஷ்ட ஈடாக திப்பு கொடுக்க வேண்டும். 4) அதுவரை அவரது இரு புதல்வர்களும் பணயக்கைதிகளாக வைக்கப்படுவர்.

**நான்காம் மைசூர் போர் (1799)**

காரணம்: 1. சீரங்க உடன்படிக்கையினால் நேர்ந்த அவமானத்தை துடைத்து ஆங்கிலேயரை பழி வாங்க திப்பு துடித்தார்.

- ஆங்கிலேயரின் எதிரிகளான பிரெஞ்சுக்காரரின் நட்பையும் உதவியையும் பெற முயன்றார். தம்மை பிரெஞ்சு ஜாக்கோபியின் கிளப் உறுப்பினராகப் பதிவு செய்து கொண்டார். பிரெஞ்சு குடியரசுக் கொடியை தாமே ஏற்றினார். பிரஞ்சுத் தீவு ஆளுநர் ஒருவர் திப்புவுக்கு உதவியாக ஆங்கிலேயரை எதிர்த்துப்போராட பிரஞ்சு வீரர்களுக்கு பகிரங்க அழைப்புவிடுத்தார். ஏராளமான பிரெஞ்சுத் தொண்டர்கள் திப்பு படையில் சேர்ந்தனர்.

- எல்லாவற்றிற்கும் மேலாக ஆங்கிலேயரின் இந்தியப்பேரரசை அழிக்கும் நோக்கத்துடன் பிரெஞ்சு மாவீரன் நெப்போலியன் எகிப்தியப் படையெடுப்பை மேற்கொண்டான். அவனுடன் தொடர்புகொள்ள முயன்றார்.

எனவே போர் ஆரம்பமாயிற்று. மைசூர் அரசுகிழக்கிலிருந்தும் மேற்கிலிருந்தும் தாக்கப்பட்டது. மாலவலி என்ற இடத்தில் நடைபெற்ற போரில் திப்பு தோல்வியுற்றார். பின் தலைநகர் சீரங்கப்பட்டணம் முற்றுகையிடப்பட்டு கைப்பற்றப்பட்டது. திப்பு வாளேந்தி போர் புரிந்து கோட்டை வாயிலிலே வீரனுக்குரிய மரணமெய்தினார்.

**போரின் விளைவுகள்**

திப்புவின் மைசூர் அரசுமேலும்பங்குவைக்கப்பட்டது.1) ஆங்கியேருக்கு கோயமுததூர், வயநாடு தென் கன்னடம் ஜில்லாக்கள் கிடைத்தன. நிஸாமிற்கு கடப்பை, கர்நூல், பல்லாரி அனந்த பூர் ஜில்லாக்கள் கொடுக்கப்பட்டன.2) மீதியுள்ள மைசூர் அரசிற்கு பழைய உடையார் வம்சத்தைச்சோர்ந்த மூன்றாம் கிருஷணராஜா் அரசனாக்கப்பட்டான்.3) திப்புவின் புதலவர்களுக்கு உபகாரச் சம்பளம் அளிக்கப்பட்டு வேலூரில் ஆங்கிலப் பாதுகாப்பில் வைக்கப்பட்டனர்.4) இந்தியாவில் பிரெஞ்சுக்காரரின் கடைசி நண்பரான திப்பு மறைந்தது அவர்கள் அரசியல் கனவுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தது.5) ஆங்கிலேயர்கள் மீதுதீலாப்பகை கொண்ட திப்பு மறைந்தது அவர்களுக்கு பெருந்த நிம்மதியை அளித்தது. தென்னிந்தியாவில் அரசியல் பகைவர்களே அவர்களுக்கு இல்லை என்ற நிலையை உண்டுபண்ணியது.

## ரஞ்சித் சிங்.

**ஆரம்பகால வாழ்க்கை**

கி.பி.1780ல் பிறந்த ரஞ்சித்சிங் தம் பன்னிரெண்டாம் வயதிலே சுகர்சாகியாஎன்ற மிஸ்ல் (சீக்கிய சிற்றரசு) தலைவரானார். கி.பி. 1800ல் ஆப்கானிய மன்னர் ஸாமன்ஷா பஞ்சாப்பின் மீது படையெடுக்கும் போது ரஞ்சித் அவருக்கு துணைப் புரிந்தார். அவர் நாடு திரும்பும்போது ராஜா என்ற பட்டத்துடன் லாஹீரை ஆளும் பொறுப்பை அளித்தார். 1802ல் அமர்தசரஸ் மிஸ்ல் கைப்பற்றப்பட்டது. இவ்வாறு பஞ்சாபின் அரசியல் தலைநகரான லாஹீரும் சீக்கியரின் ஆன்மீகத் தலைநகரான அமிர்தசரசும் கைப்பற்றப்பட்டது. ரஞ்சித்தின் ஆதிக்க வளர்ச்சிக்கு அடிகோலியது. பின்னர் படிப்படியாக பஞ்சாப்பின் 12 சீக்கிய மிஸ்ல்களையும் தம் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தார்.

**ரஞ்சித்தின் நோக்கம்**

சிதறிக்கிடக்கும் சீக்கிய இனத்தார் அனைவரையும் தம் தலைமையின் கீழ் ஒன்று சேர்த்து 'அனைத்து சீக்கிய தேசியத்தை' நிலை நாட்டுவதே அவரது இலட்சியம் அந்த இலட்சிய நோக்கத்தை முற்றுப்பெறச்செய்யும் சமயத்தில் ஆங்கிலேயர் குறுக்கிட்டனர்.

**சிஸ் சட்லிஜ் சிக்கல்**

சட்லஜ் நதிக்கு மேற்கிலிருந்த எல்லா சீக்கிய பகுதிகளையும் கைப்பற்றியபின் அந்தநதிக்கு கிழக்கில் அமைந்துள்ள சீக்கிய அரசுகள் மீது தம் கவனத்தைச் செலுத்தினார். அங்குள்ள பாட்டியாலா, நாபா, ஜிண்ட் அரவுகள் ஒன்றொடொன்று சச்சர விட்டுக்கொண்டிருந்தன. அவை ரஞ்சித்சிங்கை நடுவராக இருந்து தம் தகராறுகளைத் தீர்த்துவைக்க அழைத்தன. 'அகில சீக்கிய தேசியத்தை' நிலைநாட்ட உறுதிபூண்டிருந்த ரஞ்சித் இந்த பொன்னான சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ள விரும்பினார். 1806ல் சட்லிஜ் நதியைக் கடந்து லூதியானா கும்ரானா பகுதிகளைக் கைப்பற்றினார். ரஞ்சித்தின் ஆக்ரமிப்புகளைக்கண்டு அஞ்சிய சில சீக்கிய தலைவர்கள் ஆங்கிலேயர் உதவியை நாடினர்.

**ஆங்கிலேயருடன் உறவு**

1804ல் ஹோல்கார் பிரிட்டிஷாருக்கு எதிராக ரஞ்சித்தின் உதவியை நாடியபோது ஆங்கிலேயரைப் பகைத்துக்கொள்ள விரும்பாத அவர் உதவிபுரிய மறுத்துவிட்டார். ஐரோப்பாவில் நெப்போலியனின் வெற்றிகள் ஆங்கிலேயரைக் கதிகலங்க வைத்ததால் இந்தியாவின் வடமேற்கில் அமைந்துள்ள ஞைசித்சிங்கின் அரசிடம் நட்புபாராட்டவே ஆங்கிலேயரும் விரும்பினர். ஆனால் ரஞ்சித்தின் ஆதிக்கத் சட்லிஜ் நதியைத் தாண்டி வருவதை விரும்பவில்லை.

**அமிர்தசரஸ் உடன்படிக்கை (1809)**

எனவே அப்போது வைஸ்ராயராக இருந்த மின்டோபிரபு சர் சார்லஸ் மெட்காப் என்பவரை அனுப்பி பேச்சுவார்த்தை நடத்தச்செய்தார். அதன் விளைவாக அமிர்தசரஸ் உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படி ரஞ்சித் சட்லிஜ் நதிக்குக்கிழக்கே ஆதிக்க உரிமைகளைக் கைவிட வேண்டியதாயிற்று அந்நதி இரு அரசுகளுக்கும் இடையே உள்ள எல்லையாயிற்று. பிரிட்டிஷ் ஆதிக்கம் யமுனை நதியிலிருந்து சட்லிஜ் நதிவரை விஸ்தரிக்கப்பட்டது. ரஞ்சித்தின் ' அகில சீக்கிய தேசியம்' நிறைவேறா கனவாகவே போயிற்று.பதினைநடதே வரிக்கொண்ட மிகச்சுருக்கமான அமிர்தசரஸ்

உடன்படிக்கை ரஞ்சித் காலம் வரை மீறப்படாமலிருந்ததால் மிக முக்கியமாகக் கருதப்படுகிறது.

**பிற வெற்றிகள்**

அமிர்தசரஸ் உடன்படிக்கையின் மூலம் கிழக்கில் ஆதிக்க விஸ்தரிப்பு தடைபடவே ரஞ்சித் வடக்கு வடமேற்கு திசைகளில் தம் கவனத்தை திருப்பினார். 1) கூர்க்கர்களைத் தோற்கடித்து காங்கரா மாவட்டத்தை கைப்பற்றினார். 2) 1803ல் ஆப்கானியரிடமிருந்து அட்டாக்கைக் கைப்பற்றினார். 3) காஷ்மீர், முல்தான் கோஹாம் ஆகிய பகுதிகள் கைப்பற்றப்பட்டன. 4) தம்மிடம் தஞ்சம் புகுந்த ஆப்கானிய அமிர் ஷாஷீஜாவிடமிருந்து உலக புகழ்பெற்ற கோஹினூர் வைரத்தைக் கைப்பற்றனார். 5) 1823ல் பெஷாவாரை ஈப்கானியரிடமிருந்து கைப்பற்றினார். இப்போது அவரது அரசு வடமேற்கு இந்தியா முழுவதும் சிந்தும் பலூசிஸ்தானமும் நீங்கலாக பரவியிருந்தது.

**1828க்குப் பின் ஆங்கில-சீக்கிய உறவுகள்**

- மத்திய ஆசியாவில் ரஷ்ய விஸ்தரிப்புக் கொள்கையைக் கண்டு அஞ்சிய ஆங்கிலேயர் ரஞ்சித்துடன் தங்கள் உறவைப்பலபடுத்திக் கொள்ளவிரும்பினர். பஞ்சாப்பை ஒரு இடை நாடாக ஆக்கவும் விரும்பினார். 2) 1831ல் வைஸ்ராய் வில்லியம் பென்டிங்ரூபார் என்ற இடத்தில் ரஞ்சித்தைச் சந்தித்து கௌரவித்து நட்புறவுகளைப்புதுப்பித்துக்கொண்டார். 3) ஆனால் ரஞ்சித் சிந்து மாநிலத்தைக் கைப்பற்ற முயன்றபோது ஆங்கிலேயர் தடுத்துவிட்டனர். 4) முதல் ஆப்கானிய போருக்கு முன் 1929ல் அமிர்தோஸ்த் முகமதிற்கு எதிராக பிரிட்டிஷார் ஏற்பாடு செய்த முக்கூட்டு உடன்படிக்கையில் விருப்பமின்றி சேர்த்தார். ஆனால் பிரிட்டிஷ் படைகள் தம் நாட்டின் வழியாகச் செல்ல அனுமதியளிக்கமறுத்துவிடடடார். ஆப்கானியப்போர் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது மரணமடைந்தார்.

**ஆட்சிமுறைச் சீர்திருத்தங்கள்**

சிதறிக்கிடந்தசீக்கியருக்கு அரசு ஒன்றை ஏற்படுத்திய ரஞ்சித் அரசியல் அமைப்பு ஒன்றையும் உருவாக்கிக் கொடுத்தார்.

- வல்லாட்சித் தன்மை கொண்ட மன்னராட்சியும் வலுவான மத்திய அரசும் அவரது அரசுக்கு அடிப்படை.
- சீக்கிய சமயக் காவலராக விளங்கிய அகாலி என்ற நிறுவனமும் சீக்கிய சர்தார்களும் ஓரளவிற்கு மன்னர் ஆதிக்கத்தை மட்டுப்படுத்தும் சக்திகளாக விளங்கினர்.
- சீக்கிய அரசு, லாஹூர், கதஷ்மீர், முல்தான்,பெஷாவர் என 4 மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன.
- கிராமபுறங்களிருந்து ஐந்து முதியவர்களடங்கிய பஞ்சாயத்து குழு ஆட்சிப் புரிந்தது.
- நிலவரியே முக்கிய வருவாய் அது மூன்றிலொரு பங்காகவும் பாதிப்பங்காகவுமிருந்தது.
- ஐரோப்பிய முறையிலான படையொன்றை ரஞ்சித் தயார் செய்தார். நெப்போலியன் தளபதிகள் பலர் சீக்கியப் படைக்கு பயிற்சி அளித்தனர். சிறந்த பீரங்கிப் பிரிவு ஒன்றையும் அமைத்திருந்தார்.

**சீக்கியப்போர்கள் (1845-46):**

காரணங்கள்: 1) ரஞ்சித்சிங் மரணத்திற்குப்பின் தோன்றிய குழப்பநிலை : ரஞ்சித்சிங் மரணமடைந்த ஆறாண்டு காலத்திற்குள் மூன்று அரசர்கள் அரியனை ஏறினார். ஆரசர்களை ஆட்டிப்படைக்க முயன்ற அரச அவைப் பிரமுகர்கள் படுகொலை செய்யப்பட்டனர். அரச அவை சதிக்கூடமாக மாறியது. இச்சூழ்நிலையில் ரஞ்சித்சிங்கின் இளைய மகன் திலிப்சிங் அரியணையில் அமர்த்தப்பட்டனர் அவருக்கு காப்பாளராக அவரதுதாய் ராணி லால்சிங் என்ற அமைச்சரின் கைப்பாவையானாள். மக்கள் ஆதரவோ தனிப்பட்ட போராற்றலோ, அரச அவையினரின் நம்பிக்கையையோ பெற்றிராத லால்சிங்கின் ஆட்சி நர்வாக யந்திரத்தைச் சீராக இயக்க முடியவில்லை.

- **கால்ஸா:படையினரின் கட்டுப்பாடற்ற போக்கு**

ரஞ்சித்சிங் காலத்தில் கால்ஸா படையானது கட்டுப்பாட்டுடன் இயங்கி பல வெற்றிகளை பெற்றது. இவ்வெற்றிகளின் காரணமாக கால்ஸாபடையின் செல்வாக்கு அதிகரித்தது. ரஞ்சித்சிங் மறைவிற்குப்பின் அது கட்டுப்பாடற்ற சக்தியாக மாறி அரசியலில் தலையிடத் தொடங்கியது. கட்டளைகளைப்பெற்று இயங்கவேண்டிய படை கட்டளைகளைப் பிறப்பிக்கத் தொடங்கியது. காவலாள் எஜமானக மாறினான். தனக்கு வேண்டியவரை அரியணையில் அமர்த்தும் அரசுப் பணியில் ஈடுப்பட்டது. பல்வேறு வெற்றிகளால் கர்வம் கொண்டிருந்த அப்படையின் அளவிறந்த ஆற்றலைக் கட்டுப்படுத்த எந்த சக்தியும் அங்கு இல்லை என்ற நிலை ஏற்ப்பட்டது. அதன் பேராற்றலுக்கு ஈடுகொடுக்க ஏதாவது ஒரு போர்களத்தைக் காட்டவேண்டிய நிலை ஏற்பட்டது.

- **ஆங்கிலேயரின் ஆக்கிரமிப்பு**

வடமேற்கு இந்தியாவில் ஆதிக்க விரிவாக்கத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஆங்கிலேயரின் ஆக்கிரமிப்புக்களை சீக்கியர்களின் மனதில் நியாயமான அச்சத்தை ஏற்படுத்தியது. 1835ல் ஸடலிஜ் நதியின் கீழ்கரையில் (உள்ள பிரோஸ்பூரைக் கைப்பற்றி அதனை ஒரு படை முகதமாக மாற்றினார். அப்பகுதியில் 14000வீரர் கொண்ட படைகளை நிறுத்தி வைத்தனர். 1844ல் சிந்து மாநிலத்தை ஆங்கிலேயர் ஆக்கிரமித்தபோது சீக்கியர்கள் தங்களை ஆங்கிலேயர்கள் சுற்றி வளைக்கின்றனர் என்றே எண்ணினார்.

- **முதல் ஆப்கானியப் போர்**

முதல் ஆப்கானியக் போரில் ஆங்கிலேயர் படுதோல்வியடைந்தது சீக்கியர்களுக்கு வியப்பளித்து. தங்களிடம் பலமுறை படுதோல்வி கண்ட
ஆப்கானியர்களிடம் ஆங்கிலேயர் பெற்ற இழிவான தோல்வி சீக்கியர்களிடம் தங்கள் ஆற்றலைப் பற்றி மிதமிஞ்சிய நம்பிக்கையை உண்டுபண்ணியது: ஆங்கிலேயர்களே எளிதில் தோற்கடித்துவிடலாம் எனத்துணிந்தார்.

- **ஊடனடிக்காரணம் ஸ்ட்லிஜ் நதியை கால்ஸா தாண்டிது**

தினவெடுத்த தோள்களுடன் துடித்து நின்ற கால்ஸா வீரர்களை போர் புரிவதற்கென்று எங்காவது அனுப்பாவிடில் தங்களுக்கு ஆபத்து என்றுணர்ந்த ராணி ஜிண்டானும் லால்சிங்கும் அவர்களை ஆங்கிலேயருடன் மோதுவதற்கு திசை திருப்பிவிட்டனர். அதன்காரணமான கால்ஜாபடை ஸட்லிஜ்நதியைத் தாண்டியது போர் மூண்டது.

### போரின் முக்கிய நிகழ்ச்சிகள் (1845-46)

முதல் சீக்கியப் போர், முட்கி, பெரோஸ்ஷாஅலிவால், சாப்ரோன் ஆகிய இடங்களில் நடைபெற்றது. முதலில் முட்கியில் சீக்கியர்கள் தோல்வியுற்றனர். அதற்குக் காரணம் அவர்களுடைய தலைவரான லால்சிங்ன் துரோகமாகும். பிரோஸ்ஷாப் பேரிலும் தேஜாசிங் என்ற தங்கள் தலைவரின் துரோகத்தால் அவர்கள் மீண்டும் தோல்வியைத் தழுவ நேர்ந்தது. இதற்குள் குலாப்சிங் என்ற தரைவர் ஆங்கிலேயருடன் அமைதிப் பேச்சு வார்த்ததை தோடங்கினார். ஸட்லிஜ் நதியைக் கடந்து தலைநகர் நோக்கி, பிரிட்டிஷ் படை செல்ல இவர் உதவுவதாக வாக்களித்தார். இறுதியில் சாப்ரோனில் நடைபெற்ற கடுமையான போரில் சீக்கியர்கள் தங்கள் தலைவரின் பச்சைத்துரோகத்தால் படுகொலைக்குள்ளானார்கள். வெற்றிப் பெற்ற ஆங்கிலேயபடைத் தளபதி ஹியூகௌ லாஹீரைக் கைப்பற்றினார். சீக்கியர்கள் பணிந்தனர்.

### லூாகூர் உடன்படிக்கை 1846

முதல் சீக்கியப்போர் லாஹீர் உடன்படிக்கையின்படி முடிவுற்றது. அதன் முக்கிய அம்சங்கள்.

- பியாஸ் சட்லிஜ் நதியிடைப் பகுதியான ஜலந்தர்தோவாப் ஆங்கிலேயருக்கு கொடுக்கப்பட்டது. இதன்மூலம் பியாஸ்நதி இரு அரசுகளிடையிலான எல்லையானது.
- திலீப்சிங் மீண்டும் அரசராக அங்கிகரிக்கப்பட்டார். ராணி ஜிண்டான் காப்பாளராக நியமிக்கப்பட்டார். லால்சிங் மீண்டும் பிரதமரானார். காப்பாளர் குழு ஒன்று நியமிக்கப்பட்டது. அதில் துரோகி தேஜாசிங்கும் ஒரு உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.
- லாகூரில் ஒரு பிரிட்டிஷ் ஸ்தானிகர் நியமிக்கப்பட்டர். (சர் ஹென்றி லாரன்ஸ்) காப்பானர்

  காப்பாளர் குழுவிற்கும் அவரே தலைவராக நியமிக்கப்பட்டார்.
- சீக்கியப் படை 20000 காலாட்படையும் 12000 குதிரைப்படையும் கொண்டதாகக் குறைக்கப்பட்டது.
- போர் இழப்பீடாக ஒன்றரைக்கோடி ரூபாய் கொடுக்க வேண்டும் என விதிக்கப்பட்டது. இதில் சீக்கிய அரசு அரைக் கோடி மட்டும் கொடுத்தால் போதும் எனக் கூறப்பட்டது. மீதி ஒரு கோடி ரூபாயை குலாப்சிங் கொடுக்கவேண்டும். அதற்காக அவருக்கு காஷ்மீர் மாநிலம் கொடுக்கப்பட்டது. குலாப்சிங் காஷ்மீர் மன்னராக அங்கிகரிக்கப்பட்டார்.
- பஞ்சாப்பின் வழியாக ஆங்கிலேயப்படைகள் செல்ல அனுமதிக்கபட வேண்டும்
- நடப்பு ஆண்டு முழுவதும் (18460 லாஹீரில் ஆங்கிலேயப்படை ஒன்று நிறுத்தப்பட்டிருக்கும்.

- பிற ஐரோப்பியர்களை பிரிட்டிஷ் அரசின் அனுமதியின்றி அரசுப் பணியில் அமர்த்தக்கூடாது.

**திறனாய்வு**

இதுவரை இந்தியாவில் சீக்கிய அரசு ஒன்றில்தான் உள்நாட்டு விவகாரங்களில் ஆங்கிலேயர் தலையிடாதிருந்தனர். இப்போது லாஹீர் உடன்படிக்கை அங்கும் ஆங்கிலத் தலையீட்டிற்கு வழி வகுத்தது. பஞ்சாப்பில் அமைதியை நிலைநாட்டல் என்ற போர்வையில் பிரிட்டிஷ் படை அங்கு நிலையாக தங்க வழிவகுக்கப்பட்டது. அப்படை செலவிற்கான 22 லட்சரூபாய் கொடுக்கப்பட்டது. காப்பாளர் குழுவிலிருந்து லால்சிங்,ராணி ஜிண்டான் ஆகியோர் நீக்கப்பட்டனர். எந்தக் கோட்டையும் தம் பாதுகாப்பில் கொண்டுவரும் அதிகாரம் தலைமை ஆளுநருக்கு கொடுக்கப்பட்டது. இந்த புதிய நிபந்தனைகள் பைரவரால் உடன்படிக்கையின்படி உறுதி செய்யப்பட்டது. பஞ்சாப்பை ஆங்கிலேயர் ஆக்கிரமிப்பதற்கான முதற்படி இவ்வாறு போடப்பட்டது.

**இரண்டாம் சீக்கியப்போர் (1848-49)**

**காரணங்கள் : 1. கால்ஸாபடையினரின் பழிவாங்கும் உணர்வு**

முதல் சீக்கியப் போரில் தாங்கள் தோற்றதற்கு முக்கிய காரணம் தேஜசிங், லால்சிங் போன்றோரின் துரோகச் செயல்கள் தான் ஆங்கிலப்படையின் வீரதீரமன்று என்று காஸ்லாப்படையினர் எண்ணினர்.எனவே தோல்வியால் ஏற்ப்பட்ட இழிவைத் துடைக்க இன்னொரு முறை தங்கள் வலிமையை நிலைநாட்ட வாய்ப்பை எதிர் நோக்கினர்.

- **ஆங்கிலேயரின் ஆதிக்க நடவடிக்கைள்**

லால்சிங்கின் நடத்தையில் சந்தேகம் கொண்ட ஆங்கிலேயர்கள் அவரை நாடு கடத்தினர். அதேப்போல் ராணி ஜிண்டான் மீதும்சந்தேகங்கொண்டு பதவியைப் பறித்து காசியில் காவலில் வைத்தனர். ஆங்கிலேயர் நில உடமை மற்றும் சமூகப்பழக்கவழக்கங்களில் புதிய சட்டங்களை புகுத்தினர். அந்த நடவடிக்கைகள் சீக்கியர்களை ஆத்திரம் கொள்ளச் செய்தது.

- **முல்ராஜின்கலகம்**

முல்டான் ஆளுநரான முல்ராஜ் தன் கணக்குகளை ஒப்படைக்குமாறு லாஹீர் தர்பாரினால் கோரப்பட்டபோது தமது பதவியை ராஜினமா செய்தார்.உடனே கான்சிஸ் என்பார்

புதிய ஆளுநராக நியமிக்கப்பட்டு இரு ஆங்கில அதிகாரிகள் துணையுடன் முல்டானுக்கு அனுப்பப்பட்டார். அங்கு புதிய ஆளுநர் பதவி ஏற்ற பின்னர் ஆங்கில அதிகாரிகள் படுகொலை செய்யப்பட்டனர். இக்கொலையில் முல்ராஜ் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தை உறுதிப்படுத்துவது போல் அவர் கலகத்தில் இறங்கினார்.

- **சாத்தார் சிங்கின் கலகம்**

கேப்டன் ஆப்ட் என்ற ஆங்கிலேயர் ஆப்கானியர்களைச் சீக்கியர்களுக்கு விரோதமாக கிளர்ந்தெழத் தூண்டியபோது ஹஸாராப்பகுதி ஆளுநர் சாத்தர்சிங் அதனை ஒடுக்கினார். பின் அதற்கு காரணமான ஆங்கிலேயருக்கு எதிராகப் புரட்சிக் கொடி தூக்கினார்.

- **டல்ஹௌசியின் ஆக்கிரமிப்புக் கொள்கை**

பஞ்சாப்பை இணைத்தே தீருவது என உறுதிபூண்ட தலைமை ஆளுநர் டல்ஹௌஸி பஞ்சாப்பில் இத்தகைய கலவரங்கள் தமது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளத்ததக்க வாய்ப்பளிக்கும் என்று அவற்றை முளையிலே கிள்ளாது பெருங்கிளர்ச்சியாக உருவாகுமாறு அனுமதித்தார்.

**போரின் முக்கிய நிகழ்சிகள்**

கலகம் புரிந்த ஆளுநர் முல்ராஜ் முல்டான் கோட்டையைக் கைப்பற்றினார். அக்கோட்டையைமீட்க பிரிட்டிஷ்படை விரைந்தது. தளபதி ஹியுகௌ போர் நடவடிக்கைகளுக்கு தலைமை தாங்கினார். ராவி நதியைக் கடந்துவந்த ஆங்கிலப் படையை ராம் நகர் என்ற இடத்தில் சீக்கியர்கள் தடுத்துநிறுத்த முயன்று தோற்றனர். முல்டான்கோட்டை மீட்கப்பட்டது. சில்லியன்வாலா என்ற இடத்தில் நடந்த கடுமையான போர், வேற்றி தோல்வியின்றி முடிந்தது. குஜ்ரத் என்ற இடத்தில் கடுமையான பீரங்கி சண்டை நடைபெற்றது. அதில் சீக்கியர்கள் படுதோல்வியுற்றனர்.

**போரின் விளைவுகள்**

பஞ்சாப் பிரிட்டிஷ் இந்தியப் பேரரசோடு இணைக்கப்பட்டது. 1849ல் லாஹீர் தர்பாரில் இணைப்புப்பிரகடன் படிக்கப்பட்டது. அரசர் திலீப்சிங் ஓய்வூதியம் அளிக்கப்பட்டு பதவி நீக்கம் செய்யப்பட்டார். முல்ராஜ் ராணுவ நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்டார். பின்னர் அது ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டது. கால்ஸா படை பலைக்கப்பட்டது. சீக்கியர்கள் நிராயுதபாணியாக ஆக்கப்பட்டனர். பஞ்சாப் இணைப்புடன் இந்தியாவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் நிறைவு பெற்றது எனக் கூறலாம்

## டல்ஹௌசி பிரபு

இந்தியாவில் பிரிட்டிஷ் பேரரசிற்கு அடிப்படை போட்டவர் ராபர்ட்கிளைவ்: அப்பேரரசை வளர்த்தவர் வாரன்ஹேஸ்டிங்ஸ், வெல்வெஸ்லி போன்றோராவர். ஆனால் இந்தியாவையே பிரிட்டிஷ் பேரரசாக மாற்றிறவர் டல்ஹௌசிபிரபு. ஏகாதிபத்திய மனோபாவமும், ஆற்றல்மிகு நிர்வாகத்திறனும் கொண்ட டல்ஹௌசி மிக முக்கிய கவர்னர் ஜெனரல்களுள் ஒருவர். இந்திய வரலாற்றில் தன் போர்கள் மூலமும் சீர்திருத்தங்கள் மூலமும் அழியா இடம் பிடித்துக்கொண்டார்.

- **போர்கள்**
- இரண்டாம் சீக்கிய போரில் சீக்கியர்களை தோற்கடித்து பஞ்சாப்பை பிரிட்டிஷ் பேரரோடு இணைத்தார்.
- இரண்டாம் பர்மியப் போரில் ஈடுபட்டு கீழ் பர்மா பகுதிகளைக் கைப்பற்றினார்.

- **சந்ததியில்லாக் கொள்கை**

இந்தியாவில் பிரிட்டிஷ் பேரரசை விஸ்தரிக்க டல்ஹௌசி கையாண்ட முறை சந்ததியில்லா கொள்கையாகும். பிரிட்டிஷ் பேரரசை சார்ந்திருக்கும் இந்திய சுதேச அரசர்கள் வாரிசின்றி இறந்தால் அவர்கள் அரசு பிரிட்டிஷ் பேரரசோடு இணைக்கப்படும். சுவீகாரம் எடுத்துக்கொண்டாலும் அது சமயகடமையை ஆற்றுவதற்குதான் பொருந்துமயொழிய அரசியலுரிமை பெற தகுதியற்ற எனக் கூறப்பட்டது. இக்கொள்கையை பயன்படுத்தி 1) சதாரா 2) ஜான்சி 3) நாகபூரி 4) நம்பல்பூர் 5) ஜெய்ப்பூர் 6) பகத் 7) உதயபூர் 8) கரோலி ஆகிய அரகவளை பேரரசோடு இணைத்தார். இவற்றில் கரோலி மட்டும் 'சார்பு அரசு அல்ல' பாதுகாக்கப்பட்ட அரசு என்று கஜதப்பட்டு அதற்கு சந்ததியில்லாக் கொள்கை பொருந்தாதுஎனக் கூறி இணைப்பு ரத்து செய்யப்பட்டது. இதே கருத்தின் அடிப்படையில் பின்பு வந்த கானிங்பிரபு பகத் உதயபூர் அரசுகளையும் அவற்றின் சுவீகார வாரிசுகளிடம் ஒப்படைத்தார்.

**3.பேரளவு மட்டுமள்ள பட்டம் பதவிகளை ஒழித்தல்**

1.1801ல் வெல்லெஸ்லி கர்நாடக அரசை பிரிட்டிஷ் அரசுடன் இணைத்து நவாப்பிற்கு பட்டமும் மானியமும் விளங்கினார். டல்ஹௌஸி அப்பட்டத்தையும் அம்மானியத்தையும் மறுத்துவிட்டார்.

2. 1855ம் ஆண்டு தஞ்சாவூர் மன்னர் ஆண் வாரிசின்றி இறந்ததும் அவருக்குரிய பட்டமும் உபகாரச்சம்பளமும் நிறுத்தப்பட்டது.

3. பேஷ்வா இரண்டாம் பாஜிராவ் இறக்கவும் அவரது சவீகார புதல்வன் நானாசாகிப்பை பேஷ்வாவாக ஏற்க மறுத்து உபகார சம்பளமும் கொடுக்க மறுத்துவிட்டார்.இதனால் ஆங்கிலேயர் மீது தீராதப் பகை கொண்ட நானாசாகிப் சிப்பாய் கலகத்தின்போது பழி தீர்த்துகொள்ள முயற்சித்தார்

4. பெயரளவிற்கு மட்டுமே பேரரசரான முகலாய மன்னர் பகதூர்ஷா மரணத்திற்குப் பின் அவர் வாரிசை அரசு மாளிகை கோட்டையிலிருந்து வெளியேற்றவும் திட்டமிடட்டிருந்தார்.

**4. அயோத்தி இணைப்பு (1866)**

1765மே ஆண்டு அலகாபாத் உடன்படிக்கை காலத்திலிருந்தே அயோத்தி நவாப் ஆங்கிலேயருடன் நட்புறவு பாராட்டி வந்தார். வெல்லெஸ்லி பிரபு துணைப்படை திட்டத்தைக் கொண்டுவந்தபோதும் அதில் முதலில் கைப்யொப்பமிட்டவர்களில் அவரும் ஒருவர். ஆங்கிலேய அரசுக்கு எவ்வித இடையூறு செய்யவிட்டாலும் ஊழல் மிகுந்த அரசு எனக்குற்றம் சாட்டி அயோத்தி நவாப்பை பகவி நீக்கம் செய்து நாட்டை பேரரசோடு இணைத்தார். டல்ஹௌஸியின் அப்பட்டமான ஆதிக்கவெறி இணைப்புக் கொள்கைகு அயோத்தி பலியானது. அயோத்தி மக்களின் மனதில் பரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் மீது வெறுப்பு ஏற்படச் செய்தது. எனவே சிப்பாய் கலகம் எழுந்தபோது அது அயோத்திப் பகுதியில் மக்கள் கலவரமாகக் காட்சி அளித்தது

**5.பீரார் இணைப்பு**

ஐஹதராபாத் நவாப் துணைப்படை திட்டப்படியான ஆங்கிலப்படை பாதுகாப்பிற்கான செலவுத் தொகை ஒழுங்காகக் கொடுக்காமல் கடன் அதிகரித்தது. அதற்கு ஈடாக பீரார் பிரதேசம் எடுத்துக்கொள்ளப்பட்டது.

**6.டல்ஹௌஸியின் நிர்வாகச் சீர்திருத்தங்கள்**

1) டல்ஹௌஸியின் நிர்வாகச் சீர்திர்த்தத்தின் அடிப்படை நோக்கம் எல்லா அதிகாரங்களையும்ஒழுங்குப்படுத்தி தன் கையில் எடுத்துக் கொள்வதேயாகும்.

2) புதிதாக கைப்பற்றிய பகுதிகளில் பஞ்சாப் பா்மா ஐக்கிய மாநிலங்களில் கமிஷனா்களை நியமித்து அவா்களை தமக்கு நேரடியாக பொறுப்பாளியாக்கினாா்.

3) மாவட்ட கலெக்டா் பொறுப்பில் வரிவசூல், நீதி, நிா்வாகம் ஆகிய அனைத்து அதிகாரங்களும் இருக்குமாறு செய்தாா்.

4) இந்திய பேரரசு ஆப்கானிய எல்லை வரை பரவி விட்டதால் ராணுவ கேந்திரங்களை கல்கத்தாவிலிருந்து மத்திய இடங்களுக்கு மாற்றினாா். தலைமை பீரங்கிப் படையை மீரட்டிற்கும் படைதலைமை அலுவலத்தை சிம்லாவிற்கும் மாற்றினாா்.

5) நாட்டுப் பாதுகாப்பு நலனைக் கருதி இருப்புபாதைகளை முதன்முதலில் அமைத்தாா்.

6) அதேப்போல் தந்தி முறையையும் ஆரம்பித்தாா்.

7) தபால்முறையை எளிதாக்கி அரை அணா தபால் தலைமுறையைப் புகுத்தினாா்

8) பரிட்டிஷ் வா்த்தகங்களின் நலனைப் பாதுகாக்க இந்தியாவில் தடையில்லா வாணிபத்தை புகுத்தினாா். துறைமுகங்களும் கலங்கரை விளக்கங்களும் அபிவிருத்தி செய்யப்பட்டன.

9) ‘பொதுப்பணிதுறை’ ஒவ்வொரு மாநிலத்திலும் ஏற்படுத்தப்பட்டு சாலைகள், பாலங்கள், கால்வாய்கள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது.

10) கல்வித்துழறயில் சா் சாா்லஸ் வுட் என்பவருடைய அறிக்கையில் அடிப்படையில் பல சீா்திருத்தங்கள் செய்யப்பட்டன. லண்டன் பல்கலைகழக பாணியில் பல்கலைகழகங்களைத் தலைமையாக கொண்டு கல்லூரிகள், உயா்நிலைப்பள்ளிகள் ஏற்படத்திட்டம் வகுக்கப்பட்டது. இந்தியா முழுமைக்கும் ஒரு தலைமை கல்வி இயக்குநா் நியமிக்கப்பட்டாா்.

11) விதவை மறுமணத்தை அனுமதிக்கும் சட்டம் மற்றும் கிறிஸ்தவனாக மதமாறிய இந்துக்கும் பூா்வீக சொத்தில் உரிமை உண்டு என்பதை வலியுறுத்தும் சட்டமும் இயற்றப்பட்டது.

12) இது தவிர 1853ல் பிரிட்டிஷ் பாராளுமன்ற சட்டப்படி வங்காள மாநில நிா்வாகப் பொறுப்பை கவா்னா் ஜெனரலிடமிருந்து பகிா்ந்து கொள்ள ஒரு ‘லெப்டினன்ட் கமிஷனா்’ நியமிக்கப்பட்டாா்

**டல்ஹௌஸி பிரபுவின் சீா்திருத்தங்கள் சிப்பாய் கலகத்திற்கு பொறுப்பானவை**

டல்ஹௌஸி பிரபு எட்டாண்டு காலம் வைஸ்ராயராகப்பணியாற்றிய பின் 1858ல் இங்கிலாந்து திரும்பி ஓராண்டு முடிவதற்குள் இந்தியாவில் மாபெரும் புரட்சி ஒன்று வெடித்தது. எனவே பொதுவில் அவரது ஆட்சிகால நடவடிக்கைகளே புரட்சிக்கு காரணமாய் அமைத்தன எனக் கருதப்படுகிறது.

முதலில் நாடு பிடிக்க அவா் கையாண்ட முறையான ‘தத்துரிமை ரத்து கொள்கை’ இந்திய சுதேச மன்னா்னள் மனதில் ஐயத்தையும், அச்சத்தையும் கிளப்பின. எங்கே தங்கள் நாட்டையும் ஏதாவது ஒரு சாக்குபோக்கு காட்டி எடுத்துக் கொள்வாரோ எனப் பெரிதும் கலங்கினா். இக்கலக்கமே கலகத்திற்கு அடிப்படை காரணம்.

இரண்டாவதாக, சுமாா் நூறாண்டு காலம் ஆங்கில அரசுடன் நட்புரிமை பாராட்டி வந்த அயோத்தி அரசை, ஆளத் தெரியவில்லை என்று குறை கூறி அபகரித்தது நம்பிக்கைத்துரோகம் இச்செயல் இந்திய மக்கள் மனதில் ஆங்கிலயா் உறுதிமொழிகளில் நம்பிக்கை இழக்கச்செய்தது.

மூன்றாவதாக தத்துரிமைரத்துகொள்கையால் அரசுரிமையை பறி கொடுத்த ஜான்சிராணி, உபகார சம்பளத்தை இழந்த நானாசாகிப போன்றோா் பழிவாங்க முனைந்தனா்.

நான்காவதாக அயோத்தி இணைப்பால் மானியம் இழந்த தாலுக்தாரர்கள் ஆங்கில ஆட்சியை வெறுக்க தொடங்கினர்.

ஐந்தாவதாக பர்மியப் போரின்போது உயர்சாதி இந்து போர்வீரர்கள் கடல்கடந்து செல்லுமாறு வற்புறுத்தப்பட்டனர். இதனால் தங்கள் சாதிப் பண்பாட்டை இழந்துவிடுவோம் என்றஞ்சிய இந்திய வீரர்கள் அதிருப்தி அடைந்தனர்.

ஆறாவதாக, கிறிஸ்தவ மிஷனரிகளின் தீவர பிரச்சாரம் இந்துக்கள் மனதில் திகிலை உண்டுபண்ணியது. குறிப்பாக கிறிஸ்துவனாக மதம் மாறிய இந்து ஒருவனுக்கு அவனது பூர்வீக சொத்தில் உரிமை உண்டு எனக் கூறும் சட்டம், அரசாங்கமும் தங்களை சமய மாற்றம் செய்வதில் ஆர்வமுடையதாக இருக்கிறது எனச் சந்தேகம் கொள்ளச் செய்தது.

ஏழாவதாக, இச்சந்தேகக் கண்ணோட்டம் அவரது நற்பயன் பயக்கும் நல்ல சீர்திருத்தங்கள் மீதும் விழுந்தது. உதாரணமாகவிதவை மறுமண மசோதா, ரயில்களில் அனைத்து வகுப்பினரும் சமமாக உட்கார வேண்டிய சூழ்நிலை, பெண் கல்வி ஆகியவை தங்கள் பாரம்பரிய பண்பாட்டைச் சிதைத்து பிறிஸ்தவர்களாகச் செய்யும் சதி என்று எண்ணலாயினர்

**சந்ததி இல்லாக்கொள்கை**

இந்தியாவில் பிாட்டிஷ் பேரரசை விரிவுப்படுத்த டல்ஹௌஸி கையாண்டமுறை சந்ததி இல்லாக் கொள்கை. பிரிட்டிஷ் பேரரசை சார்ந்திருக்கும் இந்திய சுதேச அரசர்கள் வாரிசின்றி இறந்தால் அவர்கள் அரசு பிரிட்டிஷ்பேரரசுடன் இணைக்கப்படும். சுவீகாரம் எடுத்துக்கொண்டாலும் அது சமய கடமையை ஆற்றுவதற்த்தான் பொருந்துமேயொழிய அரசியலுரிமை பெறுவதற்கு தகுதியற்றதுஎனக் கூறப்பட்டது. இக்கொள்கையை பயன்படுத்தி 1)சதாரா 2)ஜான்ஸி 3) நாகபுா 4) சம்பல்பூர் 5) ஜெய்பூர் 6)பகத் 7) உதயபூர் 8) கரோலி ஆகிய அரசுகளை பேரரசோடு இணைத்தார்.

**1.சதாரா (1848)**

சுதாராவின் அரசர் 1848ல் வாரிசு இல்லாமல் இறந்தார். ஆனால் பிரிட்டிஷ்காரரின் அனுமதி இல்லாமல் ஒரு மகனை தத்து எடுத்திருந்தார். இந்த சுவீகாரத்தை இயக்குநர் மன்றம் ஏற்க மறுத்தது. காரணம்யாதெனில் 1818ல் சதாரா ஆங்கிலேயரால் வழங்கப்பட்டது. இந்தியாவில் முறைப்படி சுவீகாரம் எடுத்துக்கொண்டது சரியே. ஆனால் அவர் பிரிட்டிஷ் ஆட்சிக்கு உட்பட்டவர் ஆகையால் பிரிட்டிஷாரின் அனுமதியின்றி ஒரு மகனைதத்து எடுத்தது செல்லாது என்று கூறினார்கள். மேலும் சதாராவை பிரிட்டிஷ் ஆட்சியுடன் இணைத்துக் கொள்வது தான் முறையாகும் என்று கூறி அதை சேர்த்துக் கொண்டார்.

**2.ஜான்ஸி (1853)**

1817ல் ஜான்ஸி சிற்றரசு ஆங்கில ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்டது. இந்த நாட்டை ஆட்சி செய்து வந்த கங்காதரராவ்வாரிசின்றி காரமானார். அவரது மழனவி இராணி தான் ஒரு மகனை சுவீகாரம் எடுக்கப்போவதாக இறிவித்தாள். ஆனால் அதை ஆங்கிலேயர் ஏற்றுக் கொள்ளவில்லை. மேலும் சுவீகாரம் எடுக்கப்பட்டஆனந்தராவை இயக்குநர் மன்றம் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகையால் ஜான்ஸி பிரிட்டிஷ் ஆட்சியுடன் இணைக்கப்பட்டது.

**3.நாகபூர்**

1818ல் ஹேஸ்டிங்சால் பான்ஸ்லே குடும்பத்துக்கு கொடுக்கப்பட்டது. இதை ஆண்ட அரசர் இராகுஜிபான்ஸ்லே 1853ல் வாரிசு இல்லாமல் இறந்தார். ஆனால் அவருடைய மனைவி யச்வரராவ் என்பவரை சுவீகாரம் எடுத்துக்கொண்டார். இதை இயக்குறர் மன்றம் நிராகரித்தது. ஆகையால் நாகபூரி பிரிட்டிஷ் ஆட்சியோடு இணைக்கப்பட்டது. மேலும் அரண்மனையிலிருந்த நகைகளும் மற்றப்பொருட்களும் ஏலமிடப்பட்டது.இந்த செய்கை எல்லோராலும் வெறுக்கப்பட்டது.

**4.சாம்பல்பூர் (1849)**

ஒரிசாவில் ஒரு சிறு நாடு சாம்பல்பூர். இதன் அரசர் 1849ல் வாரிசு இல்லாமல் இறந்தவுடன் பிரிட்டிஷ் ஆட்சியுடன் இணைக்கப்பட்டது.

**மற்றும் சில இணைப்புகளும் ரத்தும்**

இதேபோல் ஜெயித்பூர், பகத், எகயபூர் கரோலி ஆகிய நாடுகள் சந்ததியில்லா கொள்கையின் மூலமாக பிரிட்டிஷ் ஆட்சியோடு இணைக்கப்பட்டது. ஆனால் கரோலி 'சார்பு அரசு அல்ல' பாதுகாக்கப்பட் அரசு என்று கருதப்பட்டு அதற்கு சந்ததியல்லாகொள்கை பொருந்தாது எனக்கூறி இணைப்பு ரத்து செய்யப்பட்டது. இதே கருத்தின் அடிப்படையின் பின்பு வந்த கானிங்பிரபு பகத், உதயபூர் அரசுகளையும் அவற்றின் சுவீகார அரசுகளிடம் ஒப்படைத்தார்.

**சந்ததியில்லாக கொள்கை பற்றிய திறனாய்வு**

சந்ததியில்லாக் கொள்கை டல்ஹௌஸி காலத்திற்கு முன்பே 1834ல் கொண்டுவரப்பட்டது. எனினும் இணைக்கு என்பது கூடிய மட்டும் தவிர்க்கப்பட்டது. னோல் டல்ஹௌஸி தம்மால் முடிந்த மட்டும் சந்ததியில்லாக் கொள்கையை அமுல் நடத்தி அரசுகளை இணைத்தார். பிரிட்டிஷ் பேரரசழன் நலன்களை மனதில் கொண்டே அவ்வாறு செய்தார். நாகபுரி, பம்பாயையும், கல்கத்தாவையும் இணைக்கும் கேந்திர ஸ்தலமாகவும் சதாரா பம்பாயையும் சென்னையையும் இணைக்கும் வழியாகவும் இருந்ததினால் அவ்வரசுகளை பிரிட்டிஷ் நேரடி ஆதிக்கத்தில் கொண்டு வர பெரிதும் விரும்பினார். மேலும் சந்ததி இல்லாக் கொள்கைக்கு ஒரு வாய்ப்பாகவே கருதினார். ஏனெனில் வாரிசுரிமை பிரச்சினையே இல்லாத நாடுகளயையும் இணைப்பதில் அதிக ஆர்வம் காட்டினார்.(உ-ம்) அயோத்தி

**விளைவுகள்**

- இக்கொள்கை இந்திய பாரம்பரிய பழக்கவழக்கங்களுக்கு முரணானது. இந்திய சுதேசஅரசுகள் மனதில் அச்சத்தையும் பிரிட்டிஷ் மீது ஆத்திரத்தையும் உண்டுபண்ணியது. எனவே சிப்பாய் கலகத்திற்கு ஒரு வகையில் காரணமாயிற்று. 2) ஜான்ஸிராணியின் சுவீகாரத்தைஏற்க மறுத்ததால் அவள் ஆங்கிலேயர் மீது தீராப்பகை கொண்டாள். எனவே சிப்பாய் கலகம் மூண்டதும் ஆங்கிலேயர் மீது பழி தீர்த்துக் கொள்ள முயன்றாள். 3) அதேப்போல் பேஷ்வா இரண்டாம் பாஜிராவின் சுவீகாரப் புதல்வன் நானாசாகிப்பிற்கு உபகாரச் சம்பளம் கொடுக்க மறுத்தால் அவரும் ஆங்கிலேயருக்கு பகைவரானார் கான்பூரில் சிப்பாய் கலவரத்திற்கு தலைமை தாங்கி நடத்தினார்.

## சிப்பாய் கலகம்

கி.பி.1757ம் ஆண்டு பிளாசிக் சண்டையின் பயனாக பிரிட்டிஷ் பேரரசிற்கு அடிப்படை போடப்பட்டது. சரியாக 100 ஆண்டுகளுக்கு பின் 1857ல் அந்த

அடிப்படையே தகர்த்துபோகும் வண்ணம் அரசியல் பூகம்பம் ஏற்பட்டது. அதுவே சிப்பாய் கலகம் எனப்பட்ட முதல் இந்திய சுதந்திர போராகும்.

**காரணங்கள்**

அப்புரட்சியின் காரணங்கள் கீழ்க்கண்ட தலைப்புகளில் விளக்கப்டுகின்றன.(1) அரசியல்காரணங்கள்(2) பொருளாதாரக் காரணங்கள் (3) சமூக சமயக் காரணங்கள் (4) படைக்காரணங்கள்

- **அரசியற் காரணங்கள்**

- டல்ஹௌஸியின் பேரரசு விஸ்தரிப்பு க் கொள்கைகளும் தத்துரிமை ரத்துக்கோட்பாடும் இந்திய சுதேச மன்னர்கள் மனதில் ஐயப்பாட்டையும் அச்சத்தையும் தோற்றுவித்தன.

- தத்துரிமை ரத்துக் கோட்பாட்டால் அரசுரிமை இழந்த ஜான்சிராணி போன்றோர் சந்தர்ப்பமவாய்க்கும்போது ஆங்கில அரசசை பழி வாங்க விரும்பினா.
- அதே கோட்பாட்டால் உபகாரச் சம்பளம் மறுக்கப்பட்ட பேஷ்வா பாஜிராவின் சுவீகார புதல்வன் நானாசாகிப் ஆங்கிலேயரை பழிவாங்க துடித்துக்கொண்டிருந்தார்.
- சுமார் நூறாண்டு காலமாக ஆங்கிலேயருடன் நட்புரிமையே நாடிவந்த அயோத்தி நவாபைஆளத் தெரியவில்லை என்ற காரணம் காட்டி அபகரித்தது நம்பிக்கைத் துரோகச் செயல்.
- முகலாயப் பேரரசரை அவரது பூர்வீக அரண்மனையிலிருந்து வெளியேற்றியது பலருக்கு வேதனை அளித்தது.

**பொருளாதாரக் காரணங்கள்**

- அயோத்தி இணைப்பின் விளைவால் மானியகாரர்களான தாலுக்தார்கள் நிலவரி வசூல்செய்யும் தொழிலை இழந்து பிழைப்பிற்கு வழியின்றி வாடினார்கள்.
- அதேபோல் ஆங்கிலேயருடைய நிலச் சீர்திருத்தங்கள் குறிப்பாக வில்லியம் பெண்டிங பிரபு நிலச் சீர்திருத்தங்களால் பல நிலக்கிழார்கள் தம் நிலங்களை இழந்து ஒன்றுமில்லாது போனார்கள்.
- அனாம்ஆணைக்குழுவின் யோசனைப்படி சுமார் 20000 பெரும் பணக்காரர்கள் பம்பாயில் தம் உடைமைகளை இழந்தார்கள்.
- அயோத்தி ஒட்பட ஆங்கிலப் பேரரசோடு இழணக்கப்பட்ட இந்திய சுதேச அரசுகளின் படைகள் கலைக்கப்பட்டதால் போர்வீரர்கள் பலர் பிழைப்பை இழந்தார்கள்.

- **சமய சமூகக் காரணங்கள்**

- வைதீக கோட்பாடுகளில் ஊறிகிடந்த இந்திய சமுதாயம் புதிய கலாசார அம்சங்களைசந்தேகக் கண்கோண்டு நோக்கியதோடு ஏற்றுக்கொள்ள மறுத்தது. சமூகக் கட்டுபாடுகள் சமயக்கோட்பாடுகளாகக் கருதப்பட்டால் சமுதாயத்தில் புகுத்தப்படும் எந்த மாறுதலும் தீவிரமாக எதிர்க்கப்பட்டது.
- 'சமுதாயத்திற்கு ஆபத்து' என்ற கூக்குரல் இந்துக்களையும் முஸ்லீம்களையும் ஆங்கிலேயருக்கு எதிராக ஒன்று திரட்டியது.
- 1833ம் ஆண்டு சாசனச்சட்டம் சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய நகரங்களில் ஆங்கிலத் திருச்சபை பிஷப்புகள் நியமிக்கப்பட வழிசெய்தது. அதன்பின் கிறிஸ்தவ

சமயப்பிரச்சாரம் முடுக்கிவிடப்பட்டது. கிஙிஸ்தவர்களாக மதம் மாறியவர் மது, மாமிசம் உண்டது இந்துக்கள் மனதில் திகிலை உண்டுபண்ணியது.

- கிறிஸ்தவனாக மதம் மாறிய இந்து ஒருவனுக்கு அவனது பூர்வீக சொத்தில் உரிமை உண்டு எனக்கூறும் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அரசாங்கமும் தங்களை சமயமாற்றம் செய்வதில் ஆர்வமுடையதாக இருக்கிறது எனச் சந்தேகம் கொள்ளச் செய்தது.
- இச்சந்தேகக் கண்ணோட்டம் நற்பயன் பயக்கும் முற்போக்கு சீர்திருத்தங்கள் மீதும் விழுந்தது. உதாரணமாக உடன்கட்டை ஏறுதல்ஒழிப்பு, விதவை மறுமண மசோதா, பெண்கல்வி ஆகியவை கூட சமூகப்பண்பாட்டைச் சிதைத்து தம்மை கிறிஸ்தவர்களாகச் செய்யும் சதி எனக் கருதினர்.
- இரயிலில் அனைத்து வகுப்பினரும் சமமாக உட்கார வேண்டிய கட்டாயம் வந்துவிட்டது.இது சாதி அமைப்பை ஒழிக்க வந்தது எனக்கருதி இரயில் பாதை அமைப்புத் திட்டத்தில் கூட குற்றங்கள்.
- **படைக் காரணங்கள்**

- இந்தியப் போர் வீரர்களிடையே பல காரணங்களினிமித்தம் அதிருப்தி நிலவியது. ஐரோப்பியப்போர் வீரர்களோடு ஒப்பிடும்போது அவர்கள் நிலை மிகவும் மோசமாக இருந்தது. பதவி உயர்வு சம்பள சலுகைகள் மறுக்கப்பட்டன.
- கடல்கடந்து போரிடும்போது கட்டாயப்படுத்தப்பட்டனர். ஆனால் உயர்சாதி இந்துகள் கடல்கடந்து சென்றால் சாதி விலக்கு செய்யப்பட்டு விடுவோம் என அஞ்சினர்.
- போர்வீரர்களை கிளர்ச்சிக்கு தூண்டும் வகையில் சப்பாத்திகள்மூலமாக இரகசியச் செய்திகள் பறிமாறப்பட்டன. பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கு எதிராக கூட்டங்களும் நடத்தனர்.
- படையில் இந்தியப்போர் வீரர்களின் எண்ணிக்கை ஐரோப்பியர்களுடையதைவிட நான்கு மடங்கு அதிகமாயிருந்தது. 233000 இந்திய வீரர்களும் 45322 ஐரோப்பிய வீரர்களேயிருந்தனர். இந்த எண்ணிக்கை பலம் இறுமாப்பை ஊட்டியதில் வியப்பில்லை.
- இப்படை நாடு முழுவதும் ஒரே சீராக பரவராக அமர்த்தப்படவில்லை. கல்கத்தாவிற்கும் அலகாபாத்திற்புமிடையில் தினாப்பூரில் மட்டுமே ஐரோப்பிய வீரர்கள் தங்கியிருந்தனர்.
- உடனடிக் காரணங்கள்
புதிதாகக் கொண்டுவரப்பட்டுள்ள தோட்டாக்களில் பசுக்கொழுப்பும் பன்றிக்கொழுப்பும் தடவப்பட்டிருக்கிறது என்ற செய்தியே சிறு பொறியாகத் தெறித்து பெரு நெருப்பாக பற்றி எரியக் காரணமாயிருந்தது. பசுக்கொழுப்பு இந்துக்களுக்கு புனிதமானது. பன்றி கொழுப்பு முஸ்லீம்களுக்கு அருவருப்பானது. அத்தோடடாவை உபயோகிக்கும் போது பல்லினால் கடிக்க வேண்டியிருந்ததால் இந்து முஸ்லீம் ஆகிய இரு சமயத்தவருடைய சமய உணர்வுகளைப் புண்படுத்துவதாயிருந்தது. முதலில் மீரட்டில் உள்ள சிப்பாய்கள் புதிய தோட்டாக்களை உபயோகிக்க மறுத்து புரட்சியலிறங்கினர்.

## கலகத்தின் போக்கு

### மீரட் எழுச்சி

டெல்லியிலருந்து 40 மைல் தொலைவில் உள்ள மிரட் ஒரு முக்கிய கேந்திரமாகும். மங்கள் பாண்டேயின் அவல முடிவு அங்கேயிருந்த இந்திய சிப்பாய்களின் உணர்ச்சியை தூண்டியது.1857ம் ஆண்டு ஏப்ரல் 24ம் நாள் 85 சிப்பாய்கள் துப்பாகிகளை தொட மறுத்தனர். அத்தனை பேரும் கைது செய்யப்பட்டு 10 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சிகளால் படைவீரர்கள் கொதிப்படைந்தனர். மே மாதம் 10ம் நாள் கிளர்ச்சி தொடங்கியது. அது ஒரு ஞாயிற்றுக்கிழமையாகும். ஆங்கிலேயர்கள் தேவாலயத்திற்கு சென்றபொழுது இந்திய படைவீரர்கள் கிளர்ந்தெழுந்து சிறைச்சாலையை தாக்கிஅ ங்கிருந்த அனைவரையும் விடுதலை செய்தனர். அகப்பட்ட ஐரோப்பியர்களை சுட்டுக் கொன்றனர்.

அவா்கள் வீடுகள் சூறையாடப்பட்டது. மீரட்டில் தான் இப்புரட்சி மிகப்பெரிய அளவில் வெடித்தது. ஆங்கிலப் படைவந்தால் தம்மை நசுக்கிவிடும் என நன்கு அறிந்த இந்திய படைவீரா்கள் டெல்லியை நோக்கி ஓடினா். மறுநாள் விடிவதற்குள் டெல்லியை அடைந்தனா். அவா்கள் நேரே செங்கோட்டைக்கு சென்று மொகலாய பேரரசா் இரண்டாம் பகதூா்ஷாவை தங்களது எழுச்சி இயக்கத்துக்கு தலைமை தாங்கும்படி வேண்டினா். அவரும் சம்மதிக்கவே பகதூா்ஷா இந்துஸ்தானத்தின் பேரரசராக அறிவிக்கப்பட்டாா்.

**டெல்லி**

டெல்லியில் இந்திய படையினா் தமது ஆதிக்கத்தை முழுமையாக ஏற்படுத்திக் கொண்டனா். ஆங்கிலேயரை கொன்று குவித்தனா். அவா்கள் உடமைகள் பறிமுதல் செய்யப்பட்டன. ஆங்கில படைகள் முற்றிலுமாக ஒழிக்கப்பட்டுவிட்ட நேரம். இந்திய வீரா்களுக்கு போதிய கால அவகாசம் இருந்தது. ஆனால் அவா்கள் தங்களை வலுப்படுத்திக் கொள்ளாமல் வெற்றியின் போதையில் நிலைதடுமாறி இருந்தனா். இந்நேரத்தில் பம்பாயில் இருந்து ஜான் நிக்கல்சன் பெரும்படையுடன் டெல்லியை நோக்கி முன்னேறினாா். டெல்லி தாக்கப்பட்டது. கூா்க்கா்கள், சீக்கியா்கள் உதவியுடன் ஆங்கிலப்படை விரைந்து முன்னேறியது. மொகாலய பேரரசா் பகதூா்ஷாவின் மூன்று மகன்கள் சுட்டு கொல்லப்பட்டாா்கள். டெல்லியை ஆங்கிலேயா்கள் பிடித்துக் கொண்டாா்கள்.

**கான்பூா்**

நானாசாகிப் தன்னை பீஷ்வா என பிரகடனப்படுத்திக் கொண்டு ஆங்கிலேயருக்கு எதிரான போராட்டத்தில் இறங்கினாா். பித்தூா் என்னும் இடத்தில் 400 ஆங்கிலேயா்கள் நானாசாகிப்பிடம் சரணடைந்தனா். இப்படை வீரா்கள் பத்தூா் கோட்டையில் இருந்தபோது கோட்டைக்குள் இருந்த 211 குழந்தைகள் உட்பட பெண்களும் கோரமாக கொல்லப்பட்டனா். கான்பூா் படுகொலை எல்லா இடங்களிலும் பரவியது. ஆங்கில படைக்கு முன்னால் நிற்க முடியாமல் நானாசாகிப் நேப்பாளத்திற்கு தப்பி ஓடினாா்.

**லக்னோ எழுச்சி**

லக்னோ, அயோத்தி, ரோகில்கண்டு ஆகிய இடங்களில் ஏற்பட்ட சிப்பாய்களின் எழுச்சி ஆங்கிலேயா்களால் அடக்கப்பட்டது. **தாந்தியாதோபே** சிப்பாய்களின் தலைவராக இருந்து சிறப்பாக போராடினாா். இறுதியாக கங்கை சமவெளியில் தாந்தியாதோபே உயிா் துறந்தாா்.

**ஜான்சி**

ஜான்சி ராணி லெட்சுமிபாய் டல்ஹௌவியின் சுவீகாரம் இழக்கும் கோட்பாட்டால் பாதிக்கப்பட்டவா். நாட்டில் ஏற்பட்ட சிப்பாய்களின் எழுச்சி அவளுக்கு புதிய ஆக்கத்தையும், ஊக்கத்தையும் அளித்தன.. சிப்பாய்களுக்கு பணமும், ஆயுதமும் கொடுத்து உதவினாள். குவாலியரில் நடந்த போரில் ஆணுடையில் போரிட்ட அவள் கொல்லப்பட்டாள். இவ்வீரமரணம் அவளை ஒரு மாபெரும் வீராங்கணையான இந்திய மக்கள் உள்ளத்தில் உயா்த்தியது.

மேலும் சிப்பாய்களின் எழுச்சி, இந்தூர், டாக்கா, சிட்டகாங், கயா, கோலாப்பூர், லாகூர், ஜலந்தர் உள்ளிட்ட வேறு சில இடங்களிலும் நிகழ்ந்தது. ஆனால் அங்கெல்லாம் கிளர்ச்சி வலுக்கும் முன் எளிதாக அடக்கப்பட்டது.

**1857ம் ஆண்டு புரட்சி தோல்விக்கான காரணங்கள்**

- புரட்சி நாடெங்கும் கரவலாக ஏற்படவில்லை. டில்லி, பண்டல்கண்டு, அயோத்தி போன்ற இடங்களில் புரட்சி தீவிரமாக இருந்தது. சமீபத்தில் இணைக்கப்பட்ட பஞ்சாப், சிந்து மற்றும் வங்காளம், தென்இந்தியா ஆகியவை பொதுவாக அமைதியாக இருந்தது. வடஇந்தியாவிலும் மூக்றில் ஒரு பகுதியில் தான் புரட்சி பரவியது.
- புரட்சியை நடத்தியவர்களான பகதூர்ஷா, நானாசாகிப், ஜான்சிராணி ஆகியோர்கள் பரஸ்பரம் கலந்து பேசி புரட்சி திட்டத்தை வகுக்கவில்லை.
- இராணுவ திறமையிலும், கட்டுபாடடிலும் பிரிட்டிஷார் கலகக்காரர்களைவ ிட மேம்பட்டவர்களாக இருந்தனர்.
- குவாலியர், ஹைதராபாத், நேபாளம் ஆகியவற்றின் மன்னர்கள் பிரிட்டிஷாரிடம் விசுவாசத்துடன் இருந்தனர்.
- படை வலிமை, பீரங்கிகள், துப்பாக்கிகள், வெடிமருந்து ஆயுதங்கள் ஆகியவை புரட்சியாளர்களைவிட ஆங்கிலேயரிடம் அதிகமாக இருந்தது.
- நேப்பாள மன்னரின் கூர்க்கா படை, பஞ்சாபில் திரட்டிய சீக்கியப்படை பாட்டியாலா சர்ஹின்ட் மன்னர்கள் கொடுத்த அனுப்பிய படை ஆகியவைகளே புரட்சி படைக்கு ஈடுகொடுத்து போரிட்டன.
- ஆங்கிலேயர்களுக்கு புதிய படைகளையும், படைக்குரிய இராணுவ தளவாடங்களும் கொண்டு வருவதற்கு எந்தவித இடையூறும் இல்லை. அவர்களது முக்கிய துறைமுகங்கள் அருகிலேயே இருந்தது.
- புரட்சி குறிபிட்ட நாட்களுக்கு முன்னரே தொடங்கியதால் போட்ட திட்டங்கள் வீணாயின.
- புரட்சியாளர்கிளடையே ஒற்றுமை இல்லை. இந்துக்களுக்கு மராட்டிய ஆட்சியை நிறுவ வேண்டும் என்றும், இஸ்லாமியர்களுக்கு மீண்டும் மொகலாய ஆட்சியை நிலைநாட்ட வேண்டும் என்றும் மாறுபட்ட நோக்கங்கள் இருந்தன. இத்தகைய கருத்து வேறுபாடுகள் புரட்சியை பலவீனப்படுத்தின.
- ஆங்கில தளபதிகளான **நிக்கல்சன், அவுட்ரம், ஹேல்லாக், சர் ஹர் ரோஸ், காம்பெல்** போன்றவர்களுக்கு இணையாக செயலாற்றும் தலைவர்கள் புரட்சி படையில் இல்லை.
- இந்தியா முழுவதும் புரட்சி ஒரே சமயத்தில் துவக்கப்படாததால் ஆங்கிலேயர்கள் இப்புரட்சியை உடனடி ஒடுக்கினர்.
-

**புரட்சியின் விளைவுகள்**

**1.**ஆங்கில பாராளுமன்றத்தில் இந்தியருக்கென விக்டோரியா மகாராணியாரின் பேரறிக்கை வெளியிடப்பட்டது. இதன்மூலம் இந்தியாவில் கம்பெனி ஆட்சி முடிவுபெற்றது. இந்தியாவின் ஆட்சி பொறுப்பு இங்கிலாந்து மகாராணியின் நேரடி நிர்வாகத்தின் கீழ் வந்தது.
**2.**இங்கிலாந்து அரசு 1858ம் ஆண்டு ஒரு புதிய சட்டத்தை அமுலாக்கியது. அதன்படி இந்திய செயலாளர் என்ற பதவி உருவாக்கப்பட்டது. கவர்னர் ஜெனரலுக்கு பதிலாக அரசரின் பிரதிநிதி (வைசிராய்) இந்தியாவை மகாராணிக்காக ஆளத் தொடங்கினர்.இதனால் இந்தியாவின் கடைசி கவர்னர் ஜெனரலாக இருந்த கானிங்பிரபு முதல் அரச பிரதிநிதியாக (வைஸ்ராய்) பதவி ஏற்றார்.
**3.** அவகாசியிலிக் கொள்கை வாபஸ் பெறப்பட்டதோடு சிற்றரசுகள் ஆங்கில அரசசோடு சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது என்று வாக்குறுதியும் அளிக்கப்பட்டது.
**4.**இந்தியர்களுக்கு சமய சுதந்திரம் வழங்கப்பட்டது.

**5.**இந்தியாவில் தேசீய இயக்கம் வலுவடைந்தது.
**6.**ஆள்பவர்கள்,ஆளப்படுபவரிடையான இடைவேலி அதிகரித்தது. இன நிற உணர்வுகளைக் கொண்ட ஐரோப்பியர் தனிந்து ஒதுங்கினர். இருவரின் கசப்புணர்வுகளும் காயங்களும் மாறுவதற்கு நீண்ட காலமானது.

## 1857ம் வருடப் புரட்சியின் தன்மை:

1857ல் ஏற்பட்ட பெரும் புரட்சியைப் பற்றி பலர் பலவிதமாகப் பேசுகிறார்கள். இதனைப் படை வீரர்களின் கலகம் என்றும் மிகச் சாதாரண நிகழ்ச்சி என்றும், ஆங்கிலேயரின் ஆதிக்கத்தைஅழிக்க செய்ய ஏற்பட்ட முதலாவது விடுதலைப் போர் என்றும் மிக முக்கியமான அரசியல் நிகழ்ச்சிஎன்றும், பரவாறாக கருதப்படுகிறது. வி.டி. சவர்கார் என்பவர் தனது'இந்திய சுதந்திரப்போர்' என்ற நூலில்"1857ம் ஈண்'டில் புரட்சிஒரு தேசிய எழுச்சி இந்திய மக்களின் உரிமைகலாசாரம் சமயம் ஆகியவற்றை அழித்த கொடுங்கோலர்களுக்கெதிராகத் திட்டமிட்டு நடத்தப்பட்ட விடுதலைப் போர்" என்று சான்றுகளுடன் கூறுகிறார். எனவே இது வெறும் சிப்பாய் கலகமா அல்லது முதல் சுதந்திரப் போரா என்று ஆராய்வது முக்கியமானது ஆகும்.

முதலாவதாக புரட்சியின் ஆரம்பத்தில் டில்லி நோக்கி சென்ற சிப்பாய்கள் எந்த குறிக்கோளை அடைவதற்காக அங்கு செல்கிறோம் என்று அவர்களுக்கே தெரியவில்லை. தங்களுக்குள் ஒரு தலைவரை அமைத்து போரிடும் தைரியம் ஏற்படவில்லை. மாறாக பகதூர்ஷாவை பேரரசராகப் பிரகடனப்படுத்தினார்கள். எனவே அவர்களிடம் சுதந்திரமடைய வேண்டும் என்ற உணர்வு காணப்படவில்லை. இப்புரட்சியில் கலந்துக்கொண்டபல தலைவர்கள் தங்கள் சூழ்நிலையின் காரணமாகவும் கிளர்ச்சியாளர்களின் வற்புறுத்தல் காரணமாகவமே கலந்து கொண்டதாகவும் கூறினர்.

கிளர்ச்சியில் பங்கெடுத்த தாந்தியா தோபி, மங்கள் பாண்டே, அகமது உல்லா போன்றோர் வீரமும் சிறந்த பண்பும் கொண்டவர்கள். ஆனால் அவர்களிடம் சுதந்திர உணர்ச்சி, நாட்டுப்பற்று காணப்படவில்லை, அவர்கள் சுதந்திரத்திற்காகப் போராடவில்லை. பழைய அமைப்பை விரும்பியவர்கள் அந்நிய வாட்டினரை வெறுத்தவர்கள் அவ்வளவுதான். டாக்டர் ஆர்.சி. மஜீம்தார்
அவர்கள் தனது 'சிப்பாய் கலகமும் 1847ம் வருடப் புரட்சியும்' என்ற புத்தகத்தில் கூறியிருப்பதாவது.
"1857-58ல் சிந்திய ரத்தமும் அடைந்த துன்பங்களும் இந்திய சுதந்திரப் போராட்ட இயக்கத்தின் பிறவித்துன்பம் அல்ல. அழித்துகொண்டிருந்த மத்தியகாலப் படை மானியத்திட்டம், உபயோகமற்ற பிரபுக்களாட்சி ஆகியவைகளின் முனகலாகும். 1857 கலகத்தைஇந்திய சுதந்திலப் போராட்டம் என்று கூறுவதும் அதற்கு ஒரு தேசிய முக்கியத்துவம் அளிப்பதும் 19ம் நூற்றாண்டில் இந்திய மக்களின் வரலாற்றின் உண்மை நிலையை உணரவில்லை என்பதை வெளிப்படுத்துகிறது" என்கிறார்.

சரி,புரட்சியாளர்களின் நோக்கங்கள் சிதைந்தவைகளாக அருந்தன என்று ஒப்புக்கொண்டாலும் அதில் யார்யார் கலந்துக் கொண்டார்கள்என்று பார்த்தால் அதிலும் சிக்கல்தான். இப்புரட்சியில் கலந்து கொண்டவர்கள் ஆட்சியை இழந்தவர்கள, வேலையற்றவர்கள், உதவிபணத்தை இழந்தவர்கள், நிலங்களை இழந்தவர்கள் முதலியவர்களே! இவர்கள் தங்களின் நலன்கள் பறிபோய்விட்டதே என்றுதான் புரட்சியில் ஈடுபட்டனரேயன்றி வெள்ளையரை வெளியேற்றவேண்டும் என்ற உணர்வு கொண்டோ, நாடு விடுதலைபெற வேண்டுமென்றோ என்பதற்காக அல்ல. எனவே இதனை முதல் சுதந்திரப்போர் என்று கூறுவது பொருத்தமில்லைதான்.

ஆனால் மௌலானா ஆசாத் அறிஞர் சென் போன்ற வரலாற்று அறிஞர்கள் இதனை இந்தியாவின் முதல் விடுதலைப்போர்'என்று கூறுகின்றனர். ஆசோக் மேத்தா தனது '1857ம் ஆண்டின் பெரும் புரட்சி' என்ற நூலில் படையினரே இப்புரட்சிக்கு அடிப்படைக் காரணமாயினும் நாட்டின் அடிமைத்தளையை அறுத்தெறிய வேண்டுமென்ற அவர்களது விடுதலை வேட்கையே காரணம் என்கிறார்.எல்லா வற்றிற்கும் ஒரு பட

மேலாக பேரராசியா் டாக்டா் k.இராஜய்யன் அவா்கள்’1800ல் தென்னிந்தியாவில் நடைபெற்ற புரட்சியேமுதல் சுதந்திரப்போா் என்றும், இந்த புரட்சி அதன் தொடா்ச்சியே’என்றும் ஆதாரத்துடன் வாதாடுகிறாா்.

1857ம் வருடப்புரட்சி முழுக்கமுழுக்க ஒரு ராணுவக் கலரவமே’ கொழுப்புத் தடவப்பட்ட தோட்டாக்களே அதற்கு காரணம் வேறொன்றுமில்லை’ என்று சுறும் ஜான்லாரன்சின் கருத்துக்களையும்”நாட்டுப்பற்றற்ற சுயநலமிக்க சிப்பாய்களின் கலரவமே. ஆதற்கு சுதேச தலைமையோ, பொதுமக்கள் ஆதரவோ கிடையாது” என்று ஜான்சீலி சுறும் கருத்துக்களையும் நாம் அப்படியே ஏற்றுக்கொள்ள முடியாது. இக்கூற்றுகளில் குறுகிய கண்ணோட்டமே தென்படுகிறது.

முடிவாக, 1857ம் வருட புரட்சியை ஆங்கிலேயா்கட்கு எதிராக ஏற்பட்ட முதல் பெரிய விடுதலைப் போா் என்று ஏற்றுக் கொள்ளுதல் பொருத்த மானதாகும். ஏனென.றால்,’அவா்கள் ,விடுதலை உணா்வு, உத்வேகம், தேசப்பற்று ஆகியவற்றோடு கலந்து கொள்ளவில்லையென்றாலும், சுயநலத்துக்காகவே போரிட்டாா்கள் என்றாலும்’“அந்நியரை எதிா்த்து போரிட்டாா்கள்” எனவே இப்புரட்சியை ஆங்கிலேயருக்கு எதிராக நடந்த முதல் விடுதலைப் போா் என்று கூறுவது பொருத்தமே!.